# மாட்டி கார்த்தியாயினி

344
1622



ஆசிரியர் : நாரண - துரைக்கண்ணன்.

ஓம் :

# சிமாட்டி கார்த்தியாயினி

582 — 344

(An adaptation of Leo Tolstoy's Anna Karenina)

ஆசிரியர் :

நாரண - துரைக்கண்ணன்

306

மூன்றாம் பதிப்பு

பிரசுர கர்த்தர் :

நா. முனிசாமி முதலியார்,

பத்திராதிபர் "ஆனந்தபோதினி,"

சென்னை.

பதிப்புரிமை] 1947 [விலை அணு 14

## இந்நூலாசிரியர்

தமிழ் மக்கள் வாழ்க்கை விசித்திரங்களைப் படம் பிடித்துக் காட்டும் சமூகக் கதைகள், நாடகங்கள் பலவற்றையும், நம் தேசியத் தலைவர்கள், மகான்கள், கவிகள், மேனாட்டுச் சுதந்திர வீரர்கள், ராஜ தந்திர நிபுணர்கள், சர்வாதிகாரிகள் சரித்திரங்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்.
நூல் வரிசை எண்: 461
[illegible]: 461



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

ஓம் :

# முன்னுரை

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.—பாரதி.

நம்மையும் நமது பாரத தேசத்தையும் வாழ்விக்க வந்து நம்மிடையே வாழ்ந்துவரும் **காந்தி அடிகளால்** தம்முடைய குருவெனப் போற்றப்பட்டவர் **லியோ டால்ஸ்டாய்.** அவர் ரஷியப் பேரறிஞர்; தத்துவ ஞானி; ரஷியப் புரட்சிக்கு முன் வாழ்ந் திருந்தவர். கார்ல் மார்க்ஸ் பொதுவுடைமை (சமதர்ம)த் தத்துவத்தை மக்களுக்குப் புகட்டுவதற்கு முன்பே, தம் வாழ்க்கையில் உண்மையான பொதுவுடைமைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து, தமது சொந்த சுதந்திரங்களையெல்லாம் ஏழை எளியவர்களுக்குப் பொதுவுடைமை யாக்கினவர். கஷ்டம், துன்பம் என்பதே இன்னதென அறியாத பரம்பரை பிரபு வம்சத்தில் பிறந்தும், ஏழை மக்கள், விவசாயிகள், தொழிலாளிகள் ஆகியோரின் பரிதபிக்கத்தக்க துயர நிலைமை உணர்ந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் ஆடம்பரமின்றிப் புரிந்து வந்ததுடன், அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அல்லும் பகலும் பாடுபட்டு வந்தவர். இதுவன்றி, ரஷிய மக்கள் சமூகத்தில் காணப்படும் தீமைகளை—ஊழல்களைப் போக்கத் தம்மாலான முயற்சியைச் செய்து வந்தவர். அவ்வகையில் அப்பெரியார் பல தத்துவ சாஸ்திர நூல்களையும், நவீனங்களையும் எழுதித் தம் தேச மக்களுக்குச் சமர்ப்பித்தார். அவை ரஷியாவுக்கு மட்டுமேயல்லாது உலக மனித்துக்கும் உரிய உயரிய இலக்கிய நூல்களாகவும் திகழ்கின்றன.

அவைகளில் அன்னு காரினினு (Anna Karonina) என்னும் நவீனமும் ஒன்று. அச்சிறந்த நவீனத்தை நான் படிக்க

நேர்ந்தபோது, அது என் உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே கவர்ந்து கொண்டது. கதையின் போக்கு அவ்வளவு சிறந்ததாக இருந்தது. அன்னு காரினீனு ஓர் உன்னதமான உயிர்ச் சித்திரம்; வெறுங் கற்பனைச் சித்திரமாக இருக்கமுடியாது. நான் படித்த மேனுட்டு நவீனங்களில் டால்ஸ்டாயின் Resurrection, Anna Karenina, விக்டர் ஹ்யூகோவின் Les Miserable, Hunchback of Notre Dame, சார்லஸ் டிக்கன்ஸின் Tale of Two Cities ஆகியவைகள் என் மனதை முற்றுங் கவர்ந்து மகிழ வைத்ததுபோல் வேறெதுவுஞ் செய்யவில்லை.

இவ்விதம் நான் படித்து மகிழ்ந்த 'அன்னு காரினீனு'வை என்னுடைய சகோதர சகோதரிகளும் படித்து இன்புற வேண்டும்.—பயன் பெற வேண்டும்-என்ற எண்ணத்தோடுதான், 'சீமாட்டி கார்த்தியாயினி' என்ற பெயரோடு தமிழில் தந்திருக்கிறேன்.

*** *** ***

பிற மொழிகளில் உள்ள நவீனங்களை - இன்னெரு மொழியில் பெயர்த்துத் தருவது சம்பந்தமாக அறிஞர்களிடையே பல திறப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. 'மூல மொழியில் உள்ள படியே மொழி பெயர்க்கவேண்டும்' என்பார் சிலர். இல்லை இல்லை. மூலத்தில் விவரிக்கப்பட் டிருக்கும் சம்பவங்களை—அடிப்படையான அம்சங்களை—வைத்துக் கொண்டு தாய் மொழியில் தழுவி யெழுதுவதுதான் சிறந்தது' என்பார் மற்றுஞ் சிலர். 'ஒரு மொழியில் உள்ளதை இன்னெரு மொழியில் கொண்டுவர முயல்வதே அறிவுடைமையாகாது. ஏனென்றால், மூல நூலாசிரியரின் - அதிலும் நாகரிகம், கலாசாரம், பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள் முற்றிலும் வேறுபட்ட அன்னியநாட்டு நூலாசிரியரின் இதய தத்துவத்தை உள்ளவாறு அறிந்துகொள்ள முடியாது. ஆதலால், உயிரற்ற உடலை அல்லது எலும்புக்கூட்டை வைத்துக்கொண்டு தாய் மொழியின் உதவியினுல் உயிர் கொடுக்க முயற்சிப்பது சிறப்புமாகாது; எதிர் பார்க்கப்படும் பயனையுந் தராது. ஒரு மொழியிலுள்ள பொருளும் அழகும், வேறொரு மொழியில் எவ்வளவுதான் முயன்ருலும் ஒருகாலும் வராது' என்று வாதிக்கும் கூட்டத்தாரும் உண்டு.

இம்மூன்றாவது கட்சியாரின் கூற்றை நான் ஏற்றுக் கொள்வதில்லை. மூல நூலாசிரியரின் இதய தத்துவத்தை உள்ளபடி அறிய முடியாது என்பதற்காகவே, பிற மொழிகளில் வழங்கும் சிறந்த நூல்களைத் தமிழ்ப் படுத்தக் கூடாதென்ற அபிப்பிராயம் நியாயமானதல்ல; நமது மொழிக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதுமாகாது. ஆகவே, மொழி பெயர்ப்பும், தழுவலும் நம் தமிழ் மொழியில் நவீன இலக்கியம் ஏற்படுவதற்கு அவசியம் வேண்டற்பாலனவாம். மொழி பெயர்ப்பு என்றால்; எந்த நவீனத்தை எடுத்தாலும் அதன் ஜீவனைக் கவனிக்காமல் மேல் போக்காக சாயையை மட்டும் பிடித்துக்கொண்டு வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பது கூடாது. அது பெருந் தவறாகும்; அத்துடன், அதனால் எவ்விதப் பயனும் விளையாது. அது போலவே, தழுவல் என்றாலும், பிற மொழிகளிலுள்ள நவீனங்களில் உள்ள முக்கிய சம்பவங்களை மட்டும் எடுத்துக் கொண்டு, மூலக் கதையின் கட்டுக்கோப்பையும் அழகையுங்கூடச் சரியாகக் கவனியாது கதை ரூபமாக எழுதி விடுவதும் பொருத்த மற்றதாகும். நம் தமிழ் மொழியில் நவீனங்கள் வெளிவரத் தொடங்கிய ஆரம்ப காலத்தில்—ஏன்? இன்றுங்கூட—மேற்குறித்த முறைகளில் ஏராளமான மொழி பெயர்ப்பு நாவல்களும், தழுவி எழுதப்பட்ட கதைகளும் வெளி வந்தன;—வெளி வந்து கொண்டிருக்கின்றன என்பதை மறைக்க முடியாது.

* * *

நமது நாகரிகம், கலாசாரம், நடையுடை பாவனை, பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கும் உயர்ந்த பிறநாட்டு நவீனங்களை நாம் தமிழில் தர விரும்பினால், கட்டாயம் மொழி பெயர்த்தே யாகவேண்டும். நம்மைப் போலவே, குண விசேஷங்களைக்கொண்ட பிற சமூகத்தாரின் நாகரிகம், நடையுடை பாவனை முதலியவைகளை உள்ளபடி அறிந்து கொள்வதற்கும் நேர் மொழி பெயர்ப்பே துணை செய்யும். ஆனால், மூல நூலாசிரியரின் நோக்கம், அடிப்படைக் கொள்கை ஆகியவை சிறிதும் மாறாதவாறும், கதைப்போக்கும் நடையழகும் கெடாதவாறும் வார்த்தைக்கு வார்த்தை போட்டு எழுதிக் கூடுமானவரை மூல நூலின் சிறப்பைக் கொண்டுவர முயல வேண்டும்.

மேற்குறித்த விதமின்றி, நம் தேசாசாரத்துக்கும் நாகரிகம் நடையுடை பாவனைகளுக்கும் ஏறக்குறையப் பொருத்தமாக இருக்கக்கூடிய பிற நாட்டு நவீனங்களை அவ்வாசிரியர்களின் லட்சியங் கெடாதவாறு நம் சமூகத்துக்கு இசைய நல்லவிதமாக மாற்றியும் திருத்தியும் அமைத்து தழுவி எழுதுவதுதான் தழுவல் (Adaptation) எனப்படும். நேர் மொழி பெயர்ப்பைவிட, தழுவல் சிரமமான காரியம். அதற்குக் கற்பனா சக்தியும் நுண்ணறிவும் வேண்டும். எவ்வளவு எச்சரிக்கையாகவும் திறமையாகவும் பிறமொழியி லுள்ளவைகளை மொழி பெயர்த்தாலும், மொழி பெயர்ப்பில் மூல நூலின் அழகு சிறிதளவேனும் குறையத்தான் செய்கிறது. அவ்விதக் குறையைப் போக்கி மூல நூல் அழகை அதிகப்படுத்த வேண்டுமானால், அதற்குத் தழுவல் அத்தியாவசியம், ஆனால். தழுவி எழுதுபவன் கையாளும் முறை, திறமைகளில் தான், மூல நூலின் அழகு அமைந்திருக்கிறது. தழுவலில் மற்றொரு சிறப்புமுண்டு. நாம் முன் பின் பார்த்தோ கேட்டோ அறியாத பிற தேசங்களில் நிகழ்வதாக விவரிக்கப்படும் சம்பவங்களையும், நம் வாயில் நுழையாத பெயர்கள் கொண்ட கதா பாத்திரங்களையும் அவர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களையும், நமக்குப் பழக்க மில்லாத நாகரிகம், நடையுடை பாவனைகளையும் பற்றிப் படித்து அறிவதைவிட. நம் நாட்டு நிகழ்ச்சிகளையும், கதா பாத்திரங்கள், அவர்களது நடையுடை பாவனைகள். அவர்கள் அனுபவிக்கும் சுக துக்கங்களையும் படித்து அறிவது நமக்கு மிகவும் மகிழ்ச்சியை யளிக்குமல்லவா !

மேலும், மக்களுடைய பொதுவான மானுஷீக உணர்ச்சிகள் எங்கும் ஒரு தன்மைத்தாகவே இருக்கின்றன. காதல், அன்பு, காமம், மோகம், மதம், மாத்சரியம் ஆகிய குணப் பண்புகள் எந்நாட்டிலுள்ள மக்களுக்கும், எம் மொழி பேசும் அல்லது எம் மதத்தைச் சார்ந்த மக்களுக்கும் ஒரே இயற்கையாகவே இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. நாகரிகம், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் சீதோஷ்ண நிலை போன்ற வெளி விவகாரங்களில்தான் தேசத்துக்குத் தேசம், மதத்துக்கு மதம், மொழிக்கு மொழி மக்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன; ஆகவே, காதல், துரோகம், தியாகம்

போன்ற பொது உணர்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டும் எந்த நாட்டு நவீனத்தையும் சிறந்ததா யிருப்பின், பிற நாட்டினர் தங்கள் தாய் மொழிகளில் தழுவி யெழுதலாம். மேலும், ரஷியா தேசமும், சமூகமும் புரட்சிக்கு முன், சகல வகைகளிலும் இந்தியாவைப் போலவே இருந்தன. ஆகவே, அக்காலத்தில் நடப்பதாக விவரிக்கப்படும் கதை நம் நாட்டுக்குப் பொருத்தமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

***     ***     ***

இந்த விதமான காரணங்களை யெல்லாம் உத்தேசித்துத்தான் டால்ஸ்டாயின் 'அன்னா காரினீனா'வை நம் தமிழ் மொழியில் தழுவி எழுதி யிருக்கிறேன். நான் கூடுமானவரை டால்ஸ்டாயின் இதய தத்துவம், உயர்ந்த லட்சியம், சிறந்த கொள்கைகளை அறிந்து எழுத முயன்றிருக்கிறேன். இம்முயற்சியில் நான் எவ்வளவு தூரம் வெற்றி யடைந்திருக்கிறேன் என்பதை அறிஞர்கள்தான் அறிந்து கூறவேண்டும்.

செல்வக் குடும்பத்தில் பிறந்த சீமாட்டி யொருத்தி, தன் காதலுணர்ச்சியை அறிந்து திருப்தி செய்வதில் கவனஞ் செலுத்தாது பட்டமோ பதவியோ என்று அலைந்து கோலாகலங்களிலும் களியாட்டங்களிலும் மூழ்கி யிருக்குங் கணவனது அசிரத்தையால், வேறொரு இளைஞனோடு கள்ளக்காதல் கொள்வதும், இவர்களது கள்ள நட்பு வெளியாவதும், இதை யறிந்து கணவன் கண்டிப்பதும், சீமாட்டி வீட்டை விட்டுக் கள்ள நாயகனோடு வெளியேறுவதும், எனினும், தான் பெற்ற பிள்ளையின் பிரிவைத் தாங்க மாட்டாது புத்திர பாசத்தால் பேதுறுவதும், இந்நிலையில், கள்ளக் காதலனும் அவளைக் கைவிடுவதும், ஏமாற்றத்தால் சீமாட்டி தற்கொலை செய்து கொள்வதும்தான் இக்கதையின் முக்கிய அம்சங்களாகும்.

இச்சம்பவங்கள் எத்தேசத்தில் — எச் சமூகத்தில் தான் நடைபெறமாட்டா? மகளிர் நன்னெறியினின்றும் தவறி விழுவதற்கு—தீயொழுக்கத்தை மேற்கொள்வதற்கு—ப் பெரிதும் ஆடவர்களே காரணமாகும்; காதற் கணவன் தன் மனைவியின் மன

உணர்ச்சிகளை மதித்து நடக்காது, வெளி விவகாரங்களிலேயே கவனஞ் செலுத்தி வருவதால், அவள் தன் உள்ளத் தாபத்தைத் தணிக்கக்கூடிய ஒருவனை நாடுவது இயற்கை. 'பெண் உணர்ச்சியற்ற மரக் கட்டையல்ல; ஆணைப் போலவே அவளுக்கும் உணர்ச்சியுண்டு' என்னும் உண்மைகளை இச்சிறந்த கதை ஆணுலகுக்கு அறிவுறுத்துகிறது. ரஷியாவின் ஜன சமூகப் பிரச்சினையை உள்ளபடி ஆராய்ந்து பரிகாரந் தேட முயன்ற டால்ஸ்டாய், உலக ஜன சமுதாயத்தின் பிரச்சினையையே ஊடுருவி யாராய்ந்து முடிவு கட்டி யிருக்கிறார். ஜன சமூகத்தில் மலிந்துள்ள குறைகள், ஊழல்கள் அச்சமூகத்தை மட்டுமல்லாது தேசத்தையும் நசிக்கச் செய்யும். எப்படியென்றால், தேசத்தின் பொது வாழ்வி லுள்ள குறைகளுக்கு மக்களிடம் காணப்படும் தீமைகளே மூல காரணமாகும்; ஆதலால், தேசத்தின் பொது வாழ்வைச் சிறக்கச் செய்ய விரும்புவோர் முதலில், மக்களிடையே உள்ள குற்றங் குறைகளை அகற்ற முயலவேண்டும். அவ்வகையில், டால்ஸ்டாயின் அன்னா காரினினா பேருதவியா யிருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை.

ஆகவேதான்; இந்நவீனத்தைத் தமிழ்ப்படுத்தி, தமிழ் நாட்டில் தலை சிறந்த பத்திரிகைகளில் ஒன்றான 'பிரசண்ட விகட'னில் 1936-ல் தொடர்ச்சியாக வெளியிடலானேன். அதன் பின் நான் எழுதி வெளியிட்ட **'தாசி ரமணி'** என்னும் சமூகக் கதையும் இந்நோக்கத்தைப் பின்பற்றியதே யாகும். 'சீமாட்டி கார்த்தியாயினி' பணக்காரர் குடும்பங்களில் நடக்கும் ஊழல்களைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல், 'தாசி ரமணி'யும் விபசாரத்தையே தொழிலாகக் கொண்ட தேவதாசி குலத்தில் நிகழும் ஊழல்களை வெளிப்படுத்த முயற்சி செய்யப்பட் டிருக்கிறது. பணத் திமிர் பிடித்த பிரபுக்களும் மற்ற விட புருஷர்களும், விளக்கொளியில் விட்டில் பூச்சி மயங்கி விழுவதுபோல், தாசிகள் மையலில் மயங்கி விழுவதும், தாசி ரமணி என்னும் பெண்மணி விபசாரத்தை வெறுத்து ஒதுக்கி, ஆணவம் பிடித்து அலையும் ஆண் மக்களுக்குத் தனது வீரச் செயலால் நல்லறிவு புகட்டி, தாசி குலத்திலேயே புரட்சியையுண்டு பண்ணுவதும் இனிய எளிய நடையில் விவரிக்கப்பட்டிருப்பதால், படிக்கப் படிக்க ருசிகரமா யிருக்கும்.

ஆகவே, ஜன சமுதாயத்தைத் திருத்தி யமைக்கும் நோக்கத்தோடு வெளியிடப் பட்டிருக்கும் 'சீமாட்டி கார்த்தியாயினி'யையும், இதை யடுத்து வெளிவர விருக்கும் 'தாசி ரமணி'யையும் தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகள் மனமுவந்து வரவேற்பார்கள் என்று பெரிதும் நம்புகிறேன்.

சக்தி நிலையம்,
மயிலாப்பூர், சென்னை.
25—11—40.

இங்ஙனம்:
நாரண-துரைக்கண்ணன்.

## அதிகார அட்டவணை


| எண். | அதிகாரம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ராஜ ஊர்வலமும் தேநீர் விருந்தும் ... | 1 |
| 2. | கண்வழி நுழைந்த காதல் ... | 16 |
| 3. | இலவுகாத்த பைங்கிளி ... ... | 32 |
| 4. | ஊரார் புகார் ... ... ... | 56 |
| 5. | கள்ளக் காதலை கணவன் அறிதல் ... | 81 |
| 6. | கார்த்தியாயினியின் காதல் வாழ்க்கை ... | 113 |
| 7. | பிள்ளைப் பாசத்தால் பேதை தவிப்பு ... | 132 |
| 8. | மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள் ... ... ... | 163 |
| 9. | கற்பிழந்தவளுக்குக் கடவுள் தண்டனை ... | 180 |
| 10 | கழிவிரக்கமும் கழுவாயும் ... ... | 187 |

ஓம்

# சீமாட்டி கார்த்தியாயினி

## முதலாவது அதிகாரம்

### ராஜ ஊர்வலமும் தேநீர் விருந்தும்

உலகிலுள்ள ஜீவராசிகளை யெல்லாம் தன்னொளியில் மூழ்கச்செய்து வாழ்விக்குஞ் சூரியன் தனது ஆயிர முகங்களால் அருமைக் காதலியாம் அலைமகளைப் பருகுவதுபோல் ஆசைகூர நோக்கிப் பொற்கிரணங்களாகிய கைகளால் ஆர்வத்தோடு தழுவி இரண்டறக் கலக்கும் நேரம். வானமுங் கடலும் ஒன்றே என ஐயுறத் தக்கவாறு தினகரனொளி மேல் வானத்தையும் கடலின் ஒரு சிறு பாகத்தையும் பொன்மய மாக்கியது. செஞ்ஞாயிறும், கருங்கடல் கன்னியும் முயங்கும் முயக்கத்தை மற்றவர்கள் பார்க்கக் கூடாதென்று எண்ணியோ என்னவோ, இந்திரஜால வித்தை செய்து எட்டுத் திசைகளிலும் திரை யிட்டதுபோல் இருள் பரவியது. இக்காதலர்களின் களியாட்ட இரகசியத்தைப்பற்றி ஒன்றுக்கொன்று கண் சிமிட்டிக் கேலியாகப் பேசிச் சிரிப்பதுபோல் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் தோன்றலாயின. என்புருகப் பிணைந்த அன்றில் முதலிய பறவைகள் தங்கள் சேவற் பேடைகள் எக்காரணத்தாலோ சிறிது பிரியவும், அப்பிரிவை யாற்றாது ஏங்கி யுயிர் விடுப்பவர்போல் இடை

யிடையே கூவின. 'கட்டிளங் காதலர்களின் அன்புநிலையை யாரால் அறிய முடியும்!' என்று கூறி ஆனந்த பாஷ்பம் பொழிவதுபோல, செடி, கொடி, மரங்கள் தேனொழுகும் மலர்களைத் தூவிக்கொண்டிருந்தன. இவ்விந்தையை வெளிப் படுத்த விரைவதுபோல் வௌவால்கள் அங்குமிங்கும் அலைந்து பறந்தவண்ண மிருந்தன. மின்மினிப் பூச்சிகள் 'மினுக் மினுக்' என மின்னி விளக்கொளியோடு போட்டி போட்டுக் கொண்டிருந்தன. இவ்விதமாக, அந்தப் பொழுதை முன்னே யனுப்பி இரவென்னும் இறைவி இளைஞர் மனதை வாட்ட வந்து தோன்றினாள்.

இந்நேரத்தில் தான் திருவிதாங்கூர் சமஸ்தானம் அமளி குமளிப் பட்டது. திருவனந்தபுரம் நகரம் இந்திரப் பட்டணமோ, குபேரப் பட்டணமோ என்னத் தக்கவாறு வெகு அலங்காரமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு தெரு விலும் தோரணங்களும், கொடிகளும் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தன. அவ்வந்திப் பொழுதில் நகரமக்கள் மகிழ்ச்சியே வடிவாய் ஆங்காங்கு கூட்டங் கூட்டமாகக் காணப்பட்டனர். ராஜவீதியில் முன்னே சமஸ்தான யானை களும் அவற்றுக்குப் பின்னே குதிரைப் படைகளும், அவற்றை யடுத்து சமஸ்தான காலாட்படைகளும் செல்ல பலவிதமான இன்னிசை வாத்தியங்கள் முழங்க, சமஸ்தான உத்தியோகஸ்தர்களும், பிரமுகர்களும், கனவான்களும் புடைசூழ, ஒரு யானையின்மீது திருவிதாங்கூர் சமஸ்தான யுவராஜா விசாகந் திருநாளும், ஒரு அழகிய விமானத்தில் ரீஜண்ட் மகாராணி இமய பார்வதி பாயும் பவனி போய்க் கொண்டிருந்தனர்.

மாட மாளிகைகளிலுள்ள அழகிய மகளிர் பலர் மேன் மாடிகளில் இருந்து கொண்டு யுவராஜா மீதும்,

ரீஜண்ட் மகாராணி மீதும் மலர்களைத் தூவினர். சில பெண் மணிகள் யுவராஜாவுக்கு ஆரத்தி சுற்றினர். கட்டிளங் கன்னியர் சிலர் யுவராஜாவின் கம்பீரத் தோற்றத்தில் மனதைப் பறிகொடுத்து உடை நெகிழ்வதுந் தெரியாது தங்களை மறந்து நின்றனர். யுவராஜா தங்களைக் கடைக் கணிக்கவாவது மாட்டாரா? என ஏங்கி நின்றனர் பல மங்கையர். இவ்வாறு ராஜஊர்வலம் ஸ்ரீ பதுமநாபஸ்வாமி கோயிலை நோக்கிச் சென்றுகொண் டிருந்தது.

ஸ்ரீ பதுமநாப ஸ்வாமி கோயில் கண் கொள்ளாக் காட்சியாக விளங்கியது. சுமார் நூறு அடி உயரமுள்ள கோயில் கோபுரம் பிரகாசமான மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜெகஜ்ஜோதியாய் விளங்கியது. கோயி லின் உட்பிரகாரத்திலும், கற்றூண்களிலும் சிறிய எண் ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. சுமார் ஏழு ஏக்கர் விஸ்தீரணமுள்ள கோயில் லட்சதீப உற்சவ காலத் திலிருப்பதுபோல் ஒரே ஜோதி மயமாய்த் திகழ்ந்தது என் றால் பார்ப்போர் கண்களுக்கு நல்ல விருந்தாக இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ !

யுவராஜாவும், ரீஜண்ட் மகாராணியும், திவான் முதலிய சமஸ்தான உத்தியோகஸ்தர்களும் கோயிலுள் பயபக்தி யுடன் அடக்க வொடுக்கமாகச் சென்றனர். கோயிலை முறைப்படி மும்முறை வலம்வந்து கடைசியாக மூல விக் கிரக மூர்த்தியாகிய பதுமநாப ஸ்வாமிகளைக் கண்ணாரக் கண்டு தொழுதனர். அருச்சகர்கள் யுவராஜா நீடூழி வாழ வேண்டு மென்றும், ராஜ குடும்பமும், சமஸ்தான பிரஜை களும் பல்வளங்களும் பெருகச் செழிப்பாக இருக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்து ஸ்ரீ பதுமநாப ஸ்வாமி களுக்கு அருச்சனை செய்தனர்.

சமஸ்தான மக்கள் பெரும்பாலார் கோயிலில் குழுமி யிருந்தனர். அதுவன்றி, ஒரு பெரிய ஜனத்திரள் கோயிலின் வெளியே கூடியிருந்தது.

அருச்சனை, தீபாராதனை யெல்லாம் முடிந்தது. யுவ ராஜாவும் ரீஜண்ட் மகாராணியும் தமது பரிவாரங்களோடு மீண்டும் பவனியாக அரண்மனை நோக்கிச் சென்றனர். இச்சமயம் கோயிலின் வெளியே திரண்டிருந்த ஜனக்கூட் டத்திலிருந்து எழுந்த "யுவராஜாவுக்கு ஜேய்!" "மகாராணி நீடூழி வாழ்க" என்ற கோஷம் வானமுகட்டைப்போய் முட்டிப் பேரொலி செய்ததென்றால் மிகையாகாது. யுவராஜா பிரஜைகள் எல்லாருக்கும் நமஸ்காரஞ் செய்த வண்ணஞ் செல்லலானார்.

இவ்வளவு வைபவங்களுக்குங் காரணம் யுவராஜா விசாகந் திருநாளின் பிறந்த நாள் கொண்டாட்டமே யாகும். யுவராஜாவின் ஜன்ம நக்ஷத்திரத்தைச் சமஸ்தான மக்கள் அனைவரும் ஒரு மனதாயிருந்து மிகச் சிறப்பாகக் கொண்டாடினர்.

* * *

யுவராஜாவின் பிறந்த தின விழாவை யொட்டி, திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை தமது மாளிகையில் தேநீர் விருந்தொன்று நடத்தினார். ஊர்வலம் முடிந்ததும், சமஸ்தான உத்தியோகஸ்தர்களும், சட்டசபை மெம்பர் களும், நகரப் பிரமுகர்களும், பெண்மணிகள் சிலரும் இவ் விருந்தில் கலந்து கொண்டனர். யுவராஜாவும் இதற்கு விஜயஞ் செய்து திவான் முதலியவர்களோடு சிறிது நேரம் அளவளாவி யிருந்து விட்டுச் சென்றார்.

விருந்து வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேநீர் விருந்து என்று பெயருக்கு அழைக்கப்பட்டாலும் பலவித சுவை வாய்ந்த சிற்றுண்டி வகைகளும், பான வகைகளும் தடபுடலாகத் தயாரிக்கப்பட்டு, விருந்தினர் விருப்பமறிந்து வழங்கப்பட்டன. விருந்தினரது குதூகலப் பேச்சும் சந்தோஷ ஆரவாரமும், நகையொலியும் சேர்ந்து அம்மாளிகையே அப்படியே அதிர்ந்து விழுந்து விடச் செய்யுமோ என்று கருதக்கூடிய வகையில் பெரு முழக்கத்தை யுண்டுபண்ணின. திவான் உல்லாச புருஷராகையால், விருந்தினர் மகிழ்ச்சி யடையும் வகையில் இடையிடையே தமாஷாகப் பேசி உற்சாகத்தை யூட்டிய வண்ண மிருந்தார். இவ்விருந்தில் கலந்துகொண்ட பெண் மணிகள் நவ நாகரிகமும், உயர்தரக் கல்வியும் உடையவர்களானாலும், அவற்றின் பயனாக இவ்வளவு தூரம் பொது விஷயங்களில் ஈடுபட்டு இதுபோன்ற விருந்து, கூட்டங்களுக்கு வரக்கூடிய தகுதி வாய்ந்தவர்களானாலும்—பெண்களுக்கு இயற்கையாகவுள்ள நாணம் அவர்களை இன்னும் அறவேவிட்டு நீங்கவில்லை யாகையால்—அடக்க வொடுக்கமாக இருந்து தலை குனிந்தவண்ணம் சிற்றுண்டி யருந்திக் கொண் டிருந்தனர். ஆனால் திவானின் ஹாஸ்யப் பேச்சு அவர்களையும் ஒவ்வொரு சமயம் வாய்விட்டுச் சிரிக்க வைத்துவிட்டது. மற்ற விருந்தினர்களும் தங்கள் வாக்கு சாதுர்யத்தைக் காட்டி அம்மங்கையர் கவனத்தைத் தங்கள் பால் திருப்ப முயன்று கொண்டிருந்தனர்.

ஆனால் இவ்வளவு ஆரவாரத்தினிடையே அமைதியாக இருந்தவர் திருவாங்கூர் சமஸ்தான நிர்வாக சபைக் காரிய தரிசி சிவசைலம் பிள்ளையாவர். அவர் ஏதோ சிந்தனையிலாழ்ந்திருப்பதாக அவரது முகங் காட்டியது. ஆயினும்,

அவருடைய கூரிய கண்கள் அங்கு ஒய்யாரமாக அமர்ந்திருந்த பெண்மணிகளைக் கடைக்கணிக்க மட்டும் தவறவில்லை. அவர்களில் எம் மங்கையைக் குறிப்பாக நோக்குகிறார் என்பது தெரியவில்லை; எனினும் அவ்வனிதைகளில் ஒரு இளம்பெண் மட்டும்—அவள்தான் திவானின் இளைய சகோதரி தேவகி என்னும் பெயருடையவள்—சிவசைலம் பிள்ளையைக் கடைக்கண்ணால் ஆர்வத்தோடு நோக்குவதும்,



புன்முறுவல் கொண்டு தலை குனிவதுமா யிருந்தாள். மற்றொரு கோடியில் அமர்ந்திருந்த ஒரு வாலிபர் பெண்

களையும்—குறிப்பாக தேவகியையும், சிவசைலம் பிள்ளையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்



திருவாங்கூர் சட்டசபை மெம்பர்களில் ஒருவர். இவா

னுடைய அந்தரங்கக் காரியதரிசியா யிருந்து வருபவர். அவரது பெயர் நாராயண மேனன் என்பதாகும்.

* * *

இவ்விடத்தில் திவான் பரமேஸ்வரன் பிள்ளையைப் பற்றி வாசகர்களுக்குக் கூறுவது அவசியமெனக் கருது கிறோம். அவர் திருநெல்வேலியில் பிறந்த சைவ வேளாளர். அவரது தாய் பரம்பரையார் திருவாங்கூர் சமஸ்தானத்தைக் குடியிருப்பாகக்கொண்டிருந்தனர். பிள்ளையவர்களுடைய நுண்ணறிவையும் அரசியல் ஞானத்தையுங் கண்டு சென்னை சர்க்கார் காரியாலயக் குமாஸ்தாவாக இருந்தவர், படிப் படியாக உயர்த்தப்பட்டு, கடைசியாக, சென்னை சர்க்கார் தயவாலேயே பரம்பரை பாத்தியதையை யொட்டி (அதா வது அவருடைய தாய் பாட்டன் முதலியோர் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நிர்வாக சபை மெம்பர்களாகவும், உயர்தர உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து வந்தனர்) திருவாங்கூர் சமஸ்தானத்துக்குத் திவானாக நியமிக்கப்பட்டார். எற் கனவே தாய் வழியாக, மெள்ள நுழைந்த கேரள நாட்டுப் பழக்க வழக்கங்கள், இவர் திருவாங்கூர் திவானாகியதும், இவரது குடும்பத்தில் வேரூன்றலாயின. திருவனந்த புரத்துக்கு வந்த சிறிது நாட்களுக் கெல்லாம், பிள்ளை யவர்களேயன்றி, அவருடைய மனைவி, மக்கள், சகோதரி முதலியவர்களும் மலையாளிகளது நடை யுடை பாவனை களையே பின்பற்றி வரலாயினர்.

நம் கதை நிகழ்ந்த காலத்தில், திருவாங்கூர் சமஸ் தானத்தில், திருநெல்வேலி பிள்ளைமார் முதலிய அயல் ஊராரது ஆதிக்கந்தான் அதிகமா யிருந்தது. சமஸ்தான

நிர்வாக சபையிலும், மற்றும் பொறுப்புள்ள உத்தியோகங்களிலும் நாயுடு, பிள்ளை, முதலியார் முதலியவர்கள் பெரும்பாலாராக இருந்து வந்தனர்.

சிவசைலம் பிள்ளை தூத்துக்குடியைச் சேர்ந்த சைவ வேளாள மரபினர். பி. ஏ. பட்டம் பெற்றவர். கம்பீரமான தோற்றமுடையவர். ஒரே சாதியினர் என்ற முறையில் திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை முன்பின் அறியாத இவருக்கு ஆதரவு காட்டி இவரை மிகப் பொறுப்பு வாய்ந்த சமஸ்தான நிர்வாகசபைக் காரியாலயக் காரியதரிசியாக நியமித்தார்.

நாராயண மேனன் திருவனந்தபுரத்திலேயே பிறந்து வளர்ந்தவர். நற்குணமுடைய வாலிபர். ஸர். பரமேஸ்வரன் பிள்ளை திவானாக வருவதற்கு முன்பிருந்தே சட்டசபை மெம்பராக இருந்து வருகிறார்.

சிவசைலம் பிள்ளையும், நாராயண மேனனும் உத்தியோக தோரணையில் திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை மாளிகைக்கு அடிக்கடி செல்வதுண்டு. அவ்வகையில் அவர்களிருவரும் மற்றவர்களைக் காட்டிலும் திவானின் சகோதரி முதலியவர்களோடு நெருங்கிப் பழகி வந்தனர். சமயநெறி வழுவாதவராய், ஒழுக்கசீலராய் இருந்து வந்த ஸர். பரமேஸ்வரன் பிள்ளை பட்டம், பதவி உயர உயர அவற்றிற்கேற்ப, சில பழக்க வழக்கங்களை மேற்கொண்டு புது மனிதரானார். குடிப்பழக்கமும், தூர்த்தத் தன்மையும், அவரிடம் எப்படியோ குடிகொள்ளலாயின. மற்றப்படி; உதார குணமும் தயாள சிந்தையும் எப்போதும் போலவே இருந்துவந்தன.

ஸர். பரமேஸ்வரன் பிள்ளைக்கு இரு சகோதரிகள் இருந்தனர். மூத்த சகோதரி கார்த்தியாயினி அச்சமயம் சென்னை சர்க்கார் கல்வி மந்திரியாக இருந்த திவான்பக

தூர் காந்திநாதம் பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். இளைய சகோதரி தேவகிக்கு இன்னும் விவாகமாக வில்லை யாதலால், இவருடனேயே இருந்து வந்தாள். தேவகி திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் வாசித்துவந்தாள். அவள் நமது கதா நாயகி கார்த்தியாயினியைப்போல் பேரழகியா யில்லாவிடி னும் அவளது பருவகால அழகு பார்க்கும் வாலிபரை மயங்கச் செய்யக் கூடியதா யிருந்தது. தேவகி தனது மாளி கைக்கு அடிக்கடி வந்து செல்லும் சிவசைலம் பிள்ளையைக் காதலித்தாள். சிவசைலம் பிள்ளையின் அழகிய உருவ மும், கம்பீரத் தோற்றமும் எம் மங்கையையுங் கவர்ச்சி செய்யக்கூடியவை. ஆகையால், தேவகி அவரைக் காத லித்ததில் ஆச்சரியமில்லை. சிவசைலம் பிள்ளைக்குத் தேவகியிடத்து அவ்வளவு பிடிப்பில்லை யெனினும், அவ ளது கட்டிளமையில் கவர்ச்சியுற் றிருந்தா ரென்றே சொல்லவேண்டும். ஆனால், தேவகியின் இளமை யழகில் மனதைப் பறிகொடுத்துப் பரதவிப்பவர் நாராயணமேனன் ஆவார். அவர் உண்மையாகக் காதலித்து வந்தார். தம் கருத்தை அவர் தேவகியிடத்தில் சமயம் நேர்ந்த போதெல்லாம் வெளியிட்டு வந்ததோடு, அவள் தங் காதலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுங் குறையிரந்து வந்தார். தேவகி சிநேகமுறையில் அன்புகொண் டிருந்தாளாயினும், அவரது காதலை ஏற்றுக்கொள்ள அவள் தயாராக இல்லை. இருந்தாலும், மேனனது வேண்டுகோளைச் சிறிதுங் கண் ணோட்டமின்றிப் புறக்கணித்துத் தள்ளி மறுத்துக் கூறவும் அவள் மனந் துணியவில்லை. பாவம்! பேதைப்பெண்; என் செய்வாள்!

ஸர். பரமேஸ்வரன் பிள்ளை விசால நோக்கும், உல் லாசப் போக்கும் உடையவராதலால், தன்னுடைய தங்கை

தேவகி, வாலிபர்களான சிவசைலம் பிள்ளை, நாராயண மேனன் ஆகியவர்களோடு மிகவுந் தாராளமாகப் பழகுவதைக் குற்றமாகக் கருதவில்லை. ஆனல், பிள்ளையவர்களின் மனைவியான கமலாதேவிக்கு மட்டும், மங்கைப் பருவத்தினளான தேவகி இவ்விதம் ஆடவர்களுடன் தாராளமாகப் பழகுவது சிறிதும் பிடிக்கவில்லை. சமயம் நேர்ந்தபோதெல்லாம் தேவகியை அன்பாகக் கடிந்து புத்திமதி கூறி வந்தாள். அத்துடன் கமலாதேவி தன் கணவனது கூடாவொழுக்கங்களை யறிந்து மனம் வருந்தி வந்தாள். அவளது சாந்த குணத்துக்கும், அமைதித் தன்மைக்கும் ஸர்.பரமேஸ்வரன் பிள்ளையின் உல்லாசப்போக்கு மிக விபரீதமாகக் காணப்பட்டது. எனவே, அவள் தன் கணவன் பழையபடி நல்ல வழியில் திரும்ப வேண்டுமென சதா கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள்.

* * *

இனி, கதைப் போக்கை மேலே கவனிப்போம். விருந்து முடிந்தும், விருந்ினர் ஆர்ப்பாட்டம் இன்னும் அடங்கியபாடில்லை. இச்சமயத்தில் பெண் விருந்தினர்களுக்காக — அவர்களை உடனிருந்து உபசரிப்பதற்காக—அவ் விருந்தில் கலந்துகொண்ட தேவகி, மெள்ள எழுந்து மாளிகைக்குள் செல்லலானள். அவள் நேராகத் தன் அறைக்குப் போய் நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கூந்தலைத் திருத்தி ஒப்பனை செய்து கொண்டாள். பிறகு, அவள் மாளிகையைச் சூழ்ந்துள்ள பூஞ்சோலைக்குப் புறக்கடை வழியாகச் சென்றாள். சோலையில் நுழைந்த அவள் மாளிகையின் வெளிவாயிலை நோக்கி நடந்தாள். வெளிவாயிலைச் சமீபித்ததும், அதற்கு இருபது அடி தூரத்திலுள்ள

மல்லிகைக் கொடி பந்தலில் மறைந்து நின்று யாரு



டைய வரவையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்

டிருந்தாள். "தேவகி இந்நேரத்தில் இவ்விருட்டில் என்ன செய்துகொண்டிருக்கிறாய்?—யாரை எதிர்பார்க்கிறாய்?" என்ற குரலைக் கேட்டு தேவகி திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். தனக்குப் பின் மிகச் சமீபத்தில் நாராயண மேனன் நின்று கொண்டிருப்பதை யறிந்ததும், அவள் முகம் மாறுபட்டது. அவள் ஏதோ கூற வாயைத் திறந்தாள். அதே சமயத்தில் மாளிகையிலிருந்து தாங்களிருக்கும் பக்கமாக யாரோ நடந்துவரும் காலடிச் சப்தம், இவ்விருவர் காதுகளிலும் விழுந்தது. அதை யடுத்துச் சோலை பக்கமாக இருந்த மின்சார விளக்குகள் திடீரென எரியலாயின. இருவரும் திடுக்கிட்டனர். வாலிப வயதினரான தாங்கள் இருவரும் அந்நேரத்தில் சோலையில் தனியாக இருப்பதை வருபவர்கள் கண்டால் என்ன நினைப்பார்கள்? தங்களைப்பற்றித் தவறாகக் கருத இடந்தருமல்லவா! எனவே, நாராயண மேனனைக் காட்டிலும் தேவகி மிகவும் பதைபதைத்தாள். உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போய் விடவேண்டுமென அடியெடுத்து வைத்தாள். இதற்குள் அம்மனிதர்கள் இவர்களிருக்கு மிடத்தை யணுகிவிட்டனர். ஆகவே, தேவகியும், நாரயண மேனனும் ஒன்றுந் தோன்ருது நின்றுவிட்டனர்.

வந்தவர்கள் மிக மெதுவாக நடந்த வண்ணம் ஏதோ பலவாறு பேசிக்கொண்டு வந்தன ராதலால், அவர்கள் தேவகியும் நாரயணமேனனும் இருக்குமிடத்தை யடைவதற்குச் சில நிமிடங்களாயின. யாரோ தாங்கள் இருக்குமிடத்தை நோக்கி வருகிருர்கள் என்றறிந்ததும் அவ்விருவரும் முதலில் திகைத்து நின்றன ராயினும் அவர்கள் மெதுவாக நடந்துவரவே, இவர்களுக்கு யோசிக்க அவகாச மேற்பட்டது. தேவகி அவர்கள் வருவதற்குள் தான்

அவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்று எண்ணி னாள். ஆயினும் காலடி சப்தங் கேட்டால் தன்னை அவர் அவர்கள் பார்த்துவிடுவார்களே எனப் பயந்தாள். கடைசி யாக, தான் நின்றிருந்த மல்லிகைப் பந்தலைச் சுற்றுமுற் றும் பார்த்தாள். அப்பந்தலுக்குப் பின்புறம் போய் கொடி மறைவில் நின்றால், அப் பந்தல் வழியாகச் செல்வோரால் பார்க்க முடியாது என்று தெரிந்தது. எனவே, உடனே தேவகி ஓசைபடாது நடந்து சென்று பந்தலின் பின்புறத் தில் மறைந்துகொண்டாள். மனக் குழப்பமடைந்த நாரா யண மேனன் பார்த்தான்; தேவகியின் சமயோசித புத் தியை வியந்தான். இதே சமயம், அம் மனிதர்கள் பந்த லண்டை வந்துவிட்டனர். வந்தவர்கள் யார்? திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை, மீனாட்சி குட்டியம்மாள், மாதவன் நாயர், சிவசைலம் பிள்ளை ஆகியோரே வந்து கொண்டிருந்தனர். இவர்களைக் கண்ட நாராயண மேனன் சோலையில் காற்றுக்காக வந்து உலாவுபவன் போல்பாவனை செய்தவண்ணம் நின்றுகொண்டிருந்தான். திவான் மாளி கையில் எங்குஞ் செல்ல நாராயண மேனனுக்கும் சிவசைலம் பிள்ளைக்கும் உரிமையுண்டாகையால், நாரா யண மேனன் அங்கிருப்பதைப்பற்றி யாரும் சந்தேகிக்க வில்லை.

திவான், மாதவன் நாயருடனும், மீனாட்சி குட்டியம் மாளுடனும் உல்லாசமாகப் பேசிக்கொண்டு வந்தார். சிவசைலம் பிள்ளை ஒவ்வொரு சமயம் இவர்கள் சம்பா ஷணைகளில் கலந்துகொள்வதும், மற்ற சமயங்களில் மௌனஞ் சாதிப்பதுமாய் இருந்தான். நாராயணமேனன் இவர்கள் பந்தலை யடைந்ததும், அவர்களை அப்போது தான் கவனித்தவன்போல் புன்னகை செய்து அவர்க ளோடு மெதுவாகக் கலந்துகொண்டான். சிவசைலம்

பிள்ளை மட்டும் நாராயண மேனனை ஒருவிதமாகப் பார்த்து தனக்குள்ளாகச் சிரித்துக்கொண்டான். அதன் பொருள் என்னவோ யார் அறிவார்? இவர்கள் அப் பந்தலில் நுழைந்து அவ்வழியைக் கடக்கும்போது, தேவகி அவர்களையெல்லாம் ஒவ்வொருவராகக் கூர்ந்து கவனித்தாள். தன் சகோதரர் விருந்தினர்களோடு பேசிய வண்ணஞ் செல்வதைக் கண்டதும், அவர்கள் எங்கு தன்னைக் கவனித்து விடுவார்களோ என்ற பயத்தால் அவள் இருதயம் படபடவென அடித்துக்கொண்டது. மூச்சுக்கூட விடவில்லை. இச்சமயம் 'உன்னைக் காட்டிக் கொடுத்து விடுவேன்' எனப் பயமுறுத்துவதுபோல் அந்தப் பாழும் தும்மல் வேறு வந்து அவளை வாட்டியது. அதை மிகவும் சிரமத்தோடு அடக்கிக்கொண்டாள். இவ்வளவு சங்கடங்களுக் கிடையிலும் இக்கோஷ்டியில் தன் காதலனும் இருக்கிறான் என்றறிந்ததும் அவள் மனத்தில் களிப்புண்டாயிற்று. சிவசைலம்பிள்ளைக்காகத்தானே அவள் பூஞ்சோலையில் வந்து காத்திருந்தாள்? ஆகவே, தன் காதலன் முகத்தை மீண்டுமொருமுறை பார்க்கவாயினும் நேரிட்டதே என்ற திருப்தி அவ்விளம் பெண்ணின் மனதில் ஏற்படுவது இயற்கைதானே!

சிறிது தூரம் சென்ற அவர்கள் மறுபடியும் வந்த வழியே திரும்பினார்கள். அவர்கள் பந்தலைத் தாண்டிச் சென்றதும் தேவகி மறைவிடத்தை விட்டு மெள்ள வெளி வந்தாள். இப்போதுதான் அவள் நன்றாக மூச்சுவிட்டாள். அவர்கள் கண்ணுக்கு மறையும்வரை சிவசைலம் பிள்ளையையே பார்த்துக்கொண்டிருந்த தேவகி, பின்னர் பெருமூச்செறிந்த வண்ணம் மாளிகையினுள் சென்றாள்.

## இரண்டாவது அதிகாரம்

### கண்வழி நுழைந்த காதல்

அருணோதயங்கூட ஆகாத அதிகாலை. வடக்கேயிருந்து மிக வேகமாய் 'ஹூம்' என்று சப்தம் செய்துகொண்டே "திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்" ரயில் திருவனந்தபுரம் ரயில் ஸ்டேஷனில் வந்து நின்றது. பிரயாணிகள் 'நான் முந்தி, நீ முந்தி' எனப் போட்டி போட்டுக்கொண்டு ரயிலிலிருந்து இறங்கலாயினர். ரயில் வருவதற்கு முன்பே பிரயாணிகளை எதிர்கொண்டு அழைத்துச் செல்லப் பிளாட்பாரத்தில் வந்து காத்துக்கொண்டிருந்த அவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் ரயிலை அணுகி இறங்குபவர்களைக் கவனிக்கலாயினர். கூலியாட்களின் ஆரவாரம் சொல்லத் தரமன்று. பிரயாணிகள் வைத்திருந்த மூட்டை முடிச்சுகளையும், டிரங்கு பெட்டி முதலியவைகளையும் அவர்களனுமதியின்றியே பிடுங்கி யெடுத்துச் சென்றனர். ரயில்வே உத்தியோகஸ்தர்களில் சிலர் அதிகார ஆணவத்தால் துள்ளிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்துக்கு முன்பு அமைதி நிலவிக்கொண்டிருந்த ரயில்வே ஸ்டேஷன் இப்போது ஜனங்களின் கூச்சலிலும், இரைச்சலிலும் முழுகிக் கொண்டிருந்தது.

இச் சமயத்தில் ஒரு வாலிபன் யாரையோ எதிர்பார்த்தவனாய் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டுகளை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு வந்தான். ஒரு கம்பார்ட்மெண்டண்டை வந்ததும், அவன் அப்படியே திகைத்து நின்றுவிட்டான். அவன் கால்கள் பூமியில் அழுத்தமாகப் பதிந்து நின்றுவிட்டது போலவே, அவனது கண்களும் எதிரே தோன்றிய

பொருளின்மீது பதிந்து நின்று விட்டது. அவனது திகைப்பிற்குக் காரணமென்ன? அவன் கண்ணிமைக்காது ஏன் நிற்கிறுன்? அவன் கண்டதுதான் என்ன? இவ் வாலிபனை இமையா நாட்டங்கொள்ளச் செய்தது ஒரு பெண் மணியே என்ருல், வாசகர்களே! நீங்கள் ஆச்சரியமடையலாம். அம்மங்கையின் பேரழகு இவ்வாலிபனையேயன்று; உலகிலுள்ள எவ்வித ஆடவர்களையும் மயங்க வைக்கக் கூடியது. இவ்வுலகையே ஒரு குடைக் கீழ் வைத்துச் செங்கோல் செலுத்தும் மன்னர் மன்னனும், தம் தவ முதிர்ச்சியால் மோக்ஷ வீட்டையும் எட்டிப் பார்த்த முழு முனிவனும் எல்லாச் சிறப்புக்களையும் உதறித் தள்ளி விட்டு இவளுக்குக் குற்றேவல் செய்யும் அடிமையாயிருந் தாயினும் இவளது காலடியில் விழுந்து கிடக்க விரும்புவார்களென்பது திண்ணம். பெண் மக்களும் இவளது கண்கொள்ளா வனப்பை அள்ளிப் பருக ஆசை கொள்வார்களெனில், அதிகங் கூறுவானேன்! இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டு ஒன்றிலிருந்து அப்போதே இறங்கிக்கொண்டிருந்த அப்பேரழகியும் இவ்வாலிபனைக் கண்டதும், அவனது கம்பீரத் தோற்றத்தில் தன் மனதைப் பறிகொடுத்து நின்ருள். இருவரது கண்களும் ஒன்றை யொன்று கௌவி உண்ண முயன்றன. தலை முதல் கால் வரை ஒவ்வொரு அங்கத்தின் அழகிலும் ஈடுபட்டு வந்த அவ்வாலிபனது கண்கள் கடைசியாக அவளது அழகிய மார்பகத்தில் நிலைத்து நின்று இருதயத்தை ஊடுருவிப் பாய்ந்து அவளது உள்ள நிலையை யளந்தறிய முயல்வனபோ லிருந்தன. அம்மங்கையின் நீலவிழிகள் அவ்வாலிபனது திரண்ட தோள்களைத் தொளைத்துக் கொண்டிருந்தன. இவ்விருவரும் இவ்வுலகையே மறந்து நின்றன ரென்றே கூறவேண்டும்.





"ஆ! ஆ! என்ன அழகு! என்ன வனப்பு! மாசற்ற பொன்னால் ஆக்கப்பட்டதோ இவ்வனிதையின் உடம்பு? செவ்வரி படர்ந்த கருவிழிகளும், புன்னகை தவழும் பவள வாயும் எவ்வாடவன் உள்ளத்தைத்தான் கொள்ளை கொள்ளா? நெற்றியின் மின்னொளியும், புருவம் வில்லும் எப்பேர்ப்பட்ட வீரனின் இருதயத்தையும் பிளந்து செல்லுமே! பருத்து திரண்டிருக்கும் இக்கொங்கைகளை அச்சிற்றிடை எவ்வாறு தாங்கிக்கொண்டிருக்கிறது?—ஆச்சரியம்!—அதனால்தான் அவ்விடை பூங்கொடிபோல் துவண்டு ஆடுகிறது போலும். பின்

ளித் தொங்க விடப்பட்டிருக்குங் கருங்கூந்தல், உருண்டு திரண்ட அழகிய முகத்தின்மீது சுருண்டு சுருண்டு விழும் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம் போலிருக்கிறதே! இத்தகைய பேரழகியைத் தன் காதலி யாக வாய்க்கப் பெற்றவனே புண்ணிய புருஷனுவான்! அவனே இவ்வுலகில் பெரிய அதிர்ஷ்டசாலி யென்று சொல்வேன்! பொன் இருந்தென்ன! பொருள் இருந் தென்ன! உயர் பதவியி லிருந்தென்ன! இவ்விதப் பேரழகி யோடு கூடி யனுபவிக்கும் இன்பத்துக்கு அவைகளெல் லாம் சிறிதாயினும் ஈடாகுமா!—" என அவ்வாலிபனது வாய் மெதுவாகப் பிதற்றிக் கொண்டிருந்தது.

இச்சமயம். "என்ன சிவசைலம்! யாரை எதிர் பார்த்து நிற்கிருய்?" என்று கேட்டவண்ணம், ஒரு கன வான் அவ்வாலிபனது தோளில் தட்டினர். சிவசைலம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். தனக்குப் பின்னே திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை நிற்பதை யறிந்ததும் அவன் முகம் மாறுதலடைந்தது. அவன், "இல்லை; ஊரி லிருந்து என் தாயார் வருகிருர்கள் எனத் தகவல் கிடைத் தது. அவர்களை எதிர்கொண் டழைத்துச் செல்லவந் தேன்!" என அசட்டுச் சிரிப்போடு கூறினுன்.

"ஓ! அப்படியா!" எனத் திவான் கூறுவதற்குள், "அண்ணு! வந்துவிட்டீர்களா!" என மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டே அம்மங்கை இறங்கி வந்தாள். அவள் பின்னே ஒரு மாது பெட்டி முதலியவைகளை யெடுத்துக் கொண்டு இறங்கினுள். திவானும் அம்மங்கையை நோக் கிச் சென்று, "ஆமாம்! கார்த்திகா! உன் கடிதமும், மைத்துனர் கடிதமும் ஏககாலத்தில் வந்து சேர்ந்தன. உன்னை வரவேற்க சிப்பந்திகளோடு ஓடி வந்தேன். நான்

ஸ்டேஷனுக்கு வரமாட்டேனென்று நினைத்தாயா என்ன! உனக்காக வராவிட்டாலும், உன்னுடைய கணவர் சென்னை சர்க்கார் மந்திரியாயிற்றே! அவருக்காகவாயினும் வர வேண்டாமா! இல்லாவிட்டால் அவர்..................." என்று புன்சிரிப்போடு சொல்லிக்கொண்டே வந்தார்.

இதற்குள் அம்மங்கை—அவள்தான் கார்த்தியாயினி—நமது கதாநாயகி — இடை மறித்து, "போதும் அண்ணா! உங்கள் பரிகாசப் பேச்சு! என் கணவர் சென்னை மந்திரியென்றால், நீங்கள் மாத்திரம் திருவாங்கூர் சமஸ்தானத்துக்குத் திவான் இல்லையா! நீங்களும் ஒரு வகையில் மந்திரிதானே! இப்பதவியிலென்ன இருக்கிறது! இன்றைக்கு இருக்கும்; நாளைக்குப் போகும்! இப்பதவியைப் பொறுத்தா நமக்குள் அன்பு, உறவு, உபசாரம் எல்லாம் ஏற்படுகின்றன? நான் சாதாரண குடியானவனுக்கு—ஏழை மகனுக்கு வாழ்க்கைப்பட் டிருந்தாலும் நீங்கள் என்னை அன்பு காட்டி ஆதரிக்கக் கடமைப்பட்டவர்தானே!" என்று குயிலினும் இனிய குரலில் கொஞ்சலாகப் பேசினாள்.

"கோபித்துக் கொள்ளாதே, அம்மா! கார்த்திகா! நான் விளையாட்டாக ஏதோ பேசினேன்! மைத்துனர், மருமான் எல்லாம் சௌக்கியந்தானே!" எனப் பேச்சை மாற்றி க்ஷேமலாபம் விசாரிக்கலானார்.

இவர்களது பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த சிவசைலம், "சிவா!" என யாரோ கூப்பிடுங் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கார்த்தியாயினி இறங்கிய கம்பார்ட்மெண்டிலிருந்து ஒரு வயது சென்ற மாது இறங்கிக்கொண்டிருந்தார். இவரைக் கண்டதும் சிவசைலம், "அம்மா!" என்றழைத்தவண்ணம் ஓடிச்சென்று கையைப் பிடித்துக் கீழே இறக்கினான்.

மெள்ள நடந்துவந்த அம்மாது, சிறிது தூரத்தில் ஸர். பரமேஸ்வரன் பிள்ளையோடு பேசிக்கொண் டிருக்கும் கார்த்தியாயினியைச் சிவசைலத்துக்குக் காட்டி, "அப்பா ..........." என ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

பேச்சுக் கிடையே இம்மாதைக் கவனித்து விட்ட கார்த்தியாயினி தன் அண்ணனோடு அவ்வம்மையை அணுகினுள். உடனே, அம்மாது கார்த்தியாயினியின் கையைப் பிடித்துக்கொண்டு, தம் மகனைப் பார்த்து, "அப்பா! ரயிலில் இந்தக் குழந்தையால்தான், நான் சௌகரியமாக வந்தேன். எனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தது. இந்தத் தள்ளாத வயதில் வழித் துணையில்லா விட்டால் நான் மிகவுங் கஷ்டத்தோடு பிரயாணஞ் செய்ய வேண்டியிருக்கும், அம்மா! உன்னைப் பார்த்தால் என் மகள் போலிருக்கிறுய்! உனக்கு ஆண்டவன் கிருபை பூரணமாகக் கிடைக்கவேண்டும்" என்று வாழ்த்தினர்.

"அம்மா! மற்றவர்கள் செய்யாத காரிய மொன்றையும் நான் செய்யவில்லையே! மனிதராகப் பிறந்தால் ஒருவர்க்கொருவர் உதவி புரிவதுதான் நியாயம்.—உங்கள் அன்பிருந்தால் அதுவே எனக்குப் பெரும் பாக்கியம்" எனப் பணிவாகக் கூறினுள்.

இவ்வாறு ஒருவர்க்கொருவர் அறிமுகப்படுத்திப் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு பெரிய ஆரவாரங் கிளம்பியது. எல்லோரும் ஏககாலத்தில் திரும்பிப் பார்த்தனர். பிளாட்பாரத்திலிருந்து மெள்ள நகர்ந்த ரயில் திடீரென கட கடவென்ற சப்தத்தோடு அசைந்தாடி நின்றது. "ஐயோ" என்ற அலறல்.

"ஐயையோ! போயிட்டாளே!"

"பாவம்! சிறுபெண். அதிகாலையில் பலியாய்விட்டாள்!"

"சக்கரம் மேலேறிவிட்டது முகமெல்லாம் நசுங்கிப் போயிருக்கும்."

"ஐயோ! யார் பெற்ற பெண்ணோ!"

"இந்தக் கோரக் காட்சியை நாம் பார்க்க நேர்ந்ததே!"

இங்ஙனம் பிளாட்பாரத்தி லிருந்தவர்கள் எதிர்பாராத இச்சம்பவத்தைக் கண்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். சிலர் சம்பவம் நடந்த இடத்துக்குத் துடிதுடித்து ஓடினர். இதற்குள், ரயில் கார்டும், டிரைவர், மற்றும் ஸ்டேஷன் மாஸ்டர் முதலிய உத்தியோகஸ்தர்களும் வந்து சேர்ந்தனர். அவர்கள் கூட்டத்தை விலக்கிக்கொண்டு, ரயில் பாதையில் இறங்கிப் பார்த்ததில், சுமார் 18-வயதுள்ள ஒரு இளம்பெண் சக்கரத்தினடியில் அகப்பட்டு இரத்தத்தில் மூழ்கி யிருப்பதைக் கண்டனர். அவள் சக்கரத்தில் சிக்கலாக மாட்டிக்கொண்டு அரைபட்டிருந்ததால், அவ்விடத்தினின்றும் அவளை யெடுக்க அதிகாரிகள் செய்த முயற்சி கைகூடவில்லை. மேலும் அப்போதுதான் அப்பெண்ணின் உயிரும் பிரிந்துகொண்டிருந்தது. எனவே, ரயில்வே அதிகாரிகள் விசனத்தோடு அவ்விடத்தை விட்டு வெளியேறினர். பின்னர், போலீசார் ரயிலை மெதுவாக நகர்த்தச் செய்து வேலையாட்களை விட்டு அப்பெண்ணின் பிரேதத்தை அப்புறப்படுத்தி பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் சென்றனர்.

இப்பெண்ணுக்கு நேர்ந்த பிராணாபத்து சம்பந்தமாய் விசாரணை செய்ததில், பெண்களுக்கென்று தனியாக

ஏற்பட்டிருக்கும் கம்பார்ட்மெண்டில் அவளோடு பிரயாணஞ் செய்த மாதொருத்தி வாயிலாக நடந்த விஷயம் வெளியாயிற்று. அதாவது, ரயில் இந்த ஸ்டேஷனில் வந்து நின்றதும், பலர் இறங்கினர்; அச்சமயம் விபத்துக்காளான பெண் தூங்கிக்கொண்டிருந்தாள். இவளுக்கு எதிரே யுட்கார்ந்திருந்த மாது (தகவல் கொடுத்தவள்) தன்னைப்போல் இவளும் வேறு ஸ்டேஷனில் இறங்க வேண்டும் போலுமென நினைத்ததால் பேசாமலிருந்தாள். ஆனால் ரயில் 'பிகில்' ஊதிப் புறப்பட்டதும், அச்சப்தத்தைக் கேட்டோ என்னவோ திடுக்கிட்டு விழித்த அப்பெண் ரயில் போவதைக் கண்டு பரபரப்பாக எழுந்து தன் மூட்டை முடிச்சுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு அவசரத்தோடு கதவைத் திறந்தாள். இதைக் கண்டு அம்மாது ரயில் போகையில் இறங்கினால் ஆபத்து நேரும் எனக் கூறித் தடுத்துங் கேளாது, அப்பெண் பரபரப்போடு இறங்கியதால், கால் தவறிப் பிளாட்பாரத்தில் விழுந்துருண்டு சக்கரத்தினடியில் சிக்கிக் கோர மரணத்தை யடைந்தாள் என்பதாம்.

இப்பரிதாபகரமான மரணத்தைப்பற்றி ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், மற்றவர்களும் சிறிதுநேரம் அநுதாபமாகப் பேசிய பின்னர், கவனத்தை வேறு வழியில் திருப்பினர். ஆனால், நமது கதாநாயகியான கார்த்தியாயினி மட்டும் அக்கோர சம்பவத்தைக் கண்டதனால் பெரிதும் பாதிக்கப்பட்டாள் என்றே கூறவேண்டும். அவ்விளம் பெண்ணின் பரிதாப மரணக் காட்சி அவள் உள்ளத்தில் போட்டோ பிடிப்பதுபோல் அப்படியே பதிந்துவிட்டது. அவள் கண்களிலும் அது காட்சி யளித்துக் கொண்டேயிருந்தது. அறிவு சோகத்தில் ஆழ்ந்துபோயிருந்தமையால்,

மற்றவர்கள் பேசுவது இவள் காதுகளில் விழவில்லை. அவள் தனது இயற்கையான உற்சாகத்தை யிழந்து, சம்பவம் நடந்த இடத்தையே நோக்கிய வண்ணம் தன்னை மறந்து அசைவற்று நின்றிருந்தாள். சிவசைலம், ஸர். பரமேஸ்வரன் பிள்ளையிடமும், தன் தாயிடமும் உரையாடிய வண்ணம் கார்த்தியாயினியைக் கடைக்கணித்துக் கொண்டிருந்தான்.

ஸர். பரமேஸ்வரன்பிள்ளை கார்த்தியாயினியைநோக்கி, தங்களுக்காக மோட்டார் காத்திருக்கிறது எனக் கூறி யழைத்த பிறகே, அவள் தன் நினைவைப் பெற்ருள். சிவசைலத்தின் தாயார் கடைசியாக இவளுக்கு நன்றி மொழிகளைக் கூறி விடை பெற்ருள். இவளும் அச்சமயம் தனக்குத் தோன்றியபடி பதில் கூறி விடை பெற்றுப் பிரிந்தாள். அவள் இயந்திரப் பதுமைபோல் இயங்கி தன் தமையனேடு நடந்து சென்று மோட்டாரை யடைந்தாளே யன்றி, இயற்கையாகச் சென்றதாகக் கூறமுடியாது.

கார்த்தியாயினி காரில் ஏறிச் செல்லும்வரை அவள் இருக்கும் திசையையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சிவசைலம், கார் கண்ணுக்கு மறைந்ததும் பெருமூச்செறிந்தான். அவன் தன் தாயோடு க்ஷேமலாபங்களை விசாரித்தவாறு வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாலும், அவன் மனம் மட்டும் கார்த்தியாயினியின் பின்னேயே சென்றுகொண்டிருந்தது.

அவன் கார்த்தியாயினியை முதலில் தற்செயலாகச் சந்தித்தபோது, அவள் தன்னை நோக்கிய நோக்கைக் கொண்டே பெரிய பெரிய மனக்கோட்டை கட்டி ஆசையை வளர்த்தான். பரமேஸ்வரன் பிள்ளைக்கும்

அவளுக்கும் இடையே நடந்த சம்பாஷணையிலிருந்து கார்த்தியாயினி திவானுடைய மூத்த சகோதரியென்றும், அவளுக்குக் கலியாணமாகி விட்டதென்றும் தெரிந்ததும், அவனது மனக்கோட்டையின்மீது இடி விழுந்தது போலாயிற்று. அதற்கப்புறம் அவன் தன்னைக் கடைக்கண்ணால் கூடக் கவனிக்காததையும், தன் தாயினிடம் விடை பெற்றுச் செல்லும்போது கூடத் தன்னைத் திரும்பியும் பார்க்காது சென்றதையும் நினைத்ததும் ஏற்கனவே இடிந்த மனக்கோட்டை மண்ணாய் — தரைமட்டமாயிற்று. சிறிது நேர நிகழ்ச்சியிலும், மாறுதலிலும் அவன் அடைந்த மன வேதனைக்கு அளவேயில்லை. வழி நெடுக அவளுடைய தாய் கார்த்தியாயினியின் குணாதிசயங்களைப் பற்றி வானமளாவப் புகழ்ந்து வந்தது அவனுக்கு எரியும் நெருப்பில் நெய்யை விட்டதுபோ லிருந்தது. அவன் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணிப் புண்ணாகியது. உல்லாச புருஷனாய் உலாவிவரும் அவன், உற்சாகஞ் சிறிதுமின்றி உன்மத்தங் கொண்டவன் போலிருப்பதைக் கண்டு, அவனது வீட்டிலுள்ள வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டு விட்டு ஆபீஸுக்குச் சென்றான். ஏதோ போய்த் தொலைய வேண்டுமே என அவன் ஆபீஸுக்குப் போய் இயந்திரம்போல் இயங்கினனேயொழிய, அன்று அவனால் சரியாக வேலையைக் கவனிக்க முடியவில்லை. எடுத்த காரியத்தை யெல்லாம் தவறாகச் செய்தான். இவனது இம்மாறுதலைக் கண்ட அங்குள்ளவர்கள் வியப்புற்றனர். சிவசைலத்தின் கண்முன் கார்த்தியாயினியின் அழகிய உருவமே நடனமாடிக் கொண்டிருந்ததால், இவர்களது புரளியெல்லாம் அவன் செவியி லேறவில்லை.

ஆபீஸை விட்டதும், யாருடனும் கலந்து எங்குஞ் செல்லாமல் நேராக வீட்டை யடைந்தான். "நாம் பிரிந்து வந்து நீண்ட நாளைக்குப் பிறகு நம் தாய் வந்திருக் கிருளே; அவளோடு சிறிது நேரமாயினும் பேச வேண் டுமே" என்ற எண்ணங்கூட அவனுக்கு ஏற்படவில்லை. தன் அறையை யடைந்து கதவைத் தாளிட்டான். சட்டை முதலியவைகளைக் கழற்றி ஒருபுறம் எறிந்து விட்டு, நிம்மதியின்றி இப்படியும் அப்படியுமாக உலாவ லானுன். கடைசியாக அலுத்துப் போய்ப் படுக்கையில் சாய்ந்தான். அங்கும் அவனுக்கு இருக்கை கொள்ள வில்லை. 'திவான் மாளிகைக்குப் போய் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவ்வழகியை மீண்டும் கண்ணுரக் கண்டுவிட்டு வந்தாலென்ன! அப்போதாயினும் மனம் அமைதி படையாதா!" என்ற எண்ணம் அவன் மனதி லுதிக்கவே, திடீரென படுக்கையை விட்டு அவன் எழுந் தான். ஆனல், அடுத்த கணம் தயங்கி அப்படியே உட் கார்ந்து விட்டான். 'எப்படித் திவான் மாளிகைக்குப் போவது? எந்த முகாந்திரத்தை யொட்டிச் செல்வது? திவான் தன் வருகையைக் குறித்துத் தவருக நினைத்து விட்டால் என்ன செய்வது? அப்படித்தான் சென்ருலும். கார்த்தியாயினியைப் பார்க்கமுடியுமா?' என்றெல்லாம் தனக்குள்ளாகவே வினவிக் கொண்டான். இதற்கு முன் னெல்லாம் சிவசைலம் உத்தியோக முறையிலேயே யன்றி, எவ்வித அலுவலுமின்றியே எந்நேரத்திலும் திவான் மாளிகைக்குப் பலமுறை சென்று வருவான்; திவான் இல்லாத சமயத்தில் கூட மணிக் கணக்காக தேவகியோடு பேசிக்கொண்டிருப்பான். அப்போதெல்லாம் இவனுக்கு இவ்வித அச்சம் அல்லது ஐயம் ஏற்பட்டதில்லை. ஆனல்,

இச்சமயமோ அச்சமும் நாணமும் அவனது ஆண்மையை இருந்த இடந் தெரியாமல் அடக்கிவிட்டது. எனவே, மீண்டும் படுக்கையில் சாய்ந்தான்.

இச்சமயம், அறைக் கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் அவன் காதில் விழுந்தது. மிகுந்த எரிச்சலோடு போய்க் கதவைத் திறந்தான். சமையல்காரன் சமையல் தயாராகி வெகு நாழிகையானதாகக் குறிப்பிட்டுச் சாப்பிட அழைத்தான். அவனுக்கு ஆத்திரத்தோடு பதில் சொல்லியனுப்ப வாயெடுக்கையில் அவனது விதவைத் தாய் அங்கு வந்து சேர்ந்து, "என்ன சிவா! ரொம்ப நாழியாய் விட்டதே! இன்னஞ் சாப்பிடாதிருந்தால் உடம்பு கெட்டுவிடாதா! வா அப்பா, சாப்பிட"' எனத் தன் மகனைப் பரிவோடு அழைத்தார். இதுதான் சமயமென்று சமையற்காரன் மெள்ள அவ்விடத்தை விட்டு நழுவிவிட்டான்

சிவசைலம் தலைகுனிந்த வண்ணம், "அம்மா! எனக்கு உடம்பு என்னமோ போலிருக்கிறது! ஒன்றுஞ் சாப்பிடாமல் பட்டினி போட்டால் நன்றாயிருக்குமென நினைக்கிறேன்.—நீ சாப்பிட்டாயா, அம்மா!" என்று கேட்டான்.

"நான் சாப்பிடுவது இருக்கட்டும். சாகப்போகிற கிழமாகிய எனக்குத்தானா முழுகிப் போய்விட்டது?— உடம்பு என்ன பண்ணுகிறது? கஷாயங் கொஞ்சம் போட்டுக் கொடுக்கச் சொல்லட்டுமா!" என்று அந்த அம்மாள் பதை பதைப்போடு கேட்டார்.

சிவசைலம் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "ஒன்றும் வேண்டாம், அம்மா! சற்று நிம்மதியாய்ப் படுத்துறங்கினால் சரியாய்ப் போய்விடும். நீ போய்ச் சாப்

பிடம்மா!—அடேய்! சுப்பா! அம்மாவைச் சாப்பிடச் செய்" என்று கூவினன்.

அதற்குமேல் சிவகாமியம்மாளால் ஒன்றும் சொல்லி வற்புறுத்த முடியவில்லை. எனவே, அவ்விடத்தை விட்டு நடந்தார். உடனே சிவசைலம் கதவைத் தடாலென்று சாத்திவிட்டு, படுக்கையில் போய் தொபீலென விழுந்தான். அன்றெல்லாம் அவன் உணவருந்தவில்லை. உணவிலோ மற்றவற்றிலோ அவனுக்குக் கவனஞ் செல்லவில்லை. எல்லாவற்றையும் மறந்தான்.

படுக்கையில் பாம்பாய்ப் புரண்டான். அவன் காதுகளில் "கார்த்திகா!" "கார்த்திகா!!" என்ற பெயரே ஒலித்துக்கொண்டிருந்தது. அப்பெயரையே பஞ்சாட்சர மந்திரம் போல மனனஞ் செய்து கொண்டிருந்தான். சிறிது நேரஞ் சென்றதும், இந்நினைவை மறந்து தூங்க கண்களை இறுக மூடிக்கொண்டான். குப்புறக் கவிழ்ந்து படுத்தான். எவ்விதஞ் செய்தும் அவனுக்குக் கொஞ்சமுந் தூக்கம் வரவில்லை. திரும்பி மல்லாந்து படுத்துக் கண்களைத் திறந்து பார்த்தான். கட்டிலினருகே கார்த்தியாயினியின் உருவம் வந்து நிற்பதுபோல் அவன் கண்களுக்குப் புலப்பட்டது. அவனுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. 'இவள் ஏன் இங்கு வந்தாள்? ஒருவேளை, நான் அவள் மீது காதல் கொண்டு வாடுகிறேன் என்பதை யறிந்து தான்' எனது வாட்டத்தைத் தீர்க்க வந்தாளோ! அல்லது, என்னைப் போலவே, அவளும் என்னைக் கண்டது முதல் காதலால் கவரப்பட்டு, என்னிடந் தன் கருத்தைத் தெரிவித்துக்குறை யிரக்க என்னை நாடி வந்தாளோ! எதற்கும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அந்த ரமணியை எதிர்கொண்டு வரவேற்போம்' என்று அவசரமாக எழுந்தான். கார்த்தி

யாயினியைத் தழுவிக்கொள்ள ஆவலோடு ஓடினான். ஆனால், அவன் கடைசியாக ஏமாந்தான். அவன் ஆர்வத்துடன் போன இடத்தில் சுவரில் முட்டிக்கொண்டான். அவனது சித்தப்பிரமையே கார்த்தியாயினியின் உருவெளித் தோற்றமாகத் தோன்றியது. இவ்விதம் பலமுறை அவன் கண்முன் கார்த்தியாயினியின் உருவெளித் தோற்றம் காணப்படுவதும், சிவசைலம் அடிக்கடி அதைக் கண்டு மயங்கி ஏமாறுவதுமாயிருந்து முடிவில் அலுத்துப்போனான். அப்போதும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. பத்து, பதினொன்று, பனிரெண்டு, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என அறையிலுள்ள கடிபாரம் மணி யடித்துக்கொண்டேயிருந்தது. கண்களை மூடிக்கொண்டு மனக்கண்ணில் கார்த்தியாயினியின் உருவத்தைக்கண்டு அவளது நாமத்தை மனனஞ் செய்து கொண்டிருந்த சிவசைலம் மணி யடிக்கும் ஒவ்வொரு சமயத்திலும், கண்ணைத் திறந்து கடியாரத்தை நிமிர்ந்து பார்த்துக் கொள்வான். இவ்வாறு அவன் இரவைக் கழித்துக் கொண்டிருந்தான்.

* * * * * * * * *

ஸர். பரமேஸ்வரன் பிள்ளையோடு மோட்டாரில் சென்ற கார்த்தியாயினியோ எதிர்பாராதவாறு கோர சம்பவத்தைக் கண்டதனால் மனக்கலக்க முற்று அதே நினைவால் விழுங்கப்பட்டிருந்தாள். ஆயினும் மாளிகையை யடைந்ததும், சகோதரர், அண்ணி, தங்கை முதலியவர்களின் குதூகல வரவேற்பிலும், க்ஷேமலாபப் பேச்சிலும் கலந்து கொண்டமையால், அவள் உள்ளத்திலிருந்து அக்கோர மரண நினைவு பையப் பைய மறையலாயிற்று. கார்த்தியாயினியின் வருகை,தேவகிக்கும்,கமலாதேவிக்கும் அவளுடைய குழந்தைகளுக்கும் பெருத்த மகிழ்ச்சியை

உண்டுபண்ணியது. அவர்கள் அவளைச் சிறிது நேரமும் விட்டுப்பிரியாமல் சூழ்ந்துகொண்டு, பல பல விஷயங்களைப்பற்றிப்பேசி மகிழ்ந்தனர். இவளும் தன் இயற்கையான உற்சாகப் போக்கோடு மனங் கலந்து உரையாடினாள். தன் தங்கையைத் தழுவிக்கொண்டாள். சகோதரர் குழந்தைகளை ஆர்வத்தோடு தன் இரு கைகளாலும் அணைத்து அவைகளின் களங்கமற்ற முகங்களில் முத்தமிட்டு உச்சிமோந்து மகிழ்ந்தாள். தான் நாகரிகம் மிக்க நகரில் வாழ்பவளென்றோ, பெரும் பதவி வகிக்கும ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டவளென்றோ பெருமிதமின்றி, யாவருடனும் சமத்துவமாகவே நடந்துகொண்டாள். ஆனால், திவான் மாளிகையிலிருப்பவர்கள் இவளை "சீமாட்டி! சீமாட்டி!" என்றே மரியாதையாக அழைத்தனர்.

திவான் சகோதரி வந்திருக்கிறாளென்றால், தடபுடலுக்குச் சொல்லவா வேண்டும்! விருந்து வேடிக்கை முதலியன ஆடம்பரமாக நடந்தது. எல்லா சந்தடியு மடங்கி, கார்த்தியாயினி ரயிலில் நெடுந்தூரம் வந்த பிரயாணக் களைப்பைத் தீர்த்துக்கொள்ள இரவு பதினொரு மணிக்கே ஓய்வு கிடைத்தது. அச்சமயத்திலும் தேவகி பக்கத்துக் கட்டிலில் படுத்துக்கொண்டு எதேதோ கூறிக்கொண்டிருந்தாள். கார்த்தியாயினி அவைகளைக் கேட்ட வண்ணமே உறங்கிவிட்டாள். அவ்வளவு ஆழ்ந்த தூக்கத்திலும் இரண்டொரு முறை சிவசைலத்தின் கம்பீர உருவம் அவளது மனக்கண்ணில் காட்சி யளித்தது; அவளைப்பற்றி அவன் கனாக் கண்டான் என்றால் அதில் ஆச்சரியமென்ன விருக்கிறது!

# மூன்றாவது அதிகாரம்

## இலவுகாத்த பைங்கிளி

திவான் மாளிகையில் ஏராளமான கூட்டம். எல்லாம் பட்டைச் சரிகைத் தலைப்பாகைகளும், 'ஹாட்'களும் பூண்ட பெரிய மனிதர்களே நிறைந்திருந்தனர். பெண்கள் சமத்துவத்துக்காகப் பாடுபடும் இந்நாளில்-அதுவும் பெண்ணுரிமைகொண்டாடும்-பெண்ணரசு செலுத்தும் கேரள நாடாகிய திருவாங்கூர் சமஸ்தானத்தில் நவநவமான நகைகளைப் பூண்டும், பன்னிறமுடைய விதவிதமான ஆடைகளை யணிந்தும் செல்வக் குமரிகளும் அழகிய மங்கையரும் அப்பிரமுகர்களிடையே கலந்திருந்தார்களென்றால் அது ஆச்சரியமாகாது. நிமிஷத்துக்கு நிமிஷம் மோட்டார்கார்களும், அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டு வண்டிகளும் வந்துகொண்டேயிருந்தன அவ்வண்டிகளிலிருந்து ஸ்ரீமான்களும், ஸ்ரீமாட்டிகளும் இறங்கி அணியணியாக மாளிகைக்குள் சென்றனர். வாயிலில் நிறுத்தப்பட்ட திவானுடைய மனிதர்கள் அவர்களை நல்வரவேற்று உள்ளழைத்துச் சென்றனர்.

முதலில் விஜயஞ் செய்திருந்த கனவான்களுக்கும், பெண்மணிகளுக்குஞ் சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின்னர் அவர்கள் ஒரு பெரிய மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மூன்று பக்கங்களிலும் நாற்காலிகளும், சோபாக்களும் வரிசை வரிசையாக போடப்பட்டிருந்தன. முன் பக்கத்தில் நடுவே, அகலமான மேடை யொன்று அமைக்கப்பட் டிருந்தது. அதன்மீது அழகிய சித்திர வேலைப்பா டமைந்த இரத்தினக் கம்பள

மொன்று விரிக்கப்பட்டிருந்தது. அம்மேடையின் ஒருபுறத் தில் வீணை, மிருதங்கம், பிடில், தம்புரு முதலிய இசைக் கருவிகள் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமென்ன? எல்லாம் நமது கார்த்தியாயினியின் வருகையை முன்னிட் டேயாம். அத்துடன், இன்று பரதநாட்டியஞ் செய்யப் போகும் தேவகுஞ்சரி பாலசரஸ்வதி அபிநயத்திலும் நட னத்திலும் மிகவும் பிரசித்தி பெற்றவ ளாகையாலும், எனி னும், திருவாங்கூர் பக்கத்துக்குப் புதியவ ளாகையாலும் அவளைக்கொண்டு ஒரு கச்சேரி நடத்தி மகிழவேண்டுமென் றும், இது தன்னுடைய தங்கையை யுத்தேசித்து ஏற்படுத் தப்பட்டதாகவும், பெரிய இடத்தில் வாழ்க்கைப் பட்டிருக் கும் அவளைக் கௌரவித்ததாகவும் இருக்குமென்றும் எண்ணி, திவான் இப்பரதநாட்டியக் கச்சேரியை ஏற்பாடு செய்தார்; பிரபலஸ்தர்கள் பலருக்கும் அழைப்பு அனுப்பி வரவழைத்தார்.

விருந்தினர்கள் மண்டபத்துக்குள் நுழைந்ததும், திவான் அவர்களைப் புன்சிரிப்போடு வரவேற்றனர். அவர் கள் ஒவ்வொருவரையும் கார்த்தியாயினிக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். கார்த்தியாயினி நகை தவழும் முகத் தோடு வந்தனஞ் செலுத்தி அவரவர்களுக் கேற்ப இனிய மொழி பகர்ந்தாள். கார்த்தியாயினியின் பேரழகையும், உயர் குடும்பத் தகுதியை விளக்கும் கம்பீர தோற்றத்தை யுங் கண்டு பிரமித்துப்போன கனவான்களும், பெண்மணி களும் அவளிடம் பணிவு காட்டியே உரையாடினர். கார்த் தியாயினி தன்னினத்தவராகிய மங்கையரோடு மிகவும் அளவளாவினள். செல்வச் செருக்கி வாழ்ந்த சீமாட்டி களும், செல்வந்தர்களுங்கூட இவளது கம்பீரத் தோற்

றத்தின் முன் தாழ்ந்து போயினர். கட்டிளங் குமரிகளுக்கு அவளுடன் பேசுவதே ஒரு பெரிய இன்பமாயிருந்தது. நாராயண மேனன் ஏற்கனவே, திவானாலும், தேவகியாலும் கார்த்தியாயினிக்கு அறிமுகஞ் செய்விக்கப்பட்டிருந்தான். ஆகையால், அவள் மண்டபத்தினுள் நுழைகையில், மற்றெல்லோரையும்விட மிகப் பணிவும் அச்சமும் தோன்ற வந்தனமளித்து அப்பால் நடந்தாள். இரண்டொருநாள் பழகியதிலேயே தேவகிக்கும், கார்த்தியாயினிக்கும் உருவத்திலும் குணஞ் செயலிலும் அளவு கடந்த வேற்றுமை யிருப்பதையும், அதிலும் கார்த்தியாயினி தேவகியைவிடச் சகல அம்சங்களிலும் சிறந்து விளங்குவதையும் நாராயணமேனன் நன்குக உணர்ந்தான். எனினும், அவன் மனம் தேவகியை விட்டு அவள்பால் தாவவில்லை. இது அவன் கார்த்தியாயினியிடம் பயபக்தி விநயத்துடன் நடந்து கொள்வதி லிருந்தே தெரிந்தது. தன்னால் காதலிக்கப்படும் மங்கைக்குச் சகோதரி என்றறிந்ததும், அவனுக்குக் கார்த்தியாயினியிடம் அன்பும் மதிப்பும் அதிக மேற்பட்டது.

எல்லா விருந்தினர்களுக்குங் கடைசியாக மண்டபத்தை யடைந்தவன் நமது சிவசைவம் பிள்ளை. அவன் முகம் கவலையால் வெளுத்திருந்தது. அவனது சுருங்கிய நெற்றி மன நிலைமையைக் காட்டியது. இவ்வளவு வாட்டத்திலும், அவனது வதனம் வசீகரத்தோடேயே விளங்கியது. அவன் முகத்தில் புன்சிரிப்பைச் சிரமத்தோடு வருவித்துக்கொண்டு திவானுக்கு வந்தனஞ் செலுத்தினான். ஸர் பரமேஸ்வரன் பிள்ளை இவனைக் கண்டதும் அன்போடு, "எங்கே சிவசைலம்! ஒரு வாரமாகக் காணோம்! அன்றைக்கு ரயில் ஸ்டேஷனில் சந்தித்தது;

அப்புறம் மாளிகைக்குக்கூட வரவில்லையே! ஆபீஸுக்கு லீவு போட்டிருப்பதாகவுங் கேள்விப்பட்டேன். உடம்புக் கேதாயினும் அசௌகரியமா? என்ன!" எனக் கேட்டார்.

ஆம்; ஆபீஸ் நேரந் தவிர எப்போதும் திவான் மாளிகையே கதியாகக் கிடக்கும் சிவசைலம், ஒரு வாரம் வரை வராம லிருப்பதென்றால் அவருக்கு ஆகுல மேற்படுவது சகஜந்தானே! அதிலும் தம் சாதியைச் சேர்ந்தவன் என்ற சுஜாதி யபிமானத்தால் அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலை யேற்பட்டு அவர் பலரையும் விசாரித்ததில் ஆச்சரிய மொன்றுமில்லை. கார்த்தியாயினியின் பால் கொண்ட மோகத்தால், சிவசைலத்தின் மனதில் பெரும் புரட்சி யுண்டாயிற்று என்றே சொல்லவேண்டும். உள்ளத்தில் களங்கமேற்படவே, திவான் மாளிகைக்கு ஒரு காரியமுமின்றித் தானாகச் செல்வது எப்படி என்பது அவனுக்குப் பெரிய பிரச்சினை யாகிவிட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் தத்தளித்து மனக்கவலை அதிகரிக்க ஆபீஸுக்குச் செல்லாது தன் வீட்டிலேயே ஒரு வாரமாக அடைபட்டுக் கிடந்தான். திவானது அழைப்பு அவனுக்குக் கிடைத்ததும், அவனது இருண்ட மனதில் ஒரு ஒளி தோன்றியது. இதுவரை கார்த்தியாயினியை எவ்வாறாயினும் மீண்டும் காணவேண்டுமென்ற ஆவலைத் தலையெடுக்கவொட்டாது அடக்கிவந்த நாணம், இச்சமயம் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது. கடைசியாக, ஆசையே நாணத்தை வென்றது. உடனே புறப்பட்டு வந்தான்.

"ஆமாம்; அன்று ஸ்டேஷனிலிருந்து வீடடைந்ததும் எதிர்பாராதவிதமாக ஜுரம் அடிக்க ஆரம்பித்தது.

அன்றைக்குத் தட்டுகெட்டு ஆபீஸ் போய்வந்தேன். அன்று மாலையிலிருந்து ஜுரம் அதிகரித்து என்னை வாட்டி யெடுத்துவிட்டது. நேற்றுதான் ஜுரம் விட்டுச் சற்று உலாவ முடிந்தது. அதனுலேயே தங்களைப் பார்க்கக்கூட வர முடியவில்லை" என்று ஏதேதோ சாக்குக்கூறி மழுப்பலானுன்.

இதைக்கேட்ட திவான் அநுதாபந் தெரிவித்தவராய் தன் தங்கை பக்கந் திரும்பி, "அம்மா! சிவசைலத்தை ஞாபகமிருக்கிறதா! அன்று காலை ரயில் ஸ்டே..................." என்று சொல்லி வருவதற்குள், கார்த்தியாயினி இடைமறித்து, "இதற்குள்ளாகவா மறந்துபோய் விடுவேன்? என்னுடன் ரயிலில் பிரயாணஞ் செய்த பெரியம்மாவின் பிள்ளையல்லவா இவர்!" என்று குனிந்தவாறு கூறினுள்.

இதுவரை தன்னுடைய தமையனுல் அறிமுகஞ் செய்யப்பட்ட கனவான்கள், மங்கையர்களோடெல்லாம் விநயமாகப் பேசிக் குதூகலித்துப் பெருமிதத்தோடிருந்த கார்த்தியாயினி, சிவசைலத்தைக் கண்டதுமே முகமாறுதலடைந்தாள். சிவசைலம் அவர்கள் நிற்குமிடத்தையடைந்தபோது இவளை முதலில் கடைக்கணித்து விட்டே திவானேடு பேசலானுன். அவனது அக்கடைக்கண் பார்வையை ஆற்ருது கார்த்தியாயினி தலைகுனிந்தாள். அவன் தனது உடல் நிலைமையைப்பற்றிக் கூறிய மொழியின் உட்பொருளை யுணர்ந்து கொண்டவள்போல் அவள் தலையை யசைத்தாள். சிவசைலத்தை முதன் முதலாக ரயில் ஸ்டேஷனில் சந்திக்கையில் அவன் இருந்த தோற்றத்துக்கும், இப்போது இருக்கும் தோற்றத்துக்கும் பெரிதும் வேறுபாடிருப்பதை அவள் நன்கு உணர்ந்தாள்.

அத்துடன், தன்னாலேயே அவன் மாறுதலடைந் திருக்கிறான் என்பதையும் ஒருவாறு உணர்ந்து கொண்டாள். ரயிலடியில் அவனை நோக்கியவுடனேயே தன் மனம் அவனது கம்பீரத் தோற்றத்தில் ஊன்றிப் பதிந்ததையும், அதற்கப்புறம் இவ்வொரு வாரத்திற்கிடையே அவனது உருவம் தன் மனக் கண்முன் அடிக்கடி தோன்றுவதையும், அவனைப்பற்றிய நினைவு அடுத்தடுத்து உண்டாவதையும் அவள் கவனித்து வந்திருக்கிறாள். எனவே, அவனது நினைவைத் தன் மனதினின்றும் அகற்றப் பெரிதும் முயன்று வரலானாள். இந்நிலைமையில், சிவசைலத்தை மீண்டுங் காண நேரிடவே, அவள் சங்கட நிலையை யடைந்தாள். எனவே, தன் தலைமையன் வினாவிற்குப் பதிலளித்துவிட்டு, அவ்விடத்தினின்றுஞ் சென்றுவிட முயன்றாள். இத் தருணத்தில் சில பெண்மணிகளோடு தேவகி அங்கு வந்தாள். அவள் தன் தோழிகளைக் கார்த்தியாயினிக்கு அறமுகப்படுத்தி வைத்தாள். ஆகவே, கார்த்தியாயினி தன் மனவேதனையை வெளிக்குக் காட்டாது சமாளித்துக்கொண்டு அவ்விளமகளிரோடு உரையாடினாள்.

தோழிகளோடு மண்டபத்தினுள் நுழையும்போதே சிவசைலத்தைக் கண்டுவிட்ட தேவகி, தன் சகோதரியோடு அப்பெண்களைப் பேச விட்டுவிட்டு, அவனோடு உரையாடத் தொடங்கினாள். ஒரு வாரமாகக் காணாமைக்குக் காரண மென்னவென்று அவனோடு கேட்டாள். அவனது உடல் மெலிவைக் கண்டு மன முருகினாள். இவள் எவ்வளவு பரிவோடு பேசுகிறாள் என்பதை யுணராது சிவசைலம் அசட்டையாகப் பதிலளித்தான். அவன் கண்கள் கார்த்தியாயினியை வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவனது நோக்கெல்லாம் தன் சகோதரியின்மீது பதிந்

திருப்பதைத் தேவகி எளிதில் ஊகித்துக்கொண்டாள். உடனே அவள் உள்ளத்தில் பொறாமைத் தீ மெள்ள மூளத் தொடங்கியது. ஆத்திரங்கொண்டாள். தன்னால் காதலிக்கப்படும் ஒரு ஆடவன் வேறொரு பெண் (அவள் தன்னுடன் பிறந்த சகோதரியா யிருந்தாலும் சரியே) பெண்ணின்மீது மனதைச் செலுத்துகிறான் என்றறிந்தால், எந்தப் பெண்ணுக்குத்தான் பொறாமையும் கோபமும் பொங்கியெழாமற் போகும்?

தேவகி மீண்டும் சிவசைலத்தை ஏதோ கேட்கப் போகும் சமயத்தில் வேறொருவரோடு உரையாடி விட்டு வந்த ஸர். பரமேஸ்வரன் பிள்ளை கார்த்தியாயினி முதலியவர்களைப் பார்த்து, "நாம் போகலாமே! நாட்டியஞ் செய்பவள்கூட வந்து மேடையில் அமர்ந்துவிட்டாள்; வாருங்கள்" என்றழைத்த வண்ணம் மேடையிருக்கும் பக்கத்தை நோக்கி முன்னே நடந்தார். கார்த்தியாயினி, சிவசைலம் முதலியவர்கள் பின் தொடர்ந்தனர்.

இதற்கு முன்பே விருந்தினர்களெல்லாம் ஆசனங்களில் அமர்ந்து விட்டன ராதலால், திவான் மேடைக்கருகே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டி, அதில் கார்த்தியாயினியை உட்காரச்செய்து, பக்கத்து நாற்காலியில் தாம் அமர்ந்தார். சிவசைலம் கார்த்தியாயினியின் வலப் பக்கம் உட்கார்ந்தான். தேவகி தன் தோழிகளோடு மேடைக்கு இடப்புறத்தில், இம் மூவரையும் பார்த்தாற் போல் உட்கார்ந்தாள்.

எல்லோரும் வந்து விட்டனர் என்றறிந்ததும், தேவகுஞ்சரி பாலசரஸ்வதி திவானுடைய அநுமதியைப் பெற்று பரதநாட்டியத்தை ஆடத் தொடங்கினாள். தேவகுஞ்சரி எழுந்து சபைக்கு வணக்கஞ் செலுத்திவிட்டு,

இனிய குரலில் பாடிய வண்ணம் அபிநயிக்க ஆரம்பித்ததும், பெரும்பாலாருடைய கண்கள், அவள்மீது ஏககாலத்தில் வட்டமிட்டன. தேவகுஞ்சரி இயற்கையில் அப்படியொன்றும் அழகியல்லள்; செயற்கையழகே அவளிடம் மிகுந்து காணப்பட்டது. அவள் பூண்டிருந்த வைர நகைகளின் ஜொலிப்பும், தேகத்தை அலங்காரஞ் செய்து கின்ற கராச்சிப் பட்டுப் புடவையிலிருந்த சரிகையின் தகதகாயமான பளபளப்புமே அங்குள்ள கனவான்களின் கண்களைப் பறித்தன.



தேனொழுகும் மணமிக்க மலரில் வண்டுகள் மொய்ப்பது போல, பால சரஸ்வதியின் அலங்காரத்தில் சீமான்கள் கண்கள்—சில

சீமாட்டிகளின் கண்கள் கூட—மொய்த்தன. சிலர் அவள் மீது வைத்த கண் இமையாது இருந்தனர், எனவே, தேவகுஞ்சரி மேடைமீது நடனமாடிக் கொண்டிருக்க, இவர்கள் ஒவ்வொருவரது கண்ணின் கருமணியிலும்—ஏன் அவர்களது உள்ளங்களிலும்-அவளது உருவம் நடனமாடிக் கொண்டிருந்தது. பெரும்பாலோர் அவளது அழகிலும், நடனத்திலும் மயங்கிப் போயிருந்தனர். தங்கள் கணவன்மார் தாங்கள் அருகிலிருப்பதையும் மறந்து, நாட்டியஞ் செய்யும் அத்தாசிப் பெண்ணின் மீது மோகங் கொண்டு மயங்கி வெறிக்க அவளையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு சீமாட்டிகளில் சிலர் பொறாமை கொண்டனர்; சிலர் தங்கள் கணவன்மார் மீது ஆத்திரங் கொண்டனர். ஒரு சீமாட்டி தன் கணவனைக் கண்களால் எரித்து விடுவதுபோல், அவர் முகத்தை முறைத்துப் பார்த்தாள். மற்றொரு பெண்மணி தன் முழங்கையால் தன் கணவனது இடுப்பில் பலமாக இடித்தாள். வேறொரு நாரீமணி மெதுவாக ஆனால் தனது அகமுடையான் காதில் படும்படியாக-அவனது தூர்த்தத் தன்மையையும் நோக்கத்தையும் பற்றிக் கண்டபடி வைதாள்.

மற்ற கனவான்கள் எல்லாரையும் விட திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளையே, தேவகுஞ்சரி பால சரஸ்வதியின் அழகிய தோற்றத்தில் மிகவும் மயங்கிப் போயிருந்தார். பால சரஸ்வதி பரதநாட்டிய மாடத் தொடங்கியதிலிருந்து, ஸர். பரமேஸ்வரன் பிள்ளை கார்த்தியாயினியிடம் அவளது பரத நாட்டியத் திறமையைப் பற்றியும் அழகு, குணம் முதலிய பிரபாவங்களைப் பற்றியும் அளந்து கொண்டே வந்தார். கடைசியாக தேவகுஞ்சரி பாடிய காமச் சுவை ததும்பிய தமிழ்ப் பதங்களிலும், அபிநயங்

களிலும் அவர் மிகவும் ஈடுபட்டுத் தேனில் விழுந்த ஈயைப் போல சொக்கிப் போய்விட்டார். பெருங் குடும்பப் பெண்கள் தனியாக உட்கார்ந்திருந்த கூட்டத்தினிடையே கமலாதேவி அமைதியாக அமர்ந்திருந்தாள். திவானது மனைவி கமலாதேவி சிறிது கர்நாடக மென முன்ன மேயே குறிப்பிட்டிருக்கிறோம். நமது மூதாதையர்கள் பெண்களுக்காக விதித்த சில சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மங்கையர் அடங்கி நடப்பதுதான் முறை என்பது அவள் கருத்து. ஆகவே, அவள் பெரிய பதவி வகிப்பவரது மனைவியா யிருந்தும், வெளியுலக விவகாரங்களில் ஈடுபடா மலே கோஷாப் பெண்போல் இருந்து வந்தாள். எனவே, அவள் கார்த்தியாயினி முதலியவர்களோடு கலந்துகொள் ளாது தனியாக உட்கார்ந்திருந்ததில் ஆச்சரியமில்லை. அவள் தன் கணவனது நிலையைக் கண்டு மனம் வருந்தி னாள். அவள் ஸ்திரீ லோலராய்த் திரிவதை யறிந்து துய ருற்று சமயம் நேரும்போது இனிமையாகப் பேசி அக் கூடா வொழுக்கத்தைத் தவிர்க்கும்படி இரக்கமாக வேண் டிக்கொண்டு வந்தாளே யன்றி, அவருடன் எதிர்த்துப் பேசியதில்லை.

கார்த்தியாயினியோ, தன் சகோதரர் கூறி வந்த தைக் கேட்பது போலிருந்தாளே யொழிய, அவள் காதில் ஒரு வார்த்தை கூட விழவில்லை. வலுக் கட்டாயமாக இழுத்து வந்து நெருப்பின்மீது உட்கார வைக்கப்பட்ட வள் எவ்விதம் அல்லல் அனுபவித்துக்கொண் டிருப் பாளோ, அது போன்ற உணர்ச்சியோடு அவள் நாற்காலி யில் அமர்ந்து கொண்டிருந்தாள். ஆயினும், சிவசைலத் தின் முன் தன் சங்கட நிலையை வெளிக்குக் காட்டிக் கொள்வது ஆபாசம் என அவள் கருதியமையால், மிகவும்

சாமர்த்தியமாக அவ்வுணர்ச்சியை அடக்கிக்கொண்டாள். சிவசைலத்தைப் பார்த்ததிலிருந்து தன் மனங் கட்டுக் கடங்காது செல்வதைக் கார்த்தியாயினி ஒருவாறு உணர்ந் தாள். ஆகையால், அவள் அந்நிலைமையை நீடிக்க விரும்ப வில்லை. சிவசைலத்தின்மீது தகாத முறையில் பாயும் மனத்தை அடக்க முயன்முள். அதனாலேயே அவள் அவன் எதிரே இருக்க விரும்பவில்லை. தீராப் பொறி யாக அவன் தன் பக்கத்திலேயே வந்து அமர்ந்துவிடவே, அவள் பரம வேதனையை யடைந்தாள். முதலில் நாட்டி யத்தின் மீது கவனஞ் செலுத்த முயன்முள். சிவசைலத் தின் முகத்தைப் பார்க்காதிருக்க வேண்டி அவன் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு தன் சகோதரர் பேச்சை உன்னிப்பாகக் கேட்பதுபோல், பாவனை செய்தாள். என்ன செய்தும் கடைசியாக, சிவசைலத்தின் இங்கித மொழி அவளை மயக்கி அவன் விஷயத்தில் கவனஞ் செலுத்தும்படியும், அவனோடு மனங் கலந்து உரையாடும் படியுஞ் செய்துவிட்டது.

சிவசைலம் தொடக்கத்தில், திவான் உரையாடலி னிடையே கலந்துகொண்டு அவர் கூறும் மொழிக்கு ஒத்து தாளம் போடுபவன்போல் பேசி, கார்த்தியாயினியின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப முயன்று வந்தான். திவான் பேசி யனுத்த பின்னர் தேவகுஞ்சரியின் நாட்டிய லாவண்யத்தில் இலயித்துப் போய் விடவே, இவனுக்குக் கார்த்தியாயினியோடு தாராளமாகப் பேசச் சௌகரியங் கிடைத்தது. இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சிறிது தூரத்துக்குப் பின்னாலேயே மற்றவர்கள் அமர்ந் திருந்தார்க ளாதலால், இவர்கள் பேசுவது மற்றவர்களுக் குச் சரியாக ஒன்றுங் கேட்காது.

"மோட்டி! நான் இன்று தங்களோடு அளவளாவிப் பேசி மகிழும் சந்தர்ப்பங் கிடைத்ததை எனது பெரும் பாக்கியமாகவும், பெருமையாகவுங் கருதுகிறேன்" என்று கூறிக் கார்த்தியாயினியோடு பேச்சை மெதுவாக ஆரம் பித்தான்.

கார்த்தியாயினி அதற்கொன்றும் பதில் சொல்ல வில்லையாயினும், புன்னகை கொண்டாள். சிவசைலம் அதையே வாய்ப்பாகக் கொண்டு பொதுவாகப் பல விஷ யங்களைப்பற்றி அவளோடு பேச்சுக் கொடுத்துப் பேசலா னான். அவனது இதமான வார்த்தைகள் கார்த்தியாயினி யின் மனதை நெகிழச் செய்துவிட்டதென்றே கூறவேண் டும். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் அவனுடன் மனங் கலந்து பேசி மகிழலானாள். சிவசைலம் தேவகுஞ்சரி பாடும் தமிழ்ப் பதங்களைப் பற்றியும், அபிநயத்தைப் பற்றி யும் ஹாஸ்யமாகப் பேசி கார்த்தியாயினியை வாய் விட்டுச் சிரிக்க வைத்தான். அதுவன்றி, அவன் மெதுவாக, கார்த்தி யாயினியின் தோளோடு தன் தோள் உராயும்படி நெருங்கி உட்கார்ந்தான். ஏற்கனவே, தேவகுஞ்சரியின் காமச் சுவை மிகுந்த நாட்டியம் அவளுக்கு இன்ப உணர்ச்சியை மிகுதிப்படுத்தியிருந்தது. இவனது ஸ்பரிசம்பட்ட மாத் திரத்தில் மின்சாரச் சக்தியால் தாக்குண்டவள் போல், கார்த்தியாயினி மதிமயங்கினாள்.

எதிர்ப்புறத்தில் தன் தோழிகளோடு அமர்ந்து தேவகி உரையாடிக் கொண்டும், நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டும் இருந்தாலும், அவள் கவனமெல்லாம் தன் தமக்கை கார்த்தியாயினியும் சிவசைலமும் இருக்குமிடத்தி லேயே பதிந்திருந்தது. அவள் இவ்விருவரது குதூகலப் பேச்சையும், சிரிப்பையும் பொறாமைக் கண்ணோடு நோக்கி

நோக்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். தான் மனமாறக்காதலித்து வந்ததும் சிவசைலம் தன்னை யலட்சி யப்படுத்தி வந்ததும், தன் தமக்கையைச் சந்தித்து இன் னும் சில நிமிடங்கள்கூட ஆகாமலிருந்தும், நெடுநாள் பழகியவன்போல் மிக நெருங்கிப் பழகிப் பேசிவருவதும் ஆகியவற்றை எண்ணிப் பார்த்ததும் அவள் வயிறு பற்றி யெரிந்தது. அத்துடனில்லாது, சிவசைலம் கார்த்தியாயினி யின் முகத்தோடு முகம் வைத்துப் பேசுவதையும், தோளோடு தோள் பொருந்த மிக அணுக்கமாக உட்கார்ந் திருப்பதையும் கவனித்ததும், தேவகியின் மனம் சகிக்க முடியாத நரகவேதனையை யடைந்தது. தான் விரும்பும் காதலன் தன் தமக்கையோடேயே இவ்வளவு நெருக்க மாக உறவாடுவதை மேலும் காணச் சகியாது தேவகி அவ் விடத்தை விட்டு வெளியேற முயன்றாள். எனவே, அவள் மெதுவாகத் திரும்பிச் சுற்றுமுற்றும் பார்க்கலானாள். அவ் வாறு பார்வையிட்டு வருகையில், நாராயணமேனன் தனக் குப் பின் புறத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்திருப்பதை யறிந்தாள்; திடுக்கிட்டாள். எங்கு அவன் தன் மனநிலையை அறிந்து விட்டானோ எனச்சந்தேகித்தாள்; நாணங் கொண் டாள்.

நாராயண மேனன், தேவகி தன் தோழிகளோடு வந்து அமர்வதற்கு முன்பே, அவ்விடத்திற்கு வந்து உட் கார்ந்திருந்தானதலால், இவர்கள் ஒருவர் பின்னொருவர் அமர்ந்தது தற்செயலாகவே நிகழ்ந்தது. தேவகி தனக்கு முன்புறத்தில் வந்து உட்கார்ந்திருப்பதை யறிந்த நாரா யண மேனன் மிகவும் மகிழ்ந்தான். அவளது பின்னழ கைக் கண்டு கண்டு களிகொண்டான். அவன் அவளுக்குப் பின்னே அமர்ந்திருந்ததால், அவளது முகபாவத்தை

யறிய முடியாவிடினும் அவள் தன் தோழிகளோடு பேசுந் தோரணையிலிருந்து, அவளுடைய கவனம் வேறிடத்தில் சென்றிருப்பதை இவன் ஒருவாறு ஊகித்தான். தேவகி சிவசைலத்தின் மீது காதல் கொண்டிருப்பது இவனுக்குத் தெரியுமாதலால், அவன் கார்த்தியாயினியோடு அளவளா விப் பேசிவருங் காட்சியே அவள் கவனத்தை ஈர்த்திருக் கிறது என அறிந்தான். தேவகி பெருமூச்சுவிடும் போதெல் லாம் அவளது தோள் உயர்ந்து எழுந்து அடங்குவதைக் கண்ட நாராயண மேனன், சிவசைலம் கார்த்தியாயினி யிடம் நட்புரிமை கொண்டாடுவதை அவள் சிறிதும் விரும்ப வில்லை; அதற்காகவே அவள் மனவேதனை யடைகிருள் என்று அநுமானித்தான்.

தேவகி தன் தோழிகளோடு ஏதோ சாக்குப் போக்கு கூறிவிட்டு, மெள்ள எழுந்து நடந்து மண்டபத்தினின்றும் வெளியேறினுள். சில விநாடிகளுக்கெல்லாம் நாராயண மேனனும் அவளைப் பின்தொடர்ந்து சென்ருன். தேவகி தலை குனிந்தவண்ணம் மெதுவாக நடந்து பூந்தோட்டத்தி னுள் நுழைந்தாள்.

"தேவகி! தேவகி! என்ன ஒருவிதமாகக் காணப் படுகிருயே!" என்று கேட்டவாறு நாராயண மேனன் அவளை யணுகினுன்.

தேவகி திரும்பிப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் நிரம்பி யிருந்தது. நாராயண மேனனைக் கண்டதும் அவ ளுக்குத் துக்கம் அதிகமாயிற்று. தேவகி கண்ணீர் விடுவ தைக் கண்ட நாராயண மேனன் பதை பதைத்தான். "தேவகி! ஏன் அழுகிருய்? உனக்கு என்ன நேர்ந்தது? என்னிடஞ் சொல்லக்கூடாதா? என் உயிரைக் கொடுத்

தாயினும் உன் துயரை மாற்றுகிறேன். சொல்; சொல்!" என்று படபடப்போடு கேட்டான்.

இவனது இம்மொழி தேவகிக்கு எரிகிற நெருப்பில் நெய் வார்த்ததுபோ லிருந்தது. அவள் வாய்விட்டுக் கதறினுள். "நாராயண்! என்னைத் தனியே விட்டுச் செல்! நான் இச்சமயம் ஏகாந்தத்தை விரும்புகிறேன். என் மனத்துயரை உன்னிடம் கூறமுடியாது. மன்னிக்கவும். உன்னுல் அதற்குப் பரிகாரந் தேட முடியாது. போ! என்னைவிட்டுப் போ! என் நன்மையை விரும்புவையானுல் உடனே செல்; செல்" என அழுகையோடு இரக்கமாக வேண்டினுள்.

"தேவகி! கண்............" என்று நாராயண மேனன் மேலும் ஏதோ கூற வாயெடுத்தான்.

தேவகியால் தாங்க முடியவில்லை. தான் நின்ற விடத்திலிருந்து பைத்தியம் பிடித்தவள்போல் தன் அறையை நோக்கி ஓடினுள். அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டு, படுக்கையில் விழுந்து முகத்தை மூடிக்கொண்டு ஓவெனக் கதறலானுள்.

தன் ஆத்திரமெல்லாம் அடங்கும்வரை வாய்விட்டுக் கதறியழுது அலுத்துப்போன தேவகி தனக்குள்ளாகவே மனங் குமுறலானுள். சிறிது நேரம் இதே நிலைமையிலிருந்தாள். பின்னர், என்ன நினைத்தாளோ! திடீரென முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவளது வாய் ஏதோ பிதற்றத் தொடங்கியது:—"நான் ஏன் வீணுக அழுது மனங் குமுறிக்கொண் டிருக்கவேண்டும்? என் அழுகை யாருக்குக் கேட்கும்? என் மனநிலைமை எவருக்குத் தெரியும்?—ஆண்கள்—இந்த ஆடவர்களே மிகவுங் கன்னெஞ்சர்கள்; நயவஞ்சகர்கள்; சுயநலங் கொண்டவர்கள்

என்பதை இப்போதுதான் அறிந்தேன். அதிலும் சிவசைலத்தைப் போன்ற ஈரமற்ற நெஞ்சும், இரும்பு இருதயமும் உடையவர்களை உலகிலேயே காணமுடியாது என நினைக்கிறேன். நான் அவனை எவ்வளவு அதிகமாக நேசித்து வந்தேன்—வருகிறேன் என்பது அவனுக்குத் தெரியாதா? எத்தனை நாள் அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந் திருக்கிறேன்? வழக்கம்போல் வராது ஒருநாள் தவறி விட்டாலும், அவனுக்கு என்ன நேர்ந்ததோ? எது ஏற்பட்டதோ என்றெல்லாம் ஆகுலித்து எவ்விதமாகத் துடிதுடித்துக் கொண்டிருந் திருக்கிறேன்? அவனோடு உரையாடிக் கொண்டிருப்பதையே பெரும் பேருகவும் பேரானந்தமாகவும் நினைத்து எத்தனை நாள் நேரம் போவதுந் தெரியாது மணிக் கணக்காகப் பேசிக்கொண் டிருந்திருக்கிறேன்! அவற்றைக் கணக்கிட முடியுமா? இவை போதாவா ஒரு மங்கை வாலிப னொருவனைக் காதலிக்கிருள் எனத் தெரிந்து கொள்வதற்கு? 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என வாய்விட்டுச் சொன்னல்தான் தெரியுமா? பெருங் குடிப் பிறப்பும், நாணமுமுடைய ஒரு பெண் இவ்வாறு வாய் விட்டுக் கூறுவாளா?—உம்; எல்லாம் என்னுடைய தவறேயாகும். நானகவே வானமளாவ மனக்கோட்டை கட்டிக்கொண்டு, அது நிலைத்து நிற்காது இடிந்து விழுந்து விட்டதே என்று அழுதால் என்ன பயன்?—இப்போது சிந்தித்துப் பார்த்தால், நான் இத்தனை நாளாக சிவசைலத்தோடு அளவளாவிப் பேசி அந்நியோந்நியமாகப் பழகி வந்தும், அவன் என்னிடம் சிநேக பாவனையிலேயே பழகி வந்திருக்கிருனே யொழிய, அவன் என்னைக் காதலிப்பதாக ஒரு வார்த்தை—அதற்கு எவ்வளவோ சந்தர்ப்பமிருந்துங்கூட—கூறவே யில்லையே! அவன் என்னிடம்

காதல் கொண்டிருப்பதாகப் பேச்சிலோ, செயலிலோ குறிப்பாகவுக் தெரிவித்ததாக ஞாபகமில்லையே! அவ்வித மிருக்க, நானாகவே மனப்பால் குடித்துக் கொண்டிருந் தால் அதற்கு அவனா பொறுப்பாளி? அவன் மிகவும் எச் சரிக்கையாகத்தான் நடந்து வந்திருக்கிறான். நான்தான் இலவுகாத்த கிளிபோல் ஏமாந்தேன். பழுக்கும் பழுக்கும் என்று பாதுகாத்திருந்து, இலவம்பஞ்சுக்காய் கடைசியாக வெடித்து விட்டதைக் கண்டு திடுக்கிட்டு பறந்தோடிய பைங்கிளிக்கும் பகுத்தறிவுடைய எனக்கும் என்ன வித் தியாச மிருக்கிறது? அக்கிளி ஏமாந்து ஏங்கியதைப் போல்தான் நானும் மனமேங்கித் தவிக்கிறேன். பெண் கள் பேதையர் என்று கூறுகிறார்களே! அது என் விஷ யத்தில் மெய்யாகி விட்டது. ஏதோ இரண்டொரு எழுத்து வாசிக்கத் தெரிந்து, ஆங்கிலக் கல்வியும் உலக அறிவும் பெற்ற நானே இவ்வளவு பேதமையாய் இருப்பே னானால், படிப்பு வாசனையற்ற—அதிலும் பட்டிக் காட்டுப் பெண்கள் எவ்வளவு பேதமை கொண்டவர்களாய் இருப் பார்கள்?—ஆ! அவன்—அந்த சிவசைலம்—இன்று என் சகோதரியைப் பார்த்த பிறகு—அவளுடைய சிநேகம் பெற்ற பிறகு—என்னிடம் எவ்வளவு அலட்சியமாய் நடந்துகொண்டான்? நான் அவன் ஒரு வாரமாக வராதிருந் ததைபற்றி பரிவோடு பதைத்துக் காரணங் கேட்டும், அவன் அதற்குச் சரியாய்ப் பதிலே சொல்லாது ஏதோ கூறி என்னைத் தட்டிக் கழிக்கவல்லவோ முயன்றான்? நான் வலிந்து பேசியும் அவன் என்னிடம் முகங் கொடுத்துக் கூடப் பேசாது என் சகோதரியை யன்றோ கடைக் கணித்துக் கொண்டிருந்தான்? இதை நினைத்துப் பார்க் கும் போதுதான் என் வயிறு பற்றி யெரிகிறது—அதோடு நின்றிருந்தால்கூட என் மனம் ஆறுதலடைந் திருக்குமே!

என் சகோதரர் பக்கத்தில் உட்கார்ந் திருக்கிறரே யென்று கூட இல்லாது, அவன் என் சகோதரிகளோடு எவ்வளவு குதூகலமாக முகத்தோடு முகம் வைத்துப் பேசிக்கொண் டிருந்தான்? அவள்மேல் உராய்ந்த வண்ணம் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்?—அவள்—என் சகோதரி—அவள் மட்டுமென்ன? நாம் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறேமே! பிள்ளைகூடப் பெற்றிருக்கிறேமே என்றில்லாது, நாணம், பயிர்ப்பு சிறிது மின்றி, முன்பின்னறியா ஒரு வாலிபனேடு இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு சகஜமாகவும், அந்நியோந்நியமாகவும் பழகிப் பல்லைக் காட்டிப் பேசுவது எவ்வளவு அக்கிரமம்? (சிறிது நேரம் மௌனம்.) ஆ! என்ன! என்ன நினைத்தேன்? என்னுள்ளிருந் தெழுந்த பொருமைக் குணம் எவ்வளவு சீக்கிரத்தில் என்னை அடிமையாக்கிக் கொண்டது; பார்த்தாயா! எனக்கேற்பட்ட ஏமாற்றத்தில்—என் சகோதரியை—என் உடன் பிறந்த சகோதரியை—நற்குடியில் பிறந்து நல்ல குடும்பத்தில் தோன்றி உயர் பதவியிலிருக்கும் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டுக் கௌரவமாயிருக்கும் என் சகோதரியைப் பற்றி—அவளது ஒழுக்கத்தைப் பற்றி எவ்வளவு கேவலமாகக் கருதி விட்டேன்! அவளது கற்புக்கு என்றும் மாளுக் களங்கத்தையும், விபசாரியென்ற இழிபெயரையும், உண்டாக்க நினைத்தேன்! நான் பாவி! மகாபாவி!" எனக் கூறியவண்ணம், முகத்தைக் கவிழ்த்து தலையணையின்மீது அழுத்தியவாறு தேம்பினுள். இந்நிலையில் அவளைப் பார்க்கும் எவரும் மன முருகாமலிரார்; அவ்வளவு பரிதாபமாக இருந்தது.

சிறிது நேரம் இந்நிலையிலேயே கிடந்த தேவகி திடீரென ஏதோ நினைத்தவள்போல் அவசரமாக எழுந்

தாள். பஞ்சணையை விட்டு, அறையின் ஓர் மூலையிலிருந்த மேஜையண்டை நடந்து சென்று அதன் அறையைத் திறந்தாள். அதை யாராய்ந்து பார்த்து கடைசியாக ஒரு படத்தை யெடுத்தாள். அதைக் கண்டதுமே அவள் முகம் சிவந்தது. அதுதான் சிவசைலத்தின் உருவப் படம். "ஏ சாயாக்கிரகமே! நேற்று வரை உன்னைப் பார்த்து வந்த எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி யளித்து வந்தாய்! இன்றோ எனக்கு நீ கொடியையா யிருக்கிறாய்! உன்னைப் பார்த்தாலே எனக்கு அடக்க முடியாத ஆத்திரம் பொங்கி யெழுகிறது. இனி நீ என்னால் போற்றப் படத்தக்க தகுதியை யிழந்து விட்டாய்! என் கண்ணால் இனி உன்னைக் கண்டு சகித்துக் கொண்டிருக்க முடியாது! நீ என்னை விட்டு இன்றோடு தொலைந்து விட வேண்டியதே!" என்று தேவகி பற்களை இறுகக் கடித்தவாறு கூறிக் கொண்டே அதைத் துண்டு துண்டாகக் கிழித்துக் கீழே போட்டாள்.

•

பின்னர் அவள் தனக்குள்ளாக ஏதோ முடிவுக்கு வந்தவள்போல் தலையை யசைத்தாள். அதன் பிறகு, தேவகி கைகளைப் பின்னே கட்டிக்கொண்டு இப்படியும் அப்படியுமாக உலாவலானாள். சிறிது நேரம் உலாவியதும், சட்டெனநின்றாள். "இன்னமும் அவனை—சிவசைலத்தை—நான் ஏன் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்? நான் அவனை மறக்க முயன்றாலும், அவன் உருவம் என் கண்முன் நடமாடிக் கொண்டிருக்கிறதே! —சே!— இன்றோடு அவனை அறவே நான் மறந்துவிட வேண்டும்! அவனைப்பற்றிய எண்ணம் என்மனதிலெழாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்! (தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அசைவற்று இருந்த பிறகு) நாரா

யண மேனனை நான் ஏன் காதலிக்கக் கூடாது? சிவசைலத்தைவிட அவன் எந்தவகையில் தாழ்ந்திருக்கிருன்? அவனுக்கு அழகில்லையா? படிப்பில்லையா? தகுதியில்லையா? மேலும் அவன் நான் விரும்பா திருக்கையிலேயே என்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிருன்! அவனது காதலை யேற்றுக்கொண்டு என் சம்மதத்தைத் தெரிவிக்கவேண்டுமென எத்தனை முறை எவ்விதமாகவெல்லாம் என்னைக் கெஞ்சிக் கேட்டிருக்கிருன்! மிக விரும்புபவனைப் புறக்கணித்துவிட்டு என்னை அவ்வளவாக லட்சியஞ் செய்யாதவன் பின்னே நாய்போ லலைந்து ஒரு மொழிக்கு ஏக்குற்றுக் கிடந்த எனக்கு இவ்வேமாற்றம் நல்ல பாடத்தையே கற்பித்தது; அத்துடன் இது தகுந்த தண்டனையுமாகும். ஆகவே, இதனுல் புத்தி வந்த பிறகாயினும், என் காதலை நாராயண மேனன்மீது செலுத்துவதே கடமை. உடனே அவனுக்கு வாக்குறுதி யளித்து என் தமையனரின் அநுமதி பெற்று விவாகஞ் செய்துகொள்ள வேண்டும். அவர் இதற்குத் தடையொன்றும் சொல்ல மாட்டாரென்றே நம்புகிறேன.—ஆமாம்; நாராயண மேனன் உண்மையாகவே காதல் கொண்டிருக்கிருன் என்பது என்ன நிச்சயம்! அவனும் சிவசைலத்தைப் போல் மோசஞ் செய்துவிட்டால் என் செய்வது!—சே! என்மீது தன் உயிரையே வைத்திருக்கும் அவன் அவ்வாறு செய்வானு? ஒருகாலும் துரோகஞ் செய்யமாட்டான். நாளை பொழுது விடிந்ததும் முதல் வேலையாக........" என நீள சிந்தித்துக் கொண் டிருக்கும்போது கதவு பலமாகத் தட்டப்படும் சப்தத்தைக்கேட்டு தேவகி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

அக்கணமே அவள் அவசர அவசரமாக முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்; கூந்தல், உடை

கலைச் சீர் திருத்திக் கொண்டாள். கண்ணாடிமுன் தன்னைப் பார்த்து முகத்தில் துக்கக்குறி காணாதவண்ணம் மாற்றிக் கொண்டவாறு நடந்து சென்று கதவைத் திறந்தாள். அவள்முன் கார்த்தியாயினி காணப்பட்டாள். "தேவகி! எவ்வளவு நேரமாகக் கதவைத் தட்டுகிறேன்? ஒன்றுமே பதிலில்லையே! தூங்கிக்கொண் டிருந்................" எனக் கேட்டவாறு தன் தங்கையை ஏற இறங்க நோக்கினாள். என்னதான் சாமர்த்தியமாய் தன் மனநிலையை மறைக்க முயன்றாலும், 'அகத்தின் அழகு முகத்தில் தெரி'யாமல் போகுமா! தன் சகோதரிதான் கதவைத் தட்டுவாள் என அவள் சிறிதும் எதிர்பார்த்தவளல்ல வாதலால், கார்த்தியாயினியைக் கண்டதும் தேவகி தலையைத் தொங்கப் போட்டுவிட்டாள்.

பரதநாட்டியக் கச்சேரி நடந்துகொண்டிருக்கையில், இடையிலேயே தேவகி எழுந்துவந்து விட்டதை, கார்த்தியாயினி சிவசைலத்தோடு குதூகலமாகப் பேசிக்கொண்டிருக்கையிலும், கவனித்துவிட்டாள். அவள் அவ்வாறு திடீரென எழுந்து போய்விட்டதற்கு ஏதோ காரணமிருக்க வேண்டுமென்று அப்போதே ஊகித்தாள். முதலில் தேவகி எழுந்து போகும்போது, 'ஏதோ காரியமாக வெளிச் செல்கிறாள்; சிறிது நேரத்திற் கெல்லாம் திரும்பி வந்து விடுவாள்' எனக் கார்த்தியாயினி நினைத்தாள்; இரண்டொரு விநாடிக்கெல்லாம் நாராயண மேனனும் எழுந்து தேவகி சென்ற வழியே போனதைக் காணவே அவள் புன்முறுவல் பூத்தாள். அவள் வந்த ஒரு வாரமாக நாராயண மேனன் தேவகியிடம் பழகும் மாதிரியைப் பார்த்து வந்தவளாகையால், இருவரும் ஒருவரையொருவர் காதலிப்பதாக அவள் அநுமானித்தாள்.

னவே, இச்சமயம் அவர்கள் ஒருவர் பின்னொருவராகச் செல்லவே, இளங் காதலர்கள் தனித்துரையாடி மகிழ விரும்பினர் போலும் எனக் கருதினாள். நாராயண மேனன் நற்குணமும், கம்பீரமும் வாய்ந்த வாலிபனாகை யால், அவன் தன் தங்கையான தேவகிக்குத் தகுந்த காத லனே என எண்ணி, அவர்களது காதல் கொடி இடையூ றின்றி வளர்ந்த திருமண மலர் பூக்கவேண்டுமென்று மனமுவந்து விரும்பினாள். ஆனால் தேவகி சிவசைலத்தை மனமாறக் காதலிக்கிறாளென்பது இவளுக்குத் தெரியாது. அவன் இந்த ஒரு வாரமாகத் திவான் மாளிகைக்கு வந் திருந்தால், அப்போது தேவகி அவனுடன் அளவளாவிப் பேசும் விதத்தி லிருந்து, கார்த்தியாயினி தேவகியின் உண்மையான மனநிலையைத் தெரிந்துகொண் டிருப் பாளோ என்னவோ! இப்போது தேவகியைப் பின் தொடர்ந்து சென்ற நாராயணமேனன் கால் மணி நேரத் துக்கெல்லாம் முகவாட்டத்தோடு திரும்பி வந்து தன் ஆசனத்தில் அமர்ந்ததை அவள் பார்த்ததுங் காரண மறி யாது மயங்கினாள். அதுவன்றியும் தேவகி கச்சேரி முடியும் வரை திரும்பி வராமல் போகவே, கார்த்தியாயினிக்குச் சந்தேகமேற்பட்டது. இதனால் மனக் குழப்பமடைந்த கார்த்தியாயினி கச்சேரி முடிந்ததும், திவானிடத்திலும், இவளிடத்திலும் விடைபெற வந்த விருந்தினர்களை இவள் தன் சகோதரரோடு சேர்ந்து இன்முகத்துடன் வழி யனுப்பினா ளாயினும், அவள் உள்ளூர பரபரப்பையும், துரிதத்தையும் காட்டினாள். சிவசைலம் கார்த்தியாயினி யின் அருகேயே இருந்தான். கடைசியாக, சிவசைலமும் நாராயணமேனனும் பின்னே வர, ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், கார்த்தியாயினியும் மண்டபத்தைவிட்டு மாளி கைக்குள் சென்றனர். அப்போதும் திவான், தேவகுஞ்

சரி பாலசரஸ்வதியின் பரதநாட்டியச் சிறப்பைப் பற்றி யும், அழகைப் பற்றியுமே பிரமாதமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலில் கூடத்தை யடைந்ததும், கார்த்தியாயினி அங்கு தேவகி இருக்கிருளா என்றே தன் கண்களால் ஆராய்ந்தாள். ஆனுல், கமலாதேவியும் பணிப்பெண் களுமே காணப்பட்டனர். ஆகவே, கார்த்தியாயினி தன் சகோதரர் பக்கம் திரும்பி ஏதோ உட்கருத்தோடு நோக் கினுள். இதற்குள், நாராயண மேனன் தான் வீடு செல்ல விடைபெற்ருன். எனவே, சிவசைலத்துக்குக் கார்த்தி யாயினியை விட்டுப் பிரிய மனமில்லையாயினும், வேறு வழி யின்றி, அவனும் விடைபெற்று வெளியேறினுன். இவர் கள் இருவரும் செல்கையில், கார்த்தியாயினியின் கூரிய பார்வை நாராயண மேனன் முகத்தை ஆராயலாயிற்று. அவனது மனம் சங்கடமுற் றிருப்பதை அவன் முகங் காட்டியது. அவர்கள் வெளியே சென்றதும், கார்த்தியா யினி நேராக, தேவகி அறையை நோக்கி நடந்தாள். கதவு உள் தாளிடப்பட்டிருக்கவே, தேவகி உள்ளே இருக்கிரு ளென ஊகித்து மன திருப்தியோடு கதவைத் தட்டலா னுள். வெகு நேரம்வரை கதவு திறக்கப்படவே யில்லை. தேவகிதான் மானத உலகில் சஞ்சரித்து நெஞ்சோடு போராடிக்கொண் டிருக்கிருளே! அப்படியிருக்க, அவ ளுக்கு எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் காது கேட்கும்? கடைசியாக, கார்த்தியாயினி தன் பல முழுவதையும் உப யோகித்து கதவைப் பலமாகத் தட்டினுள். அப்புறந்தான் தேவகி சிந்தனை கலைந்து தன்னுணர்வு பெற்று விரைந் தெழுந்து தன்னைச் சீர்திருத்திக்கொண்டு கதவைத் திறக்க லானுள்.

"இல்லை அக்கா! தலைவலியா யிருந்தது. அப்படியே தூங்கிவிட்டேன். அதனால் நீ கதவு தட்டியது காது கேட்க வில்லை" எனக் கார்த்தியாயினியை நேரே பாராது முகத்தைத் திருப்பிக்கொண்டு தேவகி கூறினாள்.

கார்த்தியாயினிக்கு அவள் கூறிய சமாதானம் அவ்வளவு திருப்தி யளிக்கவில்லை. அழுகையால் வீங்கிய தேவகியின் முகம், அவள் உண்மை உரைக்காது மறைக்கிறாள் என்பதை கார்த்தியாயினிக்குப் புலப்படுத்தியது. இருந்தாலும், அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாது, "மருந்து போடுவதுதானே!" எனச் சாவதானமாகக் கூறினாள்.

தேவகி, "இப்போது தலைவலியில்லை" என்றாள். கார்த்தியாயினி வெளித் தோன்றிய புன்னகையை மறைக்க உதட்டைக் கடித்து, "சரி; அப்படியானால் வா, சாப்பிடப் போகலாம்; சகோதரர் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறார்" என்று கூறிய வண்ணம் தேவகியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள்.

அதற்குமேல் வேறு சாக்குப் போக்குக் கூற முடியாமையால் தேவகி கார்த்தியாயினியின் பின்னே நடந்தாள்.

அன்றிரவெல்லாம் கார்த்தியாயினிக்கு தேவகியிடம் திடீரென ஏற்பட்ட மாறுதலுக்குரிய காரணத்தை யறிவதிலேயே கவனஞ் சென்று கொண்டிருந்தது. எனவே, அவள் சிவசைலத்தைப் பற்றி நினைப்பதற்கு அவகாசமேற்படவில்லை. மறுநாள் பொழுது விடிந்ததும், கார்த்தியாயினி, தேவகியைப் பற்றிப் பணிப்பெண்களிடம் மெள்ள விசாரிக்கலானாள். அவ்விசாரணையி லிருந்து, தேவகி சிவசைலத்தோடு அந்நியோந்நியமாகப் பழகி

நேசித்து வருப்பவளென்றும், அவன் ஒருநாள் வராவிட்டால், அவள் மிகவும் துடிதுடிப்பாளென்றுந் தெரிந்துகொண்டாள். தான் நாராயண மேனனைத் தேவகி காதலித்து வருவதாக நினைத்தது தவறென்றும், தன்னுடன் சிவசைலம் நெருக்கமாகப் பழகுவதே தேவகியின் மன மாறுதலுக்குக் காரணமென்றும் அவள் அறிந்துகொண்டாள். எனவே தன்னால் சகோதரிக்கு மனவேதனை ஏற்படுவதாயின் தான் இனி இங்கிருப்பது தகுதியன்று என்ற முடிவுக்கு வந்த கார்த்தியாயினி திடீரென அடுத்த நாளே சென்னைக்குப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

## நான்காவது அதிகாரம்

### ஊரார் புகார்

சீமாட்டி கார்த்தியாயினி சென்னைமா நகருக்கு வந்து ஒரு வாரத்துக்குமேலாயிற்று. திருவனந்த புரத்துக்குப் போய் வந்த பின்னர், தம்முடைய மனைவியிடம் ஏதோ ஒருவித மாறுதல் ஏற்பட்டிருப்பதை, திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை ஒருவாறு உணர்ந்தார். ஆனால், அது எவ்விதமான மாறுதல் என்பதை அவரால் திட்டமாக அறிந்துகொள்ள முடியவில்லை. கார்த்தியாயினி முன் போல் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதை அவ்வளவாக விரும்பாமலிருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியங்கொண்டார். அவளைப் பழையபடி குதூகலமாக இருக்கும்படி செய்ய அவர் பெரிதும் முயன்றார். ஒரு மங்கை தன் உள்ளத்தில் பொதிந்திருக்கும் விஷயங்களைத் திறந்து கூறினாலன்றி, அவளது மனநிலைமையை உள்ளபடி யறியயாரால் முடியும்!

ஒருநாள் காலை 10 மணிக்குக் கார்த்தியாயினி மேன் மாடியிலுள்ள தன் அறையில் அமர்ந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். இச்சமயத்தில், இவளது அருமை மைந்தன் அம்பிகாபதி, "அம்மா! அம்மா!!—எங்கே அம்மா இருக்கே!" என்று குதலை மொழியால் கூப்பிட்டுக் கொண்டே தளர்நடை நடந்து ஓடிவந்தான். அவனுக்கு வயது ஆறுதான் இருக்கும். அவன்மீது கார்த்தியாயினிக்கு அளவு கடந்த அன்பு. தான் பெற்ற பிள்ளைகளிடத்தில்—அதுவும் தன் குடும்பம் தழைத்தற்குரிய ஒரு மகனாய் இருந்தால், அப்பிள்ளையிடத்தில்—தாய்க்குப் பேரன்பு இருப்பது இயற்கையே. என்றாலும், கார்த்தியாயினி அம்பிகாபதியிடத்தில் வைத்திருக்கும் அன்பு உவமைக்கு மெட்டாததாகும். அவள் தன் மகன்பால் தன் ஆருயிரையே வைத்திருந்தாளென்றால், அது மிகையாகாது.

அம்பிகாபதியின் மழலை ததும்பிய இனிய மெல்லிய குரலைக் கேட்டாளோ இல்லையோ, கார்த்தியாயினி தன் சிந்தனையையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு ஓடோடியுஞ் சென்று அச்சிறுவனை வாரியெடுத்தாள். ஆர்வத்தோடு அவனை மார்புறத் தழுவிக் கொண்டாள். முகத்தோடு முகத்தைப் பொருத்தி மகிழ்ந்தாள். அவனது சிவந்த அதரங்களில் முத்தமாரி பொழிந்தாள். உச்சிமோந்து அவனைக் கீழே விட்டாள். அவளது அழகிய வதனத்தில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அம்பிகாபதி கார்த்தியாயினியின் கால்களைச் சேர்த்துக் கட்டிக் கொண்டான்.

"கண்ணே! அம்பிகா! இந்நேரம் எங்கே போயிருந்தாய்?" என்று அன்பு ததும்பக் கேட்டவண்ணம் கார்த்தியாயினி அம்பிகாபதியைத் தூக்கிப் பஞ்சணைமீது உட்கார வைத்தாள்.

அம்பிகாபதி குமுதமலர் போன்ற வாயைத் திறந்து, “இல்லேம்மா! அப்பாவைத் தேடிண்டு போனேன்! அவ ரூமிலே யாரோ வந்து உட்காந்துண்டு அப்பாவோட பேசிண்டிருந்தா. பாத்துட்டு வந்தூட்டேம்மா!” என்று குழறிக் குழறிப் பேசினன். அருமந்த மகனது இளமை யழகைத் தன்னிரு கண்களாலும் அப்படியே பருகிவிடு பவன்போல் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்த கார்த்தியாயினி அம்பிகாபதி பேசும்போது வாயிதழ் துடிக் கும் அழகையும், கன்னங்களில் குழிவிழும் அழகையும் கண்டு மகிழ்ச்சியால் குழந்தையை மீண்டும் சேர்த் தணைத் துக்கொண்டு மெய்ம்மறந்து நின்றுள்.

“சீமாட்டி! தங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது” என்று வேலைக்காரன் வெளியே இருந்து தெரிவித்த குர லொலி கார்த்தியாயினியைத் தட்டி யெழுப்பியது. அவள் உடனே அறையை விட்டு வெளியே வந்து வேலைக்கார னிடமிருந்த கடிதத்தை வாங்கி அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தாள். அதைப் பிரிக்கும்போதே அது திருவனந்தபுரத்திலுள்ள தன் சகோதரரிட மிருந்து வந் திருக்கிறதென அறிந்து கொண்டாள். அதில் பின்வருமாறு எழுதப்பட் டிருந்தது :—

அன்புமிக்க சகோதரிக்கு,

நலம். அங்கு எல்லாருடைய நலத்தையும் அறிய ஆவலுடையவனு யிருக்கிறேன். நீ திடீரென்று ஊருக்குப் புறப்பட்டுச் சென்றதைப்பற்றி எல்லோருக்கும் வருத்தமே. இவ்விதம் எங்களை மனம் வருந்தச் செய்துவிட்டுச் சென்ற உனக்குத் தண்டனையாக ஒரு சந்தோஷச் செய்தியைக் கூறப்போகிறேன். நமது தேவகியை நாராயண மேன னுக்கு விவாகம் செய்துவைக்க ஏற்பாடா யிருக்கிறது.

தேவகி நாராயண மேனனை விவாகஞ் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறிய பிறகே, நான் இவ்விதம் முடிவு செய்தேன். ஆனால், தேவகி நாராயண மேனனைக் காதல ஞகத் தேர்ந்தெடுத்ததில் எனக்கு அவ்வளவாக விருப்ப மில்லை. சிவசைலத்துக்கு அவளை மணஞ்செய்து தர எண்ணி யிருந்தேன். (நானறிந்த வரையில், தேவகியும் சிவசைலத்தைத் தான் காதலித்து வந்தாள். அவளது மனமாற்றத்துக்குக் காரணமென்னமோ தெரியவில்லை.) இருந்தாலும், தேவகி இப்போது நாரயண மேனனைக் கணவனுக அடைய விழைவதால், அவளது உரிமையைப் பறிக்க முடியவில்லை. ஆனால், இவ்விவாகம் திருவனந்த புரத்தில் உத்தியோக முறையில் மிகவும் குதூகலமாக வரவேற்கப்படும்.

தேவகி நாராயண மேனனைத் திருமணஞ் செய்து கொள்ளும் விஷயத்தில் உனக்கு மனப்பூர்வமாகச் சம்மத மிருக்குமென நம்புகிறேன். ஏனென்றால், மேனனை நீ நேரே பார்த்திருப்பதால், அவன் போக்கைக் கவனித் திருப்பாய். அவன் நற்குணமும் திறமையும் வாய்ந்தவன். சிவசைலத்தை நோக்க அவன் அவ்வளவு கூர்த்த மதியும், ஆற்றலும் உடையவ னல்லன் என்பதே என்னுடைய கருத்து.

மைத்துனருக்கும் இது சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதி யிருக்கிறேன். அவருடைய அபிப்பிராயத்தையும் உடனே தெரிவிக்க வேண்டுகிறேன்.

அதுவன்றி, இவ்விவாக வேற்பாடு முடிவானுல், விவாகத்தைச் சென்னையிலேயே சிறப்பாக நடத்த வேண்டுமென நினைக்கிறேன். அதற்கான ஏற்பாடுகளை மைத்துனரும் நீயுந்தான் கவனித்துக் கொள்ளவேண்டும்.

விவாகத்தை விமரிசையாக நடத்தி வைக்கும் பொறுப்பு உங்க ளிருவரிடத்திலுந்தான் இருக்கிறது. உங்கள் அபிப் பிராயந் தெரிந்ததும் நமது சிவசைலத்தை உங்கள் பால் அனுப்பி வைக்கிறேன். விவாகத்திற்குரிய முன்னேற் பாடுகளைச் செய்யும் விஷயத்தில் எனக்குப் பிரதிநிதியாக இவன் வந்து, உங்களுக்கு உதவியாக இருப்பான்.

உத்தியோக தோரணையில் எனக்கு அலுவல் அதிகமா யிருப்பதால், நான் அதிக நாள் ரஜா எடுத்துக்கொள்ள முடியாது. விவாகம் நிகழ ஒருவார மிருக்குமுன் நான் வந்து காரியங்களில் கலந்து கொள்கிறேன்.

எல்லா விஷயங்களுக்கும் உடனே பதிலை எதிர் பார்க் கிறேன்.

அன்புமிக்க சகோதரன்,

பரமேஸ்வரன்.

இதைப் படித்து முடித்ததும் கார்த்தியாயினி பெரு மூச்சு விட்டாள். "நான் எதிர்பார்த்தபடியே யாயிற்று. —தேவகிக்கு என்ன ஆத்திரம்! என்ன பதைப்பு! சிவ சைலத்தைச் சரியானபடி பழி வாங்கி விட்டாள்.— ஆமாம்; சிவசைலத்தை இங்கு ஏன் அனுப்பவேண்டும்? —அவனை என் கவனத்தினின்றும் மறக்கடிக்க வேண்டு மென்று முயன்று கொண்டிருந்தால், என் சகோதரர் அவனை இங்கு அனுப்புகிறாரே! என்ன தர்மசங்கடம்!" என்று முணுமுணுத்துக் கொண்டே, கீழே இறங்கினாள். அம்பிகாபதியும் பஞ்சணையை விட்டுக் குதித்து, "அம்மா! அம்மா! என்னை விட்டுப் போயிடறையா!" என்று கூறிக் கொண்டே அவளது சேலை முந்தானையைப் பிடித்துக் கொண்டு பின் தொடர்ந்தான்.

* * *    * * *    * * *

அடையாற்றில் ஒரு பெரிய பங்களா. செடி, கொடி, மரங்கள் செழித்து வளர்ந்து பங்களாவுக்குக் குளிர்ச்சியைத் தந்துகொண் டிருந்தன. சுற்றிலும் உயர்ந்த மதில்கள் அப் பங்களாவை அரண் செய்து நின்றன. பங்களா வாயிலில் ஒரு பெரிய பந்தல் போடப்பட் டிருந்தது. அப்பந்தல் வெள்ளைத் துணியால் மறைக்கப் பட் டிருந்தது. அதன் ஓரத்திலும், இடை யிடையேயும் சிவப்பு, மஞ்சள் வர்ணத்துணிகளால் சித்திர வேலைப் பாடுகள் செய்யப்பட் டிருந்தன. ஒவ்வொரு கம்பத்திலும் தென்னம் ஓலைகள் பின்னப்பட் டிருந்ததோடு, வாழை, கமுகு மரங்கள் குலைகளோடு கட்டப்பட்டிருந்தன. அதுவன்றி, தோரணங்கள் தொங்கவிடப்பட் டிருந்தன. ஏற்கனவே, இயற்கையழகு தாண்டவம் புரிந்து கொண்டிருந்த அப்பங்களா இவ்விதச் செயற்கை யழகாலும் சிறந்து விளங்கியது. பங்களாவுக்கு வெளியே ஏராளமான மோட்டார்கார்களும், கோச்சு வண்டி முதலியவைகளும் வந்து நிறைந்திருந்தன. உள்ளே நவீன பாண்டு வாத்தியமும், நாதஸ்வர வாத்தியமும் சங்கீதத் தேனை வாரி வாரி இறைத்து மக்களின் செவிகளுக்குச் சங்கீத விருந்தளித்துக் கொண்டிருந்தன. ஆண்களும், பெண்களும் அணியணியாக உள்ளே போவதும் வருவதுமாயிருந்தனர்.

இப்பங்களா யாருடையது? இதில் என்ன விசேஷம் நடைபெறுகிறது? என்ற வினா, வாசகர்களே! உங்கள் மனதில் எழுவது இயற்கையே. இது திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை வாசஞ்செய்யும் பங்களா வென்பதும், இதில் தேவகிக்கும் நாராயண மேனனுக்கும் விவாக

வைபவம் விமரிசையாக நடைபெறுகின்ற தென்பதும் விவரிக்காமலே தெரிந்து கொள்ளலாம்.

மாளிகையி னுள்ளே செல்வோம். கூடமும் தாழ்வாரமும் விசாலமாய் இருந்தன. இரு பக்கங்களிலுமுள்ள கூடங்களில் ஒரு புறத்தில் ஸீமான்களும், கனவான்களும், மற்ெருரு புறத்தில் ஸீமாட்டிகளும், இள மங்கையரும் இரத்தின கம்பளத்தின்மீது உட்கார்ந்திருந்தனர். சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களும், குறிப்பிடத்தக்க ஒரு சில கனவான்களும் மட்டும் கூடத்தில் சுவரோரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையும் விஜயஞ் செய்யும் கனவான்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தனர். விஜயஞ் செய்தவர்களில் பெரும்பாலார் 'ஹாட்டும் பூட்டும்' அணிந்து வந்திருந்தார்களாதலால் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்கள் தவிர, மற்றவர்கள் 'சாக்ஸ்' தரித்த கால்களைச் சிரமத்தோடு மடக்கிக் கொண்டு உட்கார்ந் திருந்தது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. சிவசைலம் இப்படியும் அப்படியுமாக ஓடியவண்ணம் விவாக சடங்குக்குரிய காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

மாதர் வரிசையில் கார்த்தியாயினி இன்முகத்தோடு யாவரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தாள். ஸர். பரமேஸ்வரன் பிள்ளையின் மனைவியான கமலா தேவியோ விவாகத்துக்கு வந்திருக்கும் பெண்மணிகளோடு தானுமொருத்திபோ லிருந்தாளே யொழிய, மற்றக் காரியத்திலும் முக்கியத்துவத்தை வகிக்க முன்வரவில்லை. அவளிடம் வலியவந்து பேசும் ஸீமாட்டிகளோடும், மங்கையரோடும் மட்டுமே உரையாடிக்கொண்டிருந்தாள்.

அவளது அமைதியான தன்மையும், உயர்ந்த தகுதியிலிருந்தும் அகம்பாவமில்லாது அடக்கமாயிருக்கும் இயல்பும் பணச் செருக்கினால் தலைகால் தெரியாது ஆடித் திரியும் சீமாட்டிகளுக்கும், செல்வக் குமாரிகளுக்கும் விபரீதமாகத் தோன்றியது. அவர்களில் சிலர் மறைமுகமாக அவளைக் கேலிகூடச் செய்யலாயினர். அவர்கள் நினைவில் கமலாதேவி பட்டிக்காட்டுப் பெண்ணாகவும், அசட்டுத்தனம் நிறைந்த மங்கையாகவுமே கருதப் பட்டாள். ஒரு சில மகளிரே, அவளது அடக்க வொடுக்கத்தையும், நற்குணச் செயல்களையும் பாராட்டினர்.

அவ்வுயர் குடும்ப விவாக வைபவத்தில் விஜயஞ் செய்திருந்த சீமான்களும், கனவான்களும் எவ்வளவு ஆடம்பரமாகவும், நாகரிகமாகவும் ஆடையுடுத்தி வந்திருந்தாலும், அவர்களுடைய தோற்றங்களில் அவ்வளவாக வித்தியாசங் காணப்படவில்லை. பெண்கள் வரிசையிலோ உலகில் எத்தனைவிதமான நிறங்களுண்டோ அத்தனை நிறங்களாலும், பளபளப்பான பூவேலைப்பாடமைந்த பட்டு வகைகளாலும், தகதகாயமான சரிகைகளாலும் ஆன ஆடைகளையும் நவநவமான நகைகளையும், அப்பெண்மணிகள் அணிந்திருந்தது எப்பேர்ப்பட்டவர்கள் மனதையுங் கவர்ச்சியுறச் செய்யக்கூடியதாயிருந்தது. சேலைகளில் பொருந்தியிருந்த சரிகைகளின் பளபளப்பும், வைர நகைகளின் ஜொலிப்பும் ஆடவர் கண்களைப் பறித்தன. இப்பேர்ப்பட்ட மங்கையர் கூட்டத்தில் பழைய கேரளநாட்டுச் சம்பிரதாயப்படி வெள்ளை முண்டு கட்டிய பெண்மணிகளும் கலந்திருந்தது வேடிக்கையை விளைத்தது. நாராயண மேனன் தேவகியைப்போல் வேளாள குலத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும், அவன் பழக்க வழக்கங்களில் தமிழ்

நாட்டோடு பெரிதும் வேறுபாடுடைய மலையாள நாட்டில் பிறந்தவளாதலால், இப்புது சம்பந்தத்தில் பரமேஸ்வரன் பிள்ளை உறவினர்களுக்குச் சிறிதும் பிடித்தமில்லை. இருந்தாலும் பெரிய இடத்து விஷயமாதலால், அவர்கள் வாய் திறக்க அஞ்சினர்.

தாழ்வாரத்தின் நடுவில் மணப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அது மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. மணமக்கள் மகிழ்ச்சியே வடிவாக மண அறையில் அமர்ந்திருந்தனர். திருமணச் சடங்கு தமிழ் முறைப்படியே நடத்தப்பட்டது. நாராயண மேனன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தேவகி, ஏதோ காரியமாக குறுக்கும் நெடுக்குஞ் சென்று கொண்டிருக்கும் சிவசைலத்தைக் காணும்போதெல்லாம் பெருமித உணர்ச்சியோடு தோன்றினாள். இவள் அவனை அலட்சியமாகப் பார்த்த பார்வை, "என்னை அசட்டை செய்த உன்னைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டேன்; பார்த்தாயா!" எனக் கூறுவது போலிருந்தது.

சிவசைலமோ தேவகியை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. அவன் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை கட்டளைப்படி, இவ்விவாகத்திற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறுனாயினும், அவன் இவ்வளவு சிரத்தையாகவும் பரபரப்பாகவும் வேலை செய்வதெல்லாம் கார்த்தியாயினி தன்னை மதிக்க வேண்டுமென்னும் ஒரே குறிக்கோளோடேயேயாகும். அவன் ஏதோ ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு அடிக்கடி கார்த்தியாயினி இருக்குமிடஞ் சென்று பேசுவதும், எதை யெதை எவ்விதஞ் செய்ய வேண்டுமென்று கலந்து ஆலோசிக்க சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு அவளோடு செல்வதுமாயிருந்தான்.

கார்த்தியாயினி மிகவும் சகஜமாகவும், தாராளப் போக்குடனுமே அவனுடன் நடந்து கொண்டாள்.



இவர்கள் இவ்விதம் நெருங்கிப் பழகுவது அங்கு விஜயஞ் செய்திருந்தவர்கள் பலரது கவனங்களை ஈர்த்தது. மங்கையர் கூட்டத்தில் இது சம்பந்தமாக வம்பளப்பு அதிகமாயிற்று. அக்கூட்டத்திலிருந்த ஒரு பெண்மணி தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் மற்ெருரு நங்கையை நோக்கி, "அடி தாக்ஷாயணி! பார்த்தாயா இந்தக் கொள்ளையை! இந்த வெட்கக்கேட்டை என்னென்று சொல்வதடி! இவ்வளவுபேர் இங்கே இருக்கிருர்களே யென்றுகூட அச்சமில்லாமல், அந்தப் பயல் கார்த்தியாயினியோடு எவ்வளவு நெருக்கமாய் நின்று பேசிக் கொண்டிருக்கிருன்! பார்த்தாயா!" என்று கூறி முகத்தை நாலுகோணலாய் வைத்தவண்ணம் கூறினுள்.

காமாட்சி:—(பதட்டமாய்) தாலி கட்டின புருஷன் கூட அன்னியர் முன்னிலையில் அவ்வளவு தாராளமாய்ப் பழக மாட்டான்.

தாக்ஷாயணி:—இந்திரா! லட்சுமிகூட இவர்களது கோலாகலத்தைப்பற்றி இரண்டு நாட்களுக்கு முன் என்னிடங் கூறினுள். அப்போது நான் இதைச் சிறிதும் நம்பவேயில்லை. ஏதோ வம்பளக்கிருள் என அவளை வைதுகூட அனுப்பினேன். இப்போது நேரில் கண்ட பிறகல்லவா விஷயம் தெரிந்தது! என்ன அக்கிரமம் இது! (பெருமூச்சு விடுகிருள்.)

சூடாமணி:—(குறும்பாக) பாவம்! தாக்ஷாயணிக்கு விஷயம் இப்போதுதான் தெரிந்தது போலும்! இவர்களது களியாட்டம்பற்றி ஒரு மாதமாக ஊர்சிரிக்கிறது. இவளுக்கு இதுவரை தெரியாதாம். கிணற்றுத் தவளையென்ருல் இவளுக்குத்தாண்டி தகும்.

இந்திராணி:—நானும் அதல்லவோ சொல்ல வந்தேன்! இவன் திருவாங்கூரில் கார்த்தியாயினியின் சகோதரன் கீழ் வேலை பார்ப்பவனும். இவ்விவாக சம்பந்தமான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஒரு மாதத்துக்கு முன்பாகவே இங்கு அனுப்பி வைக்கப் பட்டானும். இவ் விவாகத்துக்குரிய சாமான்களையும், மற்றும் விலையுயர்ந்த நகைகள், ஜவுளிகளையும் வாங்கும் பொருட்டு, இன்னும் கார்த்தியாயினியும் அடிக்கடி பல இடங்களுக்கும் போய் வந்துகொண் டிருந்தார்களாம். இவர்கள் பழகும் மாதிரியைப் பார்த்தவர்களுக்கு இவர்கள் நடவடிக்கைகளில் சந்தேகமேற்படுவது இயற்கைதானே!

சூடாமணி:—கார்த்தியாயினி சிலமாதங்களுக்கு முன் திருவனந்த புரத்துக்குப் போயிருந்தாளே! அங்கேயே இவர்க ளிருவருக்கும் சிநேகம் ஏற்பட் டிருக்குமென நினைக்கிறேன்.

நீலாவதி:—என்ன இருந்தாலும் முன்பின் னறியாத விட புருஷ னொருவனோடு தகாத முறையில் நட்புக் கொண் டிருப்பது கார்த்தியாயினியின் தகுதிக்குச் சிறிதும் ஏற்றதில்லை.

தாக்ஷாயணி:—ஆமாம்; மந்திரி தன் மனைவி வேறொரு ஆடவனோடு இவ்வாறு பழகுவதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லையா? அல்லது கவனிக்கவில்லையா?

சூடாமணி:—பாவம்! அவருக்கு இதை யெல்லாம் கவனிக்க அவகாசமேது; அரசாங்க சம்பந்தமான வேலைகளைக் கவனிப்பதற்கே பொழுது அகப்படவில்லை.—அதனால்தான் கார்த்தியாயினி தன் மனம் போனபடி யெல்லாம் கூத்தாடுகிறாள்.

லக்ஷ்மி (இளம்பெண்):—கள்ளங் கபடறியாத அந்த சீமாட்டியம்மாள் மீது அவதூறுகளைச் சொல்லிப் பாவத்தைக் கட்டிக் கொள்ளாதீர்க ளம்மா! ஒரு ஆடவனோடு பெண்ணொருத்தி சாதாரணமாகப் பேசினாலே கதை கட்டிவிடும் வழக்கம், இன்னும் நம் சமூகத்தை விட்டுப் போகவில்லையே!-நீங்கள் இவ்வாறு வீண் வம்வளப்பதை யாராகிலும் கவனித்தால் — அல்லது — அவர்கள் காதுகளுக்கே எட்டி விட்டால் பிரமாத கலகம் ஏற்பட்டுவிடும். ஜாக்கிரதை! இத்தோடு அவ்விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள்.

இந்திராணி:—(கோபத்தோடு) சரிதாண்டி, வாயை யடக்கு. எங்களுக்கு யோசனை சொல்ல வந்து விட்டாள். இந்தமாதிரி மொட்டைச் சிறுக்கிகளால்தான் உலகமே கெட்டுப்போகிறது. இவ்விஷயம் அவர்கள் காதுகளுக்கு எட்டினால் என்ன! தலை போய்விடுமா!—காந்திமதிநாதம் எனக்கு அம்மான் மகனாகவேண்டும் தெரியுமா! அவனிடம் அவன் பெண்டாட்டியின் லட்சணத்தைச் சொல்லத்தான் போகிறேன்.-இவளை அவனுக்குக் கட்டும்போதே சொன்னோம்; அந்த மலையாளத்துச் சிறுக்கியின் (கேரள நாட்டிலேயே குடியேறி விட்டார்க ளாகையால் அக்கருத்தில்) சம்பந்தமே வேண்டாமென்று. பிள்ளையாண்டான் அவள் அழகில் மயங்கிப்போ யிருந்தானாகையால் அவளைத்தான் கட்டிக் கொள்வேன் என்று பிடிவாதம் செய்தான். அவனுடைய பெற்றோரும், என் தாய்தந்தையரும் எவ்வளவோ பாடு பட்டார்கள், என்னை அவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று. நான் ஸ்தூலமாகவும், மாநிறமாகவும் இருந்ததால். அவன் கண்ணுக்குப் பிடிக்கவில்லையாம். கரும்பூத மென்று அவன் என்னைக் கேலி செய்ததோடு

என்னைக் கலியாணஞ் செய்து வைத்தால், உடனே தற்கொலை செய்து கொள்வதாகவும் கூறினான். அவன் கட்டிக் கொள்ளாததனால் நான் என்ன கெட்டா போய்விட்டேன்?—இப்போது அவனது சுந்தரியின் ஒழுங்கைச் சொல்லி முகத்தில் இடிக்கிறேன். அவன் மந்திரியாயிருந்தால் எனக்கென்ன பயமா?—அவன் தனியாகத்தான் நின்றிருக்கிறான். இதோ போய் அவனிடம் எல்லாவற்றையுங் கூறுகிறேன்; பார்" என்று கூறிய வண்ணம் எழுந்து நடந்தாள்.

* * *

இந்திராணி மற்ற மங்கையரோடு வம்பளந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில், கார்த்தியாயினியும் சிவசைலமும் கூடத்தின் ஒரு மூலையில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். பெண் விருந்தினர்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்த கார்த்தியாயினி ஏதோ காரியார்த்தமாகக் கூடத்துக்குச் சென்றாள். கூடத்தை யடுத்த அறையில் வேறொரு வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த சிவசைலம் இவளைக் கண்டதும் அங்கு வந்து சேர்ந்தான். ஏதோ பேச்சை ஆரம்பித்த இருவரும் ஒருவர்மீ தொருவர் வைத்துள்ள காதற் பெருக்கினால், சமய சந்தர்ப்பத்தையும், விருந்தினர்கள் குழுமியிருப்பதையும் மறந்து நெருங்கி நின்று நீளப் பேசிக்கொண்டேயிருந்தனர்.

சிவசைலம் கார்த்தியாயினியைக் கண்டதுமே அவளது பேரழகில் மனதைப் பறி கொடுத்து விட்டதால், அவள் பிறனொருவனுக்கு உரியவள் என்பதை யறிந்த பின்னரும், அவள்மீது கொண்ட மோகத்தை மாற்றிக் கொள்ள இயலாதவனாய், அவளது காத லின்பத்தைத்

தவருன வழியிலாயினும் பெற முயன்று கொண்டிருந்தான். ஸர். பரமேஸ்வரன் பிள்ளை விவாக ஏற்பாடு சம்பந்தமாக சிவசைலத்தை, திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையிடம் அனுப்பி வைத்தது அவனது கருத்துக்கு அனுகூலமாக முடிந்தது.

கார்த்தியாயினியோ சிவசைலத்தைப் பார்த்ததும், அவனது கம்பீர தோற்றத்தில் கவர்ச்சி யுற்ருளாயினும், அடுத்த கணத்தில் தான் அவனைப்பற்றி மனதில் நினைப்பதே தவருனது என்று உணர்ந்தாள். அதன் பின், அவள் தன் மனதோடு போராடி சிவசைலத்தை மறக்க முயன்று வந்தாள். ஆனால், அவளது முயற்சிக்கு எதிர் மாருக அவள் திருவனந்தபுரத்தை விட்டு வந்த இரண்டொரு வாரங்களுக்கெல்லாம் சிவசைலம் அங்கு வந்தது முதலில் அவளுக்குப் பெரிதும் சங்கடத்தை யுண்டு பண்ணியது. ஆயினும், சிவசைலம் இங்கு வந்த இரண்டொரு நாளில் அவனது இங்கித மொழியும், விநயபூர்வமான செயலும் கார்த்தியாயினியின் மனதை மாற்றி மீண்டும் அவன் மீது கவர்ச்சி கொள்ளச் செய்தன. விரிவாகச் சொல்ல வேண்டுமானல், கார்த்தியாயினி தனது உள்ளக் கமலத்தில் சிவசைலத்தின் கம்பீர உருவத்தைக் குடிகொள்ளச் செய்து நினைவு மலர்களை இடைவிடாது தூவி யருச்சனை செய்து வந்தாள் என்று கூறுவது பொருந்தும். அவள் ஒழுக்கத்தைத் துறந்தாள்; சமூகக் கட்டுப்பாட்டை மறந்தாள். சிவசைலத்தின்மீது அளவு கடந்த பிரேமை கொண்டு விட்டாள். இவ்வரம்பு மீறிய தனது செயலால், தான் பிறந்த குடும்பத்துக்கும், புகுந்த குடும்பத்துக்கும் எந்தவிதமான அவமானமும், அகௌரவமும், களங்கமும் ஏற்படும் என்பதை அவள் உணர்ந்து பார்க்கச் சக்தியற்

றவளானுள் என்றே சொல்ல வேண்டும். எனவே, இவர்க ளிருவரும் தங்கள் நிலையை மறந்து காதலுலகில் சஞ்சரித்து இன்பத்தின் எல்லையைக் காண முயன்றுகொண் டிருந்த னர். இவ்வித நிலையில் தற்போது இருந்துவரும் இவ்விரு வரும் சுற்று வட்டம், சமய சந்தர்ப்பங்களைக் கவனியாது தாராளமாகப் பேசிப் பழகிக்கொண்டிருந்ததில் ஆச்சரிய மென்ன இருக்கிறது?

இங்ஙனம் கார்த்தியாயினியும் சிவசைலமும் பேசிக் கொண் டிருக்கையில், தற்செயலாக சிவசைலத்தின் பார் வை பெண்களிருந்த பக்கம் விழ்ந்தது. அவர்களில் ஒரு சில பெண்மணிகள் தங்களிருவரையும் அடிக்கடி பார்த்து குறும்பாகச் சிரித்து ஏதோ குசுகுசுவெனப் பேசிக்கொண் டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. மேலும் அதன் நாலாபக்கமும் சுற்றிப் பார்க்கலானுன். கலியாணத் திற்கு வந்திருப்பவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் இருவரையுமே கவனித்துக் கொண்டிருப்பதை யறிந்தான். அவனது தேகம் ஒரு விநாடி விதிர்ப்புற்று நின்றது. தன்னு டைய மடமைக்காக அவன் தன்னையே நொந்து கொண் டான். அடுத்த கணம் தன் நிலையை ஒருவாறு சமாளித் துக்கொண்டு அவன் புன்சிரிப்பை வலிய வருவித்தவண் ணம் "கார்த்திகா! நம்மைப் பிறர் கவனிக்கிருர்களே; பார்த்தாயா?" என்று கேட்டான்.

இதைக்கேட்டு மன அதிர்ச்சியுற்ற கார்த்தியாயினி, "என்ன ! கவனிக்கிருர்களா ? நம்மையா? ஏன் ? எதற் காக?" எனப் படபடப்பாக வினவினுள்.

"எதற்காகக் கவனிக்கிருர்கள் என்பதற்குக் காரணம் கூடவா வேண்டும்!"

"அப்பா! இந்த மனிதர்களே மிகக் கொடியவர்கள். குரோத நெஞ்சங் கொண்டவர்கள். நாம் பேசிக் கொண்டிருந்தாலென்ன! இவர்கள் குடியா முழுகிப் போய் விட்டது"

"கொடியவர்கள்! ஆம்; கொடியவர்கள்.—இவர்களுக்கு—அதிலும் ஒரு சில பெண்களுக்கு—வம்பளக்க ஏதாயினும் வேண்டுமல்லவா!"

"இவர்கள் வம்பளப்பு நம்மை என்ன செய்துவிடும்? ஒரு மங்கை ஆடவனொருவனோடு பேசிக்கொண்டிருப்பது என்ன தவறு? அவர்கள் ஒருவருக் கொருவர் சிநேக முறையில் கூடவா பழகக்கூடாது?" எனக் கார்த்தியாயினி அப்போதைய மனப்போக்குக் கேற்ப வாதித்தாள்.

சிவசைலம் கார்த்தியாயினியை ஒருவிதமாகப் பார்த்த வண்ணம், "என்னமோ! இந்து சமூக அமைப்பு அப்படி இருக்கிறது—இம் மனிதர்களின் மனப் போக்கைக் கவனித்தால்—ஒன்று நம் தோழமைக்கு இன்றோடு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இல்லாவிட்டால், இவர்களை விட்டு நாம்..............." எனக் கூறிக்கொண்டே வந்தவன் மேலே பேசாது வார்த்தைகளை விழுங்கினான்.

கார்த்தியாயினி ஆத்திரத்தோடு, "அது மிகவுங் கொடுமை" என்றாள்.

"அப்படியானல், நாமும் கொடுமையாகவே நடந்து கொள்ள நேரும்" என்று சிவசைலம் மெதுவாக மொழிந்தான்.

இதே சமயத்தில் கலியாணத்தின் முக்கிய சடங்காகிய மாங்கலிய தாரணம் நடைபெற வேண்டிய நேரம் சமீபித்து விட்டதால் கார்த்தியாயினி அங்கு கூப்பிடப்பட்

டாள். எனவே, கார்த்தியாயினி அவ்விடத்தை விட்டு நடந்துசென்று மணப்பந்தலை யடைந்தாள். உடனே வாத்தியங்களெல்லாம் ஏககாலத்தில் முழங்கின. பிரா மணப் புரோகிதர்கள் வேத மந்திரங்களை வாசாமகோசர மாக ஓதலாயினர். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மண மக்கள்மீது மலர்மாரி பொழிந்தனர். இவ்வித வைப வங்களிடையே நாராயண மேனன் தேவகியின் கழுத்தில் மாங்கலியத்தைச் சூட்டினன்.

பெண்கள் வரிசையில் பேச்சாரவாரமும், சிரிப்பொலி யும் அதிகமாயிற்று. விருந்தினரில் பலர் இதுவரை உட்கார்ந் திருந்த சிரமந் தீர்வதற்காக, இங்கும் அங்குமாகத் திரிந்து கொண்டிருந்தனர்; சிலர் நாலைந்து பேராகக் கும்பல் கும்ப லாகக் கூடிப் பேசிக்கொண் டிருந்தனர்.

திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை சிரம பரிகா ரஞ் செய்து கொள்வதற்காகவோ, என்னவோ மேல் மாடிக்குச் சென்றார். தாக்ஷாயணி, சூடாமணி முதலிய மங்கையரோடு மிகவும் வீம்பு பேசிவிட்டு, காந்திமதிநாதம் பிள்ளையை அணுக முடியாது இதுவரை தவித்துக் கொண் டிருந்த இந்திராணி, அவர் மேன்மாடிக்குத் தனியாகப் போவதைக் கண்டதும், இதுதான் நல்ல சந்தர்ப்பமெனக் கருதித் தன் ஸ்தூல தேகத்தைத் தூக்கிக்கொண்டு அசைந்தாடிய வண்ணம் நடந்து மேன்மாடியை யடைந் தாள்.

மேலே போனதும், கோட்டைக் கழற்றி ஸ்டாண் டில் மாட்டிவிட்டு அங்கிருந்த சோபா வொன்றில் சாய்ந்து கொள்ளப் போன காந்திமதிநாதம் பிள்ளை தம் பின்னே யாரோ வரும் காலடி யோசையைக் கேட்டுத் திரும்பிப்

பார்த்தார். இந்திராணி அவர் முன்னே அசட்டுப் புன்னகை செய்து நாணிக் கோணி நின்றாள்.

உடனே பிள்ளையவர்கள், "வா அம்மா! இந்திராணி! எல்லாருஞ் சௌக்கியமா? அண்ணா ஏன் கலியாணத்திற்கு வரவில்லை" என க்ஷேமலாபம் உசாவி உபசரித்தார்.

இந்திராணி ஒருவிதமாக முகத்தை வைத்துக்கொண்டு, "ஏதோ இருக்கிறாம். அவருக்கு அவசர ஜோலி ஏதோ இருப்பதாகச் சொல்லி என்னை மட்டும் அனுப்பினார்.—நானாக வந்த பிறகாயினும் உனக்கு என்னிடம் பேச வேண்டுமென்று தோன்றிற்றே! அந்த மட்டும் நான் அதிர்ஷ்டசாலிதான்—" என்று எடுப்பாகப் பேசினாள்.

"என்ன இந்திரா! அப்படிச் சொல்லுகிறாய்? உன்னிடம் பேசக்கூடாது என்று ஏதாகிலும் வைராக்கியமா? என்ன!—என் உத்தியோகம் அப்படியிருப்பதால் உங்களையெல்லாம் பார்த்து அளவளாவுவதற்கு எனக்கு அவகாசம் ஏற்படுவதில்லை. அது தவிர, வேறென்ன இருக்கிறது?—அண்ணாவோடு அடிக்கடி வந்து போய்க்கொண்டு இருக்கிறதுதானே, அம்மா!" என்று காந்திமதிநாதம் பிள்ளை கூறினார்.

இவ்வாறு இவர்களிடையே பொதுவாகச் சம்பாஷணை சிறிதுநேரம் நடைபெற்றது. பின்னர் இந்திராணி, "அதிருக்கட்டும் அத்தான்! உன் சீமாட்டியை என்ன இப்படி விட்டுவிட் டிருக்கிறாயே! நீ ஒன்றுங் கவனிப்ப தில்லையா?" என்று பேச்சோடு பேச்சாகக் கேட்டாள்.

பிள்ளையவர்கள் ஒருவாறு திகைப் படைந்தவராய், "என்ன அவளுக்கு? எப்படியிருக்கிறாள்?" என்று வினவினார்.

"அவளுக்கு என்னவா! உன் சுந்தரியைப் பற்றி ஊரெல்லாம் பறை யறையப்படுகிறது. உனக்கு ஒன்றுமே தெரியாததுபோல் கேட்கிருய். இப்படி யிருந்தால் குடும்பம் உருப்பட்டாற் போல்தான்" என அவள் நீட்டிப் பேசினுள்.

"விஷயத்தைச் சொல்லேன், இந்திரா! அவளைப்பற்றி ஊரார் என்ன சொல்லுகிருர்கள்?" என்று சிறிது ஆத்திரத்தோடேயே கேட்டார் கனம் மந்திரி.

இந்திராணி கொஞ்சம் மிடுக்காகவே, சொல்லுவதற்கு வேறென்ன இருக்கிறது? நமது கார்த்தியாயினி கொஞ்சமும் நாணமின்றி திருவாங்கூரிலிருந்து வந்திருக்கும் அந்தப் பையனேடு சதா திரிந்து கொண்டும் பேசிச் சிரித்துக் கொண்டும் இருக்கிருளே; அதைப் பற்றித்தான். இவர்கள் இவ்வாறு திரிவதைக் குறித்து ஜனங்கள் என்னென்னமோ வெல்லாம் சொல்கிருர்கள். அவற்றைக் கேட்கச் சகிக்கவில்லை. எனக்கே தலை குனிவா யிருக்கிறது. நீ என்னதான் ஆதியிலிருந்து என்னைப் புறக்கணித்தாலும், என் அம்மான் மகனல்லவா! உனக்குவந்த அவமானம் எனக்கல்லவா! அந்த ரத்த பாசத்தால், மனந் தாளாமல் ஓடோடியும் வந்தேன்; விஷயத்தை உன்னிடஞ் சொல்லுவதற்கு. இப்போதே அவளைக் கூப்பிட்டுக் கட்டுத் திட்டம் பண்ணிவை. இல்லாவிட்டால் காரியம் மிஞ்சிப் போய் விடும்" என்று அளந்தாள்.

இதைக்கேட்டதும், திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை வாய் விட்டுக் கலகலவென நகைத்து, "அப்பாடா! இதுதானு! கார்த்தியாயினி சிவசைலத்தோடு பேசுவதா குற்றமாகப் போய்விட்டது?—ஆம். நம் ஜனங்களே அப்படித்தானே! ஒரு பெண் ஆடவ னெருவனேடு பேசி

ளுலே, 'அவர்களுக்குள் ஏதோ இருக்கிறது. அவ்வாறு ஒன்றுமில்லாமலா குசுகுசுவெனப்பேசுகிருர்கள்?' எனக் கதை கட்ட ஆரம்பிப்பார்களே!—இன்னும் நம் சமூகம் முன்னேற்ற மடைய வெகுகாலம் ஆக வேண்டும். இந்திரா! நான் ஏதோ மறுத்துப் பேசுகிறேன் எனக் கோபித்துக் கொள்ளாதே! உனக்கு ஒன்றுந் தெரியாது. உனக்கு வயது அதிகமாய் விட்டாலும் உலகப் போக்கை நீ யறியவில்லை. அதற்குச் சந்தர்ப்பமுங் கிடையாது. நீ பழைய கர்நாடக மனுஷியாக இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை.—ஊரார் அப்படித்தான் ஒவ்வொருவரைப் பற்றியும் ஏதாகிலுஞ் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதையெல்லாம் நாம் பாராட்டிக்கொண்டிருக்க முடியுமா? அல்லது அவர்களை அவ்விதம் பேசக்கூடாது எனக் கட்டுப் படுத்தத்தான் முடியுமா?—எனக்குத் தெரியும் என் குடும்பத்தை எவ்விதம் நடத்துவது! என் மனைவியை எவ்வாறு கட்டுப்படுத்துவது? என்று. மற்றவர்கள் வந்து எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. —இந்திரா! நீ வந்த காரியத்தைப் போய்க் கவனி" என்று கடைசியாகக் கொஞ்சங் கடுமையைக் காட்டியே பேசினர்.

இந்திராணிக்கு முகம் சுருங்கிப் போய்விட்டது. அவள் அலுப்பாக, "எனக்கென்ன வந்தது? எப்படியாகிலும் போங்களேன்? இங்கு வந்திருப்பவர்கள் பேசிக்கொண்டது என் காதில் விழவே, நான் உன்னிடம் அதைச் சொல்ல வந்தேன்.—இப்போதுகூட வேண்டுமானல் பாரேன். நான் சொல்வது உண்மையா? பொய்யா? என்று. கூடத்து மூலையில் நின்று கொண்டு இவ்வளவு ஜனங்கள் இருக்கிருர்களே என்றுகூட இல்லாது, அவர்கள்

கூத்தடிக்கிறதை நீ நேரில் பார்த்தால், அப்போது உனக்குத் தெரியும். அவளுக்கு இப்போது அவனிடம் பேச்சென்ன வேண்டி யிருக்கிறது? என்ன அப்படி குடி முழுகிப் போகிற காரியம்?—இதெல்லாம் நான் எடுத்துச் சொன்னால், உனக்குக் கோபம் வருகிறது. உலகந் தெரியாதவள்; கர்நாடகம் என்றெல்லாம் என்னைக் கேலி செய்கின்றாய்?—மந்திரியாய் விட்டாயோ! இல்லையோ! எங்களையெல்லாம் பார்த்தால் உனக்கு அலட்சியமா யிருக்கிறது. —உம். அவரவர்கள் தலையில் எழுதி யிருக்கிறபடிதான் நடக்கும். மற்றவர்கள் சொன்னால் புத்தியில் அமையப் போகிறதா? நடக்கிறபடி நடக்கட்டும். நமக்கென்ன வந்தது" என்று கூறியவண்ணம் கழுத்தை யொரு திருப்புத் திருப்பிக்கொண்டு அவ்விடத்தை விட்டு நடக்கலானாள். தான் இவ்வாறு கோபித்துக்கொண்டு திரும்பினால், காந்திமதிநாதம் தனக்குச் சமாதானஞ் சொல்லி வேண்டிக் கூப்பிடுவாரென நினைத்தாள். ஆனால் பிள்ளையவர்களோ 'தாம் அவளைக் கலியாணஞ் செய்து கொள்ளாததால் ஏற்பட்ட குரோதத்தை இன்னமும் மனதில் வைத்துக் கொண்டு, கார்த்தியாயினிமீது பொறுமையால் ஏதேதோ அபவாதங் கூற வந்திருக்கிறாள்; அவள் இயற்கை அவ்வளவுதான்' எனக் கருதி அலட்சியமாக இருந்து அவள் போவதைப் பார்த்த வண்ணமே சிரித்துக் கொண்டிருந்தார். எனவே, அவள் ஏமாற்றத்தோடு திரும்பினாள்.

* * * * * * * * *

அன்று மாலை நான்கு மணியிருக்கும். கலியாணத்துக்கு வந்த விருந்தினர்களில் விருந்துச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுத் தங்கள் வீடு சென்றவர்கள்போக, மற்றவர்களெல்லாம் அம்மாளிகையின் பல இடங்களிலும் உட்

கார்ந்தும், படுத்தும் இளைப்பாறிக் கொண்டும், நாலைந்து பேர் நாலைந்துபேராகக் கூடி பேசிக்கொண்டும் இருந்தனர் ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், காந்திமதிநாதம் பிள்ளையும் மேல்மாடியில் சோபாக்களில் சாய்ந்த வண்ணம் பலவித விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். அம்பிகாபதி இவர்களிடையே தளர் நடை நடந்தும், மழலை மொழி பேசியும் அவர்கள் கவனங்களைக் கவர்ந்து ஆனந்த மூட்டிக் கொண்டிருந்தான். மணமகன் நாராயணமேனன் மாளிகையின் ஓரிடத்திலும், மணமகள் தேவகி மற்றொரு அறையிலும் இருந்து தங்கள் மணவாழ்க்கையைப் பற்றி யும், எதிர்காலத்தில் தாங்கள் அநுபவிக்கப் போகும் சுக போகங்களைப் பற்றியும், இன்பக் கனவு கண்டு கொண் டிருந்தனர். இவ்விருவரையுஞ் சேர்ந்த உறவினரும், தோழர்களும் அவரவர்களைச் சூழ்ந்துகொண்டு, பரிகாச மாகப் பேசிக் கொண்டிருந்தனர். இவ்வளவு வைபவங்க ளிடையிலும், தேவகியின் மனதில் சிவசைலத்தைப்பற்றிய நினைவு அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அச்சமயங்களி லெல்லாம் அவள் உள்ளம் வேதனை யடைந்தது. இதைப்பற்றி நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. தேவகி சிவசைலத்தை எவ்வளவு நாட்களாக நேசித்து வந்திருக்கிறாள்? அவள் அவனை எவ்வளவு மனப்பூர்வமாக நம்பிக் காதலித் திருக்கிறாள்? அப்படி யிருக்க, அவனை அவள் இவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியுமா? கூடத் தில் மாலையில் நடக்கவேண்டிய சங்கீதக் க்ச்சேரிக்காக சிப்பந்திகளும், வேலையாட்களும் வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

நமது கதாநாயகன், கதாநாயகிகளாகிய சிவசைல மும், கார்த்தியாயினியும் எங்கே? மூன்று மூன்றரைமணி

வரை வந்திருந்த விருந்தினர்களை உபசரித்துக்கொண்டிருந்த அவர்கள் இளைப்பாறுவதற்காக ஒருவர் பின்னொருவராக மாளிகையின் பின் பக்கத்துள்ள பூஞ்சோலைக்குச் சென்றனர். கார்த்தியாயினி தன் சகோதரரோடும், கணவரோடும் வார்த்தையாடிக் கொண்டிருந்துவிட்டு நந்தவனத்துக்குச் சென்றாள். அங்கு தற்செயலாகச் சிவசைலம் அவளைச் சந்தித்தான். இருவரும் அவ்வாறே பேசிக் கொண்டு, மற்றவர்கள் சாமானியமாக நுழைய முடியாத ஒரு தனி யிடத்தை யடைந்தனர்.

சிவசைலம் கார்த்தியாயினியோடு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், அவன் மனம் உள்ளூற என்னென்னமோ எண்ணிக் கொண்டிருந்தது. 'கலியாண வேலையோ அநேகமாக முடிந்துவிட்டது. இன்னும் இரண்டொரு நாட்களில் நாம் ஊர் திரும்பவேண்டி நேர்ந்தாலும் நேரும். இதற்குள், நம் அபிப்பிராயத்தை இதுவரை மூடி மூடி வைத்திருந்ததுபோல் இல்லாது, தாராளமாக வெளியிட்டு அவள் சம்மதத்தை எப்படியும் பெற்றுவிட வேண்டும். அவளும் என்னிடம் அன்பு கொண்டிருப்பதாகத்தான் இந்த ஒரு மாத காலமாக என்னோடு பழகி வரும் மாதிரியிலிருந்து தெரிகிறது. எதற்கும் மனம் விட்டுக் கேட்டு அவள் கருத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்வோம். அதற்கு இதுதான் சரியான சமயம். இதை விட்டால் இதுபோன்று மறு சந்தர்ப்பம் வாய்ப்பதரிது' என்று தனக்குள்ளாகவே எண்ணி ஒருவித முடிவுக்கு வந்தான். எனவே, அவன் சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்து விட்டு, பேச்சோடு பேச்சாக, கார்த்தியாயினியை நோக்கி, "கார்த்திகா! எனக்கு என் வாழ்வெல்லாம் நீதான். என் எதிர்கால வாழ்வு உன்னிடத்தில்தான் இருக்கிறது. நீ

இல்லாது நான் உயிர்வாழ முடியாது. எனது இம்மனப் பான்மையை நீ ஆரம்பத்தி லிருந்தே கவனித்து வந்திருப்பா யென நினைக்கிறேன்" என இரக்கமாகக் கூறினன். கார்த்தியாயினிக்குச் சிறிது தூரத்தில் நின்று இவ்வாறே கூறிக்கொண்டு வந்தவன் மன எழுச்சியாலோ ஆர்வ மிகுதி யாலோ, அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு முத்தமிடப் போனன்.

கார்த்தியாயினி தனக்குள்ள வரம்பை யெல்லாம் மீறி சிவசைலத்தை முழு மனதுடன் காதலித்து வருகிருளா பினும், இப்போது இவன் கூறிய மொழியைக் கேட்ட தும் மன அதிர்ச்சி யடைந்தாள். இதே சமயத்தில் அவன் தன்னைச் சேர்த்தணைத்து முத்தமிட முயலவும், அவள் மெய் விதிர்ப்புற்று, தன் கைகளால் அவன் முகத்தை விலக்கி அவனது பிடியினின்று விடுபட முயன்ற வண்ணம், "நான் கலியாண மானவள். கணவனிருக்கிருர்; ஒரு மகனும் இருக்கிருன். இவ்வித நிலையில்......" எனக் கூறி மேலும் ஏதோ பேச முயன்ருள்.

இச் சமயத்தில் மிகச் சமீபத்தில் ஏதோ சந்தடி யுண்டாகவே, ஒருவர் பிடியினின்று ஒருவர் விடுபட்டுத் தனித் தனியாகப் பிரிந்து வெவ்வேறு வழியாகச் சென் றனர்.

# ஐந்தாவது அதிகாரம்

## கள்ளக் காதலைக் கணவன் அறிதல்

காலை எட்டு மணியிலிருந்தே மவுண்டுரோட் வாலாஜா ரோட்டை நோக்கிக் கலாசாலை மாணவர்களும். மற்றும் உத்தியோகஸ்தர்களும் பொது மக்களும் கூட்டம் கூட்டமாகப் போய்க்கொண் டிருந்தனர். அன்று சென்னை நகரே சுறுசுறுப்பாக இருந்ததென்றால் மிகை யாகாது. உலகைச் சுற்றுப் பிரயாணஞ்செய்து போகுமிடமெல்லாம் வெற்றிமாலை சூடிக்கொண்டு வரும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியாரும், இந்தியாவில் அக்கோஷ்டியாரோடு போட்டி போட்டு ஆடித் தங்கள் திறமையைக் காட்டிக்கொண்டு வரும் இந்திய கிரிக்கெட் கோஷ்டியாரும், நமது சென்னைமா நகருக்கு விஜயஞ் செய்திருக்கின்றனர். இவர்களது வருகையை முன்னிட்டு 'மதராஸ் கிரிக்கெட் கிளப்'பில் ஒரு கிரிக்கெட் டோர்னமெண்டு (Tournament) ஏற்படுத்தப்பட் டிருந்தது. கடந்த மூன்று நாட்களாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியாருக்கும் இந்திய கிரிக்கெட் கோஷ்டியாருக்கும் போட்டி யாட்டம் நடந்தது. அதில், மேஜர் டி. ஜி. பிள்ளை, ராமநாத், ஸ்ரீ நகரம் குமாரராஜா முதலியவர்கள் கிரிக்கெட் பந்தாட்டத்தில் தங்களுக்குள்ள தேர்ச்சியையும் ஆற்றலையும் காட்டி ஆடியும், முடிவில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷடியாரே வெற்றி பெற்றனர். இம்முடிவு இந்திய இளைஞர்களிடையே ஒருவித தீவிர உணர்ச்சியையும் பரபரப்பையு முண்டு பண்ணி விட்டது.

நான்காவது நாள் சென்னை கிரிக்கெட் கோஷ்டியார் ஆஸ்திரேலிய கோஷ்டியாரோடு ஆட ஏற்பாடு செய்யப்

பட்டிருந்தது. சென்னை கிரிக்கெட் கிளப் முக்கியஸ்தர்கள் எப்படியும் ஆஸ்திரேலிய கோஷ்டியாரை வென்று பெரும் புகழ் பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு, தங்கள் கிளப் மெம்பர்களில் திறமையாக ஆடக் கூடியவர்களோடு, சென்னை மாநகரத்தைச் சேர்ந்த மற்ற வெளியூர்களி லிருந்த நல்ல ஆட்டக்காரர்களையும் வரவழைத்து ஒரு கோஷ்டியாகச் சேர்த்திருந்தனர். ஆகவே, இன்று ஆட்டம் பார்ப்பதற்கு மிகவும் ருசிகரமாக இருக்குமென்பது பந்தாட்டங்களில் ஆர்வமுடைய வாலிபர்களது கருத்து. எனவே, கடந்த மூன்று நாட்களைக் காட்டிலும் இன்று கூட்டம் மிக அதிகம்.

இக்கிரிக்கெட் பந்தாட்டப் பந்தயத்துக்காகச் சர்க்கார் காரியாலயங்களும், மற்றும் பிரபல ஆபீஸ்களும் மூடப்பட்டு விடுமுறை விடப்பட்டது. ஆதலால், அந்த ஆபீஸ்களின் பெரிய உத்தியோகஸ்தர்கள் முதல் சாதாரண குமாஸ்தா வரை இதைக் காண வந்திருந்தனர். பிரமுகர்கள் வரிசையில் சென்னைக் கல்வி மந்திரி திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையும், அவரது மனைவி ஸீமாட்டி கார்த்தியாயினியும் அமர்ந்திருந்தனர். கார்த்தியாயினி உற்சாகத்தோடு காணப்பட்டாள். திவான்பகதூர் பிள்ளையவர்களோடு பக்கத்திருந்த ஆங்கிலேயப் பெண்மணி யொருத்தி ஏதோ உரையாடிக் கொண்டிருந்தாள். அவள் சர்க்கார் உத்தியோகத்தில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒருவரது மனைவிபோலக் காணப்பட்டாள். அவ்வாங்கில மாது இடையிடையே கார்த்தியாயினியுடனும் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஆனால் கார்த்தியாயினி யின் கவனமெல்லாம், வேறெங்கோ சென்றிருந்தது. அவளது நீல விழிகள் அப்போதுதான் ஆட்ட மைதானத்

துக்குச் சென்று கொண்டிருக்கும் சென்னை கோஷ்டி யாரை ஒவ்வொருவராக ஆராய்ந்து கொண்டிருந்தன. ஒவ் வொரு பந்தாட்டக்காரரும் மைதானத்தை நோக்கி வரும்போ தெல்லாம் ஜனங்கள் கைகொட்டி ஆரவாரஞ் செய்யலாயினர்.

ஆட்டம் ஆரம்பமாயிற்று. முதலிலேயே ஆஸ்திரேலிய கோஷ்டியாரும், சென்னை கோஷ்டியாரும் தீவிரமாக ஆட லாயினர். முதலில் சென்னை கோஷ்டியார் முதல் இன்னிங்கிலேயே 'ரன்'கள் அதிக மெடுத்தனர். பின்னர், ஆஸ்திரேலிய கோஷ்டியார் கை வலுத்தது. ஆஸ்திரேலிய 'போலர்' (Bowler) கையை முறுக்கிக்கொண்டு பந்தைத் தீவிரமாக எறியலானர். எனவே, சென்னை கோஷ்டி 'பேட்மென்'கள் ஒருவர் பின் னொருவராய் 'அவுட்' ஆகிக் கொண்டே வந்தனர்.

பின்னர் சென்னை கிரிக்கெட் உலகிலேயே பிரசித்தி பெற்றவரும், இந்திய கிரிக்கெட் கோஷ்டியோடு சேர்ந்து திக் விஜயஞ் செய்து வருபவருமான ஸ்ரீ. வி. ஸி. ஜெய பாலன் 'பேட்'டைக் கையில் தாங்கிக்கொண்டு கம்பீரமாக நடந்து வந்தார். ஜனங்கள் குதூகலம் சொல்லி முடியாது. ஜெயபாலன் வந்து 'பேட்'டைப் பிடித்து நின்றதும், ஆட் டம் மீண்டும் ஜோராக இருந்தது. ஆஸ்திரேலிய கோஷ்டி யார் இவரை 'அவுட்'செய்துவிட முஸ்தீப்பு செய்யலாயி னர். ஜெயபாலன் 3 விக்கெட்களுக்கு 52 'ரன்'கள் தான் எடுத்தார். அதற்குள் ஆஸ்திரேலிய போலர் அவரை 'அவுட்'செய்து விட்டார்.

அதற்குப் பிறகு ஜனார்த்தனம் என்பவர் வந்திருந்தார். அவரும் சிறிது நேரமே யாடினர். நாலைந்து 'ரன்'க ளெடுப் பதற்குள் 'அவுட்'டாகி விட்டார்.

இவருக்குப் பின்னர், மற்ருெரு வாலிபன் கையில் ‘பேட்’டுடன் ஆட்ட மைதானத்துக்குக் கம்பீரமாக நடந்து வந்தான். இதென்ன! இவ்வளவு பெரிய முழக்கம்! ஜனங் களின் ஆரவாரமும் கரகோஷமும் வானமுகட்டை யூடுரு விச் சென்று தவிடு பொடியாக்கும் போலிருக்கிறதே! இவ்வாலிபன் வருகைக்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம்? இவன் என்ன அவ்வளவு சிறந்த ஆட்டக்காரனு? அது என் கார்த்தியாயினி அவ்வளவு ஆர்வத்தோடும் அடிதுடிப் போடும் அவ்வாலிபனைப் பார்க்கிருள்; இவ்வாலிபன் யார்?—என் சந்தேகப் படுகிறீர்கள்? நம் சிவசைலம் தான். இவன் கிரிக்கெட் பந்தாட்டத்தில் நிபுணன் என் பது இதுவரை தெரியாதே என்கிறீர்கள். ஆமாம். சமயம் வரும்போதுதானே தெரியும்.

அவன் தூத்துக்குடி வாசியா யிருந்தாலும் உயர்தர படிப்பைச் சென்னையிலேயே முடித்தானுகையால், அதா வது கிறிஸ்தவ கலாசாலையில் படித்து வந்தவ னுகையால், கிரிக்கெட் முதலிய பந்தாட்டங்களில் பழகி நன்கு தேர்ச்சி பெற்றிருந்தான். அத்துடன் பெரிய பெரிய ஜதைக ளோடு சேர்ந்து பல ‘டோர்னமெண்டு’களிலும் விளை யாடித் தன் திறமையைப் பல சந்தர்ப்பங்களிலும் காட்டி வந்தமையால், ‘கிரிக்கெட்’டிலும், ‘ஹாக்கி’யிலும் முதல்தர மான ஆட்டக்காரன் எனப் பலராலும் மதிக்கப்பட்டு வந்தான். சாதாரணமாக, அவன் ஒரு ‘டீமோடு’ சேர்ந்து ஆடுகிருன் எனக் கேள்விப்பட்டால், ஜனங்கள் அவனது ஆட்டத் திறமையைப் பார்க்க ஏராளமாகக் கூடி விடுவார்கள்.

இத்தகைய நிபுணத்துவமும், புகழும் சிவசைலத் திற்கு இருந்ததனுல் தான், ‘சென்னை ‘கிரிக்கெட் கிளப்’

பார் அவன் உத்தியோகம் பார்த்து வரும் திருவனந்த புரத்துக்குத் தந்தி மூலமாகச் செய்தியும், பணமும் அனுப்பி வரவழைத் திருக்கிறார்கள். எனவே, அவன் திடீரென எப்படி வந்தான் என ஆச்சரியப் படுவதற்கு இடமில்லை.

தேவகியின் விவாகத்தை முன்னிட்டு சென்னைக்கு வந்திருந்த சிவசைலம் அதுசம்பந்தமான காரியங்களெல்லாம் முடிந்ததும், ஸர். பரமேஸ்வரன் பிள்ளையுடனேயே திருவனந்த புரத்துக்குச் சென்றுவிட்டான். எதற்காக வந்தானோ அந்தக் காரியம் முடிந்த பிறகும் அவன் சென்னையில் தங்கியிருந்தால், அது வீண் சந்தேகத்துக்கு இடமாகவன்றோ முடியும்! இது அவனுக்குத் தெரியும். மேலும், அவன் கார்த்தியாயினியின் அந்தரங்கக் கருத்து இன்னதென்பதையும், அவள் தன்மீது அளவு கடந்த காதல் கொண்டிருக்கிறாள் என்பதையும், சந்தர்ப்பம் இடங்கொடாதிருப்பதை யொட்டியே அவள் தன் காதலை வெளிப்படையாகக் காட்டாது இருந்து வருகிறாள் என்பதையும் அவன் பலவகையிலும் தெரிந்துகொண்டிருக்கிறான். ஆகையால், தான் அவளது காதலை எப்படியும் ஒரு நாளாயினும் பெறுவது நிச்சயம் எனத் தீர்மானத்துடன் அவன் சென்றான். இருந்தாலும், திருவனந்தபுரத்துக்குப் போன பின்னர், அவன் கார்த்தியாயினியைக் காணமுடியா திருப்பதனால் உண்டாகும் மனக்கவலையையும், துன்பத்தையும் முன்னைக் காட்டிலும் அதிகமாக உணரலானான். முன்னர், அவன் கார்த்தியாயினியைக் கண்டு காதல் கொண்டிருந்தாலும் அந்நியனாகவே இருந்து வந்தான். இப்போதோ மிகவும் அந்நியோந்நியமாய் விட்டானல்லவா! முன் ஒரு நிமிடம் பார்த்தான். ஒரு சில

மணி நேரந்தான் தூர நின்று பேசிப் பழகினன். தேவகியின் விவாகத்தின் போதோ சுமார் ஒரு மாதத்துக்குமேல் இரவு பகல் என்றில்லாது உடனிருந்து அவளழகைக் கண்களால் பருகி, அவளது இனிய மொழியைச் செவியாரக் கேட்டு, மெய் தொட்டு நெருங்கிப் பழகினனல்லவா! ஆகவே, முன்னைக் காட்டிலும், பிரிவாற்றுமையின் கொடுமை அவனுக்கு அதிகமாகத் தோன்றுவது இயற்கையே யன்றோ!

இவ்விதம் வருந்திக்கொண்டிருந்த சிவசைலத்துக்குச் 'சென்னை கிரிக்கெட் கிளப்'பாரது அழைப்பு பெருமகிழ்ச்சியை யளித்த தென்றால் அதிம் ஆச்சரியமொன்று மில்லை. ஏனென்றால், இதன் காரணமாகவாவது அவன் சென்னையில் மீண்டும் கார்த்தியாயினியைக் கண்டு மகிழ்தற்குச் சந்தர்ப்ப மேற்படுகிறதல்லவா? அத்துடன், அவனுக்குக் 'கிரிக்கெட் பந்தாட்'டத்தில் தனக்குள்ள திறமையைக் காட்டுவதற்கு இதை விடச் சிறந்த சந்தர்ப்பம் எங்கிருந்து கிடைக்கப்போகிறது! அதிலும், உலகிலேயே மிகப் பிரசித்தி பெற்ற ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியாரோடு சரிசமானமாக இருந்து ஆடுவதென்றால், அது சாதாரணமாக எல்லாருக்கும் வாய்க்கக் கூடியதா!

இவ்விதமாக வெல்லாம் எண்ணமிட்ட சிவசைலம், ஆபீஸுக்கு லீவு எழுதிப் போட்டுவிட்டுச் சென்னைக்கு உடனே புறப்பட்டு விட்டான். இவ்விஷயத்தி லெல்லாம் ஸர். பரமேஸ்வரன் பிள்ளை இவனுக்கு விசேஷ சலுகை காட்டி வந்தார். ஏனென்றால், தன் சாதியைச் சேர்ந்த ஒருவன் உத்தியோகத்திலும், மற்ற விஷயங்களி

லும் முன்னேற்ற மடையட்டும் என்ற நல்லெண்ணமே அதற்கு முக்கிய காரணமாகும்.

சென்னைக்கு வந்த சிவசைலம், திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையின் பங்களாவில்தான் தங்கினான். அவன் சென்னை வந்த காரணத்தைக் கேட்ட பிள்ளையவர்கள் மிக மகிழ்ந்து அவனுக்கு உற்சாக மூட்டினார். அவரைக் காட்டிலும் கார்த்தியாயினி அதிகமாகக் குதூகலித்தாள் எனக் கூறுவது அநாவசியம். பொதுவாக, பெரிய பதவியி லுள்ளவர்களும், செல்வந்தர்களும் கேளிக்கைகளுக்கும் களியாட்டங்களுக்கும் செல்வது வழக்கமாயிருந்தாலும், கார்த்தியாயினி இப்பந்தயத்துக்கு வந்தது முக்கியமாகச் சிவசைலத்தை முன்னிட்டே எனச் சொல்ல வேண்டியதில்லை.

சிவசைலம் பந்தய மைதானத்துக்கு வந்து, பேட்டைப் பிடித்து நின்றதும், ஜனங்களிடையே மிகுந்த பரபரப் பேற்பட்டது. கார்த்தியாயினி ஆவலோடு துடிதுடித்துக் கொண்டிருந்தாள். தன் காதலன் இவ்வாட்டத்தில் புகழ்பெற வேண்டுமென்றும், அவன் சேர்ந்திருக்கும் கோஷ்டிக்கே வெற்றி கிடைக்கவேண்டு மென்றும் இறைவனை நோக்கிப் பிரார்த்தித்தாள். சிவசைலம் முதலிலேயே தன் ஆட்டத் திறமையைக் காட்டி ஆஸ்திரேலிய கோஷ்டியாரை பிரமிக்கச் செய்தான். அவன் ‘போல்’ரால் எறியப்படும் பந்தை மிக இலாவகமாகத் தன் ‘பேட்’டினால் தடுத்து அடித்துவிட்டு ‘ரன்’களைக் கணக்கெடுத்துக்கொண்டிருந்தான். அரைமணி நேரத்துக்குள் 5 விக்கெட்களுக்கு 350 ரன்கள் எடுத்தா னென்றால், அவனது ஆட்டத் திறமையை என்னென்று புகழ்வது! அவன் பந்தை வெகு தூரத்துக்கு அடித்து எதிரிகளை ஏமாற்றி

விட்டு ஓடும்போது, "Well done Sivasailam!—Hurry up!" என்று ஜனங்கள் கூவினர். இவ்வித சமயங்களிலெல்லாம் கார்த்தியாயினி தன் பக்கத்தில் கணவன் அமர்ந்திருப்பதையும் மறந்து அளவு கடந்த ஆனந்தத்தோடு கரகோஷஞ் செய்வதும், எழுந்து எழுந்து கூத்தாடுவதுமாக இருந்தாள். கார்த்தியாயினியின் இவ்வார்ப்பாட்டம் திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையின் முழுக் கவனத்தையும் ஒருங்கே ஈர்த்து விட்டது. அதற்கப்புறமே அவர் சிவசைலத்தின ஆட்டத்தையும் கார்த்தியாயினியின் மெய்ப்பாட்டையும் மாறி மாறிக் கவனிக்கலானார். இச்சமயம் அவருக்குத் தேவகியின் விவாக தினத்தன்று இந்திராணி கூறிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. இப்போதும், இந்திராணி கார்த்தியாயினியைப்பற்றி பிடித்துக் கூறுவதாக அவர் மனக்கண் முன் நாடக மாடியது. இவ்விஷயம் இப்போதே அவர் மனதில் சுருக்கென்று தைத்தது. இந்திராணி கூறியது போல் தன் மனைவிக்கும் சிவசைலத்துக்கும் தொடர்பிருக்கலாமோ என்றும் சந்தேகிக்கலானார்.

சிவசைலம் வெகுதூரம் ஓடாடி ஆடிக்கொண்டிருந்தான். ஆஸ்திரேலிய கோஷ்டியார் இன்றைய ஆட்டத்தில் தாங்கள் தோல்வி புறுவோமோ எனவுந் திகில் கொள்ளலாயினர். எனினும், கடைசி முறையாக ஒருக்கை பார்த்து விடுவதென்று தீர்மானித்து அவர்கள் மிக மும்மரமாக ஆடலாயினர். 'இத்தடவை 'போலர்' 'கோலை' (Goal) நோக்கிப் பந்தை வீசினான். சிவசைலமும் வெகு வேகமாகச் சுழன்றுவரும் பந்தைத் தடுத்து அடிக்க ஆயத்தமாகக் குனிந்து 'பேட்'டைத் தரையில் தட்டிக் கொண்டிருந்தான். கடைசியாக, மிகவும் நெருங்கி

விட்ட அப்பந்தை இலாவகமாகத் தட்டிவிட எண்ணிப் பதுங்கிய சிவசைலம் 'பேட்'டை மேலே ஓங்குகையில் துரதிர்ஷ்டவசமாக அப்பந்து மேலே வந்து அவனது தலையில் மோதி விட்டது. அப்பந்து வந்த வேகத்தில் அவன் தலையில் எவ்வாறு தாக்கி யிருக்கு மென்பதை விவரித்துக் கூற வேண்டியதில்லை. சிவசைலம் எதிர் பாராது பட்ட கல்போன்று உறுதியாகவுடைய அம்மரப் பந்தின் அடியைத் தாங்கமாட்டாது உடனே தலை கிறு கிறுத்து மயங்கித் தரையில் விழுந்தான். அவன் நெற்றி மீதிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. இதே சமயத்தில், பிரமுகர்கள் வரிசையி லமர்ந்திருந்த சீமாட்டி யொருத்தி 'ஆ'வென் றலறி மூர்ச்சையாகி விழுந்தாள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், செல்வச் சீமாட்டிகளும் அம்மங்கையைச் சூழ்ந்து கொண்டனர். மூர்ச்சையாகி விழுந்த அப்பெண்மணி யார்? வேறு யாராக இருக்க முடியும்? நமது கதாநாயகி சீமாட்டி கார்த்தியாயினிதான். சிவசைலம் பந்தடிபட்டு விழுந்ததைக் கண்டதும் இவளும் மனம் பதறி மூர்ச்சித்து விழுந்தாள். இதைக் கண்டு திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை திடுக்கிட்டு விட் டார். அவருக்கு ஒரு விநாடி ஒன்றுமே தோன்றவில்லை. மற்றவர்கள் வந்து கார்த்தியாயினியைத் தூக்கி ஆஸ்வாசப் படுத்த முயன்ற பிறகே, இவரும் அவளை மூர்ச்சை தெளி விக்கும் முயற்சியில் ஈடுபடலானார். முகத்தில் தண்ணீர் தெளித்து சைத்தியோபசாரஞ் செய்த பிறகு, சில விநாடி களுக்கெல்லாம் கார்த்தியாயினி மூர்ச்சை தெளிந்தெழுந் தாள். தன்னைப் பெண்மணிகளும், ஆடவர்களும் சூழ்ந்து கொண்டு ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண் டதும், கார்த்தியாயினி வெட்கத்தால் தலை குனிந்தாள். தான் உணர்ச்சி வசப்பட்டு தன் மனநிலையை வெளிப்

படுத்தி விட்டதற்காக அவள் தன்னையே நொந்து கொண்டாள். சில நிமிடங்களில் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "எனக்கு ஏற்கனவே மயக்கமா யிருந்தது. திடீரென இச்சம்பவம் ஏற்படவே, மன அதிர்ச்சியுற்று தலை சுற்றி விழுந்தேன். அவ்வளவுதான் வேறொன்றுமில்லை" என்று மற்றவர்களுக்குச் சமாதானங் கூறினாள். அங்கிருந்தவர்கள் அதனால் திருப்தி யடைந்தார்களாயினும், பிள்ளையவர்களுக்கு மட்டும் அது சரியான காரணமாகத் தோன்றவில்லை.

இச்சமயத்தில் ஒருவர் அங்கு தோன்றி, "சிவசைலம் மயக்கந் தெளிந்து எழுந்து விட்டார், சார்! பந்து நெற்றியில் தாக்கிய அதிர்ச்சியில் விழுந்தாரே யொழிய, காயம் பலமாக ஒன்றும் படவில்லை. நெற்றி முனையில் தான் சிறிது இரத்தம் கசிகிறது! அதற்கு மருந்து வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. அவர் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் மீண்டும் ஆட்டம் ஆடத் தொடங்கிவிட்டார், சார்! இந்த வாலிபரது துணிச்சலை என்னென்று கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை, சார்" என்று சிவசைலத்தைப் பாராட்டிப் பேசினார். இத் தகவலைக் கேட்டதும் கார்த்தியாயினியின் முகம் மலர்ந்தது.

சிவசைலம் அடிபட்ட பிறகும் நன்றாகவே ஆடினான். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் 'அவுட்' டாகி விட்டான். அதற்குப் பிறகு ஆஸ்திரேலியர் ஆட்டமுறை வந்தது. இராமசாமி 'போல'ராக வந்து இவர்களை அழ வைத்தான். அதனால் அவர்கள் சில 'ரன்'களே எடுத்தனர். முடிவில் அன்றைய ஆட்டத்தில் 'சென்னை கிரிக்கெட் கிளப்' கோஷ்டிக்கே வெற்றி யேற்பட்டது. அவ் வெற்றிக்கு மூல காரணமா யிருந்த சிவசைலம் யாவரா

னும் பாராட்டப்பட்டான். பெருந்தன்மையும், நற்குண மும் வாய்ந்த காந்திமதிநாதம் பிள்ளையும், அவனைப் பாராட்டினார். எனவே, கார்த்தியாயினியும் அவனைப் பாராட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள் எனத் தனியாகக் கூற வேண்டியதில்லை. கடைசியாக, சிவசைலம், காந்திமதிநாதம் பிள்ளை தம்பதிகளோடு காரில் சென்றான். பிள்ளையவர்கள் மனதில் ஆட்ட மைதானத்தில் நடந்த சம்பவம் வேரூன்றிப் பதிந்துவிட்டது. 'சிவசைலத்தி னிடம் கார்த்தியாயினிக்குக் காதலில்லாமலா, அவள் அவன் அடிபட்டு விழுந்ததைக் கண்டதும் மூர்ச்சித்து விழுந்திருப்பாள்? ஆகவே, இவ்விருவரிடையேயும் கள் ளக் காதல் ஏற்பட்டிருக்கிற தென்பது' அவர் சிந்தனை செய்த வண்ணஞ் சென்றார்.

* * *

அன்று இரவு எட்டு மணி இருக்கும். திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை எங்கேயோ வெளியே போய்விட்டு வந்தவர், நேராக கார்த்தியாயினி இருக்கும் அறையை நோக்கி நடந்தார். இவர் வரவை வேலைக்காரன் மூலமாக அறிந்த கார்த்தியாயினி, தன் கணவரை எதிர்கொண் டழைக்க விரைந்து வந்தாள்.

அறையில் நுழைந்த பிள்ளையவர்கள் அங்கிருந்த சோபாவிலோ நாற்காலியிலோ எதிலும் உட்காராமல் நின்ற வண்ணமே கார்த்தியாயினியை நோக்கினார். அவர் நோக்கத்தை அறியாது அவள் அவர் முகத்தைப் பார்த்து நின்றாள்.

பிள்ளையவர்களே முதலில் பேசலானார்:—"கார்த்திகா! நான் இப்போது எதற்காக உன்னிடம் வந்திருக்கிறே னென்பது உனக்குத் தெரியுமா?"

"தாங்கள் கூறினால்தானே தெரியும்," எனக் கார்த்தியாயினி தனது இயற்கையான உற்சாகத்தோடேயே பேசினாள்.

"கார்த்திகா! இப்போது உன்னை எச்சரிக்கை வேண்டியது அவசியமென்று உணர்கிறேன்."

"என்னை எச்சரிப்பதா! எதற்காக?"

"நீ தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறாய். சிவசைலத்தினிடம் நீ காட்டி வரும் மனோபாவம் மற்றவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது."

"தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை" யெனச் சிறிது திகைப்புடனேயே கார்த்தியாயினி கூறினாள்.

காந்திமதிநாதம் பிள்ளை துயரங்கலந்த குரலில், "கார்த்திகா! உனது ஆத்ம சாந்திக்கான காரியங்களைக் கெடுக்க விரும்பவில்லை; அதில் தலையிடவும் எனக்கு உரிமை கிடையாது ஆயினும், நான் வெளித் தோற்றங்களைப்பற்றியே சிந்திக்கிறேன். ஏனென்றால் ஜனங்கள்..............." என்று கூறிக்கொண்டே வந்தார்.

இதற்குள் கார்த்தியாயினி பொறுமை யிழந்தவளாய் இடையே குறுக்கிட்டு, "தாங்கள் எப்போதும் வெளித் தோற்றங்களைத் தான் கவனிக்கிறீர்கள்" எனக் குத்தலாக மொழிந்தாள்.

"ஏனென்றால், ஜனங்கள் வெளித் தோற்றங்களைக் கண்டே வம்பளக்கிறார்கள்...." எனத் திவான் பகதூர் பிள்ளையவர்கள் தாம் முன் கூறியதையே அநுவதித்து மேலும் பேசத் தொடங்கி, "அதிருக்கட்டும்; நான் இப்போது சர்க்கார் மசோதா ஒன்றின் மீது வேலை செய்து

வருகிறேன். அதற்காக, என் முழுக் கவனத்தையும், ஆற்றலையுஞ் செலுத்தவேண்டி யிருக்கிறது. இவ்வித நெருக்கடியான சமயத்தில் உன் விஷயம் எனக்கு மிகுந்த ஆயாசத்தைத் தருகிறது" என்று கூறி முடித்தார்.

கார்த்தியாயினி ஆத்திரம் பொங்க, "அப்படியானால் நான் என்ன செய்யவேண்டும்!" எனக் கேட்டாள்.

கார்த்திமதி நாதம் பின்னை நிதானமாக, "ஆம். விஷயத்தை உனக்குத் தெளிவாக விளக்கிக் கூற வேண்டியது அவசியம். முதலாவது நீ உன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்; இரண்டாவது உன் நடத்தையைப்பற்றிப் பொது ஜனங்கள் அவதூறு கூறுவதன் பயனாக உன் குமாரனது எதிர்கால நிலை என்னாகும்? என்பதையுஞ் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மூன்றாவது, உன் குடும்ப கௌரவத்துக்கும் என் குடும்ப கௌரவத்துக்கும் என்றும் மாறாக் களங்கம் ஏற்படுவதோடு, எனக்கும், உன் சகோதரருக்கும் தலை குனிவும் பழியுமே ஏற்படும். இந்நிலைமை இன்னும் விபரீதமாகப் போனால், நாங்கள் இருவரும் எங்களது பெரும் பதவிகளைச் சந்தடியின்றி ராஜிநாமா செய்து விட்டு வந்து மூலையில் உட்காரத்தான் நேரும், அப்புறம் நாங்கள் வெளியில் தலை காட்டவே முடியாது. எங்கள் பொது வாழ்வு அஸ்தமித்தாற் போலத்தான். இவைகளை யெல்லாம், கார்த்திகா! நீ யோசித்துப் பார்:—ஆகவே, நீ இனி சிவசைலம் இங்கிருந்து போகும் வரை அவனிடம் பேசலாகாது. பார்க்கவுங் கூடாது. தெரிகிறதா?—மற்றப்படி நான் அவன் ஊருக்கு எவ்வளவு சீக்கிரந் திரும்ப வேண்டுமோ அதற்கு வேண்டிய வழியைத் தேடுகிறேன்" என்று கூறினார்.

கார்த்தியாயினிக்கு பிள்ளையவர்கள் மொழிந்த ஒவ்வொரு வார்த்தையும் புண்ணில் வேல் நுழைவது போலிருந்தது. கோபத்தால், அவள் முகஞ் சிவந்தது. இதழ் துடிதுடித்தது. ஏதோ பதில் கூற முயன்றாள். ஆனால் அவளால் முடியவில்லை. கடைசியாக அவள் தலை குனிந்து நின்றாள்.

காந்திமதி நாதம் பிள்ளை அவளது நிலைமையை ஒருவாறு உணர்ந்தார். மேலும், அவளைச் சங்கடத்திற்குள்ளாக்க அவரது ஈர நெஞ்சம் விரும்பவில்லை. எனவே, அவர் அதற்குமேல் ஒன்றும் பேசாது அவளது அறையை விட்டு வெளியே சென்றார்.

* * *

மறுநாள் இரவு பத்து மணி யிருக்கும். பங்களாவில் அமைதி குடிகொண் டிருந்தது. வேலையாட்களில் தங்கள் வீடுகளுக்குச் சென்றவர்கள் போக, பங்களாவிலேயே இருப்பவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் உறங்கிக் கொண்டிருந்தனர். திவான் பகதூர் காந்திமதி நாதம் பிள்ளை இன்னும் பங்களாவுக்குத் திரும்பி வரவில்லை யாதலால், வாயில் காவலாளன் மட்டும், வெளி வாயிற் கதவை உள் தாளிடாமல் வெறுமனே சாத்திவிட்டு, அதன் பக்கத்திலேயே உட்கார்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்தான்.

மேன் மாடியில் கார்த்தியாயினியின் படுக்கை யறையில் மட்டும் மின்சார விளக்கு மிகப் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. கார்த்தியாயினி பரபரப்பாக அவ்வறையில் உலாவிக் கொண்டிருந்தாள். அவளது மனம் நிம்மதியில்லா திருப்பதை முகம் பளிங்கு போல் எடுத்

னுக் காட்டியது. அறையின் வலது பக்கத்து ஓரமாக ஜன்னலை யடுத்தாற்போல் போடப்பட்டிருந்த பஞ்சணை மீது கார்த்தியாயினியின் அருமைக் குமரன் அம்பிகாபதி படுத்திருந்தான். அவன் சிறிது கண் மூடுவதும், பிறகு விழித்துக்கொண்டு "அம்மா! அம்மா!!" என்று கூப்பிடு வதுமாக இருந்தான்.

அம்பிகாபதி கார்த்தியாயினியை அழைக்கும்போ தெல்லாம் அவள் தன் சிந்தனையைவிட்டுப் பரிந்தோடி வருவாள். பஞ்சணைமீது அமர்வாள். தன் அருமருந் தன்ன மகனை யணைத்துக்கொள்வாள். தலைக்கும் காலுக் கும் மட்டுமன்றி இருபக்கங்களிலுங்கூட தலை யணைகளைச் சேரப்போட்டு முதுகில் மெதுவாகத் தட்டி அவனைத் தூங்க வைக்க முயன்று கொண்டிருந்தாள்.

ஆனல் சிறுவனோ உறங்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். அத்துடனின்றி, அவன் தன் தாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "அம்மா! என்னோடே படுத் துக்கொயேன், அம்மா!" எனக் குதலை மொழியால் கொஞ்சலோடு கூறினன்.

"கண்ணு! நீ தூங்கம்மா!—அப்பா வரவில்லையோ இல்லேபோ; அவர் வந்துட்டா உன்னோடே வந்து படுத் துக் கொள்கிறேன். நீ தூங்கு" எனக் கார்த்தியாயினி சிறுவனுக்குச் சமாதானங்கூறித் தூங்க வைக்க முயன் ருள்.

"அப்பா, எம்மா! இன்னம் வரவில்லை."

"கவர்னர் வீட்டிலே ஏதாச்சும் ஜோலி யிருக்கும்."

"ஊம்..................".

"ஊம்; அதான்.—நீ தூங்கு அம்பி; சீக்கிரம் தூங்கினாத்தான் காலையிலே உனக்குப் பட்சணம் கொடுப்பேன்."

"இல்லாட்டா நேக்கு பட்சணம் கொடுக்க மாட்டாயம்மா!"

"ஊஉம், மாட்டவே மாட்டேன். ஏதோ, கண்ணை மூடிக்கோ; தூங்கு" எனக் கார்த்தியாயினி அன்பாக வற்புறுத்தினாள்.

தாய் கூறிய வண்ணமே கண்ணை மூடிக்கொண்டு உறங்க முயன்ற அம்பிகாபதி, திடீரென விழித்துக் கொண்டு துள்ளி யெழுந்து பக்கத்திலிருந்து நகர்ந்து



எழவிருந்த கார்த்தியாயினியின் கையைக் கெட்டியாகப் பற்றி யிழுத்து, "எம்மா! என்னை ஏமாத்திவிட்டுப் போவல்

லவோ பார்க்கிறே!—எனக்கு முத்தி கொடுத்தியோ! நான் தூங்கறத்துக்கு முன்னே நீ முத்தி கொடுக்கிறது வழக்க மில்லையா! நீ கொடுக்காட்டி நான் எப்படித் தூங்குவேன்!" என்று தான் ஏதோ ஒரு பெரிய அதிசயத்தைக் கண்டு பிடித்ததுபோல் சந்தோஷித்துக் கேட்டான்.

கார்த்தியாயினியின் அப்போதைய மனநிலை சரியா யில்லா திருந்தும் அம்பிகாபதியின் களங்கமில்லா மழலைப் பேச்சு அவளை வாய் விட்டுச் சிரிக்க வைத்துவிட்டது. "என் ராஜா? உன்னையா நான் ஏமாத்துகிறேன்? நீ தானே மறந்துட்டே!—இதோ! இந்தா முத்தம்!" எனக் கூறிய வண்ணம் தனயனை வாரியெடுத்து முகத்திலும் கன்னத்தி லும் நெற்றியிலுமாக மாறி மாறி முத்தமிட்டு முத்தமழை பொழிந்தாள்.

அம்பிகாபதி தன் தாயின் அன்பான முத்தங்களால் குதூகல மடைந்தான். அவள் கூறியபடி அவன் படுக்கை யில் சாய்ந்து கண்ணை மூடினான். உடனே ஏதோ நினைத் துக்கொண்டு எழுந்துட்கார்ந்து, "அம்மா! கடவுளைப் பிரார்த்திக்க மறந்தே போயிட்டேன். பார்த்தியா அம்மா!—ஏம்மா! சுவாமியை நினைச்சுக் கும்பிடா புட்டா, அவர் நம்ம மேலே கோவிச்சுக்குவார் இல் லையாம்மா..................." என்று கேட்டான்.

கார்த்தியாயினி புன்சிரிப்போடு தலையை யசைத்து, "ஆமாம்" என்றாள்.

அம்பிகாபதி, "அப்படியானால் இதோ கும்பிட றேம்மா!..................." எனக் கூறி நிமிர்ந்துட்கார்ந்து கைகளைக் கூப்பிக்கொண்டு, கண்களை மூடிய வண்ணம்,

"அரும்போனே! மணியே! என் அன்பே!"

என்ற பாடலைத் தத்தித் தடுமாறிப் பாடி முடித்து

"சுவாமி! என்னையும் எங்க அம்மாவையும் அப்பாவையும் காப்பாத்தனும்" என்று பிரார்த்தித்து விட்டு, அப்படியே படுத்தான். தன் மகனது நுண்ணறிவையுஞ் செயலையுங் கண்டு கார்த்தியாயினி ஆனந்தக் கண்ணீர்விட்டுத் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள்.

அம்பிகாபதி கண்களை இறுக மூடிக் கொண்டான். சிறிது நேரத்திற் கெல்லாம் அவனுக்கு உண்மையாகவே உறக்கம் வந்துவிட்டது. ஆனால் அவன் வாய் மாத்திரம் ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தது.

உலாவுவதுபோல் சில விநாடிகள் பாவனை செய்து கொண்டிருந்த கார்த்தியாயினி குழந்தை உறங்கி விட்டா னென்றறிந்ததும் மங்கலாகப் பிரகாசிக்கும் ஒரு நீல நிற மின்சார விளக்கை மட்டும் விட்டு, மற்ற மின்சார விளக்கு களை யெல்லாம் அணைத்து விட்டாள். அப்புறம் அவள் மெள்ள அறையை விட்டு நடந்து கதவண்டை போனாள்.

"அம்மா! அம்மா!" என அம்பிகாபதி மெதுவாகக் கூப்பிடுங் குரல் கேட்டு கார்த்தியாயினி திடுக்கிட்டுத் திரும்பினாள். மீண்டும் மெள்ள நடந்து பஞ்சணையருகு வந்து தன் குமாரனது முகத்தை உற்று நோக்கினாள். அவன் நல்ல அக்கத்தி லாழ்ந்திருந்தான். எனினும், அவ னது வாய் அப்போதும் 'அம்மா!' எனக் கூறிக்கொண் டிருந்தது. ஆனால் அது கிணற்றி னுள்ளிருந்து கூப்பிடு வதுபோல் அவ்வளவு மெதுவாகக் கேட்டது. எனவே, கார்த்தியாயினி மீண்டும் சந்தடியின்றி நடந்து அறையைக் கடந்து அறைக் கதவை ஓசைப்படாது மூடினாள். பிறகு அவள் அப்படியே நடந்து சென்று தன் கணவன் படுக்கை யறையைப் பார்த்தாள். அது வெளியே தாளி டப்பட் டிருந்தது. அதன் பின்னர் அவள் ஜன்னல் வழி

யாக பங்களாவின் முன் பக்கத்தைக் கூர்ந்து பார்த்தாள். வாயிற் காவலாளன் அப்போதும் வெளிவாயிற் கதவருகே அமர்ந்து, மூதேவியோடு உறவு கொண்டாடிக் கொண் டிருந்தான்.

பிறகு, கார்த்தியாயினி மெத்தைப்படி வழியாகக் கீழிறங்கினுள். அங்கும் அமைதி குடிகொண் டிருந்தது. 'டிக் டிக்' என்ற கடியாரத்தின் சப்தமும் இரண்டொரு விநாடிக் கொருதரம் வேலைக்காரர்கள் குறட்டை விடும் சப்தமுமே கேட்டுக்கொண் டிருந்தது. எனவே, இன்னும் தன் கணவன் வரவில்லை என்பதை யறிந்தாள். கூடத்தில் மாட்டப்பட் டிருந்த கடியாரத்தைப் பார்த்தாள். பதினென் றடிக்க இருபது நிமிஷம் இருந்தது. 'கவர்னர் மாளிகையில் இன்று விருந்தும் நடனமும் அல்லவா! அவை முடிய பன்னிரண்டு அல்லது ஒரு மணிகூட ஆய்விடும். எனவே, அவர் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரத்துக்கு மேலிருக்கிறது' என அவள் தானுகவே கூறிக் கொண்டாள். அப்புறம் அவள் ஏதோ திருப்தி யடைந்தவள் போல தலையை யசைத்து விட்டு மாளிகையின் பின் புற மாக நடந்து புறக்கடை கதவைத் திறந்துகொண்டு அதைப் பழையபடி மெதுவாக மூடிவிட்டுக் கீழிறங்கித் தோட் டத்தை யடைந்தாள்.

உடனே சிறிது தூரத்தில் பளிங்கு மேடையில் உட் கார்ந்திருந்த ஒரு உருவம், "கார்த்திகா! நீயா! ஏன் இவ்வ ளவு நேரம்!" என்று கேட்டுக்கொண்டே தாவி யோடி வந்து அவளை ஆர்வத்தோடு தழுவிக்கொண்டு முத்த மழை பொழிந்தது.

கார்த்தியாயினி அவ்வுருவத்தின் அன்புப் பிணைப்பில் கட்டுண்டு தன்னை மறந்து நின்ருள். எனினும், அவ்வுருவம்

இவ்விதம் ஆலிங்கனஞ் செய்யும் என்பதைச் சிறிதும் எதிர்பாராதவன் போலவும் பாவனை செய்து, தன் ஆர்வத்தோடு தழுவி நிற்கும் அவ்வுருவத்தின் கைகளை விலக்க முயன்று கொண்டே, "சிவா! இது என்ன? நான் பிறனொருவனுக்குச் சொந்தமான பொருள் என்பதையும் மறந்து, என்னைச் சூறையாட ஆரம்பித்து விட்டாயே! இது நியாயமா?" எனச் சிரித்துக்கொண்டே கார்த்தியாயினி கேட்டாள்.

அவ்வுருவம் நமது கதாநாயகன் சிவசைலம் தான். 'கிரிக்கெட் டோர்னமெண்டு'க்காக வந்தவன் இன்னும் ஊர் திரும்ப வில்லையென்பதுதான் வாசகர்களுக்குத் தெரியுமே! இப்பங்களாவின் முன் பக்கத்தில் கீழே உள்ள அறைகளில் ஒன்று அவன் தங்கி யிருப்பதற்காக ஒதுக்கி விடப் பட்டிருந்தது. வேலைக்காரர்க ளெல்லாம் தூங்கப் போய்விட்ட பின்னர், இவன் அறையை விட்டு மெள்ள வெளிப்பட்டுப் பங்களாவுக்குப் பின் பக்கம் போய் கார்த்தியாயினிக்காகக் காத்திருந்தான்.

எனவே, சிவசைலம் கார்த்தியாயினிக்குப் பதிலாக, "திருடனுக்குத் தன் சொத்து, பிறர் சொத்து என்று கூட உண்டா? அவனுக்கு நியாய அநியாய மேது?" என்று கூறினான்.

"ஆம். நீ திருடன் தான்; காதற் கள்வன்; அதில் சந்தேகமே யில்லை.—இல்லாவிட்டால நீ என்னை இவ்வளவுதூரம் பிச்சியாக்கி யாட்டி வைப்பாயா? முதலில், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாய். கடைசியாக இப்போது இவ்வுடலையும் உன் வசப்படுத்தி விட்டாய். இனி, எனக்கென்று என்ன மீதி வைத்திருக்கிறாய்?"

எனக் கார்த்தியாயினி கூறிய வண்ணம் அவன் மார்பின் மீது சாய்ந்தாள்.

சிவசைலம், அவளை மேலும் இறுகக் கட்டி யணைத்துக்கொண்டு "கண்ணே! எனக்குச் சரியான பட்டப் பெயர் கொடுத்தாய். காதற் கள்வன் என்பது முற்றுந் தகும்; தகும்" என்று மொழிந்து அவளது செவ்வித ழ்தரங்களில் அழுந்த முத்தமிட்டான். கார்த்தியாயினி உடல் பூரித்தாள். அவளது மார்பு விம்மி விம்மி யடங்கியது. அவள் தனது கையால் அவனது கபோலத்தைத் தடவிக் கொடுத்த வண்ணம் அவனோடு மெள்ள நடந்து அருகிலிருந்த ஒரு பளிங்குக் கல்லின்மீது அமர்ந்தாள்.

"அதிருக்கட்டும் சிவா! இந்நேரத்தில் என்னை இங்கு சந்திக்கும்படி கூறி யழைத்ததுளதற்காக? என்னை முற்றும் மயக்கி காதற் கடலில் தள்ளுவதற்காகவா? என்னோடு சரசமாடுவதற்கு இதுதானா சமயம்?" என்று கொஞ்சுதலாகக் கேட்டாள்.

சிவசைலம் அவள் பக்கத்தமர்ந்து தோளின்மீது கைபோட்ட வண்ணம், "நான் நாளைக்கு ஊருக்குப் போகலாமென் றிருக்கிறேன். இதற்குள் உன்னிடம் நமது காதல் சம்பந்தமாக, ஒரு முடிவுக்கு வருவதற்காகவே உன்னைக் கூப்பிட்டேன்—கார்த்திகா! கண்ணே! உன்னிடம் என் மனதைத் திறந்து பேசுகிறேன்.—நீ இல்லாது நான் இனி உயிர்வாழ முடியாது என முன்னமேயே கூறி யிருக்கிறேன். நீ உன் கணவனை விட்டு என்னோடு வந்து விடுவதா யிருந்தால், உனக்காக என் வாழ்க்கையையே அர்ப்பணஞ் செய்யத் தயாரா யிருக்கிறேன். மற்ற உண்மைக் காதலர்கள்போல் நாமும் யாதொரு தடையுமின்றி இன்ப வாழ்க்கையை இனிது நடத்துவோம்

இதில் ஏமாற்று ஒன்றுமில்லை; நம்பிக்கைத் துரோகமா, தப்பியோடிப் போதலோ கிடையாது. என்ன சொல்லு கிருய் கண்ணே!" என இரக்கமாகக் கேட்டான்.

கார்த்தியாயினி ஆழ்ந்த யோசனையோடு, "சிவா! என் கணவரோடு கூடி வாழ்வதில் எவ்வளவு அரம்பற்றுக் கொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? நான் என் கணவரை உள்ளூர வெறுத்து வருகிறேன். அவரது ஒழுக்க சீலத்தை வெறுக்கிறேன்; அவரது கௌரவத் தன்மையை வெறுக்கிறேன். அவரது ஒவ்வொரு நடத்தையையும் வெறுக்கிறேன். ஆனால் எனது அருமைப் புதல்வன் அம்பிகாபதியை மட்டும் என்னால் விட்டுப் பிரிய முடியாது" என்று உருக்கமாகக் கூறினாள்.

* * *

இக்காதலர்களை இந்நிலையிலேயே விட்டுவிட்டு பங்களாவின் முன் பக்கத்துக்குப் போவோம். பதினொன்றரை மணியிருக்கும். ஒரு மோட்டார் விரைவாக இப்பங்களாவுக்கு எதிரே வந்து நின்றது. டிரைவர் ஹார்ன் அடித்தான். இச்சப்தத்தைக் கேட்டுத் தூங்கி யாடிக் கொண்டிருந்த காவலாளி திடுக்கிட்டு விழித்து எழுந்து வாயிற்கதவைத் திறந்தான். உடனே மோட்டார் உள்ளே நுழைந்து மாளிகையின் முன் நின்றது. அடுத்து மோட்டார் கதவு திறக்கப்பட்டு, காந்திமதிநாதம் பிள்ளை கீழே இறங்கி மாளிகையினுள் புகுந்தார். இதற்குள் வேலையாட்களெல்லாம் அடிதுடித்து எழுந்து பயபக்தியுடன் நின்றனர்.

காந்திமதிநாதம் பிள்ளை மாளிகையினுள் நுழையும் போதே, சிவசைலம் தங்கியிருந்த அறையைச் சந்தேகப்

பார்வையோடு பார்த்துக்கொண்டே நேராக மேன்மாடிக்குச் சென்றார். தலைப்பாகையையும், கோட்டையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கழற்றிக்கொண்டே, கார்த்தியாயினியின் படுக்கை யறைக்கு அடிமேலடி வைத்துச் சென்றார். கதவின்மீது கையை வைத் தழுத்தினார். அது உடனே திறந்து கொண்டது. ஆச்சரியமும் துடிதுடிப்பும் அவர் தேகத்தை அசைந்தாடச் செய்தது. கோட்டை ஒரு பக்கம் விசி யெறிந்துவிட்டு, அவ்வறையினுள் நுழைந்தார். நீலநிற மின்சார விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. பஞ்சணையருகு சென்று பார்த்தார். அம்பிகாபதி மட்டும் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். அவனது வாய் அப்போதும், "அம்மா! அம்மா!!" என்று மனனஞ் செய்துகொண்டிருந்தது. கார்த்தியாயினியைக் காணாது போகவே, அவருக்குச் சந்தேகம் அதிகமாய் விட்டது. உடனே பரபரப்பாக வெளியே வந்து கிழக்குப் பக்கமாகக் கடைசியிலிருந்த தாழ்வாரத்தில் உள்ள ஜன்னலண்டை சென்றார். திரையை ஒரு பக்கமாகத் தள்ளினார். அந்த ஜன்னல் வழியாகத் தோட்டத்தைக் கீழே நோக்கினார். அவர் கண்கள், சிவசைலமும், கார்த்தியாயினியும் ஒரு பளிங்குக் கல்லின்மீது அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டுவிட்டன. உடனே அவரது தேகம் படபடத்தது. ஆத்திரம் பொங்கி யெழுந்தது.

காந்திமதி நாதம் பிள்ளை கைகளை முஷ்டி செய்துகொண்டு உறுமினார். இரும்புக் கூண்டி லடைக்கப்பட்ட ஆண் சிங்கத்தைப்போலத் தாழ்வாரத்தின் நாலா பக்கமும் உலாவினார்; தாமாகவே ஏதேதோ உக்கிரமாகப் பேசிக்கொண்டார். திடீரென நின்றார். ஏதோ சிந்தனையி லிருப்பதைப்போல் முகவாய்க் கட்டையின் மீது வலது கையை

வைத்துக்கொண்டு சிறிது நேரமிருந்தார். இருந்தாற்போ லிருந்து பற்களை நறநறவெனக் கடித்தார். உதட்டைப் பிதுக்கினர். வாயில் விரலை வைத்துக் கடித்து விட்டுப் பிறகு கையை உதறினர். உடனே, தாம் நின்றிருந்த இடத்தை விட்டுத் துடிதுடிப்பாக நடந்து அவரது படுக்கை யறைக்குள் சென்று, ஒரு மூலையில் கிடந்த மேஜை யறையைச் சாவியால் திறந்து அதனுள்ளிருந்த கைத் துப்பாக்கியை ஆத்திரமாக எடுத்தார். அடுத்த கணம் அவர் அறையை விட்டு வெளிவந்து கையில் துப் பாக்கியைப் பிடித்த வண்ணம் திடுதிடுவென மெத்தைப் படிக்கட்டு வழியாகக் கீழிறங்கலானர். பாதி படிக்கட்டு களே அவர் இறங்கி யிருப்பார். இதற்குள் அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ! சிறிது நேரம் படிக்கட்டின் மீதே தயங்கி நின்று இருந்து பிறகு மேன்மாடிக்கே திரும்பினர். இவ்வாறு இரண்டு மூன்று முறை துப்பாக்கி யோடு கீழிறங்குவதும், மேலே போவதுமா யிருந்தார். கடைசியாக என்ன முடிவுக்கு வந்தாரோ தெரியாது. வெறுப்போடு துப்பாக்கியை ஒரு மூலையில் வீசியெறிந் தார். நின்றபடியே வேரற்ற மரம்போல் அங்கிருந்த சோபா வொன்றன்மீது விழுந்தார். சிறிது நேரம் அதே நிலையில் கிடந்தவர் மீண்டும் எழுந்து அச்சோபாவி லேயே அமர்ந்து முழந்தாள்களின் மீது கைகளை ஊன் றிக்கொண்டு அவற்றின்மேல் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ் கினர். இந்த நிலைமையில் அவரைக் காண்பவர்கள் யாவ ரேனும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. 'சாந்த சொரூபியான காந்திமதிநாதம் பிள்ளையா பிரளயகால ருத் திரர்போல் விளங்குகிருர்? இரத்தங் குடித்த புலிபோ லல்லவா இவர் விழிகள் சிவக்க, பயங்கர கோர ரூபத்

தோடு காணப்படுகிருர்? இவர் உடம்பெல்லாம் துடிதுடிப் பானேன்? இப் பெரு மாறுதலுக்குக் காரணமென்ன?— ஒரு வேளை இவருக்கு இருந்தாற்போ லிருந்து பைத்தியம் பிடித்து விட்டதா?' என்று அவர்கள் பலவாறு கருதி அங்கலாய்த்துக் கொள்ளுவார்கள் என்பது நிச்சயம். அச்சமயம் காந்திமதிநாதம் பிள்ளை அவ்வளவு பயங்கரத் தோற்றத்தோடு காட்சி யளித்தார். தன் மனைவி வேற் ருடவனேடு தனித்துரையாடிக் கொண்டிருப்பதைக் கண் டால் எவனுக்குத்தான் ஆத்திரம் பொங்கி யெழாது? அதிலும் நடுநிசியில் பூந்தோட்டத்தில் பளிங்கு மேடை யொன்றின் மீது அழகும் இளமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஆண் பெண்ணிருவர் ஒருவர் பக்கத் தொருவர் நெருக்கமாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிருர்க ளென் ருல், அவர்களிடையே எந்தவிதமான தொடர்பும், அந்நி யோந்நிய பாவமும் இருக்க வேண்டும்? அவர்கள் வேறெவ் விதமான சரஸலீலைகளிலும் ஈடுபடாமல் இருந்தால்தா னென்ன? இக்காட்சியைப் பார்த்தும் ஆண்மகனென்று கூறிக் கொள்ளும் எவன் உள்ளத்தில்தான் இரத்தங் கொதித்தெழாதிருக்கும்? தன் மனைவியின் கள்ளக்காதல னெனக் கருதிய அப்பாதகனது இருதயத்தைப் பிளந்து உயிரைக் கொள்ளை கொண்டு பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்ற எண்ணம் பேடிக்கும் (நினைத்தபடி செய்ய முடியாவிடினும்) உண்டாகவே செய்யும்? தனக் குத் துரோகஞ் செய்து பிற புருஷனேடு களவாகச் சேர்ந்து அவளது கற்பையும், தனது கௌரவத்தையும் ஒருங்கே தொலைக்க முற்பட்ட காதக மனைவியைக் கட்டா யம் இவ்வுலகை விட்டே தொலைத்துவிட வேண்டுமென்ற வஞ்சினம் உண்டாகப் பெருத ஆடவனிடமும், ஆண்மை யிருக்கிறதென்று கூற முடியுமோ!

ஆகவே, அதேவிதமான மூர்க்க நிலைமையைத்தான், காந்திமதி நாதம் பிள்ளை, ஜன்னலின் வழியாகக் கீழே கார்த்தியாயினியையும், சிவசைலத்தையும் ஒன்ருகக் கண்டதும் அடைந்தார். அதே ஆத்திரத்தோடு கைத் துப்பாக்கியுடன் அவர் கீழே சென்றிருப்பாரானல் அடுத்த நிமிஷம், கார்த்தியாயினியும், சிவசைலமும் பிணமாய்த் தான் விழுந்து கிடப்பார்கள். ஆனல் அவர்களது நல்ல காலமோ என்னவோ! முதலில் ஆத்திரத்தால் அவர் மனம் பதறினலும், சிறிது நேரத்திற்கெல்லாம் அவரது இயற்கையான சகிப்புத்தன்மை வந்து சூழ்ந்து அவரைத் தன்னிலையடையச் செய்தது. அவர் தம்முள்ளிருந்து எழுந்த வெங்கோபத் தீயைச் செம்மையென்னும் தண்ணீரால் கழுவிக் குளிர்வித்தார். காந்திமதிநாதம் பிள்ளை தமது அறிவுத் திறமையால் சென்னை சர்க்கார் மந்திரி பதவி போன்ற பதவியை வகித்து வந்தாலும்—அவற்றிற்குரிய ஆடம்பரச் செயல்களிலும், களியாட்டங்களிலும் மூழ்கி யிருந்தாலும்—அவர் சமயப் பற்றும் கடவுள் பக்தியு முடையவராய்—பாரமார்த்திக நினைவுடையவராய்—இருந்தார். ஆகலால் அவர் லௌகீக காரியங்களில் நடைபெறும் கோளாறுகளை அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. இவ்வித மனப் போக்கினல் அவர் ஒருவிதமாகச் சாந்தி பெற்ருராயினும், அவரது மனம் மட்டும் சங்கடமான நிலையிலேயே இருந்தது.

நீண்டநேரம் சோபாவி லமர்ந்தவண்ணம் சிந்தனையிலிருந்த காந்திமதிநாதம் பிள்ளை திடீரென எழுந்தார். உன்மத்தம் பிடித்தவர்போல் பரக்க பரக்க சுற்று முற்றும் பார்த்தார். பின்புறத் தோட்டத்தின் பக்கமாக வுள்ள ஜன்னலை நோக்கினர். கார்த்தியாயினியும் சிவ

சைலமும் இன்னமும் அங்கேயேதான் இருந்து கொண்டிருக்கிருர்களா? என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்? என மீண்டும் போய்ப் பார்க்கலாமா? என்ற எண்ணம் அவருள்ளத்தில் உதித்தது. அடுத்த நிமிஷத்தில் "சே! அந்த ஆபாசக் காட்சியை மறுபடியுமா பார்ப்பது?—அவர்கள் எக்கேடாயினும் கெட்டுத் தொலையட்டும்" என்று முகத்தைச் சுளித்த வண்ணம் வெறுப்போடு கூறிக் கொண்டே படுக்கையறையை நோக்கி நடந்து உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டு பஞ்சணையின் மீது குப்புறவிழுந்தார்.

* * *

நீங்களது எதிர்கால காதல் வாழ்க்கையைப் பற்றி மனங் கலந்து பேசியவண்ணம் இன்ப உலகில் மிதந்து தங்களைச் சுற்றி யுள்ளவைகளை யெல்லாம் மறந்திருந்த கார்த்தியாயினியும், சிவசைலமும் அமைதி குடி கொண்டிருந்த மாளிகையில் திடீரென்று சந்தடியும் பரபரப்பும் ஏற்பட் டிருப்பதை யறிந்து திர்ப்புற்று எழுந்தனர். அசைவற்று நின்று கவனித்ததில் மாளிகையினுள் வேலைக்காரர்கள் குசு குசுவெனப் பேசுவதும், தட்டு முட்டு சாமான்களைப் புரட்டிக் கொண்டிருப்பதும் இவர்கள் காதுகளில் விழுந்தன. எனவே, காந்திமதிநாதம் பிள்ளை கவர்னர் மாளிகையிலிருந்து வந்து விட்டார் என அறிந்து கொண்டனர். கார்த்தியாயினி தன் கணவர் தான் இந் நேரத்தில் தன் அறையில் இல்லாதிருப்பதைக் கண்டுவிள வாரோ என அஞ்சி, சிவசைலத்திடம் கூடச் சொல்லிக் கொள்ளாது ஓடினுள். சிவசைலம் பூனைபோலப் பதுங்கிப் பதுங்கி நடந்து சென்று யாரும் தன்னைக் கவனிக்காததற்குமுன்பாக மெள்ளத் தன் அறையையடைந்து தாளிட்

டுக் கொண்டான். காந்திமதிநாதம் பிள்ளை தன்னறையை யடைந்த அதேசமயம் கார்த்தியாயினி மாளிகையைத் தென்புறமாகச் சுற்றிக்கொண்டு வந்து வெளிவாயில் வழியாகத் தாழ்வாரத்தை யடைந்து மேன்மாடிக்கு மெள்ள கடந்து கூடத்தையும், பிள்ளை யவர்கள் படுக்கை யறையையும் அச்சத்தோடு பார்த்துக்கொண்டே போய்த் தன் படுக்கை யறையில் நுழைந்து விட்டாள்.

* * *

மறுநாள் காலை 8-மணி யிருக்கும். மாளிகையின் மேன்மாடியில் உள்ள கூடத்தில் காந்திமதிநாதம் பிள்ளை பின்புறமாக கையைக் கட்டிக்கொண்டு இப்படியும் அப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தார். கார்த்தியாயினி சுவரோரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியின் தலைப்பைப் பற்றிக்கொண்டு தன் கணவனின் மனநிலையை ஆராயும் நோக்கத்தோடு அவரது முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். சிறிதுநேரம் இருவரிடையேயும் அமைதி நிலவியிருந்தது. பிறகு, காந்திமதிநாதம் பிள்ளை கார்த்தியாயினியை எறிட்டுக்கூடப் பார்க்காது தலை குனிந்த வண்ணமே, "நான் முக்கியமாக எதைக் குறிப்பிட்டு நீ செய்யக் கூடாதென்று கேட்டுக் கொண்டேனோ அதையே நீ செய்திருக்கிறாய்.—உனது நடத்தையைப்பற்றி நான் கொண்டிருக்கும் அபிப்பிராயம் ஒருவேளை தவறாக இருந்தாலும் இருக்கலாம்........" என்று சாவதானமாகப் பேசினார். அவருக்குத் தன் மனைவியின் பெயரை விளித்துக் கூறக்கூட விருப்பமில்லை.

கார்த்தியாயினி பிள்ளையவர்கள் பேசி முடியு முன்பே படீடமாக, "தங்கள் அபிப்பிராயந் தவறானதன்று. சரியானதே. அவனை நான் காதலிக்கிறேன். நான் அவனுக்கே

சொந்தமானவள். நான் இனி தங்களோடு வாழ முடியாது. நான் தங்களுக்காகப் பயப்படுகிறேன். நான் தங்களை வெறுக்கிறேன். இதைப்பற்றித் தாங்கள் என்ன வேண்டு மானாலுஞ் செய்துகொள்ளுங்கள்" என்று படபடவெனக் கூறி முடித்தாள்.

பிள்ளை யவர்கள் அப்போதும் பொறுமையாகவே "இதுவரை இருந்ததுபோல் இனியும்நமது வாழ்க்கை நடை பெற வேண்டியதுதான்" என்று கூறினர்.

கார்த்தியாயினி ஆத்திரமாக, "இனியும் நமது தாம் பத்ய வாழ்க்கை அமைதியாக நடைபெறுமென்று நினைக் கிறீர்கள்!" என்றாள்.

பிள்ளை யவர்கள் "நடக்கத்தான் வேண்டும்" என்று சற்று அழுத்தமாகவே சொன்னர்.

கார்த்தியாயினி தேகம் பதற, "அப்படியானல், தாங் கள் எனது கெட்ட நடத்தையைக் கண்ட பிறகும், என் னைப் புறக்கணித்துத் தள்ளிவிட விரும்ப வில்லையா? நம் மைக்கட்டுப்படுத்திநிற்கும் விவாக பந்தத்தை யறுத்துவிட மாட்டீர்களா!" எனக் கேட்டாள்.

காந்திமதிநாதம் பிள்ளை, "இல்லை; நான் என் உன்னைப் புறக்கணித்துத் தள்ளிவிட வேண்டும்? நிரந்தரமான பாவத் தைத் தொடர்ந்து செய்ய—பழியை ஏற்படுத்திக் கொள்ள—நான் என் உன்னை அநுமதிக்க வேண்டும்? உன்னுடைய நடத்தையையும், அவனுடைய நடத்தையை யும் அளந்து அறிவதற்கா? அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கமாட்டேன்" என அழுத்தந் திருத்தமாகக் கூறினர்.

கார்த்தியாயினி, "என்ன நடந்தாலும், என்ன விபரீ மான சம்பவம் நிகழ்ந்தாலும் தாங்கள் மனதைத் தள

விடாது எக்காலத்தும் நியாய வரம்பிலேயே நிற்கிறீர்கள்.—ஆனால்....'' என மனங்கசிந்து கூறிக்கொண்டே வந்தாள்.

இதற்குள் காந்திமதிநாதம் பிள்ளை இடை மறித்து, "நீ எனது மனைவியாகவே இங்கு இருந்து வரவேண்டும். நீ அவனை — அவன் உருவத்தை — மறுபடியும் பார்க்கக் கூடாது........'' என்று கார்த்தியாயினியை நிமிர்ந்து பார்த்துக் கூறினர்.

கார்த்தியாயினி, "அப்படியானல், அதற்குப் பதிலாக நான் என்ன....'' என ஏதோ கேட்க ஆரம்பித்தாள்.

காந்திமதிநாதம் பிள்ளை சிறிது அதிகார தோரணையிலேயே பேசத் தொடங்கி, "நீ இனி உனது தமையனார் இல்லத்துக்கு அதாவது திருவனந்தபுரத்துக்கு இந்த ஜென்மத்தில் போக முடியாது;—போகவுங் கூடாது.—நீ நெறி கடந்து நடக்க ஆரம்பித்ததற்கு அவ்விடந்தானே மூல காரணம்! (முகம் சிவப்பேற) மனைவியின் நடத்தை பிடிக்கவில்லை யென்முல், மற்றவர்கள் தாய் வீட்டுக்கு அனுப்பி விடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதுபோல் நானும் செய்வேனென்று மாத்திரம் நீ நினைக்காதே! தெரியுமா!—அதற்குப் பதிலாகத் தற்போதைய மனநிலை சாந்திபெற நீ அநாதைப் பெண்கள் ஆஸ்ரமம், பாவிய விதவைகள் விடுதி போன்ற பொதுநலக் கழகங்களில் சேர்ந்து பெண்ணுலகுக்குச் சேவை செய்து கொண்டிருக்கலாம்; அல்லது கடல் பிரயாணஞ் செய்து இங்கிலாந்து முதலிய நாடுகளில் சிலகாலந் தங்கி இருந்து பிறகு தாய் நாட்டுக்குத் திரும்பி வரலாம். இதற்கு விருப்பமானல் உடனே சொல். அவ்வெளிநாட்டுப் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். நமது பொக்கிஷ மந்திரி மனைவி மிஸஸ் ஜோர்ன்ஸ்கூட ஐரோப்பாவுக்குச்

செல்ல விருக்கிறார். அவர் உனக்குத் துணையாக இருக்கக்கூடும்.—என்ன சொல்லுகிறாய்?—இந்த யோசனைகளை யெல்லாம் ஏற்காது, நீ மேலும், அவனது காதலுக்குக் கழிவிரக்கங் கொண்டிருப்பாயானால், உன் நிலை பரிதபிக்கத் தக்கதாகத்தான் முடியும்—இனி நீ மணமான மங்கை நிலையிலோ, மணமாகாத கன்னிப் பெண் நிலையிலோ இல்லாது திரிசங்கு சுவர்க்கம் போல் இரண்டுங் கெட்ட தன்மையிலேயே நீ அல்லலுற்றுக் கொண்டிருக்க வேண்டும். இனி உனக்கு எதிர்காலமும் இல்லை; நிகழ்காலமும் இல்லை. இறந்த காலத்தில் நீ அனுபவித்த சுகபோகங்களை எண்ணி யெண்ணித்தான் ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும். நீ தற்போது கொண்டிருக்கும் 'ஒப்பற்ற' காதல்தான் நிரந்தரம் சாதலையுண்டு பண்ணிக் கொண்டிருக்கும். அக்காதல்தான் உன் வாழ்க்கையின் இறுதியாகவும் முடியக்கூடும்.-மற்றொன்று உனக்குக் கூறவேண்டியது அவசியம். அம்பிகாபதியிடம் உனக்குள்ள பாந்தவ்யத்தை—பாசத்தை—பற்றை—நீ நீக்கிக்கொள்ள வேண்டும்............ ..." என்று ஒரே மூச்சாகப் பேசி நிறுத்தினார்.

கார்த்தியாயினி துயரக்குரலில், 'நான் எதைச் செய்ய முடியாதோ அவ்வொரு விஷயத்தை யறிந்து தாங்கள் கூறி யிருக்கிறீர்கள். என் அருமருந்தன்ன மகனை—என் ஆருயிர் மருந்தை—என் கண்ணிற் கருமணியை—என் தவக்கொழுந்தை—என் குலவிளக்கை—ப் பிரிந்து நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்?—அந்தோ! அது முடியாத காரியம்.....என் அருமைக் குழந்தை அம்பிகாபதி என்னுட னில்லாவிட்டால், எனக்கு இவ்வுலக வாழ்க்கையேது? இன்பமேது?" என்று கூறிக்கொண்டே வந்தவள்

அதற்குமேல் பேசமாட்டாது, முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள். இவளது இப் பரிதாப நிலையை அச்சமயம் நேரில் காண்போர் யாரும் கண்ணீர் வடிப்பர் என்பது நிச்சயம். ஆனால் காந்திமதி நாதம் பிள்ளை இந்நிலையைக் கண்டு மன மிரங்கியதாகத் தெரியவில்லை.

அவர் தம் முகத்தை வேறு பக்கந் திருப்பிய வண்ணம், "அப்படியானால் நல்லது; இனி நீ மறுபடியும் எனது கௌரவத்துக்கும் தகுதிக்கும் இழுக் கேற்படும் படியான காரியத்தைச் செய்யத் துணியமாட்டாய் என நான் உறுதியாக நம்பலாம் அல்லவா?" என்று அமர்த்த லாகவே கேட்டார்.

இதைக் கேட்டதும் கார்த்தியாயினிக்கு எங்கிருந் தோ கோபம் பொங்கி யெழுந்தது. அவள் பெண் புலி போல் சீறி பிள்ளையவர்கள் நிற்குமிடத்தை நோக்கிப் பாய்ந்து அவர் முகத்துக்கு எதிராக நின்று, "என்ன சொன்னீர்? உமது கௌரவமா? உமது தகுதியா? அவற்றிற்குப் பங்கம் ஏற்படக் கூடாதா? என்ன உமது சுயநலம்! என்ன உமது அயோக்கியத்தனம்? என்ன உமது ஆணவம்!—நான் ஒரு ஜீவன் என்பதை நீர் நினைக் கவே யில்லை.—உமது பொதுநலக் கௌரவம்! உமது அரசியல் அந்தஸ்து! ஜன சமூகத்தில் உமக்குள்ள கௌர வம்!—அனைத்துந் தொலைய வேண்டியதுதான். உம்மைச் சுற்றியுள்ள மேற்குறித்த பெருமைப் பாடுகளெல்லாம் எவ்வளவு உயர்ந்தனவாயினும், கிடைத்தற் கரியனவாயி னும் இன்றே தொலைந்து போகட்டும். இனி என்ன மதிப்பு! என்ன உயர்வு!" என்று ஆவேசத்தோடு கூறி விட்டு அவ்விடத்தினின்றும் நடந்து வெளியேறினாள்.

# ஆறாவது அதிகாரம்

## கார்த்தியாயினியின் காதல் வாழ்க்கை

“கார்த்திகா! கண்ணே!

“..............................”

“என்ன தலையைக் குனிந்த வண்ணம் ஏதோ யோசித்துக்கொண்டிருக்கிறாய்?”

“..............................”

“காதற்கிளியே! என்னைப் பார்! இன்னமும் என்ன சிந்தனை?”

“..............................”

சிவசைலம் தன்னருகில் அமர்ந்திருந்த கார்த்தியாயினியின் அழகிய முகத்தை நிமிர்த்திப் பிடித்து, “கார்த்திகா! என்மீது உனக்கு ஏதேனுங் கோபமா? உன் மௌனத்துக்குக் காரணந்தானென்ன?” ....................” என்று கேட்டான்.

கார்த்தியாயினி அப்போதும் வாய் திறக்கவில்லை.

சிவசைலம் மேலும் பேசத் தொடங்கி, “ஒருவேளை இவ்வாறு இருக்குமோ! ‘செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்து செல்வச் சீமானுக்கு வாழ்க்கைப்பட்டு, ராஜ போகத்தை யனுபவித்துவந்த நாம், கேவலம் சாதாரண குமாஸ்தா வேலை செய்யும் ஏழை வாலிபனொருவனை நம்பி வந்து விட்டோமே! இவனால் நாம் என்ன இன்பம் அனுபவிக்க முடியும்? ஊரார்தான் நம்மை என்ன நினைப்பார்கள்? இனி நம் நிலை யென்ன?’ என்று யோசிக்கிறாய் போலும்!

................” என்று அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்த வண்ணங் கூறினான்.

இதுவரை பேசாதிருந்த கார்த்தியாயினி இம்மொழியைக் கேட்டதும் சிவசைலத்தை நோக்கி, “என்ன சொன்னாய் சிவா! நீ கூறுகிறபடி எனக்கும் உனக்குமுள்ள தகுதியின் தார தம்மியத்தைக் கவனித்திருப்பேனாயின், சகல சம்பத்தையும் ஒரு கொடியில் உதறித் தள்ளிவிட்டு உன்னோடு வந்திருப்பேனா?—உற்ற கணவனையே துச்சமாக நினைத்துப் புறக்கணித்துவிட்ட நான் இப்பேதை மக்களின் பிதற்றுரைகளையா பொருட் படுத்துவேனென்று நீ நினைக்கிறாய்?—நீ கூறுகிறபடியே நான் ஒன்றையும் ஆராயாது உன் காதலில் மயங்கி வீட்டை விட்டு ஓடிவந்து விட்டதாகவே வைத்துக்கொள். இப்போது உனது உண்மை நிலையையும், என்னை எவ்வாறு காப்பாற்றுவாய் என்பதையும் யோசித்துப் பார்த்து என்ன பயன்? உன்னை விட்டுவிட்டுத் திரும்பவும் என் மாளிகைக்குப் போய்விட முடியுமா? விஷயம் வெகு தூரத்துக்கு மிஞ்சிப் போய்விட்ட பின்னர், என்ன நினைத்துத்தான் என்ன பயன்! எவ்விதத்தாலும் கணவனுடனோ, மற்ற உறவினர்களுடனோ பழமைபோல் ஒன்று சேர முடியாத ஒரு நெருக்கடியான நிலையையுண்டு பண்ணிவிட்டுப் பின்னர் அதுபற்றி நினைந்து வருந்துபவள் பைத்தியக்காரியாக அல்லாது வேறு யாராக இருக்க முடியும்? என்னை உலக இயல்பு இன்னதென அறியா அவ்வளவு பெரிய பேதையென்றா நினைத்துக் கொண்டாய்?—இவ்வளவு நாட்களாக என்னோடு நெருங்கிப் பழகியும் என் மனப்பான்மையை இன்னமுஞ் சரியாக அறிந்து கொள்ளவில்லையென்றால், அது எனக்கு

ஆச்சரியத்தையே தருகிறது. மற்றொரு முறை இவ்வித அசட்டுரைகளைப் புகலாதே! தெரியுமா!" என்று அன்யாகக் கடிந்து பேசினுள்.

கார்த்தியாயினியின் வலது தோளைக் கையால் வருடிக் கொண்டிருந்த சிவசைலம் கைகளை யெடுத்துக்கொண்டு பயந்தவனைப்போல் பாவனைசெய்து, "சீமாட்டி! கோபித்துக் கொள்ளாதீர்கள். தெரியாது கூறி விட்டேன். இனிமேல்..............." என்று குறும்பாகப் பேசிக் கொண்டே வருகையில், கார்த்தியாயினி இடைமறித்து "அன்ப! என்னை இவ்விதம் ஊனஞ் செய்ய வேண்டுமென்று எவ்வளவு நாள் காத்திருந்தாய்!—சீமாட்டி என்று என் தலையில் எழுதி வைத்திருக்கிறதா? அல்லது அப்பட்டம் எனக்குப் பிறப்புரிமையா என்ன?—இப் பெருமைப்பாடுகளெல்லாம் மக்கள் தாங்களாகச் செயற்கையில் உண்டாக்கிக் கொண்டனவேயன்றி, இயற்கையில் நமக்குள் உயர்வு தாழ்வுண்டா?—நீ கூட இப்போலிப் பெருமைகளைப் பெரிதாகக் கருதுகிருயா என்ன?" என்று கேட்டாள்.

சிவசைலம் கார்த்தியாயினியின் களங்கமற்ற மொழியில் மயங்கிப்போய், "கண்ணே! நான் அப்படியெல்லாம் ஒன்றும் விபரீதமாக நினைக்கவில்லை. ஏதோ ஒரு விதமாயிருக்கும் உனக்குக் குதூகலத்தையும், உற்சாகத்தையும் அளிக்க வேண்டுமென்றே இவ்விதம் வேடிக்கையாகப் பேசினேன். அதை நீ வேறு விதமாக நினைத்துக் கொள்ளாதே! அதிருக்கட்டும், கார்த்திகா! அதோ பார்! இயற்கையன்னை வழங்கும் அற்புதக் காட்சியைப! ஆஹா! ஆ! என்ன அழகிய தோற்றம்! எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று செழித்துத் தழைத்திருக்

கும் செடி கொடி மரங்களைத் தாங்கிக் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும் இப்பொதிய மலைக்கு இமய மலையும் ஈடாகுமா! இம்மலைமீதிருந்து ஓடிவரும் வெள்ளருவி ஒருவித இனிய ரீங்காரத்தோடு கீழே விழும் அழகிய காட்சியை எம்மொழி கொண்டு வருணிப்பதென்று எனக்குத் தெரியவில்லை. மேற்றிசையெல்லாம் பொன் மயமாக்கி மறையும்—கால் சாயும்—சூரியனது கதிரொளி அந்நீருவிமீது பட்டு பள பளக்கச் செய்து அழகினுக் கழகையல்லவோ உண்டு பண்ணுகிறது? இந் நீர் வீழ்ச்சியின் அழகிய தோற்றத்தை இப்படியே உட்கார்ந்து எப் போதும் சலிக்காது பார்த்துக் கொண்டிருக்கலாம்போ லிருக்கிறதே! நீ என்ன நினைக்கிறாய், கண்மணி!..........." என்று கேட்டான்.

"அடாடா! உன்னை இதுவரை கட்டிள மங்கையர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கள்வன் என்று மட்டுமல்லவோ நினைத்திருந்தேன்! நீ ஒரு பெரும் புலவனாகவும் இருப்பது இப்போதல்லவா தெரிந்தது. எம்மொழியால் வருணிப்பது என்று பீடிகை போட்டு விட்டு, எவ்வளவு அழகாக இக்குற்றால நீர் வீழ்ச்சியின் சிறப்பை உனது சாதுர்ய மொழிகளால் சித்திரித்துக் காட்டிவிட்டாய்! வெண் நுரைகளைத் தள்ளிக்கொண்டு ஓடிவந்து விழும் இவ்வருவியின் அழகைக் கண்டு மகிழ் வதா! காதல! உன் சொல்லழகைக் கண்டு மகிழ்வதா! என்று எனக்குத் தெரியவில்லை........"எனப் பலபட பாராட் டிப் பேசி மகிழ்ந்தாள்.

* * *          * * *

இக்காதலர்கள் இப்போது குற்றாலத்தி லிருக்கிறார் கள் என்பதைச் சொல்லாமலே வாசகர்கள் அறிந்து

கொள்வார்கள். காந்திமதிநாதம் பிள்ளையோடு ஆத்திரமாகப் பேசிவிட்டு வெளியேறியதும், உணர்ச்சி வயப்பட்டவளாய் உலகத்தையே மறந்து போகுமிடம் இன்னதெனத் தெரியாது பைத்தியம் பிடித்தவள்போல் புறப்பட்டுவிட்ட நம் கதாநாயகி கார்த்தியாயினி, இவ்வித சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிவசைலத்தினிடஞ் சென்று விட்டாள் என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை.

இவ்விதம் காதலரிருவருஞ் சேர்ந்து பல ஊர்களிலுஞ் சுற்றிக் கடைசியாகத் தங்கள் இன்ப வாழ்க்கைக்குக் குற்றாலமே ஏற்ற இடம் என்று தேர்ந்து, இயற்கையன்னை களி நடம் புரியும் அந்நாட்டுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் வந்து ஒரு மாதத்துக்கு மேலாகியது. சிவசைலம் தனது உத்தியோகத்தைப் பற்றிக் கவலை கொள்ளவேயில்லை. அவனிடம் கொஞ்சம் பணமிருந்தது. கார்த்தியாயினி மனங் குதூகலிக்க அவளது விருப்பப்படி யெல்லாம் தாராளமாகப் பணத்தைச் செலவு செய்து வந்தான். குற்றாலம் இப்புதுக் காதலர்களுக்கு மிகுந்த குதூகலத்தைத் தந்துவந்தது. ஒவ்வொருநாளும் அவர்கள் குற்றால நீர் வீழ்ச்சியில் குளித்து விளையாடியும், மாலை நேரங்களிற் பொதியமலை மீதேறியும், நீர் வீழ்ச்சி விழுமிடத்தைச் சுற்றியுள்ள இடங்களில் உலவியும் காதலுரையாடிக் களிப்புடன் பொழுதுபோக்கி வந்தனர். கார்த்தியாயினி சிவசைலத்தின்மீது கொண்ட கட்டுக்கடங்காக் காதலினால், தன் குடும்பத்தின் உயர்நிலை, பின்விளைவு முதலியவற்றை யெல்லாங் கருதாது, ஒரு நொடியில் யாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு அவனோடு வந்துவிட்டாள்; ஆயினும் தன் அருமைக் குமாரன் அம்பிகாபதியின் நினைவு மட்டும் அவளுக்கு அவ்வப்போது தோன்றி அவள் மனதை வாட்டி

வந்தது. ஒரு நிமிடமும் விட்டுப் பிரியாது இருந்து வந்த தன் அருமருந்தன்ன மகன் இப்போது தன் பிரிவையாற்ருது எவ்வாறு துடிதுடிக்கிருனே என்று நினைக்கும்போது கார்த்தியாயினியின் கண்களில் நீர் ஆருக வழிந்தோடும். ஆனால் தான் இவ்வாறு வருத்தப்படுவதைச் சிவசைலம் அறியாதவாறு பெரும்பாலும் அவள் மறைத்துவந்தாள். நாம் மேற்குறித்த அன்றும் அவள் திடீரென தன் மகனை நினைத்துக்கொண்டாள். அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது காட்டுமல்லவா! எனவே, தன் காதலி எதையோ நினைத்துக்கொண்டு உள்ளூற வருந்துகிருள் என்பதைச் சிவசைலம் அறிந்து கொண்டு, அவள் கவனத்தை வேறுவழியில் ஈர்க்கவே, அவன் மேலே குறித்தபடி வேடிக்கையாகப் பேச்சை யாரம்பித்தான்.

* * *

கார்த்தியாயினி தன்னை மிகவும் பாராட்டிப் புகழவே, சிவசைலம் மகிழ்ச்சிப் பெருக்கால் மெய்ம்மறந்து போனான். எனவே, அவன் அக்களிவெறியில் "கார்த்திகா! காதற் களஞ்சியமே! இப்பரந்த உலகம் யாருக்காகப் படைக்கப்பட் டிருக்கிறது என நினைக்கிருய்? நம் போன்ற உண்மைக் காதலர்கள் இன்ப மனுபவிப்பதற்காகத்தான். அதிலும், இக்குற்ருலம் நமக்காகவே சிருஷ்டிக்கப்பட்டது என்று கூறினல் மிகையாகாது. நானறிந்த மட்டில், காதலர்கள் கலந்து மகிழ்வதற்கு இதைவிட ஏற்ற நாடு இவ்வுலகி லிருப்பதாகத் தெரியவில்லை. இந்திரலோகமும் இதற்கு இணையாகாதென்றே துணிந்து கூறுவேன். அதிலும் நாம் அனுபவிக்கும் இக்காத லின்பத்துக்குச் சுவர்க்க போகமும் ஈடாகாது. இத்தகைய உண்மை

யான காதலின்பத்தை யநுபவிக்க மாட்டாதவர்கள் இவ்வுலகத்தைத் துன்பம் நிறைந்த தென்றும், அநித்யமான தென்றுங் கூறுகிறார்கள். அறிவிலிகள்! அவர்களே அதிர்ஷ்டமிலர்கள் என்னது வேறென்ன வென்று கூறுவது!— கட்டிக் கரும்பே! இயற்கைத் தாய் சமைத்திருக்கும் இந்த இன்ப நிலயத்தில் இப்போது நாம் காதற் றெய்வங்களாக எழுந்தருளி யிருக்கிறோம். இப்பொதியமலே யடிவாரத்தில் நீர்வீழ்ச்சிச்சாரல் பனிநீர்போல் தெளிக்க, மந்தமாருதக் காற்று ரமணீயமாகவீச இவற்றை யநுபவித்துக்கொண்டு இன்பமே ஒருருவமாய் அமர்ந்திருக்கும் நாமல்லவோ புண்ணியசாலிகள்! இன்ப மநுபவிப்பதில் நமக்கிணையாக யார் இருக்க முடியும்? நாம் அநுபவிக்கும் இன்பத்தைத் தடுப்பவர்தான் யார்? யார்தான் நம்மை என்ன செய்ய முடியும்?—கார்த்திகா, கண்ணே! இவ்வுலகில் நமக்கு இனி துன்பம் ஏதாவதுண்டா?" என்று பெருமித வுணர்ச்சியோடு கேட்டான்.

கார்த்தியாயினி நிமிர்ந் துட்கார்ந்து, "ஓ! இருக்கிறது" என்று சாவதானமாகச் சொன்னாள்.

சிவசைலம் திகைத்து, "அது என்ன?" என்று கேட்டான்.

"கண்ணீர்த் துளிகள்."

"எங்கே? காணுமே!"

"தற்சமயம் அவை யடங்கி யிருக்கின்றன."

"என்ன விளையாடுகிறாய்? கண்ணே!"

"இல்லை அன்பா! உண்மையைச் சொல்லுகிறேன். நான் துன்பத்தை யநுபவிக்கிறேன். நான் கண்ணீரைச் சிந்துகிறேன்."

"ஏன்?"

"ஏனென்றால், நான் மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருப்பதுதான் காரணம். நான் எதையோ அநுபவிப்பதாகவோ—ஏதோ உயிர் வாழ்வதாகவோ மட்டும் நினைப்பதில்லை."

"கார்த்திகா! உனக்கு மணிவாசகப் பெருமானது இத்திருப்பாடல் ஞாபகமிருக்கிறதா?

" இன்று எனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
　எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
　நீயலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்து ஒன்றும்
　திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
　யார்உனை அறியகிற் பாரே"

என்று சிவசைலம் மிக்க உருக்கமாகப் பாடினான்.

"என்ன இனிமை! என்ன இனிமை!"

"அதிலென்ன சந்தேகம்? கண்ணே! 'கன்னல் பாகில் கோத்தேனில் கனியில் கனிந்த கவி'யல்லவா அது!"

"காதலா! இச்சாரல் மிகவும் குளிர்ச்சியைத் தருகிறது" என்று கார்த்தியாயினி கூறியவண்ணம் நகர்ந்து வந்து சிவசைலத்தின் மார்பின்மீது சாய்ந்து அவனது அழகிய வதனத்தைக் கனிவோடு நோக்கினாள்.

சிவசைலம் கார்த்தியாயினியின் கூந்தலை நீவிவிட்டு அவளது இடுப்பில் கைகொடுத்து ஒரு கையால் அணைத்து அவளது செவ்வாயிதழில் அழுந்த முத்தமிட்டான். பூதவுடலோடு சுவர்க்கம் புகுவார்போல் கார்த்தியாயினி அவனது பிணைப்பில் கட்டுண்டு மெய்ம் மறந்திருந்தாள்.

கோடைக் கானல் குபேர பட்டினம்போல் விளங்கியது. கோடைக்கால வெப்பத்தைத் தணித்துக் கொள்ள வேண்டி நீலகிரிக்குச் சென்ற சர்க்கார் உயர்தரமான உத்தியோகஸ்தர்களும், செல்வச் சீமான்களும் சீமாட்டிகளும், போக, மற்ற உத்தியோகஸ்தர்களும், பணக்காரர்களும் இக் கோடைக்கானலுக்கு வந்து தங்கி யிருந்தனர். இவர்களே யன்றி, கோடைக்கால விடுமுறை பெற்ற கலாசாலைப் போராசிரியர்களும், மாணவர்களும் கூட இங்கு வந்து தங்கி உல்லாசமாகப் பொழுது போக்கலாயினர்.

கோடைக்கானல், நீலகிரியைப் போல் எப்போதும் பனி யிருந்து அதிக குளிர்ச்சியைத் தந்து தேகத்தை நடுக்குவிக்காமலும், குற்றாலத்தைப் போல் சாதாரண கிராமாந்தரமாகக் காணப்படாமலும், சீதோஷ்ண நிலை சமமாய், பொதுவான வாசத்துக் குகந்ததாய், ஏழை பணக்காரர் யாவருக்குங் கவர்ச்சி தரத்தக்கதாய் இருந்து வருவதால், கோடைக்காலத்தில் பல பாகத்தில் வாழும் மக்கள் பெரும்பாலார் இவ்விடத்தை நாடி வந்து இரண்டொரு மாதங்கள் இனிது காலங் கழித்துச் செல்கின்றனர். அதிலும் நம் கதை நிகழ்ந்த அவ்வருஷம் வழக்கத்தைக் காட்டிலும் ஏராளமாக ஜனங்கள் திரண்டிருந்தனர். இங்கு வந்திருந்த மக்கள் அனைவரும் துன்பமே யறியாத தேவர்கள்போல் காணப்பட்டனர். இவ்வுல்லாச மக்களிடையே நமது கதா நாயகர்களான கார்த்தியாயினியும், சிவசைலமும் இருந்தனர் என்று வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அநாவசியம்.

நம் புத்தம் புதுக் காதலர்கள் குற்றாலத்துக் குதூகல வாழ்க்கையை ருசி பார்த்து அநுபவித்தாயிற்று. இனி கோடைக்கானலில் அவர்கள் கோலாகலமாகச் சிலகாலம்

இருக்க விரும்பினர். அவர்கள் ஜூலை மாத முதலில் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் ஒரு சிறு பங்களாவை வாடகைக் கமர்த்திக்கொண்டு அங்கு வாழ்ந்து வந்தார்கள். சிவசைலம் கோடைக்கானலுக்கு உத்தியோக தோரணையில் திவான் ஸர். பரமேஸ்வரம் பிள்ளையோடு இதற்குமுன் பலமுறை வந்திருக்கிறுன். ஆதலால், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் இவ்வூர் வாசிகள் அவனுக்குச் செய்து தந்தனர். ஆனுல் சிவசைலம் தனக்கு உத்தியோக தோரணையிலோ மற்ற வகைகளிலோ அறிமுகமானவர்கள்—சிநேகிதர்களானவர்கள் கண்களில் அகப்படாமலிருக்க விரும்பி எச்சரிக்கையாக இருந்து வந்தான். ஏனென்ருல், அவர்கள் இவன் கார்த்தியாயினியோடு இருப்பதைக் கண்டால், 'இவள் யார்? மனைவியா? விவாகமாய் விட்டதா? எப்போது? எங்களுக்கெல்லாம் ஏன் தெரிவிக்கவில்லை' யென் றெல்லாம் கேட்பார்க ளன்ருே? அப்படி கேட்கத் துணியாவிடினுஞ் சந்தேகிப்பார்க ளன்ருே? ஆகவே, இவ்விதவின் சந்தேகங்களுக்கும், அநாவசியமான கேள்விகளுக்கும் இடங்கொடுக்க விருப்பமில்லை. எனவே, அவன் தனக்குத் தெரிந்தவர்கள் தன்னை எளிதில் அடையாளந் தெரிந்துகொள்ள முடியாதவாறு அவனது வழக்கத்துக்கு மாருன நடையுடை பாவனைகளோடு விளங்கினுன். கார்த்தியாயினி சிவசைலத்தினுடைய அந்தரங்க நோக்கத்தை ஆராயவுமில்லை; சிறிதும் சம்சயிக்கவுமில்லை. அவள் அவனை இன்பமயமான கந்தருவ லோகத்திலிருந்து வந்த கந்தருவ புருஷனுகவே கருதிவந்தா ளாகையால், அவள் அவனது ஒவ்வொரு செயலையும், சொல்லையும் உவப்போடு வரவேற்ருள். அச்சமயத்தில் அவளுக்கு இருந்துவந்த குறை யெல்லாம் தன் அருமருந்தன்ன மகன் அம்பிகா

பதியின் பிரிவைத்தவிர, வேறொரு குறையும் அவள் மனத்தில் இல்லை. அக்குறையும் ஆனந்தமிகுந்த இக்காதல் வாழ்க்கையில் மூழ்கடிக்கப்பட்டு வந்தது. கார்த்தியாயினியின் மனதில் ஊசலாடிக்கொண்டிருந்த இப்பின்னைப் பாசத்தைச் சிவசைலம் சில நாட்களிலேயே அறிந்து கொண்டு விட்டானாதலால், அப்பிரிவாற்றாமையை யெண்ணி வருந்துவதற்கு அவளுக்கு அவகாசமேற்படாதபடி ஒரு விநாடியும் விட்டுப் பிரியாதிருந்து வந்தான்.

இக்காதலர்களுக்குக் குற்றால வாழ்க்கை ஒரு விதத்தில் மகிழ்ச்சியைத் தந்தது; கோடைக்கானல் வாசம் மற்றொரு வகையில் பேரானந்தத்தை விளைத்து வந்தது. கோடைக்கானல் ஏரியில் இவர்கள் மாலை நேரங்களில் 'ஸ்டீம் லான்'சில் ஏறி உல்லாசமாகப் பொழுது போக்கி வந்தனர்.

ஒருநாள் மாலை சிவசைலமும் கார்த்தியாயினியும் நாடகம் பார்ப்பதற்குக் கோடைக்கானலிலுள்ள தியேட்டரொன்றுக்குச் சென்றனர். அன்று அத் தியேட்டரில் அமெச்சூர் நடிகர்கள் ஒன்று சேர்ந்து "அநாதைப் பையன்" என்ற சமூக சம்பந்தமான நாடகமொன்றை நடத்தினர். கலைஞானமும், கல்வியறிவும் உடையவர்களும், உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுமான வாலிபர்கள் சிலர் இந்நாடகத்தில் முக்கிய பாத்திரங்களை மேற்கொண்டு நடிப்பது பிரமாதமாக விளம்பரஞ் செய்யப்பட் டிருந்ததால், ஏராளமான மக்கள்—முக்கியமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், செல்வந்தர்களும் சீமாட்டிகளுமே-குழுமி யிருந்தனர்.

கார்த்தியாயினியும் சிவசைலமும் நாடக மேடைக்கு மிகச் சமீபத்தில் முன் வரிசையில் போடப்பட்டிருந்த

சோபாவில் அமர்ந்திருந்தனர். மற்றும் அங்கு வந்திருந்த செல்வச் சீமான்களும், வாலிபர்களும் கார்த்தியாயினியின் பேரழகில் ஈடுபட்டு மயங்கி இமையா நாட்டங் கொண்டனர். அதுவன்றி, சிவசைலம், கார்த்தியாயினியின் இடையைக் கைகளால் தழுவிய வண்ணம் நெருங்கி யமர்ந்திருக்கும் விதமும் அவன் அவளோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் தோரணையும் அவர்களைச் சுற்றி யமர்ந்துள்ளவர்களின் கவனங்களைக் கவர்ந்தது.

* * *

நாடகம் ஆரம்பமாயிற்று. நாடகத்தின் போக்கு மிகவும் ருசிகரமா யிருந்தது. முத்துசாமி கவுண்டர் என்னும் செல்வச் சீமானின் ஒரே மகனான இரண்டு வயது குழந்தையை அவரது சகோதரனான இரத்தின சபாபதி கவுண்டர் பணப் பேராசை காரணமாக, தன் தமையன் சொத்து முழுவதையுந் தானே அடையக் கருதிச் சூழ்ச்சி செய்து ஒரு ஆள் மூலமாக வெளியேற்றி, வெளியூரில் அநாதைப் பிள்ளையாக ஒரு பாதையில் போடச் செய்வதும், அக்குழந்தையை அவ்வூரிலுள்ள ஒரு ஏழைக் குடியானவன் கண்டெடுத்துத் தன் குழந்தை போல் வளர்த்து வருவதும், முத்துசாமி கவுண்டர் தம் குழந்தையைக் கண்டு பிடிக்க ஆள்களை நாலாபக்கமும் விடுவதும், கடைசியாக ஒன்றும் பலிக்காமல் போகவே, திறமை வாய்ந்த துப்பறிபவ ரொருவரை அமர்த்திக் கண்டு பிடிக்கச் செய்வதும், பல வருடங்களாகியும் அத் துப்பறிபவராலுங் கண்டு பிடிக்கப் படாமல் போவதும், இதனிடையே குடியானத் தம்பதிகளால் ராஜசேகரன் என்ற பெயரோடு அருமையாக வளர்க்கப்பட்டு வரும் சிறுவன் இருபது வயதடைவதும், அப்பருவத்தில் அவ

னது வளர்ப்பு பெற்ருேர்களின் பெருமுயற்சியால் உயர் தரக் கல்வி பயின்று வருவதும், இக் கலாசாலை காலத்தில் அவனது வகுப்பில் வாசித்து வந்த ஒரு லட்சாதிபதியின் குமாரத்தி மிருநாளினியைக் காதலிப்பதும், அப் பெண் மணியும் ராஜசேகரனை மனமாறக் காதலிப்பதும், ஆனால் இவர்களது காதலுக்கு இடையூருக மிருநாளினியின் தாய் இிற்பதும், அவள் தன்னுடையமகளுக்கும் ராஜசேகரனுக் கும் இடையே ஏற்பட்டுள்ள சம்பந்தத்தை ஒருவாறு அறிந்து கொண்டு அவர்கள் சிநேகத்துக்கு இடையூறு விளைப்பதும், ஏழைக் குடியானவன் மகனுன ராஜசேகர னோடு லட்சாதிபதி குமாரியான தன் மகள் சிநேகஞ் செய் வதே கேவலமானதென்று மிருநாளினிக்கு அடிக்கடி எடுத் துக்கூறி அவள் மனதை மாற்ற முயல்வதும், இச்செய்தி யைக் காதலி வாயிலாக அறிந்த ராஜசேகரன் தன் ஏழ்மை நிலைமைக்காக வருந்துவதும், இதே சமடத்தில் முத்து சாமி கவுண்டர் ஏற்படுத்தி யிருந்த துப்பறிபவர் ராஜ சேகரனை இன்னுரென அறிந்துகொண்டு உடனே கவுண் டருக்குத் தெரிவிப்பதும், தம் குமாரனை இனி இப்பிறப் பில் பார்க்க முடியாது என்று எண்ணி ஏங்கியிருந்த—உல கையே வெறுத்திருந்த—கவுண்டருக்குத் தன் மகன் இன்ன இடத்தில் இன்னுரால் வளர்க்கப்பட்டு சுகமாகப் படித்து வருகிருனென் றறிந்ததும் புத்துயிரும், புத் துணர்ச்சியும் உண்டாவதும், அக்கணமே தனது சகோ தரர் முதலியவர்களோடு புறப்பட்டுக் குடியானவரிடம் போய்த் தம் மகனைத் தமக்குத் திருப்பி யளிக்கும்படி குறை யிரப்பதும், அக்குடியான தம்பதிகள், தங்கள் உயிரினும் சிறந்த பொருளாக மதித்துள்ள ராஜசேகரனை பிரிய மனமில்லாவிடினும், சொத்துக் குடையவர் வந்து கேட்கும்போது எப்படி மறுப்பதென்ற எண்ணத்தோடு

அவனைக் கவுண்டரிடம் ஒப்படைப்பதும், இதுவரை இவ் வேழைக் குடியானவர்களே தனது பெற்றோர் எனக் கருதிவந்த ராஜசேகரன் உண்மையை யுணர்ந்து ஆச்சரிய முறுவதும், தன்னை இதுவரை அருமையாக வளர்த்தவர் களைத் திடீரென விட்டுப் பிரிய மனமில்லாது ராஜசேக ரன் தனது வளர்ப்புப் பெற்றோர்களையும் உடன் வந்திருக் கும்படி யழைப்பதும், அவர்கள் தங்கள் ஏழ்மை நிலைக்கு அது பொருந்தாது எனக் கண்டிப்பாக மறுத்து விடுவ தும், முத்துசாமி கவுண்டர் கொஞ்சம் பொருளை அக் குடியானவரிடம் கொடுக்க முயன்றும் அவர் வாங்கா திருந்து விடுவதும் கடைசியாக ராஜசேகரனும், குடியான தம்பதிகளும் ஒருவரிடம் ஒருவர் பிரியா விடை பெற்றுக் கண்களில் நீர் ஆறாக வழிந்தோட சோகத்தோடு பிரிவ தும், கவுண்டரும், மற்றவர்களுங் கூட இந்நிலையைக்கண்டு மன முருகுவதும், கடைசியாக முத்துசாமி கவுண்டர் தன் மகன் ராஜசேகரன் விரும்பிய மிருநாளினி (தாங்கள் நினைத்தபடி ராஜசேகரன் ஏழைக் குடியானவன் மகனல் லன்; ஒரு பெரிய பணக்காரரின் ஒரே புதல்வன் என்று அறிந்த பின்னர், மிருநாளினியின் பெற்றோர் அவளை ராஜ சேகரனுக்கு கொடுக்கவுந் தயங்குவாரோ!) யை விவாகஞ் செய்துவைப்பதுவே நாடகத்தின் முடிவாகும்.

* * *

இந் நாடகத்துக்குப் புத்திபிரகாசிக்கும் வகையில் நடிகர்கள் திறமையாக நடித்து பார்ப்பவர்கள் மனதைக் கவர்ந்தனர்.

காதல் நாடகத்தைக் களிப்புடன் புரிந்துகொண் டிருந்த நம் கதாநாயகர்களான கார்த்தியாயினியும், சிவ சைலமும் இவ்வருமையான நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாடகத்துக்கு 'இண்டர்வெல்' விடப்பட்டது. இச் சமயத்தில் ரிசர்வ் ஸீட் வரிசையில் மற்ருெரு பக்கத்தி லிருந்து யாரோ "சிவா! சிவா!" என்று கூப்பிடுவதைக் கேட்டு சிவசைலம் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கும் திகைப்புக்கும் அளவே யில்லை. ஏனென்ருல் அவனது தாயாரை சில பெண்மணிக ளோடு அங்கு கண்டானதான். உடனே சிவசைலம் கார்த் தியாயினிடஞ் சொல்லிவிட்டு, அவனது தாயார் இருக்கு மிடஞ் சென்ருன். மகனும் தாயும் மிகவும் அளவளாவிப் பேசலாயினர்!

"அம்மா! நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்!"

"திருவனந்தபுரத்தில் வேலையை விட்டுவிட்டு, நீ என் இங்கு வந்திருக்கிருய்!"

முதலில் அவர்கள் ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்ட கேள்வி இதுதான். ஏககாலத்தில் இருவர் கேள் விகளும் எழுந்தமையால், அவற்றிற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. சிவசைலம் பதில் சொல்லுவதுபோல் ஏதோ முணு முணுக்கத் தொடங்கி, மெல்ல மெல்ல வார்த்தைகளை விழுங்கலானுன். வயது முதிர்ந்த அவனது தாயார், சிவசைலத்தினுடைய மழுப்பல் மொழியையும், தயக்கத்தையுங் கவனிக்கவில்லை.

அந்தம்மாள் தன் பக்கத்தி லமர்ந்திருக்கும், பெண் மணிகளைச் சுட்டிக்காட்டிப் பேசத்தொடங்கி "சிவா! இவர்கள் யாரென்று உனக்குத் தெரியுமா?—இவள்தான் உனது மாமி. அதுதான் திருநெல்வேலியில் எனது சிற் றப்பா பிள்ளை சிவசுப்பிரமணியம் என்று ஒருவன் செல் வத்தோடும், செல்வாக்கோடும் வாழ்ந்துவருகிருன் என்று உனக்கு அடிக்கடி சொல்லுவேன் பாரு; அவனுடைய

மனைவி. இதோ இருப்பவள் அவனது அருமை மகள்; ஒரே பெண். இவளை நன்ருகப் படிக்க வைத்திருக்கிருன். இச்சிறு பையன்கள் அவனது குமாரர்கள். இவர்களுக்குத்தான் சமீபத்தில் கர்ணபூஷணச் சடங்கு நடந்தது. அதற்காகத்தான் என் தம்பி என்னை வரவழைத்திருந்தான். நீ வேலை செய்யும் ஊர் அவனுக்குத் தெரியாதாகையால், உனக்குத் தெரிவித்து உடனழைத்து வரும்படி தகவல் எழுதியிருந்தான். திருவனந்தபுரத்துக்கும், திருநெல்வேலிக்குஞ் சமீபந்தானே! நீ கூட வந்திருக்கலாம். உனக்கு வேலையில் லீவு கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்தாலேயே நான் தெரிவிக்கவில்லை.—அவ்விசேஷம் முடிந்ததும் எல்லோருமாகக் கோடைக்காலக் கொடுமையினின்றுந் தப்பிச் சுகமாகக் காலங் கழிப்பதற்காக, இங்கு ஒரு வாரத்துக்கு முன் வந்தோம். இன்று இந்நாடகத்துக்கு எங்களைக் கொண்டு வந்து விட்டு விட்டு, ஏதோ ஜோலியைக் கவனிக்கவேண்டுமென்று உன் மாமா போய்விட்டான். இங்கு நான் உன்னைச் சந்திப்பேனென்று கனவிலும் நினைக்கவே இல்லை.—உன் மாமிதான் உன்னை எப்படியோ அடையாளங் கண்டு பிடித்துக் கூறினுள்.—எனக்குக் கண் சரியாகத் தெரிகிறதா என்ன?—மருமகனைக் கண்டுபிடிப்பதில் மாமிக்குத்தானே அதிக சிரத்தை?..........." என்று கூறிப் பொக்கைவாய் நன்கு தெரியும்படி சிரித்தாள். மாமியம்மாளும் புன்னகை கொண்டாள். திரிபுரசுந்தரி என்னும் பெயருடைய அப்பெண்ணும் வெட்கத்தால் தலைகுனிந்தாள். ஆயினும் அவள் கடைக்கண்ணால் சிவசைலத்தை அடிக்கடி நோக்கினுள்.

ஆரம்பத்தில் தன் தாயோடு பேசிக்கொண்டே கார்த்தியாயினி யிருக்கும் பக்கமாகக் கவனித்துக்கொண்

டிருந்த சிவசைலம் தன்தாயின் அருகில் அமர்ந்திருக்கும் மங்கை தனது ஒன்றுவிட்ட அம்மானனது மகள் என்று அறிவிக்கப்பட்டதும், அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவனது நோக்கில் ஒருவித அர்த்தம் இருந்தது.

சிவசைலத்தின் தாய் அவனிடம் நெருங்கிக் காதோடு காதாக, "சிவா! நீ பி. ஏ. பாஸ் செய்து உத்தியோகத்திலிருப்பதைக் கேட்டு உன் மாமன் மிகவுஞ் சந்தோஷமடைந்திருக்கிறான். அவனது பெண்ணை உனக்குக் கொடுக்க அவனுக்குக் கொள்ளை ஆசையிருக்கிறது. என் அபிப்பிராயத்தை மெள்ளக் கேட்டான். எனக்குத் திருப்தியாய்த்தான் இருக்கிறது. உனக்கு எப்படியிருக்கிறது? பெண் கண்ணுக்கு லட்சணமாகவும் அழகாகவும் இருக்கிறாள் இல்லையா? அத்துடன் நன்றாகப் படித்தும் இருக்கிறாள். தகப்பனுக்கு ஒரே பெண். உன் மாமனுக்கு ஏராளமாகப் பணமிருப்பதால் நல்ல சீதனங் கிடைக்கும். என்ன சொல்லுகிறாய்?............" என்று நயமாகக் கேட்டார்.

சிவசைலம் நெற்றியைப் பிசைந்துகொண்டு பெருத்த யோசனையில் ஆழ்ந்தான்.

கார்த்தியாயினி இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டேயிருந்தாள். சிவசைலத்தின் தாய், தான் அவனோடு ஓடி வந்துவிட்டதையறிந்தால் என்ன நினைப்பாள் என்று எண்ணியபோது, அவள் நெஞ்சில் சுருக்கென்று குத்தியது. அவர்கள் பேசும் தோரணையைப் பார்த்தால், தன்னைப் பற்றிப் பேச்சு அங்கு நடக்கவில்லை என ஒருவாறு ஊகித்துக்கொண்டு திருப்தியடைந்தாள். சிவசைலத்தின் தாய் தன் மகனுக்கு தம்பி மகளை அறிமுகப்

படுத்தி வைத்துப் பேசுவதைக் கண்டதும் இவள் மனம் என்னென்னவோ பலவிதமாக எண்ணி ஏங்கியது.

இந்நிலைமையில் கார்த்தியாயினியின் பக்கத்து சோபாவில் அமர்ந்திருந்த ஒரு கனவான் சிவசைலம் எழுந்து போனதை யறிந்ததும், மெல்ல இவளிடம் பேச்சுக் கொடுக்கலானார். ஆனால், கார்த்தியாயினி அதற்கிடங் கொடுக்கவில்லை.

நாடகம் மீண்டும் ஆரம்பமாயிற்று. கார்த்தியாயினி நாடகத்தைக் கவனிக்கலானாள். இந்நாடகத்தின் போக்கு பிள்ளையின் பிரிவால் வாடி வருந்தும் அவளது மனநிலையைப் பிரதிபலித்துக் காட்டுவதுபோ லிருந்ததால், மிக ஊக்கமாக அதை முதலிலிருந்தே அவள் பார்த்து வந்தாள். அதனாலேயே, சிவசைலத்தின் இடைவிடாப் பேச்சிலும் அவள் அசிரத்தை காட்டலானாள்.

நாடகத்தில் ராஜசேகரனை அவனது உண்மைப் பெற்றோர் கண்டுபிடித்துக் குடியான தம்பதிகளிடமிருந்து அழைத்துப் போகும் கட்டம் வந்தது. இக்கட்டத்தில் வளர்ப்புத் தந்தையான குடியானவன் ராஜசேகரனைப் பிரிய—அதிலும் தன் தள்ளாத வயதில் பிரிய—மனமில்லாது வருந்துமிடத்தில் குடியானவர் வேடம் பூண்டவர், அந்நிலையை உண்மையாகவே அநுபவிப்பவர்போல் சோக பாவத்தை நன்கு வெளிப்படுத்தி நடித்தார். முத்துசாமி கவுண்டர் பிரியா விடைபெற்று ராஜசேகரனை அழைத்துச் செல்லுகையில், குடியானவன், "சேகர்! சேகர்!! சேகர்!!!" என்று கைகளை நீட்டிக் கதறிக்கொண்டே மூர்ச்சையாய் விழுந்தான்.

இச்சோக பாவமான கட்டம் நாடகம் பார்ப்போர் யாவர் மனதையும் உருக்கிவிட்டது. கார்த்தியாயினி உண்

மையிலேயே மனங் கரைந்து அழுதுவிட்டாள். இத்தனை நாட்களாகப் புதுக் காதல் வெள்ளத்தில் மூழ்கியிருந்த பிள்ளைப் பாசம் இச்சமயம் மேலெழும்பிவிட்டது. அவள் உணர்ச்சி வயப்பட்டுவிட்டாள். குடியானவன் "சேகர்! சேகர்!!" எனக் கதறி விழும்போது, இங்கு இவளும் தன்னை மறந்து "அம்பி! அம்பி!! என் ராஜா" என்று வாய் விட்டுக் கதறியவண்ணம் மூர்ச்சையாய் விழுந்துவிட்டாள். இதைக் கண்டு சுற்றி யுட்கார்ந்திருந்த சீமான் சீமாட்டிக ளெல்லாம் பதை பதைத்தெழுந்து அவளருகு சென்றனர். தாயோடு பேசிக்கொண்டிருந்த சிவசைலமும் கார்த்தி யாயினி அலறி விழுந்ததைக் கேட்டு ஒரே தாவாகத் தாவி ஓடிவந்தான்.

சிவசைலம் மூர்ச்சித்து விழுந்திருக்கும் கார்த்தியாயி னியைப் பரபரப்போடு வாரியெடுத்துத் தன் மார்பின் மீது சார்த்திக்கொண்டு மேல் உத்தரீயத்தால் விசிறலானான். இதற்குள் சிலர் தண்ணீர் கொண்டுவரவே, அது முகத் தில் தெளிக்கப்பட்டது. வேறு சிலர் யோசனைப்படி, சிவசைலம் ஸ்பென்ஸர் சோடாவை உள்ளுக்குப் புகட்டி னான். இவ்வித சைத்தியோபசாரங்களெல்லாஞ் செய்த பிறகு, கார்த்தியாயினி மெல்ல மூர்ச்சை தெளிந்தெழ லானாள். ஆயினும் அவளுக்குப் புத்திர சோகம் மட்டும் இன்னும் நீங்கவில்லை. எனவே, சிவசைலமும், மற்றவர் களும் எவ்வளவோ தேற்றியும் கார்த்தியாயினி முன் போல் உற்சாகமா யிருக்க முடியவில்லை. சிவசைலத்துக்கு இவளை ஏன் இந்நாடகத்துக்கு அழைத்துவந்தோமென் றாய்விட்டது. இச்சம்பவத்துக்கப்புறம்-நாடகம் முடிந்து தத்தம் வீடுகளுக்குப் போகையில்கூட—சிவசைலமும், அவனது தாயும் உறவினர்களும் ஒருவரை யொருவர் சந் திக்கவே யில்லை.

# ஏழாவது அதிகாரம்

## பிள்ளைப் பாசத்தால் பேதை தவிப்பு

ஒருநாள் பிற்பகல் மூன்று மணியிருக்கும். சிவசைலம் ஏதோ ஒரு முக்கிய வேலையாக வெளியே சென்றிருந்தான். கார்த்தியாயினி மன நிம்மதியின்றி வீட்டுக் கூடத்தில் இப்படியும் அப்படியுமாக, உலவிக் கொண்டிருந்தாள். அவ்வாறு உலாவிக் கொண்டிருந்தவள் திடீரென நின்றாள். அவளுக்கு ஏதோ யோசனை ஏற்பட்டது போலிருக்கிறது. உடனே தன்னறைக்குச் சென்று மேஜையைத் திறந்து காகிதங்களை யெடுத்து அவசர அவசரமாக எழுதலானாள். சில நிமிடங்களுக்கெல்லாம் இரு கடிதங்கள் எழுதி முடித்தாள். அவைகளில் ஒன்று சிவசைலத்துக்கு; மற்றொன்று அவளது உயிர்த்தோழி நளினிக்கு. சிவசைலத்துக்கு எழுதப்பட்ட கடிதம் பின்வருமாறு:—

என் ஆருயிர்க் காதலர்க்கு,

நான் ஒரு முக்கிய காரியத்தை முன்னிட்டு அவசரமாக வெளியே செல்லுகிறேன். அது பற்றிய விவரத்தைப் பிறகு உம்மிடம் கூறுகிறேன். கூடிய சீக்கிரம் திரும்பி வந்து விடுவேன். உம்மிடம் நேரில் சொல்லிப் போகாததற்கு மன்னிக்கவும்.

காதலுக்கு அடிமைப்பட்ட

கார்த்தியாயினி.

தோழி நளினிக்குக் கீழ்க்கண்டபடி கடிதம் எழுதி யிருந்தாள்:—

அருமைத் தோழி நளினிக்கு,

நலம். நலத்தை யறிய விரும்புகிறேன். எஜமானர் எப்படி யிருக்கிறார்? இன்னுங் கோபமாகவே இருக்கிறாரா? அவர் தற்சமயம் 'ஊட்டி'யி லிருப்பாரென்று நினைக்கிறேன். எனது அருமைக் கண்மணி அம்பிகாபதியைக் காண எனக்கு ஆசை அதிகரித்து அது என்னைப் பிடுங்கித் தின்கிறது. இதனால் நான் ஊண் உறக்கமில்லாது வாடி வருந்துகிறேன். அவர் மாளிகையில் இல்லாத சமயம் அறிந்து எனக்கு உடனே பதிலெழுது. நான் இப்போது என் தமையனார் வீட்டிலிருக்கிறேன். உன் கடிதத்தை ஒவ்வொரு விநாடியும் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருப்பேன். உடனே பதில் எழுத மறந்து விடாதே.

அன்புள்ள
கார்த்தியாயினி.

இவ்விரு கடிதங்களையும் இரு உறைகளில் தனித் தனியாகப் போட்டு ஒட்டி மேல் விலாசம் எழுதினான். வேலைக்காரனைக் கூப்பிட்டு, நளினிக்கு எழுதிய கடிதத்தை அவனிடம் கொடுத்து, உடனே அதை யெடுத்துக் கொண்டுபோய் தபாலில் போட்டுவிட்டு வரும்படி கட்டளை யிட்டாள்.

சிவலிங்கத்துக்கு வரைந்த கடிதத்தை மேஜையின் மீதே வைத்துவிட்டு, கார்த்தியாயினி உள் சென்று அவசர அவசரமாக உடுத்திக் கொள்ளலானாள். ஏதோ தனக்கு முக்கியமென்று தோன்றிய சில சாமான்களை யெடுத்து,

ஒரு சிறு கைப்பெட்டியில் வைத்துப் பூட்டினாள். அடுத்த கணம், கைப்பெட்டியையும், கடிதத்தையும் எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்து, சமையல்காரனைக் கூப்பிட்டாள். அவன் உடனே அங்கு தோன்றிப் பணிவோடு வணங்கினான். கார்த்தியாயினி அவனிடம் தன் கையிலிருந்த கடிதத்தை நீட்டியவண்ணம், "கந்தசாமி, இந்தக் கடிதத்தை ஐயா வந்தவுடன், அவரிடங் கொடு. நான் ஒரு அவசர காரியத்தை முன்னிட்டு வெளியே போகிறேன். சீக்கிரம் திரும்பி வந்து விடுவதாக அவரிடங் கூறும் ஜாக்கிரதை" என்று கூறிவிட்டு விரைவாகப் புறப்பட்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தாள்.

கார்த்தியாயினி வெளியே சென்ற ஒரு மணி நேரத்துக்கெல்லாம், சிவசைலம் வீட்டுக்கு வந்தான். வரும் போதே அவன் ஆர்வத்தோடு, "கார்த்திகா! கார்த்திகா!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தான். ஆனால் பதிலில்லை. எனவே, அவன் மீண்டும் உரத்த குரலில், "கார்த்திகா! கார்த்திகா!! நான் உன்னைத் தேடி அலைவதை வேடிக்கை பார்க்க வேண்டுமென்று எங்காயினும் ஒளிந்திருக்கிறாயா என்ன!—கண்ணல்ல; ஓடிவந்து விடு. என்னெதிரே வா; ராஜாத்தி" என்று கூவிய வண்ணம் ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்த்துக்கொண்டு வந்தான். "எங்கேயும் காணோமே! ஒருவேளை பின் புறத்திலுள்ள தோட்டத்துக்கு உலாவப் போயிருப்பாளோ! என்னவோ! அங்கே போய்ப் பார்ப்போம்" என்று தன்னுள் கூறியவண்ணம் புறக்கடை பக்கமாகப் போனான்.

இச்சமயம், சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்த கந்தசாமி, இருந்தாற்போலிருந்து ஏதோ சங்

தடி கேட்பதை யுணர்ந்து வெளியே வந்து பார்த்தான். சிவசைலம் புறக்கடை பக்கமாகச் செல்வதைக் கண்டதும், "எஜமான்! எஜமான்!! இந்தாங்க. அம்மா உங்களிடம் இந்த கடிதாசியைக் கொடுக்கச் சொல்லிவிட்டு எங்கேயோ வெளியே போயிருக்காங்க; சீக்கிரம் வந்தாடறதாகவுஞ் சொல்லச் சொன்னாங்க" என்று கூறிய வண்ணம் உள்ளே ஓடிப்போய்க் கடிதத்தை யெடுத்துவந்து கொடுத்தான்.

சிவசைலம் ஆச்சரியத்தோடு கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். விஷயத்தைப் படித்ததும் அவனுக்கு வியப்பு இன்னும் அதிகமாயிற்று. "என்ன அப்பேர்பட்ட முக்கிய காரியம்? என்னிடங்கூடச் சொல்லிக்கொள்ளாது-நான் திரும்பி வரும்வரைகூடக் காத்திருக்காது—அவ்வளவு அவசரமாக வெளியே செல்லவேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? எங்கே சென்றிருப்பாள்? இவ்வூரில் அவளுக்குத் தெரிந்தவர்கள் இருப்பதாக அவள் என்னிடம் இதுவரை கூறியதில்லையே! அப்படியிருக்க யாரை நாடி அவள் சென்றிருக்க முடியும்? ஆச்சரியமாகவல்லவோ இருக்கிறது! சில நாட்களாகவே இவளது புத்தி சரியான நிலையில் இல்லை. என்னமோ இவள் செய்கையிலும் பேச்சிலும் எனக்கு வரவர அலுப்பு ஏற்பட்டு வருகிறது. அவள் திரும்பி வரட்டும். அவள் என்ன சமாதானஞ் சொல்கிறாள் என்று பார்ப்போம்" என்று பலவாறு யோசனை செய்தவண்ணம் தன் அறையையடைந்தான்.

* * *

திருவனந்தபுரத்தில் திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளையின் மாளிகை யெதிரே ஒரு கோச்சு வண்டி வந்து

கின்றது. அதிலிருந்து கார்த்தியாயினி இறங்கினள். வேலையாட்கள் மூலமாக, இவள் வரவை யறிந்த கமலா தேவியும், தேவகியும் ஆச்சரியமும் சந்தோஷமும் ஒருங்கே கொண்டனர். எவ்வித முன்னறிவிப்பு மின்றி, திடீரென கார்த்தியாயினி வந்தது அவர்களுக்குப் பேராச்சரியத்தை யுண்டு பண்ணிவிட்டது. அவர்கள் ஆர்வத்தோடு ஓடிவந்து கார்த்தியாயினியை நகை முகத்துடன் நல்வரவேற்றனர்.

"என்ன மதனி, முன்னதாகக் கடிதங்கூடப் போடாமல், திடீரென வந்தீர்களே! ரயில் ஸ்டேஷனுக்குக்கூட காரை யனுப்ப முடியாமல் போய்விட்டதே! உங்களுடன் பணிப்பெண் முதலியவர்கள்கூட வரவில்லைபோ லிருக்கிறதே! என்ன சமாசாரம்!" என்று சாவதானமாகவே கேள்விகளைக் கேட்டுக்கொண்டே உள்ளழைத்துச் சென்ருள் கமலாதேவி.

இதற்குள் தேவகியும் தன் தமக்கையை ஒரு விதமாகப் பார்த்தவண்ணம், "ஏன் அக்கா! முகங்கூட வாடி வதங்கி யிருக்கிறது? ஒருவேளை அத்தானுடன் கோபித்துக்கொண்டு வந்துவிட்டாயா என்ன! நீ வாழ்க்கைப் பட்டு இதுவரை ஒருநாளும் இவ்விதம் வந்ததை நான் பார்த்ததே இல்லையே! என்ன நேர்ந்ததென்பதை எங்களிடம் கூறக்கூடாதா!" என்று இரக்கமாகவே கேட்டாள்.

கார்த்தியாயினி அவர்களது கேள்விகளுக்கு என்ன விதமான பதில் சொல்வதென்று திகைத்தாள். ஆயினும் தன்னிலைமையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு அம் மங்கையரின் கவனத்தை வேறு வழியில் செலுத்த எண்ணி, "அதிருக்கட்டும் அண்ணி; அண்ணு எங்கே?

சமஸ்தானத்துக்குப் போயிருக்கிறுரா வந்துவிடும் நேரந் தானே!" என்று கேட்டவண்ணம் தான் கொண்டுவந்த கைப்பெட்டியை அங்கிருந்த வட்ட மேஜையின்மீது வைத்தாள். கமலாதேவி கார்த்தியாயினியின் முக மாறுதல்களைக் கலக்கத்தோடு கவனித்துக்கொண்டிருந்தாளாதலால், இவள் கேட்ட கேள்விகள் அவளது காதில் சரியாக விழவில்லை. எனவே, அவளுக்குப் பதிலாக தேவகி "இல்லையக்கா! அண்ணு ஏதோ சமஸ்தான அலுவலாகக் கொச்சிக்குப் போய் மூன்று நாட்களாகின்றன. அவர் அநேகமாக நாளை மறுநாள்தான் ஊருக்குத் திரும்பி வருவாரென நினைக்கிறேன். எதற்கும் நாளை அவரிடமிருந்து கடிதம் வந்தால் தெரிந்துவிடும்" என்று பதிலளித்தாள்.

இப்பதிலைக் கேட்ட கார்த்தியாயினியின் முகம் திருப்தியைக் காட்டியது. தான் தன் கணவரிடஞ் சச்சர விட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறிச் சிவசைலத்துடன் வாழ்வதை, அவர்களாகவே அறிந்து கொண்டு கேட்டாலல்லது, தாமாகத் தன் கணவர் யாரிடமும் கூறமாட்டார் என்பது கார்த்தியாயினிக்கு நன்கு தெரியுமாதலால், தன்னடத்தை தன் தமையனுக்குத் தெரிந்துவிட்டதோ என அவள் அஞ்சவில்லை. அவ்விதம் அஞ்சியிருந்தால் அவள் திருவனந்தபுரத்துக்கே வந்திருக்க மாட்டாளல்லவா! ஆனுல், தான் தனியாகத் திடீரென வந்ததைப்பற்றி தன் தமையன் எக்கசக்கமாக ஏதேனுங் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியாது விழிக்கவல்லவோ நேரும்? தன் தத்தளிப்பு அவருக்குச் சந்தேகத்தை விளைவித்துவிட்டால் என்ன செய்வது என்றே மனக்கலக்க முற்றிருந்தாள். இந்நிலையில்

தமையன் ஊரிலில்லையென்று அறிந்ததும், அவள் பீதி யொழிந்து மனத் திருப்தி கொண்டதில் ஆச்சரியமில்லை. கமலாதேவி, தேவகி என்றால், இவர்களை எப்படியாவது சமாதானஞ் சொல்லிச் சரிப்படுத்தி விடலாமென்பது இவளது எண்ணம்.

இச்சமயத்தில் ஸர். பரமேஸ்வரம் பிள்ளையினுடைய குழந்தைகள் கார்த்தியாயினியின் குரலைக் கேட்டுவிட்டு "அத்தை! அத்தை!!" என்று மகிழ்ச்சியோடு கூவிக் கொண்டே ஓடிவந்து அவளது கால்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டன. கார்த்தியாயினி அச்சிறுவர்களையும் சிறுமிகளையும் ஒவ்வொருவராக ஆர்வத்தோடு வாரி யெடுத்துச் சேர்த்தணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு அனைவருக் கேற்றபடி குதலை மொழி பேசிக் கொஞ்சலானாள். இவ்விதம் அவள் அக்குழந்தைகளிடம் தன் அன்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கையில் அவளை யறியாமலே அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது.

கமலாதேவியும் தேவகியும், தங்கள் கேள்விகளுக்குக் கார்த்தியாயினி பதிலே சொல்லாது மழுப்பிவிட்டதைக் கண்டு, சந்தேகங் கொண்டனர். எனவே, அவர்கள் கார்த்தியாயினியின் ஒவ்வொரு செயலையுங் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் கார்த்தியாயினி குழந்தைகளோடு அளவளாவிப் பேசிக்கொண்டே கண்ணீர் விட்டதைக் கண்டு திடுக்கிட்டனர். இவள் ஏதோ மிகவும் மனம் புண்பட்டு வந்திருக்கிறாள் என்று அவர்கள் உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் அவளாகவே ஏதாகிலுஞ் சொன்னாலல்லது தாங்கள் எதுவுங் கேட்டு அவளைத் தொந்தரவு செய்வதில்லை யெனத் தீர்மானித்தனர்.

அண்ணன் குழந்தைகளோடு கொஞ்சுகையில் தன் அருமை மகனது ஞாபகம் வந்து கண்ணீருகுத்த கார்த்தி யாயினி ஒரு விநாடி தன்னை மறந்திருந்தாள். அடுத்த கணம் தன்னெதிரில் அண்ணியும் தங்கையும் இருப்பது நினைவுக்கு வரவே, அவசரமாகக் கண்ணைத் துடைத்த வண்ணம் முகத்தில் வலுக்கட்டாயமாகச் சிரிப்பை வரு வித்துக்கொண்டு, "ஆமாம், அண்ணி நம் தேவகிக்குக் கலியாணமாகி ஒரு வருஷத்துக்கு மேலாகப் போகிறுப் போலிருக்கிறதே! எதாகிலும்...." என்று இழுத்த வண் ணம் தேவகியை நோக்கினுள். தேவகி நாணத்தால் தலை குனிந்துகொண்டே வேருெரு அறைக்கு ஓடினுள். கமலா தேவி புன்சிரிப்போடு ஏதோ கூற வாயெடுத்தாள். இதற் குள் தேவகி கையில் பச்சிளங் குழந்தை யொன்றைத் தாங்கிக் கொண்டுவந்தாள். எனவே, கமலாதேவி தான் கூறவந்ததை நிறுத்திக்கொண்டாள். கார்த்தியாயினி தன் தங்கையின் குழந்தையை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டு கண்ணாரக் கண்டு களித்து முகத்தோடு முகஞ் சேர்த்தணைத்துக்கொண்டாள்.

இங்ஙனம், அன்றெல்லாம் குழந்தைகளோடு கொஞ் சிக் கொண்டும், அண்ணி, தங்கை ஆகியவர்களோடு பொது விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டும் அவள் காலம் போக்கலானுள். மறுநா ளாயிற்று. காலை எட்டு மணியிலிருந்தே தபால்காரன் வரவை எதிர்பார்த்து துடி துடித்துக் கொண்டிருந்தாள். தபால்காரனும் வந்தான்; ஆயினும் இவள் எதிர்பார்த்தபடி இவளுக்கு ஒரு கடித மும் வரவில்லை. இதனுல் அவள் மிகவும் பரபரப்படைந் தாள். இவள் இதுவரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சி யும் பொறுமையும் சகிக்க முடியாத நிலையை யடைந்தது.

மறு தபாலிலாயினும் தன் கடிதம் வருமென்று மிகவும் சிரமத்தோடு பொறுத்திருந்தாள், அதிலும் வரவில்லை.

எனவே, கார்த்தியாயினி பைத்தியம் பிடித்தவள் போல் கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு யாரிடமுஞ் சொல்லாது ஓடலானுள். உள்ளே ஏதோ வேலையாக இருந்த கமலாதேவியும் தேவகியும், வேலைக்காரர்கள் வாயிலாக விஷயமறிந்து வெளியே வந்து ஏககாலத்தில், "மதனி !! மதனி !! அக்கா ! அக்கா !! எங்கே போகிருய்?" என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தனர். கார்த்தியாயினி அவர்களைத் திரும்பிப் பாராமலே, "இதோ வருகிறேன்; இருங்கள்" என்று கையமர்த்திக் கொண்டே விரைந்து நடந்தாள். வேலையாட்க ளெல்லாம் திகைத்து நின்றனர். கமலாதேவியும் தேவகியும் ஒன்றுந் தோன்ருது கலங்கி நின்றனர். குழந்தைகள் காரணமறியாது அழுதன.

* * *   * * *   * * *

மறுநாள் காலை, தேனும்பேட்டையிலுள்ள திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை பங்களாவில் கார்த்தியாயினி வேகமாக நுழைந்தாள். இவளது எதிர்பாரா வருகையைக் கண்ட வேலையாட்கள் முதல் மாளிகையிலுள்ள அனைவரும் வாயெழாது திகைத்து நின்றனர். ஆனுல், அவர்கள் தலைகள் கார்த்தியாயினி முன் வணங்கின. கார்த்தியாயினி யாரையும் இலட்சியஞ் செய்யாது நேரே மாளிகையின் மேன்மாடிக்கு விரைந்து சென்ருள். அருமந்த பிள்ளையைக்காண வேண்டுமென்ற ஆர்வத்தில், தன் கணவர் இருப்பதைப்பற்றியோ, இல்லாததைப் பற்றியோ சிறிதும் இலட்சியஞ் செய்யவேயில்லை. பிற னெருவனேடு சென்றுவிட்ட தன்னை, அவர் கண்டால் என்ன

செய்வார் என்ற பயங்கூட அவள் நெஞ்சில் அச்சமயம் இல்லை. பிள்ளைப் பாசத்தின் முன் எல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடி விட்டன.

மேன்மாடியில் தோழி நளினி அம்பிகாபதிக்கு ஏதோ வேடிக்கை காட்டி மகிழ்ச்சி யூட்டிக்கொண்டிருந்தாள். இச்சமயத்தில் கார்த்தியாயினி அங்கு போய்ச் சேரவே, நளினி நடுங்கிப் போய்விட்டாள். கார்த்தியாயினி அம்பிகாபதி இருக்குமிடத்தில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள். நெடுநாள் பிரிந்திருந்த தன் தாயைக் கண்டதும் அம்பிகாபதி நளினியிடமிருந்து ஒரே குதியாகக் குதித்துத் தாயண்டை தாவினன். அடுத்த கணம் கார்த்தியாயினி அம்பிகாபதியை இரு கைகளாலும் வாரி யெடுத்து முகத்தோடு முகம் வைத்துக் கண்ணீர் விட்டுக் கதறினள். அம்பிகாபதியும் தன் தாயின் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

தாயும் சேயும் இதுவரை எற்பட்டிருந்த பிரிவாற்ருமையைச் சகியாது துயரத்தால் நீண்ட நேரம் ஒருவரையொருவர் இறுகக் கட்டிக்கொண்டு பொருமினர். அவர்கள் கண்களிலிருந்து நீர், ஊற்று நீர் போலப் பெருகி வழிந்தோடிக் கொண்டேயிருந்தது; இவர்களது துன்ப நிலையைக் கண்ட தோழி நளினியும், மற்றும் வேலையாட்களும் மனமுருகிக் கண்ணீர் விட்டனர்.

நீண்ட நேரத்திற்குப் பிறகே கார்த்தியாயினி தன் னுணர்வு வரப் பெற்ருள். தன்னை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த மகனை அவள் ஆர்வத்தோடு முத்தமிட்டாள்; உச்சி மோந்தாள்; முகத்தோடு முகம் பொருத்தி நெட்டுயிர்த்தாள். மகனை அன்போடு கட்டித் தழுவி முத்த மிடும்போது எற்படும் அகக்களிப்புக்கும்,

உடற் பூரிப்புக்கும், காதலனது காதற் பிணைப்பில் கட்டுண்டு இருக்கையில் உண்டாகும் உள்ளக் கிளர்ச்சிக்கும், இன்ப உணர்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தை—வேறுபாட்டை—கார்த்தியாயினி இப்போதே நன்ருக உணர்ந்தாள். குழந்தையோடு குலாவுகையில் தெய்வீக அன்பும், காதலனேடு களியாட்டு அயர்க் திருக்கையில் மிருக வுணர்ச்சியும், காமமும் முனேந்து நிற்பதை அவள் அநுபவத்தில் கண்டாள். எனவே, அவள் அம்பிகாதிபதியைப் பலமுறை ஆர்வமுறத் தழுவியும், முத்த மீந்தும், உச்சி மோந்தும் புளகித முற்ருள். அம்பிகாபதியும் தன் தாய்க்கு இத்தனே நாட்களாகக் கொடுக்க முடியாதிருந்த அன்பு முத்தங்களே வட்டியும் முதலுமாகச் சேர்த்து நெற்றியிலும் கன்னங்களிலும் அதரத்திலும் மார்பிலும் தோளிலுமாக மாறி மாறிக் கொடுத்தான். கடைசியாக கார்த்தியாயினி தன் மகனே மார்பினின்றுங் கீழே இறக்கி அங்கிருந்த சோபா வொன்றன் மீது உட்காரவைத்து தான் முழந்தாட் படியிட்டு அமர்ந்து அவனது சுருண்டு முன் விழுந்திருக்கும் தலேமயிரைக் கைகளால் நீவிய வண்ணம் கண்களாற அவனே நோக்கிக் கொண்டிருந்தாள்.

அம்பிகாபதி தன் தாயின் முகவாய்க் கடையைப் பிடித்துக் கொண்டு, "அம்மா! அம்மா!! இத்தனே நாளா என்னே விட்டுட்டு எங்கம்மா போயிருந்தே!................" என்று இரக்கமாகக் கேட்டான்.

இக்கேள்வியைக் கேட்டு கார்த்தியாயினியின் கண்கள் மீண்டும் கலங்கின.

சிறுவன் மீண்டும் பேசத் தொடங்கி, "எம்மா! பேசாமே இருக்கிறே! ஒன்றும் சொல்ல மாட்டேன்

றையே!—மாமா ஆத்துக்கா போயிருந்தே? என்னண்டே கூடச் சொல்லாதே போயிட்டேயேம்மா! என்னை உன் னோடே அழைச்சிண்டு போவக் கூடாதம்மா! நா நாமா வை—மாமியைப் பார்த்திருக்கிறேனே ஒழிய, மாமா ஆரைப் பார்த்ததே யில்லையேம்மா!——

இடையிடையே 'ஊம்; ஊம்' போட்டுக் கொண்டு பேசிவந்த அம்பிகாபதி தொடர்ந்து பேசமுடியாமல் பெரு மூச்சு விட்ட வண்ணம் சிறிது நேரமிருந்தான்! பிறகு அவன் எதையோ நினைத்துக்கொண்டவன்போல், "அம்மா! என்னை விட்டுட்டு ஊருக்குப் போயிட்டயா? நான் அப்பா வைக் கேட்டேன்: 'அம்மா எங்கே'ன்னு. நீ செத்துப் போயிட்டேன்னு அப்பா சொன்னார். நான் இப்படிக் கேட்டதும் எப்படி அழுதேன் தெரியுமாம்மா? உன்னை நினைச்சிண்டு அழுதேன். தூங்காமே, சாப்பிடாமே தொந் தரவு பண்ணினேன். ஒருநாள் அப்பா கோவிச்சிண்டு 'அம்மாவைக் கேட்காதே! கேட்காதே!'ன்னு என்னை நன்னா அடிச்சாரும்மா!" என்று கூறிக்கொண்டே விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டான்.

கார்த்தியாயினியுந் துக்கத்தை யடக்கமாட்டாமல் தன் மகனைச் சேர்த்தணைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள்.

சிறிது நேரம் தாயும் மகனும் இந்நிலையி லிருந்தனர். பிறகு, தான் களங்கமற்றதன் அருமை மைந்தனைத்தேற்று வதை விட்டு உடன் சேர்ந்து அழுதது அவனுக்கு மேலுந் துயரத்தை யுண்டுபண்ணுவது புத்திசாலித் தனமல்ல எனக் கார்த்தியாயினி உணர்ந்து அவசர அவசரமாகத் தன் முந் தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு, அம்பிகா

பதியின் கண்களையும் துடைத்துத் தேற்றி அவனை வேறு கவனத்தில் செலுத்த வேண்டி ஏதோ சம்பந்தா சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசலானாள்.

தன் தாய் கூறிவரும் பேச்சுக்கு 'ஊம்' கொடுத்துக் கேட்டுக்கொண்டு வந்த அம்பிகாபதி மீண்டும் எதையோ நினைத்துக் கொண்டவன்போல் கார்த்தியாயினியின் முகத்தைத் தனக்கு நேராகத் திருப்பி, "அம்மா! இதைக் கேட்டையாம்மா! நீ இல்லாதே போகவே அந்த தாடி வாத்தியார் என்னைச் சும்மானு ரொம்ப அதட்டரா ரும்மா!....நான், 'அம்மா நம்மோட டில்லையே! நம்மை வுட்டுட்டுப் பூட்டாங்களே'ன்னு உன்னையே நினைச்சிண்டு வருத்தப்பட்டுண்டு இருந்தா—ஆமாமான்னு! உன்னைக் காணாதபோகவே எனக்கு என்னமோபோல் இருந்துதும்மானு! அப்பாவுந்தான் என்னென்னமோ வேடிக்கை காட்டினார்; தினுசு தினுசா பக்ஷணம், பிஸ்கோத்து, சாக்கலேட் எல்லாம் வாங்கித் தந்தார்—எனக்கு ஒண்ணு மேலேயும் புத்தி போவவேல்லே! அது என்னமோ! உன்னை நினைச்சிண்டு தனியே உட்காந்து அழுதிண்டிருந்தா—அந்த தாடிக் கிழம் காத்தாலேயும் சாயங்காலமும் அங்கிருந்து (இச்சமயம் அம்பிகாபதி சோபாவை விட்டுத் துள்ளி யெழுந்து கீழே குதித்து தன் தாயின் முன்னே வாத்தியார் நடந்து வருவதைப்போல் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு கழுத்தை ஒரு பக்கமாக வளைத்துப் பார்த்தவண்ணம் பெருமித நடைநடந்து காட்டியவாறு) வந்து, "அம்பீ! அம்பீ!! அங்கே என்ன செய்யறே? இங்கே வா! நான் கொடுத்துட்டுப் போன பாடத்தைப் படிச்சையா! எதோ!! புஸ்தகத்தை யெல்

லாம் எடுத்துவா" என்று ரொம்பவெல்லாம் அதிகாரம் பண்ணுமுரும்மா!-அந்தக் கிழத்தைப் பார்த்தாலே எனக்கு என்னமோ போல இருக்குதும்மா! அதன் வழுக்கைத் தலையும், குரங்கு மூஞ்சியும், காடிக் கிருக்கிழுப்போல உள்ள தாடியும், அது கண்ணுடி போட்டிருக்கிற மாதிரி யும் பார்த்தாலே எரிச்சலா யிருக்கும்மா!—வந்தா பாடஞ் சொன்னமா, போனமான்னு இருக்கிறதில்லே. ஆன் கனைக் கிற மாதிரி கனைத்துக்கொண்டே நாற்காலியில் உட்காரு வதற்கு ஒரு மணி நேரம், உட்கார்ந்த பிறகு மூக்குக்கண் ணுடியைக் கழட்டித் துடைச்சி அழகு பார்த்துப் போட் டுக்கிறதற்கு ஒரு மணி நேரம்; அப்புறம் தாடியை யுருவிக் கொண்டிருப்பதற்கு ஒரு மணி நேரம்; இவ்வளவும் ஆன பிறகு, ஏதோ புஸ்தகத்தைப் புரட்டறது; எனக்கு விளங் காததை எதெதோ பாடஞ் சொல்றது; கேள்வி கேட் கிறது........" என்று தன் வாத்தியார் பிரபாவத்தை கூறிக் கொண்டே, அவர் எப்படி யெப்படி யெல்லாம் கண்ணுடி யைக் கழற்றிப் போடுவாரோ, தாடியை யுருவுவாரோ அப் படி யெல்லாஞ் செய்து காட்டினுன்.

இதை யெல்லாங் கேட்டுவந்த கார்த்தியாயினிக்குத் தன் துக்கமெல்லாம் மறந்தே போய்விட்டது. சிறுவனின் மனநிலை அல்லது குறிப்பறியாது ஏதோ தான் வாங்குகிற பணத்துக்குக் கடமையைச் செய்து கழித்துவிட்டுப் போகவேண்டுமே என்று வந்து பாடஞ் சொல்லிவிட்டுப் போகும் ஏழை உபாத்தியாயரின் நிலைமைக்கு ஒருபக்கம் இரங்கினுளாயினும், தன் மகன் ஒருவாறு உபாத்தியாய ரின் முட்டாள்தனத்தை யறிந்து பரிகாசம் பண்ணிப் பேசு வதைக் கேட்டு கார்த்தியாயினி விழுந்து விழுந்து சிரிக்க லானுள். அம்பிகாபதியும் முல்லை மொட்டுகள் போன்ற

சிறு பற்களைக் காட்டிச் சிரித்தவண்ணம் மேலும் தன் உபாத்தியாயரைக் குறித்து ஏதோ கூறிக்கொண்டே வந்தான்.

இச்சமயம் கூடத்துக்கு வெளியிலிருந்து யாரோ உள்ளே நுழைவது போன்ற காலடி யோசை கேட்டு அம்பிகாபதி பேச்சைத் திடீரென நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்க்கலானான். அவன் யாரைப் பற்றி இவ்வளவு நேரம் கேலியாகப் பேசிக்கொண்டிருந்தானோ, அந்த உபாத்தியாயர் அப்போதுதான் வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அம்பிகாபதியின் முகம் மாறுபட்டது. அவன் பயந்துபோய்த் தன் தாயண்டையோடி அவளைச்சேர்த்துக் கட்டிக்கொண்டான். கார்த்தியாயினி கூடத்து வாயில் பக்கமாக முதுகைத் திருப்பிய வண்ணம் தன் மகனைப் பார்த்துக்கொண்டிருந்ததால், வருபவர் யார் என்பதைக் கவனிக்கவில்லை. தன் மகன் திடீரெனப் பேச்சை நிறுத்தி விட்டு முக வேறுபாட்டோடு தன்னை வந்து கட்டிக்கொண் டதைக் கண்டதும், தன் கணவர்தான் வந்துவிட்டாரோ என்னமோ எனக் கருதிப் பயந்துபோய் திடுமென எழுந்து மெள்ளத் திரும்பிப் பார்த்தாள். வந்தவர் உபாத்தியாயர் என்று அறிந்த பிறகுதான் அவளது தேகநடுக்கம் நின் றது; மனமுஞ் சாந்தியடைந்தது.

உபாத்தியாயர் இவளைப் பார்த்து வணக்கஞ் செலுத் தினார். இவளும் பிரதிவந்தனஞ் செய்தாள். பிறகு, தன் மகனது அச்சத்தைப் போக்குதற்காகவேண்டி, அவரை வெளியே போயிருக்கும்படி சைகை காட்டினாள். எனவே, அவர் வேறொன்றும் சொல்ல முடியாது வெளியே போய் விட்டார். வேலையாட்கள், கணக்குப் பிள்ளை முதலியவர்க ளெல்லோரும் ஏற்கனவே வெளியே போய்விட்டுத்தான்

அங்கிருந்து உள்ளே என்ன நிகழ்கிறதென்று மறைந்து நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். கார்த்தியாயினியின் தோழியும், அம்பிகாபதியின் வளர்ப்புத் தாயுமான நளினி மட்டுந்தான் வாயிற் கதவோரத்தில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தாள்.

தாயும் பிள்ளையும்—அதுவும் நீண்டநாள் ஒருவரையொருவர் பிரிந்திருந்த தாயும் பிள்ளையும் அளவளாவி மகிழ்வதற்குக் காலமோ அல்லது நேரமோ இவ்வளவென்று வரையறுக்க முடியுமோ! முடியவே முடியாது. ஆகவே, கார்த்தியாயினி அம்பிகாபதியிடம் ஏதேதோ கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் குலாவி மகிழலானாள். சிறுவனும் தனது வாய் நிரம்பா மொழிகளால் தாய்க்கு இன்பமூட்டிக் கொண்டிருந்தான். இதனிடையே நளினி, காந்திமதிநாதம் பிள்ளை வரும் நேரம் என்று குறிப்பதற்கோ என்னவோ, கார்த்தியாயினி கண்ணுக்குத் தெரியும்படியாக அவர்கள் இருக்கும் பக்கமாக வந்து வந்து போய்க் கொண்டிருந்தாள். ஆனால் பிள்ளைப் பாசத்தால் கட்டுண்டிருந்த கார்த்தியாயினி இதையெல்லாங் கவனிக்கவேயில்லை.

இச்சமயத்தில் இருந்தாற்போலிருந்து கூடத்தறைக்கு வெளித் தாழ்வாரத்தில் ஒருவித சந்தடி கேட்கலாயிற்று. அங்குள்ளவர்களிடையே பரபரப்பு காணப்பட்டது. சிலர் ஜன்னல் பக்கமாக ஓடி எட்டிப் பார்த்து மற்றவர்களுக்கு ஜாடை காட்டுவதும், வேறு சிலர் ஒன்றுகூடி தங்களுக்குள் குசுகுசுவெனப் பேசிக்கொள்வதுமாயிருந்தனர். நளினி இதையறிந்து வெளியே ஓடினாள். விஷயமறிந்தவுடன் ஏதோ நெருப்பை மிதித்தவள்போல் பரபரப்புடன் உள்ளே ஓடிவந்தாள். கார்த்தியாயினிக்குப்,

பின்னே போய் நின்ருன். ஏதோ கூற வா யெடுத்தவன், நாவெழாது திகைத்து நின்று மீண்டும் வெளியே போனுன். இவ்வாறு கைகளைப் பிசைந்துகொண்டு இரண்டு மூன்று முறை போவதும் வருவதுமாய் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தான். வெளியே ஏற்பட்டுள்ள சந்தடியோ பரபரப்போ, கனினி இப்படி யப்படி ஓடுவதால் ஏற்பட்ட காலடியோசையோ கார்த்தியாயினியின் கவனத்தையோ அம்பிகாபதியின் கவனத்தையோ கவரவில்லை. அன்புலகில் திலைக்கொண்டிருந்த அவர்களுக்கு இக்குழப்பமெல்லாம் எவ்வாறு அவ்வளவு எளிதில் சென்று தாக்கும்? கனினிக்கோ, குமாஸ்தாவுக்கோ, மற்றவர்களுக்கோ கார்த்தியாயினி யிடஞ் சென்று தகவலைத் தெரிவிக்கத் தைரிய மேற்படவில்லை. ஆகவே, எல்லோரும் ஒன்று சேர்ந்து உபாத்தியாயரை அனுப்பினர். அவருஞ் சிறிது தயங்கினாராயினும், உபாத்தியாயர் தோரணையை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க மனமில்லாது மெள்ள அடிமேலடி யெடுத்து நடந்து கார்த்தியாயினி யிருக்குமிடஞ் சென்று, "சீமாட்டி!........" என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

அப்போதே சுற்றுணர்ச்சியை யறியச் சக்தி பெற்ற கார்த்தியாயினி அம்பிகாபதியைச் சேர்த்தணைத்த வண்ணமே திரும்பி "என்ன சார்! என்ன சமாசாரம்?" என்று கேட்டாள்.

உபாத்தியாயர் தயக்கத்தோடு "அம்மா! ஐயா..." என்று இழுத்தார்.

"ஐயா என்ன! ஐயா வருகிருரா என்ன! சீக்கிரம் கூறித் தொலையுமே!" எனப் படபடப்போடு பேசினுள்.

இதற்குள் தாழ்வாரத்திலிருந்தவர்கள், "ஐயோ! வந்துவிட்டாரே! இதோ வந்துவிட்டாரே! என்ன செய்வது!" என்று தங்களை யறியாத பயத்தால் கூவினர். நளினி வேகமாக உள்ளே ஓடிவந்து முகம் விகாரமாக, "அம்மா! ஐயா வந்துவிட்டாரே! மெத்தைப் படிக்கட்டை ஏறிட்டாரே!—கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்திருக்கிறாரே! நாங்கள் என்ன செய்வோம்? எங்களுக்கு என்ன தண்டனை விதிப்பாரோ!—அம்மா! எங்கேயாயினும் ஒளித்துக் கொள்ளுங்களேன். சீக்கிரம்; சீக்கிரம். அவர் கண்களில் பட்டுவிட்டால்....அப்புறம்..." என வாய்விட் டலறினாள்.

இவற்றைக் கேட்டாளோ இல்லையோ கார்த்தியாயினி உன்மத்தம் பிடித்தவள்போல், அம்பிகாபதியை அப்படியே உட்கார வைத்துவிட்டு ஒன்றுந் தோன்றாதவளாய் வெளியே ஓடலானாள். விஷயமறியாத சிறுவன் அம்பிகாபதி திடீரென அங்கு ஏற்பட்ட பெருமாறுதலைக் கண்டு சில நாடிகள் திகைத்து நின்றானாயினும், அப்புறம், "அம்மா! அம்மா! எங்கே போறே என்னை விட்டுட்டு...." என்று கூறிக்கொண்டே அவளைப் பின்தொடர்ந்து ஓடி வந்தான்.

கார்த்தியாயினி தாழ்வாரத்தை யடைந்த அதே நேரத்தில் காந்திமதிநாதம்பிள்ளை அங்கு வந்துவிட்டார். உபாத்தியாயரும், நளினியுந் தெரிவித்த தகவல்களைக் கொண்டு, தன் கணவர் அப்போதுதான் மோட்டாரில் வந்து இறங்கியிருக்கிறார்; அவர் மேன்மாடிக்கு வருவதற்குள் தான் படபடவென்று கீழே இறங்கி பின்புறத் தோட்ட வழியாகப் போய் விடுவதென்ற தீர்மானத்தோடு விரைந்தோடிய கார்த்தியாயினி அவர் கண்ணெதிரிலேயே அகப்பட்டுக்கொள்ள நேர்ந்ததை யறிந்து,

திகைத்துப் பின்னடைந்து அங்கிருந்த சோபா வொன்றின் பிடியைப் பிடித்துக்கொண்டு சாய்ந்துவிட்டாள். திவான் பகதூர் பிள்ளையும் கார்த்தியாயினியின் வருகையைச் சிறிதும் எதிர் பார்த்தவரல்லவாதலால், அவளை அங்கு கண்டதும் ஒரு நிமிடம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். அங்கிருந்த மற்றவர்கள் உபாத்தியாயர்களுட்பட யாவரும் அப்படியே நடு நடுங்கி நின்றுவிட்டனர்.



சில நிமிடங்கள் அவ்விடத்தில் அமைதி நிலவியது. இந்நிசப்த நிலைமையை அம்பிகாபதி கலைத்து விட்டான். தன் தாயைப் பின் தொடர்ந்து ஓடிவந்த அச் சிறுவன் பெற்றோர் ஒருவரை யொருவர் கண்டதும் திடுக்கிட்டுப்பின்வாங்கித் திகைத்து நிற்பதைப் பார்த்துத் தானும் சிறிது தூரத்திலேயே தயங்கி நின்றுவிட்டான். இருந்தாலும், நிலைமையை உள்ளவாறு அறிய சக்தியற்ற பாலகன்தானே அவன்! ஆகவே, அவன் தன் பிள்ளையைப் பருவத்திற் கேற்றபடி, இவ்வளவு நாட்களாக எங்கோ சென்று தன்னை விட்டுப் பிரிந்திருந்த தாய் மீண்டும் போய்விடப் போகிறாள் என்ற எண்ணத்தால், சிறிது

நேரத்திற்கெல்லாம் தானிருந்த இடத்தினின்றும் துள்ளிக் குதித்து வந்து கார்த்தியாயினியின் கால்களைக் கெட்டியாகச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "அம்மா! என்னை மறுபடியும் விட்டுட்டுப் போயிடவா பார்க்கிறே! நான் உன்னை விடமாட்டேன். இதோ அப்பா கூட..............."



என்று கூறிக்கொண்டே வந்தான்.

சிறிதும் எதிர்பாரா வகையில் கார்த்தியாயினியைக் கண்டதால் இதுவரை ஸ்தம்பித்து நின்ற காந்திமதிநாதம் பிள்ளை சில விநாடிகளுக் கெல்லாம் உணர்வு வரப்

பெற்ளுர். உடனே அவர் தனது நிலைமையைச் சமாளித்துக் கொண்டார். காலடைவில் ஒருவாறு மறந்திருந்த பழைய சம்பவங்க ளெல்லாம் அவருக்கு நினைவு வரவே, அவரது உள்ளத்தில் கோபம் கொதித்தெழலாயிற்று. அவருடைய உடல் படபடத்தது. இந்நிலைமையில், அம்பிகாபதி கார்த்தியாயினியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு 'விடமாட்டேன்' என்று கூறுவதைக் கேட்கவே, அவருக்கு ஆத்திரம் பொங்கி யெழுந்தது. உடனே அவர் அம்பிகாபதியை நோக்கிக் கோபாவேசத்தோடு பாய்ந்து அவனைப் பிடித்திழுத்து வலப்புறமாக விட்டு, "நளினி! இந்தக் கழுதையை கீழே இழுத்துக் கொண்டு போ! சீக்கிரம்" என்று கூவினர்.

நளினி நடுக்கத்தோடு ஓடிவந்து, கட்டிடமே அதிரும்படியாக அழ ஆரம்பித்துவிட்ட அம்பிகாபதியைத் தூக்கிக்கொண்டு அவனது வாயைப் பொத்திச் சமாதானப்படுத்திய வண்ணம் வெளிச் சென்ருள். தங்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என அஞ்சி மெய் விதிர்ப்புடன் நின்றுகொண்டிருந்த மற்றவர்களும் இது தான் சமயமென்று மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவி வெளியேற லாயினர்.

கார்த்தியாயினியோ குனிந்த தலையை நிமிரவே யில்லை. அவளுக்கு அங்கு இருப்பது நெருப்பின்மீது நிற்பதுபோல இருந்தது. ஆனல், அவளுக்கு அவ்விடத்தை விட்டுச் செல்லவும் காலெழவில்லை. அங்கேயே நின்றிருக்கவும் தைரியமில்லை. உடல் நடுங்க, வியர்வை வழிய அவள் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

காந்திமதிநாதம் பிள்ளை முகத்தில் நெருப்புப் பொறி பறக்க கார்த்தியாயினியை நோக்கி "இங்கு ஏன் வந்தாய்?

எதற்காக வந்தாய்? இம்மாளிகையில் காலடி யெடுத்து வைக்க உனக்கென்ன அவ்வளவு தைரியம்? ......" என்று கர்ஜித்தார்.

கார்த்தியாயினி பேசாமடந்தை போல் மௌனமாக நின்றாள். ஆனாலும், அவள் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகி வழிந்தது.

மீண்டும் பிள்ளையவர்கள் பேசத் தொடங்கி, "அதி லும், நாளில்லாத சமயத்தில் திருடி மாதிரியாக வந்து.... ........" என்று கூறிவந்தவர் ஆத்திரமேலிட்டால் மேலே பேசமாட்டாதவராய் நின்றார்.

திருடி என்ற சொல்லைக் கேட்டதும் கார்த்தியாயினி யின் தேகம் பதறியது. "நான் பிறந்த குடும்பத்தின் பெருமை யென்ன? வளர்ந்த அருமை யென்ன? நான் வாழ்க்கைப்பட்ட இடத்திலும் செல்வமாகவல்லவோ போற்றப்பட்டு வந்தேன். சீமாட்டி யென்ற சிறப்புப் பெயரோடு பல்லோரும் பணிபுரிய இவ்வளவு பெரிய மாளி கையை ஏகபோகமாக ஆண்டு ஆட்சி செலுத்திவந்தநான் இப்போது இங்கு வரவும் தகுதியற்றவளாய்ப் போன தோடு, என் கணவனாலேயே திருடி என்றழைக்கவும் நேர்ந்ததென்றால், அதற்குக் காரணமென்ன? எனது ஒழுக்கக் கேடே யல்லவா! எனக்கு இவ்விதக் கதி— கேவலநிலைமை—ஏற்படுமென்று நான் கனவிலும் நினைத்த தில்லையே!" என்றிவ்வாறாகப் பல பல எண்ணி உள்ள முருகினாள்.

கார்த்தியாயினி மௌனஞ் சாதிக்கச் சாதிக்க சாந்தி மதிநாதம் பிள்ளைக்குக் கோபம் அதிகரித்தது. "நான் கேட்கிறேன்; எங்கே வந்தாயென்று. பேசாமல்

மௌனம் சாதிக்கிறாயே, என்ன!” என்று அதட்டிக் கேட்டார்.

இம்முறை கார்த்தியாயினியால் பேசாமலிருக்க முடியவில்லை. அவள் அப்போதும் தலை குனிந்தவண்ணமே, “குழந்தையைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன்...” என மெதுவாகப் பதிலளித்தாள்.

இதைக் கேட்டதும் பிள்ளையவர்கள் கோப நகை நகைத்து, “என்ன! குழந்தையைப் பார்த்துவிட்டுப் போக வந்தாயா? அவனை என்ன பார்ப்பது? அவன் எப்படியிருந்தால் உனக்கென்ன! நீ வீட்டை விட்டு வெளியேறியவளுக்கு, குடும்ப விசாரம் எதற்கு? குழந்தையைப் பார்க்க வந்தாளாம்; குழந்தையை” என்று குத்தலாகக் கூறினார்.

கார்த்தியாயினிக்கும் ஆத்திரமாகிவிட்டது. “என்ன சொன்னீர்கள்? அவனை நீ என்ன பார்ப்பதென்று கேட்கிறீர்கள்? என் மகனை—நான் பத்து மாதஞ் சுமந்து பெற்ற என் ஆருயிர்ப் புதல்வனை—ஈ, எறும்பு அணுக வொட்டாதவாறு இரவும் பகலுங் கண்ணுறங்காது கட்டிக் காத்து வளர்த்த என் அருமைக் கண்மணியை நான் பார்க்காது வேறு யார் பார்ப்பது? கலிதீர்த்த என் கண்மணியை நான் பார்க்க எனக்கு உரிமையில்லையா? என்னதான் மனமாறுதலடைந்தாலும், என் உதரத்தில் உதித்த அருமருந்தன்ன பிள்ளையை மறக்க முடியுமா? எப்படி நான் பிரிந்திருப்பேன் என் ஆருயிர் மகனை!” என்று உருக்கமாகக் கூறினாள்.

காந்திமதிநாதம் பிள்ளை கார்த்தியாயினியை உருத்துப் பார்த்து, “உன் மகனா? இன்னுமா அம்பிகாபதி உன்

மகன்? அவனை உன் மகனென்று சொல்லிக்கொள்வதில் உனக்குக் கொஞ்சமும் வெட்கமில்லையா? அவனை உன் குமாரனென்று கூறிக்கொள்வதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? உனக்கு மகனிடத்தில் உண்மையான பாசமிருந்திருந்தால் நீ இவ்விதம் முறை தவறி நடந்திருப்பாயா! அத்தடிப்பயலோடு வெளியேறி ஊர் ஊராகத் திரிந்துகொண்டிருப்பாயா!" என்று இடித்துக் கேட்டார்.

இச்சொற்களைச் செவியுற்றதும் கார்த்தியாயினி வாய்விட்டுக் கதறிவிட்டாள். "ஐயோ! மனித சுபாவத்தை நன்கு அறிந்த அறிவாளியாகிய தாங்களே, அதை மதித்து சலுகை காட்டாவிட்டால் வேறு யார் காட்டக்கூடும்? நான் ஏதோ அறியாமையால் உணர்ச்சி வயப்பட்டுத் தவறிவிட்டேனென்றால், அதைச் சுட்டிக் காட்டி இகழ்வதா? இது தங்கள் பெருந்தன்மைக்கு அழகா? முறையா? தருமந்தானா?—என்னைத் தாங்கள் இவ்வாறு கேவலப்படுத்திப் பேசுவதைவிட, தங்கள் கையாலேயே கொன்றுவிடுங்கள்" என்று மிகவும் இரக்கமாகக் கூறி முகத்தில் கைகளைப் பொத்திக்கொண்டு தேம்பித் தேம்பி யழலானாள்.

இவ்வாறு தன் துயரத்தைத் தாங்கமாட்டாது அழுதுகொண்டிருந்தவள் எதையோ நினைத்துக்கொண்டவள்போல் தலை நிமிர்ந்து, "எனக்குத் தெரியும்; இங்கு வந்தால் என்ன மரியாதை நடக்குமென்று. தங்கள் கோபத்துக்கு ஆளாக நேருமென்பதையும் நானறிவேன். எல்லாம் தெரிந்திருந்தாலும், பிள்ளை மீதுள்ள பாசத்தால், என்ன நேர்ந்தாலும் அநுபவித்துக் கொள்ளலாம் என்று தயாராகவேதான் வந்தேன். ஆனாலும்; இயன்ற

வரை தங்கள் கண்ணில் படாது தப்பித்துச் செல்லவே முயன்றேன். எனினும் முடியவில்லை.—எப்படி யிருந்தாலும் நான் குற்றவாளிதானே! குற்றஞ் செய்தவர்களுக்குத் தண்டனை கிடைக்கவேண்டியது நியாயம். அதன்படி தாங்கள் எனக்கு என்னவிதமான தண்டனை கொடுப்பதாயினும், அதை யேற்று அனுபவிக்கத் தயாரா யிருக்கிறேன்” என்று பணிவாகக் கூறி நின்றாள்.

கார்த்தியாயினியின் இப்பரிதாபமான நிலையைக் கண்டு காந்திமதிநாதம் பிள்ளையின் மனம் இளகிவிட்டது. அவரது கோபமெல்லாம் இருந்த இடந்தெரியாமல் போய்விட்டது. இரண்டொரு நிமிஷங்கள் அவருக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. சிறிது நேரங் கழித்து அவர் கார்த்தியாயினியை நோக்கி, “கார்த்திகா! உன் பெயரைக் கூறி யழைக்கவும் என் நா கூசுகிறது. இருந்தாலும், ஒரு சில வருடங்களாயினும் நாமிருவரும் கணவன் மனைவியாக மனமொருமித்து வாழ்ந்தோம்—மனைவாழ்க்கையை நடத்தினோ மென்ற முறையிலேயே இப்போது உன் பெயரை முன்னிலைப்படுத்திப் பேசுகிறேன்.—நீ அறியாமையாலோ ஆணவத்தாலோ அல்லது நீ கூறுகிறபடி காதலுணர்ச்சி வயப்பட்டோ எனக்குத் துரோகஞ் செய்துவிட்டுப் பிறனொருவன்பின் சென்றாலும், எனக்கென்னமோ உன்னிடத்தில் வைத்திருந்த அன்பு இன்னும் மாறவில்லை. நம்மிருவர்க்கு மிருந்த பாந்தவ்யத்தால் — தொடர்பால் — ஏற்பட்ட பாசம் இன்னும் என் உள்ளத்தில் அடித்துக்கொண்டே யிருக்கிறது நீ முறை தவறி நடந்ததற்காக, நான் தகுந்த நடவடிக்கை யெதுவும் எடுத்துக் கொள்ளவில்லை யென்றால், அதற்குக் காரணம் நான் உன்னிடம் இன்னமுங் கொண்டிருக்கும்

பற்றேயாகும். நான் சிறிதும் எதிர்பாராத வகையில் எனக்குச் செய்த துரோகத்துக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று மட்டும் நான் எண்ணி யிருப்பேனேயாகில், உன்னைப் பல்லோர் முன்னிலையில் அவமானப் படுத்தி யிருப்பேன். அப்படி யில்லை யென்றால், போலீஸில் தகவல் கொடுத்து உங்க ளிருவரையுஞ் சிறைப்படுத்திக் கோர்ட்டில் வழக்காடி தண்டனை யனுபவிக்கச் செய்திருப்பேன். அல்லது மிருகத் தனமான உணர்ச்சிக்கு அடிமைப்பட் டிருப்பேனாகில், துப்பாக்கியைக் கொண்டோ, வேறெக் கருவியைக்கொண்டோ உன்னையும், உன்னைக் கெட்டவழிக்கு ஆட்படுத்திய அத்தடிப்பயலையும் கொலை செய்திருப்பேன். ஆனால் உன்மீது கொண்டுள்ள அன்பால் தான் இவ்வழிகளில் எதையும் செய்ய நான் விரும்ப வில்லை....” என்று கூறினார்.

கார்த்தியாயினி, “தங்கள் அன்பே என்னைத் தண்டிக் கட்டும்” என்று கூறப் பொருமினாள்.

காந்திமதிநாதம் பிள்ளை, “கார்த்திகா ! உன்னை இப் பரிதாபமான நிலையில் பார்க்க எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கிறது. தயவுசெய்து என் கண்ணெதிரே யிருந்து போய்விடு. என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. ஆகவே, உடனே இவ்விடத்தைவிட்டுப் போய்விடு. போ! போ!” என மனங் கசிந்து கூறி முகத்தை வேறு பக்கந் திருப்பிக்கொண்டார்.

கார்த்தியாயினி துயரம் நிறைந்த மனதோடு தள்ளாடி நடந்த வண்ணம் வெளியேறலானாள். இதுவரை வெளிப் புறத்திலிருந்து கதவிடுக்கு வழியாக உள்ளே என்ன நடக்கிறது என்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த வேலையாட்கள், உடனே விலகிப்போய் ஏதோ வேலையைக்

கவனிப்பதுபோல் பாவனை செய்யலாயினர். கார்த்தியாயினி மேன்மாடியிலிருந்து படிக்கட்டுகளின் வழியாகக் கீழே யிறங்கி நடந்து வெளிவாயிலை யடைந்தாள். இச்சமயத் தில் இரைக்க இரைக்க ஒரு பணியாள் ஓடிவந்து, "அம்மா! அம்மா!! இதோ பெட்டி! இதைத் தாங் கள் அங்கேயே வைத்துவிட்டு வந்து விட்டதாகவும் தங்க ளிடங் கொடுக்கும்படியாகவும் எஜமான் உத்தரவிட் டனுப்பினர். இந்தாருங்கள்" எனக் கூறிப் பெட்டியை அவள் கையில் கொடுத்தான். கார்த்தியாயினி பெட்டி யைக் கையில் தாங்கிய வண்ணம், முன்னம் மாளிகையை விட்டு வெளியேறிய காலத்தில் எவ்வளவு தீவிர வுணர்ச்சி யோடு சென்றுளோ, அதற்கு நேர்மாருக அவ்வளவு சோர்வோடும் துயரத்தோடும் இப்போதும் வெளியேறி நடந்தாள்.

கார்த்தியாயினியின் பரிதாப நிலையைக் காணச் சகி யாது முகத்தைத் திருப்பிக்கொண்ட காந்திமதிநாதம் பிள்ளை, அவள் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாள் என்பதை யறிந்ததும், அவர் தம் உயிரையே பறிகொடுத் தது போன்ற உணர்ச்சியைப் பெற்று ஏங்கினர். பிறகு, ஏதோ ஒருவித எண்ணத்தால் உந்தப்பட்டவர் போன்று தாம் நின்றிருந்த இடத்தினின்றும் முன்பக்கஞ் சென்று பலகணி வழியாய் நோக்கினர். அப்போதுதான் கார்த்தி யாயினி தள்ளாடித் தள்ளாடி மெள்ள நடந்தவண்ணம் மாளிகையை விட்டு வெளியேறுவதைக் கண்டதும், அவ ரது உள்ளம் முன்னையினும் அதிகமாய்ப் பதறியது. கார்த் தியாயினி கண்ணுக்கு மறையும்வரை மன வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்த காந்திமதிநாதம் பிள்ளை அப்ப டியே சுவரின்மீது சாய்ந்தார். அவ்வாறு சாய்ந்த அவரது

உடல் மிகவுஞ் சோர்வடைந்து போய்விட்டதால் சுவரினின்றும் நழுவி அதன் ஓரமாகப் போடப்பட்டிருந்த சோபாவின்மேல் விழுந்தார். கார்த்தியாயினிமீது அவர் அத்துணை அத்தியந்த பிரேமை வைத்திருந்தார். அவர் அவளைத் தம்மை வாழ்விக்கவந்த ஒரு பெண் தெய்வம் என்றே எண்ணிப் போற்றி வந்தார். அவளும் சிவசைலத்தின் அழகிய உருவத்துக்கு அவள் மனதில் இடங்கொடுப்பதற்கு முன்வரை அவரிடம் பேரன்பு பூண்டொழுகி வந்தாள். கட்டிளமையின் தீவிர வுணர்ச்சியாலோ, காலகதியின் விபரீதப் போக்கினாலோ அவள் சமூகக் கட்டுப்பாட்டையும், சுற்றுணர்ச்சியையுங் கவனியாது, சிவசைலத்தினிடம் அவளது மனதைப் பறிகொடுத்துவிட்ட பின்னர்தான், அவள் கனம் பிள்ளையவர்கள் விஷயத்தில், அலட்சிய மனோபாவத்தைக் காட்டலானாள். அவள் சிவசைலத்தின்பால் எவ்வளவுக்கெவ்வளவு காதல் கொண்டாளோ அவ்வளவுக் கவ்வளவு காந்திமதிநாதம் பிள்ளையிடம் வெறுப்புக் கொள்ளத் தொடங்கினாள். ஏனென்றால், தன் விருப்பத்தின்வண்ணஞ் செல்வதற்கு இவர் இடையூறாக இருக்கிறாரல்லவா!

காந்திமதிநாதம் பிள்ளை கார்த்தியாயினி முறை தவறிய வழியில் சிவசைலத்தோடு சிநேகஞ் செய்து வருகிறாள் என்று அறிந்த பின்னரும்,—அவர்கள் ஒருவருக்கொருவர் அளவளாவிப் பேசுவதைக் கண்கூடாகப் பார்த்த பின்னரும்கூட—அவள் அவ்விதம் நடப்பது தவறு என்று எடுத்துக்காட்டி, அத்தவறைத் திருத்திக் கொள்ளும்படி இதமாகக்கூறி அதற்குச் சந்தர்ப்பந் தந்ததும் பிள்ளையவர்கள் கார்த்தியாயினியிடம் கொண்டுள்ள அளவு கடந்த அன்பும், பெருந் தன்மையுமே காரணமாகும். தாம் கூறிய புத்திமதி

யையும் பொருட்படுத்தாது கார்த்தியாயினி வரம்புமீறி நடக்கத் தொடங்கிய பிறகே, காந்திமதிநாதம் பிள்ளை தம் பொறுமையை இழந்தார். அடங்காக் கோபங் கொண்டார். இதன் பயனாக இருவரிடையேயும் பிரிவு ஏற்பட்டது. இனி, மீண்டும் ஒருவரையொருவர் காண முடியாதென்ற நிலையும் உண்டாய்விட்டது. இவ்வித விபரீத விளைவுக்குப் பிறகும், அவர், தாமில்லாத சமயத்தில் மகனைப் பார்க்க வந்த கார்த்தியாயினி தம்மெதிர்ப்பட்டு சர்வாங்கமும் ஒடுங்க நடுங்கி நிற்கும் பரிதாப நிலையைக் கண்டதும், அவரது ஈர நெஞ்சம் இளகி விட்டது. அவர் கார்த்தியாயினியின் தற்போதைய நிலைமையை எண்ணியெண்ணி மனங் கரைந் துருகலானார். அவர் சோபாவில் விழுந்து முகங் குப்புறப்படுத்தவண்ணமே பல பல எண்ணலானார்.

“கார்த்திகா! கார்த்திகா!! நீ இருந்த இருப்பு என்ன! இப்போது இருக்கும் நிலை என்ன! ஒரு காலத்தில் என் உள்ளத்தில் எவ்வளவு கம்பீரமாக நீ வீற்றிருந்தாய்! எனக்குப் பேரரசி என்றல்லவோ யான் உன்னை மதித்திருந்தேன்; ஆக்கி வைத்திருந்தேன். ஆனால்: இன்று என்ன! உன்னை—உன் உருவத்தை—என் மனதிலிருந்து அகற்ற—அழித்துவிட—முயன்று வருகிறேன். திருடி என்றும் கூறி இழித்துவிட்டேன். இதற்கு—இம்மாறுதலுக்குக் காரணமென்ன? உனது ஒழுக்கக் கேடான நடத்தையே யன்றோ! உன் மன நிறையைக் காப்பாற்ற முடியாமையா லன்றோ நீ இவ்விதக் கேவல நிலையை படைந்தாய்!—பாவம் கார்த்தியாயினி தான் என்ன செய்வாள்!—உலக மாயை அவளை விழுங்கி நிலைகுலையச் செய்துவிட்டது! அவளது வாழ்க்கையைக்

குட்டிச் சுவராக்கி விட்டது.—மக்களுக்கு அவர்களது வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள் குறுக்கிடுகின்றன; எத்தனையோ ஆபத்துகள் நேரிடுகின்றன. தவறுகள் முன்னிற்கின்றன. அவற்றி லெல்லாம் அகப்படாது தப்பி வாழ்க்கைப் பரிசோதனையில் தேர்பவர்களே மக்களில் சிறந்தவர்களாவர்—சோதனைக் காளாவது, தவறு செய்வது, குற்றம் புரிவது மனித இயற்கையன்றி வேறென்ன! அதிலும், மெல்லியலார்—உடல் மெலிவும், மன மெலிவும் ஒருங்கே இயற்கையாக வுடைய மெல்லியலார்—வாழ்க்கைச் சோதனையில் தவறிப் போவதில், மனச் சபலத்துக்கு இடங் கொடுத்து குற்றம் புரிவதில் ஆச்சரிய மென்ன இருக்கிறது? கார்த்தியாயினியும் பேதைப் பெண்தானே! அவள் மனச் சபலத்துக் கிடங் தந்து வாழ்க்கையில் வழுக்கிச் சோதனைப் படுகுழியில் விழுந்து விட்டாள். அதைக் கண்டு பரிதபிக்க வேண்டியிருக்க, அவள்மீது கோபங் கொள்வது நியாயமா? படுகுழியிலிருந்து மேலேற மாட்டாது தத்தளிக்கும் அவளைக் கைகொடுத்து தூக்கி விட்டுக் காப்பாற்றுவ தன்றோ முறை? அது போன்று, நான் என் கார்த்தியாயினிக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடாது? இளமை புணர்ச்சியால் தவறிழைத்த அவள், இப்போது தான் செய்த குற்றத்திற்காக மனம் வருந்துகிருள் என்பதை அவளது தற்போதைய பரிதாப நிலைமையே நன்கு விளக்குகிறது. ஆகவே, தான் செய்த குற்றத்தை நினைந்து கழிவிரக்கங் கொள்பவன் சீர்திருந்தி விடுவது மிகவும் எளிது. ஆகையால் அவளுக்கு நான் மன்னிப்பளித்து, பழையபடி அவளை மனைவியாகச் சேர்த்துக் கொண்டாலென்ன; இதிலென்ன இழுக்கிருக்கிறது!—சே! நான் என்ன நினைத்தேன்? வீட்டைவிட்டு வெளியேறியவளையா நான் சேர்த்துக் கொள்வது?

வேறொருவனுடன் சென்று வாழ்ந்து வருபவளையா நான் மறுபடியும் மனைவி எனக் கருதி ஏற்றுக் கொள்வது?—பேஷ்! நல்ல யோசனை?—என் தகுதி யென்ன? நான் வகித்துவரும் பதவியின் மேன்மை யென்ன? என்னைச் சுற்றி யுள்ளவர்களின் பீடும் பெருமையு மென்ன? இவ்வளவும் என்னாகும்?—அவளை நான் சேர்த்துக் கொண்டால் மற்றவர்கள் என்ன கருதுவர்? நமது இந்து சமூகம் எனது செயலுக்குச் சம்மதந் தருமா? ஒழுக்கங் கெட்டவளை மீண்டும் மனைவியாகக் கொண்டு வாழ, நமது சமூகத்தில் இடமுண்டா?—வழுக்கி விழுந்தவர்களைக் கரையேற்றிவிட வாய்ப்பளிக்காத சமூகம் என்ன சமூகம்! அச்சமூகம் பாழாய்ப் போக! சமூகக் கட்டுப்பாடாம் சமூகக் கட்டுப்பாடு! அர்த்தமற்ற சமூகக் கட்டுப்பாடு! மூடப் பழக்க வழக்கத்தை யொட்டிய சமூகக் கட்டுப்பாடு! மனித சுபாவத்துக் கியைய அமைக்கப் படாத சமூகக் கட்டுப்பாடும் ஒரு கட்டுப்பாடா? எப்படியோ இச்சமூகக் கட்டுப்பாடு எங்கள் வாழ்க்கையைக் குலைத்து விட்டது; எங்களிடையே நிரந்தரமான பிரிவை யேற்படுத்தி விட்டது. என் வாழ்க்கைத் துணைவியை உயிரோடு பறி கொடுத்த பின்னர், இனி, எனக்கு உலகமே பாழ்த்து விட்டது; இருண்டு விட்டது. ஆ அ! ஆ! கார்த்திகா! கார்த்திகா!!..............................'' என நீள நினைந்துருகிச் சோர்ந்தார்.

# எட்டாவது அதிகாரம்

## ஆசை அறுபது நாள்; மோகம் முப்பது நாள்

"சிவா! சிவா!! என்னடா!! ஏதோ பெருத்த யோசனையி லிருக்கிருய்! மனிதன் வருவது கூட உனக்குத் தெரியவில்லையே!—நீ இருக்கு மிடத்தைக் கண்டு பிடிக்க எங்கெங்கே அலைந்தேன் தெரியுமாடா!................." என்று கேட்டுக் கொண்டே உள் நுழைந்தான் கருணுகரன். அவன் சிவசைலத்தின் பாலிய நண்பன்.

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த சிவசைலம் கருணுகரனின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு, தலை நிமிர்ந்தான். எதிர்பாரா வகையில் தனது அருமைத் தோழன் கருணுகரன் வருகையைக் கண்டதும், அவன் பரபரப்பாகத் தனது மனக்கலக்கத்தைச்சமாளித்துக் கொண்டு முகத்தில் வலுக்கட்டாயமாகப் புன்சிரிப்பைத் தோற்றுவித்த வண்ணம் நாற்காலியை விட்டெழுந்து,"ஓ! கருணுகரனு! வாடா! இப்படி உட்கார்!—ஏது இவ்வளவுதூரம்? இவ்வளவு நாட்களுக்குப் பிறகாயினும், என் நினைவு உனக்கு ஏற்பட்டதே! அதுவே பெரிய விசேஷம்!" என்று கூறி வரவேற்றுன்.

நண்பர்க ளிருவரும் நாற்காலிகளை நெருக்கமாகப் போட்டுக்கொண்டு அவற்றின்மீது அமர்ந்தனர்.

கருணுகரன் மீண்டும் பேச ஆரம்பித்து, "நினைவில்லாம லென்னடா! உன்னைப்போ லென்று என்னை எண்ணிக் கொண்டாய்! நீ தான் நண்பர், உறவினர் அனைவரையும் மறந்துவிட்டு, நீ என்னவோ! உன் காரிய

மென்னவோ என்று இருக்கிறாய்! உனக்கு வாய்த்திருக்கும் உத்தியோகத்தைப் போல் எனக்கிருந்தால், மாத மிருமுறையாகிலும் உன்னை வந்து பார்க்க மாட்டேனு!—அதிருக்கட்டும். உன் காதலி எங்கேடா! நான் பார்க்க வேண்டாமா........" என்று ஆவல் தோன்றக் கேட்டான்.

சிவ சைலத்தின் முகத்தில் அசடுதட்டியது. எனவே அவன் தன் முகமாறுதலைக் கருணாகரன் அறியாதவாறு மறைக்க முயன்று கொண்டே, "போடா! உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான். எனக்குக் காதலி வந்திருந்தால், உனக்குத் தெரியாமலாடா வந்திருப்பாள்! உன்னைப் போன்ற சிநேகிதர்களும், சுற்றத்தாரும் மற்றவர்களும் அறியத் தானே மேள தாளத்தோடு காதலியைப் பெற்றிருப்பேன். இது தெரியாமலோ, தெரிந்தும் குறும்புத்தனமாகவோ கேட்கிருயேடா!—உம்; உனக்குக் கலியாணமாய் விட்டதோ" என்று கேட்டான்.

கருணாகரன், "நான் மாத்திரம் எப்படியடா உனக்குத் தெரியாமல் செய்துகொண்டிருப்பேன்!—அந்த நியாயம் எனக்குத் தெரியும்.—நான் கேட்பது பல்லோரறிய பாணிக்கிரகணஞ் செய்துகொண்ட காதலியை யல்ல.—காதலுலகில் கன்னி வேட்டையாடிக் களவாகப் பெற்ற காதலியைத்தான் நான் இப்போது குறிப்பிட்டுக் கேட்டேன். தெரிந்ததா!—சிவா! எனக்கு எல்லாந் தெரியுமடா! நான் உன்னை நீண்ட நாட்களாகப் பார்க்கவில்லை யாயினும், உன்னைப் பற்றிய யோக க்ஷேமங்களைப் பலர் வாயிலாக அறிந்துகொண்டுதான் வருகிறேன். சமீபத்தில் உன் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரு மாறுதலும் எனக்குத் தெரியும். என்னிடம் எதையும் மறைத்துப் பயனில்லை........" என்று கூறினன்.

சிவசைலம் ஒன்றும் கூறமாட்டாது தலை குனிந்தான்.

கருணாகரன் சிவசைலத்தின் முகத்தைக் கூர்ந்து கவனித்த வண்ணம், "சிவா! நல்ல வழியிலோ, கெட்ட வழியிலோ என்போன்ற வாலிபர்கள் பொருளைப் படத்தக்க வகையில் உயர் தகுதியும் பேரழகும் வாய்ந்த ஒரு மங்கையைக் காதலியாகப் பெற்றுவிட்டாய். அந்த அளவில் நீ கெட்டிக்காரன்தான்........" என்று இழுத்தாற்போல் பேசினான்.

சிவசைலம் அவன் கூறுவதைக் காதில் வாங்காதவன் போல் பாவனை செய்து முகத்தை வேறு பக்கந் திருப்பிக் கொண்டான்.

இதை யுணர்ந்த கருணாகரன், "நான் இப் பேச்சை எடுத்தது உனக்குச் சங்கடமாக இருக்கிறது என அறிகிறேன். இல்லையா, சிவா! நான் இப்பேச்சைப் பேசி உன் மனதைப் புண்படுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. நான் ஒரு முக்கிய காரியமாக உன்னைப் பார்க்க வந்தேன். நான் வந்த நோக்கத்தைச் சாதித்துக்கொள்ளக்கூடிய வகையிலேயே வேடிக்கையாக இப் பேச்சைத் தொடங்கினேன். நீ உனது உத்தியோகத்துக்குக்கூட லீவு போடாது உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறாய் என்று அறிந்தேன். ஆதலால், நான் கூப்பிடும் காரியத்துக்கு ஒப்புக்கொள்வாயோ என்று தெரிந்துகொள்ளவே, பீடிகையாக அவ்விஷயத்தைப் பற்றிப் பேச எடுத்துக்கொண்டேன். அவ்வளவுதான். நீ வேறு ஒன்றும் தவறாக நினைத்துக்கொள்ளாதே!" என்று கூறி முடித்தான்.

சிவஸைலம் உடனே திரும்பிக் கருணாகரனை ஒருவிதமாக நோக்கி, "அதெல்லாம் ஒன்றுமில்லையடா! நீ சாமர்த்தியமாய்ப் பேசுவாயென்றுதான் எனக்குத் தெரியுமே! நீ வந்த காரியம் என்ன? அதை முதலிலேயே சொல்லித் தொலைக்கிறதுதானே! அதற்கு ஏன் இவ்வளவு பீடிகை?—உம்; கடைசியாக உன் குட்டு வெளிப்பட்டு விட்டதல்லவா! நீண்ட நாளாயிற்றே யென்று பார்த்துவிட்டுப் போகலாம் என வந்தேன் என்று ஆரம்பத்தில் சொன்னது பொய் என இப்போது உன் வாயாலேயே வெளிப்பட்டு விட்டது; பார்த்தாயா? அது சரி; உனக்கு என்னால் ஆக வேண்டிய முக்கிய காரியம் என்ன! அதைக்கூறு" என்று கேட்டான்.

கருணாகரன், "எனக்கு ஆகவேண்டிய காரியமொன்றுமில்லையடா! இந்தியாவுக்குப் பெருமையளிக்கக் கூடிய சந்தர்ப்பம் உனக்குக் கிடைத்திருக்கிறது. அதைத் தவற விடமாட்டாயென்றே நான் கருதுகிறேன்" என்று கூறினான்.

"விஷயத்தைச் சொல்லேன். கூடமாகவே இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாயே!"

"கட்டாயம் ஒப்புக்கொள்வாயா!"

"சரி; ஆகட்டும்."

"ஒலிம்பிக் கிரிக்கெட் கோஷ்டியாரோடு, இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியாரும் மேனாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்து அங்கங்கு ஆட்டமாடி வெற்றிக் கொடியை நாட்டி வரத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மிகத் திறமையான ஆட்டக்காரர்களை இந்தியக் கிரிக்கெட் கோஷ்டித் தலைவர் ஒன்று சேர்க்க முயன்றுவருகிறார்.

அக் கோஷ்டியில் உன்னையும் ஒருவனாகத் தேர்ந்தெடுத்து உன் அபிப்பிராயத்தை யறிய கடிதமெழுதினாராம். ஆனால் அக்கடிதம் சில நாட்களுக்கெல்லாம் அவருக்கே திரும்பி விட்டதாம். ஆகவே, அவர் நீ இருக்குமிடத்தை யறிந்து உன்னிடஞ் சென்று உன் சம்மதத்தைத் தெரிந்து எழுதும்படி எனக்குக் கடிதமெழுதினார். அதற்காகவே நான் இப்போது வந்தேன்."

"நீயும் இக் கோஷ்டியில் சேர்ந்திருக்கிறாயா?"

"சேர்ந்திருக்கிறேன்."

"அப்படியானால் சரி; போகலாம்"

"நாம் ஐரோப்பா சுற்றுப் பிரயாணம் போய்வரக் குறைந்தது ஆறுமாத காலமாகுமே! அதுவரை......"

"அதுவரை என்னடா?"

"அதுவரை உன் அருமைக் காதலியை எப்படி விட்டுப் பிரிந்திருப்பாய் என்றே பயப்படுகிறேன்."

"போடா! மீண்டும் ஆரம்பித்துவிட்டாயே; உன் குறும்புத் தனத்தை."

* * *

கார்த்தியாயினி மாளிகையின் கூடத்தில் சோபாவொன்றன்மீது சாய்ந்திருந்தாள். அவளது கண்ணிமைகள் மூடியிருந்தனவாயினும், மனம் எங்கேயோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. சிந்தனையுலகில் கவனத்தைச் செலுத்தியிருந்த அவள், திடுக்கிட்டவள்போல் அடிக்கடி கண்களைத் திறந்து வாயில் பக்கத்தைப் பார்த்த வண்ணமிருந்தாள். அவளது வாய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அவள் இவ்வாறு அடிக்கடி வாயிலை

நோக்கிக்கொண்டிருப்பதிலிருந்து யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் எனத் தெரிந்தது. ஆம்; உண்மைதான். யாருடைய வரவை, கார்த்தியாயினி அவ்வளவு துடிதுடிப்போடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கப் போகிறாள்! அவளது காதலன் சிவசைலத்தின் வருகையைத் தான். சிறிதுநேரம் கழித்ததும், அவள் சோபாவை விட்டு எழுந்து பரபரப்போடு அங்குமிங்கும் உலாவலானாள். மீண்டும் சோபாவில் போய்ச் சாய்ந்தாள். வெளியே ஏதோ சந்தடி கேட்கவே, மறுபடியும் எழுந்து ஓடிப் போய் வாயிற் கதவைத் திறந்து பார்க்கலானாள். பிறகு, ஏமாற்றத்தோடு திரும்பிக் கூடத்துக்குவந்து மன அயர்ச்சியோடு சோபாவில் வீழ்ந்தாள்.

இந் நிலையில் சிறிது நேரங் கழிந்தது. இச் சமயம் வெளியே ஏதோ அலுவலாய்ப் போயிருந்த சிவசைலம் பங்களா நோக்கி வந்துகொண்டிருந்தான். கார்கால மாதலால், திடீரென மழை பெய்யத் தொடங்கிச் சிறு தூரல் போட்டுக்கொண்டிருந்தது. மழையில் நனைந்து கொண்டே வேகமாக நடந்துவந்து மாளிகையை அணுகிவிட்ட சிவசைலம், ஜன்னல் வழியாக உட்புறத்தைக் கவனித்துக்கொண்டே பங்களாவினுள் நுழையலானான். தாழ்வாரத்துக்கு வந்து வெளி வாயிற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைய விருந்தவன் ஏதோ எண்ணமெழச் சிறிது நேரம் அங்கேயே தயங்கி நின்றான். பின்னர் அவன் ஜன்னல் வழியாக உள்ளே கவனிப்பதும் அதாவது கூடத்தில் சோபாவில் சாய்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும் கார்த்தியாயினியின் நிலைமையை ஆராய்வதுபோல் நோக்குவதும், கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு தலைகுனிந்த வண்ணம் ஏதோ யோசிப்பதுமாக வலப்புறமும் இடப்புறமும் உலாவலானான்.

சில விநாடிகள் கழிந்ததும் தனக்குள் ஏதோ நிர்மானத்துக்கு வந்தவன்போல் தலை நிமிர்ந்து ஜன்னலண்டை சென்று கார்த்தியாயினியைக் கவனித்துவிட்டு திடீரெனக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்தான். எதிர்பாரா வகையில், சிவசைலத்தின் வருகையைக் கண்டதும், கார்த்தியாயினி திடுக்கிட்டு எழுந்து, "காதல! என் இவ்வளவு நேரம்? மழையில் நனைந்து வந்திருக்கிருப்போலிருக்கிறதே!—அடடா!" என்று கூறிக்கொண்டே ஆவலோடு அவனருகே போடி, கழற்றிக் கொண்டிருந்த கோட்டையும், மற்ற உடைகளையும் வாங்கி ஒரு பக்கம் போட்டாள். வேறொரு துவாலையை எடுத்து அவனது தலைமயிரைத் துவட்டி ஈரத்தைப் போக்க முயன்றுகொண்டிருந்தாள். சிவசைலமோ அவள் கேட்டுவந்த கேள்விகளுக்கு ஒன்றுமே பதிலுரையாது மௌனஞ் சாதித்தான். கார்த்தியாயினியை ஏறிட்டு நோக்கவே அவனுக்குத் துணிவேற்படவில்லை. கபடமாகக் கடைக்கணித்து அவளது உள்ளக் குறிப்பை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

பிறகு, சிவசைலம் தன்னறைக்குச் சென்று உடைகளை மாற்றிக்கொண்டு கூடத்தில் வந்து உட்கார்ந்தான். கார்த்தியாயினி இதற்குள் உள்ளே சென்று உடனே காப்பி கொண்டுவந்து வைக்கும்படி பரிசாரகனுக்குக் கட்டளை யிட்டுவிட்டு வந்தாள். எனவே, அவன் இரு டம்ளர்களில் காப்பியை ஊற்றிக் கொண்டுவந்து வைத்தான். ஒரு டம்ளரைச் சிவசைலத்தினிடம் கொடுத்துவிட்டு, மற்றொன்றைத் தான் கையில் எடுத்து வைத்துக்கொண்டு கார்த்தியாயினி அவன் பக்கத்து, சோபாவில் அமர்ந்தாள்.

பிறகு இருவரும் காப்பி குடித்துக் கொண்டிருக்கையில், கார்த்தியாயினி மெதுவாகப் பேச்சை யாரம்பித்து

" அன்ப ! நீ இந்திய கிரிக்கெட் கோஷ்டியோடு ஐரோப்பா வுக்குப் போகப் போவது உண்மைதானா?—அப்படியானால் நானும் உன்னுடன் வரலாமா?" என்று விநயமாகக் கேட்டாள்.

சிவசைலம் சிறிது நேரம் பேசாமலே இருந்து பிறகு தலையைத் தூக்கி மெதுவாகப் பேசத் தொடங்கி, "கார்த் திகா! உனக்காகவே நான் யோசித்துக் கொண்டிருக் கிறேன். வெளி நாட்டுக்கு வருவதும், அந்நியருடன் பழகுவதும் உனக்கு எவ்வளவு தூரம் சிரமமா யிருக்கும் என நீ அறிவாய். எனவே, நாம் இங்கு ஒருவருக்கொரு வர் பிரிவுபசாரம் கூறி விடை பெற்றுக் கொள்வதே நல் லது. சில மாதங்களில் நான் திரும்பி வந்து விடுவேன். நீ அதுவரை திருவனந்தபுரத்துக்குப் போயிரு" என்று கூறினான்.

இச் சமயத்தில் தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றான். சிவசைலம் அதை வாங்கி உறையைக் கிழித்துக் கடிதத்தைப் படித் தான். அச்சமயம் அவன் திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையிலிருந்தான்.

கார்த்தியாயினி சிவசைலம் கடிதத்தை வாங்கிய பர பரப்பையும், அதைப் பிரித்துப் படிக்கும்போது அவன் முகம் அடைந்த மாறுதலையும் கவனித்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு, " அது என்ன கடிதம்? யாரிடமிருந்து வந்தது?" எனச் சாவதானமாய்க் கேட்டாள்.

சிவசைலம் அக் கடிதத்தை மடித்து இடக்கையில் வைத்துப் பின்புறமாகக் கொண்டுபோய் மறைக்கமுயன்ற வண்ணம், " என் அன்னை எழுதியிருக்கிறார். விஷயமொன்

றும் முக்கியமில்லை... ........" என்று இழுத்தாற்போல் கூறினான்.

தான் சிவசைலத்திடம் பழகிய நாள் முதலாக இது வரை ஒளிவு மறைவின்றி நடந்து வந்தவன், இப்போது விஷயங்களை மறைத்துக் கபடமாக நடந்து கொள்வதைக் கண்டு கார்த்தியாயினி மிகவும் மனவேதனை யடைந்தாள். சமீப காலமாக அவனது பேச்சுஞ் செயலும் இருந்து வருந் தோரணையிலிருந்து கார்த்தியாயினி சிவசைலம் தன்னிடங் கொண்டிருந்த காதலையும், அன்பையும் மாற்றிக் கொண்டான் என அறிந்தாள். எனவே அவள் துக்கத்தோடு, "சிவா! சிலகாலமாக நீ என்னிடம் நடந்து கொள்ளும் மாதிரியிலிருந்து நீ என்மீது கொண்டிருந்த காதலை மாற்றிக் கொண்டாய் எனத் தெரிகிறது. நீ என்னிடம் உண்மையை உரைக்காது மறைத்து வஞ்சகமாக நடந்து வருகிறாய். இதுவரை உன் சம்பந்தப்பட்டவரை எனக்குத் தெரியாத இரகசியமோ அந்தரங்கமோ இருந்ததில்லை. இப்போதோ கேவலம் உனக்கு வருங் கடிதங்களையும் நான் பார்க்காதவாறு மறைத்து வருகிறாய். அவ்வளவு தூரம் நான் உன்னினின்றும் வேறுபட்டு விட்டேன். உன்னைக் குறைகூறிப் பயனில்லை. என் தலைவிதி அவ்வாறெல்லாம் நடந்து வருகிறது......................" எனக் கூறிப் பெருமூச்சு விட்டாள்.

இப் பேச்சு சிவசைலத்துக்கு ஆத்திர மூட்டியது. "என்ன! நான் உன்னிடங் கொண்டுள்ள காதலை மாற்றி விட்டேனா! சிலகாலமாக வேறுபாடாக நடந்து வருகிறேனா! நீயா, நானா உண்மையை மறைத்து ஒழுகி வருவது? உன் உள்ளத்தையே தொட்டுப் பார்! நீயல்லவோ எனக்குத் தெரியாமல் எதையோ மனதில் வைத்துப்

புழுங்கிக் கொண்டிருக்கிறாய்! நீயல்லவா என்னிடஞ் சொல்லிவிட்டுக் கூடப் போகாமல் எங்கேயோ போய் மூன்று நாட்கள் இருந்துவிட்டு வந்தாய்! 'தான் திருடி அயலாரை நம்பமாட்டாள்' என்னும் பழமொழியைப் போல், நீ நடந்து கொள்வதுபோல மற்றவரையும் நினைத்துக் கொள்கிறாய். அதற்கு நான் என்ன செய்யமுடியும்?—இப்போது வந்த கடிதத்தைக் காட்டாது மறைத்ததாக என்மீது குற்றஞ் சாட்டுகிறாய்! நான் அவ்வாறு செய்ததுகூட உன் நன்மைக்காகவே தான். நீ அதிலுள்ள விஷயத்தை அறிந்தால் மனம் வருந்துவாய்; அவ்விதம் துயரத்துக்காளாகக் கூடாது என்று எண்ணியே அதைக் காட்டாது விஷயத்தை மாற்றிக் கூறினேன். உள்ள நிலைமையை ஊகித்தறியாமலே அதற்குள் ஏதேதோ கூறத் தொடங்கி விட்டாயே!" எனப் படபடப்பாகப் பேசி முடித்தான்.

கார்த்தியாயினி, "அப்படியானால் இப்போது வந்த கடிதம் உண்மையாக எங்கிருந்து வந்தது?" நான் அறிந்தால் வருந்தப்படக் கூடிய அப்பேர்ப்பட்ட விஷயம் என்ன அதில் இருக்கிறது?.........." என்று உணர்ச்சியை மீற விடாமலே கேட்டாள்.

சிவசைலம், இதுவரை பின்புறம் மறைத்து வைத்திருந்த கடிதத்தை அவளிடம் நீட்டி, "இதோ! நீயே தான் பாரேன்! ஐரோப்பாவுக்குப் புறப்படவிருக்கும் இந்தியக் கிரிகெட் கோஷ்டியில் என்னையும் சேர்த்திருப்பதாகவும் நான் உடனே புறப்பட்டுக் கல்கத்தாவில் வந்து அவர்களோடு கலந்து கொள்ள வேண்டுமென்றும் இந்திய கிரிகெட் கோஷ்டி காப்டன் எழுதியிருக்கிறார்" என்று கூறினான்.

கார்த்தியாயினி இவன் கூறுவதைக் கேட்டவாறே கடிதத்தைப் பிரித்து தனக்குள்ளாக வாசித்துப் பார்த்துக் கொண்டாள்.

சிறிதுநேரம் இருவரும் சோபாவின் இரு மூலைகளி லும் சாய்ந்தவண்ணம் பேசாமலிருந்தனர். அவர்கள் மௌனமாயிருந்தாலும், அவர்களது மனம் என்னென்ன எண்ணிச் சங்கடப்பட்டிருக்கும் என்பதை யார் அறிந்து கூறமுடியும்?

கார்த்தியாயினியே மறுபடியும் முதலில் பேசத் தொடங்கினாள்.

"நான் உன்னை எவ்வளவோ அதிகமாக நேசித்து வருகிறேன். ஆனால் நீயோ என் விஷயத்தில் அலுப்பு—சலிப்பு—கொண்டுவிட்டாய். முன்னர், நீயே என் காதலை விரும்பினாய். இப்போதோ என்னை விட்டு நீங்க விரும்புகிறாய்.—உம்.—நான் உன் கழுத்தைச் சுற்றியிருக்கும் இயந்திரக் கல்லாக உனக்குக் காணப்படுகிறேன். அதனால் தான் நீயாக வலிந்துபோய் ஐரோப்பாவுக்குப் போகவிருக்கும் இந்திய கிரிக்கட் கோஷ்டியில் உன் பெயரைப் பதிவு செய்துகொண்டாய். ஏனென்றால், என்னைவிட்டு நீங்குவதற்கு ஏதாகிலும் சாக்குபோக்கு வேண்டுமல்லவா!" என்றாள்.

சிவசைலம் நிமிர்ந்துட்கார்ந்து, "என் வாழ்க்கையைப் பூர்த்திசெய்ய வேண்டுமானால் எவ்வளவோ அபிலாஷை இருக்கின்றன. காதலே எல்லாமாய் விடவில்லை........' என்று கூறி நிறுத்தினான்.

''காதல் முடிந்தால் எல்லாம் முடிந்துவிடுகிறது என யாரோ ஒரு அறிஞர் கூறியிருக்கிறாரே" என்று கார்த்தியாயினி குறிப்பிட்டுக் கூறினாள்.

சிவசைலம், "என்ன இருந்தாலும் நான் ஆண்மகன்; ஆதலால், இன்னும் எத்தனையோ விதமான அபிலாஷைகள் இருக்கும் என்பதை நீ அறியவேண்டும். எடுத்ததற்கெல்லாம் காதல், காதல் என்று அதைப்பற்றித் தொடர்ந்து விடாது பேசிவருவதே, அச்சொல்லின் சப்தத்திலேயே எனக்கு ஒருவித வெறுப்பை யுண்டாக்கிவிட்டது. நான் காதலால் அலுப்பும் நோயுங் கொண்டிருக்கிறேன்" என முகத்தைச் சுளித்துக்கொண்டு சொன்னான்.

"கடைசியாக, அதுதான் உண்மை. எனவே, இதுவே முடிவு; இதுபற்றி நீ வருத்தப்படுகிறாய் எனத் தெரிகிறது" என்று கார்த்தியாயினி கூறினாள்.

சிவசைலம் ஆத்திரத்தோடு "கார்த்திகா! வீணாகப் பேச்சை வளர்த்தாதே! உன்னோடு சதா இருந்துகொண்டிருந்தால்தான் உன்னிடம் நான் உண்மைக் காதல் கொண்டிருப்பதாக அடையாளம் போலும். அப்படியெல்லாம் இருக்கமுடியாது. எனக்குச் சுதந்தரம் வேண்டுமல்லவா! படித்த பெண்ணாகிய நீயே எனக்குள்ள சுதந்தரத்தைப் பறிக்கமுயன்றால், அது நியாயமாகுமா!" என்று கேட்டான்.

கார்த்தியாயினி, "நான் அப்படி யொன்றும் உனது சுதந்தரத்துக்குக் குறுக்கே நிற்கவில்லை. உன் காதலுக்குக் கட்டுப்பட்டு உன்னை முழுதும் நம்பிவந்த என்னை நிராதரவாக விட்டுவிட்டு ஐரோப்பாவுக்குப் போக விரும்புவதைத் தான் நான் தடுக்க முயல்கிறேன். நீ வெளிநாட்டுக்குப் போய்விட்டால் திரும்பி வரும் வரை நான் இங்கு யாருடைய பாதுகாப்பில் இருப்பது? நான் தனிமையாக எப்படி இருக்கமுடியும்? என்றுதான் நான் கேட்கிறேன்.

அதற்கென்ன கூறுகிறாய்?" என்று நியாயத்தைக் காட்டியே வினவினாள்.

சிவசைலம், "ஏன்! உனது தமையனார் வீட்டுக்குப் போயிருப்பது தானே! நான் ஊருக்குத் திரும்பி வந்தவுடன் உனக்குத் தகவலனுப்பி வரவழைத்துக் கொள்கிறேன்" என்று பதிலளித்தான்.

கார்த்தியாயினி, "நான் அங்கு போவது எப்படி முடியும்! என் மனந்தான் துணியுமா? அவர்கள் தான் என்னைச் சேர்த்துக்கொள்வார்களா? இந்த யோசனை கூற உனக்கு எப்படி மனம் வந்தது!" என்று கேட்டாள்.

சிவசைலம் அக்கேள்விக்குப் பதிலளிக்க முடியாது சிறிதுநேரம் தத்தளித்தான். தன் பேச்சாலேயே தான் அகப்பட்டுக்கொள்ள நேர்ந்த முட்டாள் தனத்துக்காக உள்ளூர வருந்தினான்.

சிவசைலம் சிறிதுநேரஞ் சிந்தனை செய்த வண்ணமிருந்துவிட்டுப் பிறகு தலை நிமிராமலே, "கார்த்திகா! நிலைமையை யோசிக்காமலே ஏதோ உளறிவிட்டேன். உன் தமையனார் வீட்டுக்குப் போயிருப்பதென்பது முடியாத காரியந்தான். நான் அங்கு சென்றிருக்கும்படி கூறிய யோசனை தவறுதான்.—இருந்தாலும், வேறு என்ன வழி செய்வதென்பதுதான் எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. நானோ ஐரோப்பாவிற்குச் செல்லும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியில் யானும் ஒருவனாக இருப்பதாக வாக்களித்துவிட்டேன். அவர்களும் என் பெயரைப் பதிவு செய்து கொண்டு 'புரோகிராம்' தயாரித்து கடைசியாக, பத்திரிகைகளிலெல்லாம் வெளியிட்டு விட்டார்கள். நான் உடனே கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் செல்லவேண்டிய தேபாக்கி.

இவ்வளவும் நடந்த பிறகு, என் பிரயாணத்தை நிறுத்தி விடுவ தென்பது முடியாத காரியமல்லவா! நானே பம்பாயி லிருந்து ஐரோப்பாவுக்குப் புறப்படவேண்டிய இந் நெருக்கடியான சமயத்தில்; திடீரென நான் வர முடியா தென்று தெரிவித்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? அப்புறம் என்னுடைய தகுதிதான் என்னவாகும்! நான் ஒரு ஆண் மகனென்றோ — கிரிக்கெட் பந்தாட்ட நிபுணனென்றோ—கூறிக்கொண்டு வெளியில் தலைகாட்ட முடியுமா.................?” என்று நீட்டிப் பேசிக்கொண்டே போனான்.

இச்சமயத்தில் கார்த்தியாயினி “இன்னுங்கூட தகுதி என்பது ஒன்று இருக்கிறதா? பீடும் பெருமையோடும் பெருமித நடை நடந்து வெளியே தலைகாட்ட யோக்கி யதை யுண்டா! ஒழுக்கத்தை உதறித் தள்ளிவிட்ட பிற கும்—சமூகக் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்த பிறகும் மனித வாழ்க்கையில் வரம்புகடந்து விட்ட பிறகும் தகுதி யையும், மதிப்பையும் பற்றியும் பேசுவதற்கு வெட்கமாக இல்லையா!” என உள்ளுக்குள் கூறிக் கோபப் புன்னகை கொண்டாள்.

சிவசைலம் மீண்டும் பேசத்தொடங்கி, “ஆதலால், நான் என்னுடைய பொறுப்பையும் பெயரையுங் காப் பாற்றிக்கொள்ள வேண்டுமானால், நான் கடைப்பிடிக்க வேண்டிய வழி ஒன்றுதா னிருக்கிறது. அதைத்தான் இப்போது உனக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் எதை முன்னிட்டும் என் ஐரோப்பிய பிரயாணத்தை நிறுத்த முடியாது. ஆகையால், நான் முன்னரே கூறிய படி நாம் ஒருவருக் கொருவர் பிரிவுபசாரங் கூறிக் கொண்டு விடை பெற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

நான் இரண்டு மூன்று மாதங்களுக்குள் ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு வந்து விடுகிறேன். அதுவரை நீ இவ்விடத்திலேயே தங்கி இரு. உனக்கு வேண்டிய சௌகரியங்களையும் குற்றேவல்களையுஞ் செய்ய, சமையற்காரனும் வேலைக்காரியும் இருக்கிறார்கள். அவர்களே உனக்குப் பாதுகாப்பாகவும், துணையாகவு மிருப்பார்கள். அவர்கள் உண்மையும் நேசமு முடையவர்களாதலால், உன்னிடம் அன்பாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்வார்கள். உன் பேருக்கு இங்குள்ள இம்பீரியல் பாங்கில் கொஞ்சம் பணங்கட்டிவிட்டுப் போகிறேன். உனக்கு வேண்டிய செலவுக்குத் தேவையான பொழுது செக் கெழுதியனுப்பிப் பணம் வாங்கிக்கொள்ளலாம். நான் உடனுக்குடன் உனக்குக் கடித மெழுதிக்கொண்டே யிருக்கிறேன். நீயும் உன்னுடைய க்ஷேமம் முதலியவைகளைத் தெரிவித்துப் பதிலெழுதிக்கொண்டிரு.—இன்னொன்று. நான் இப்போது நேரே கல்கத்தாவுக்குச் சென்று அங்குள்ள இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியோடு கலந்துகொண்டு பிறகு பம்பாய் செல்கிறேனல்லவா! அவ்விரு இடங்களிலும் எங்காகிலும் தகுதியாக உத்தியோகங் கிடைக்குமா என்றும் முயன்று பார்த்துவிட்டு வருகிறேன். அங்கெங்காகிலும் நல்ல உத்தியோகங் கிடைத்துவிட்டால், இச் சென்னை மாகாணத்தையே நாம் தலைமுழுகிவிட்டுப் போய்விடலாம். அங்கு நம்மைப்பற்றி யாரும் ஒன்றுஞ் சொல்ல முடியாது. நம் வாழ்க்கையைப் பற்றிச் சந்தேகிக்கவும் மாட்டார்கள், கௌரவமாகவுஞ் சந்தோஷமாகவும் நாம் காலங் கழிக்கலாமல்லவா!——" என்று கார்த்தியாயினியைச் சமாதானப்படுத்தி மெள்ள விடை பெற்றுச் செல்ல வாயில் வந்தபடியெல்லாம் அளக்கலானான்.

இவனது ஆசை வார்த்தைகள் கார்த்தியாயினியை இச் சமயம் மயக்கவில்லை. இவன் நம்மை விட்டுப் பிரிந்து செல்லவே ஏதேதோ அளக்கிறான் என அவள் அறிந்தாள். எனவே, அவள் மனதிலுள்ள ஆத்திரத்தைத் தாங்க மாட்டாமல், "சிவா! இதெல்லாம் வெறும் பேச்சென்று எனக்குத் தெரியும். உனக்கு என் மீதுள்ள அன்பு நீங்கி விட்டது. அதனால்தான் என்னைத் தட்டிக் கழித்து விட்டுச் செல்ல, இந்த ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தை ஏதுவாக வைத்துக் கொண்டாய். ஆரம்பத்தில் என்மீது உனக்கிருந்த காதல் இப்போது இருப்பது உண்மையானால், இந்த கிரிக்கெட் பந்தாட்டப் போட்டியல்ல—தலைபோகும் காரியமே வருவதாயினும்—என்னை விட்டு ஒரு கணமும் பிரிந்து செல்ல சம்மதிக்கவே மாட்டாய்.—ஒரு பெரிய சுதேச சமஸ்தானத்தில் பொறுப்புள்ள உத்தியோகம் வகித்து வந்த நீ—எதிர்காலத்தில் அச் சமஸ்தானத்திலேயே மிகப் பெரிய உத்தியோகத்தையோ பதவியையோ வகிக்கக்கூடிய தகுதியிலிருந்த நீ—என் காதல் பொருட்டாக ஒரு கணத்தில் அதை உதறித் தள்ளிவிட்டு வந்தாயே! அதை விடவா இக் கிரிக்கெட் விளையாட்டு பெரிது?—அதெல்லாம் ஒன்றுமில்லை.—கடைசியாக நீ உன்னையே சதமென நம்பி வந்திருக்கும் என்னை கைவிட்டுச் செல்லவே தீர்மானித்து விட்டாய்.—இல்லையா?—அவ்விதமில்லையென்று மனந் துணிந்து உன்னால் கூற முடியுமா?—(சிறிது நேரம் மௌனம்.) அன்ப! கடைசி முறையாக யோசித்துப் பார்! என்னை இவ்விதம் நிர்க்கதியாக விட்டுச் செல்வது நியாயமா என்று? தயவுசெய்து நின் நிலைமையைச் சிந்தித்துப்பார்! என் முறையீட்டுக்குச் செவி சாய்ப்பாயாக?—ஐரோப்பா பிரயாணத்தை நிறுத்தி விடு. உடனே இந்திய கிரிக்கெட் கோஷ்டித் தலைவருக்கு

தவிர்க்க முடியாத சில அசௌகரியங்களால் வர முடிய வில்லை யென தந்தியடித்து விடு....................." எனக் கண்ணில் நீர் ததும்ப பரிதாபமாகக் கேட்டுக்கொண்டே வந்தாள்.

இதற்குள் சிவசைலம் துள்ளியெழுந்து, "என்ன சொன்னாய்; ஐரோப்பா பிரயாணத்தை நிறுத்தி விடவேண் டுமா? இந்தியக் கிரிக்கெட் கோஷ்டித் தலைவருக்கு வர முடியாதெனத் தந்தி யடித்து விடுவதா?—பேஷ்!—நல்ல யோசனை!—நான் இவ்வளவு நேரம் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் உள்ள நிலைமை யெல்லாம் எடுத்துக் கூறினேன். அதைச் சிறிதுங் காதில் வாங்காமல், உன் பாடத்தையே ஒப்பிக்கிறாயே!—உன்னை மிகவுஞ் சமர்த்தி யென்றும், அறிவாளி யென்றும் எல்லாம் நினைத்திருந்தேன். இப்போ தல்லவோ தெரிகிறது உன் லட்சணம்! உனது அறிவற்ற சண்டித்தனம் என்னிடஞ் செல்லாது—நீ இப்படியே புலம்பிக் கொண்டிரு. நான் என் வேலையைப் பார்க்கிறேன். எனக்கு நாழிகையாகி விட்டது. நான் ரயிலேறுவதற்குள் பல அலுவல்களைக் கவனிக்க வேண்டி யிருக்கிறது.—நான் சொல்லியபடி நடக்கிறதா யிருந்தால் நட. இல்லாவிடில் உன் விருப்பப்படி செய்.........." என்று ஆத்திரத்தோடு படபட வெனக் கூறிவிட்டு 'விர்' ரென வெளியே நடந்தான். கார்த்தியாயினி துடித் தெழுந்து கைகளை நீட்டி "சிவா! சிவா!!" என அழைத்துக் கொண்டே அவன் பின்னே ஓடினாள்.

வெளிவாயிலை யடைந்ததும், சிவசைலம் ஒரு மோட் டாரில் வேகமாகச் செல்வதை அவள் அறிந்தாள். அவளுக் குத் தலை கிறுகிறுத்தது. உலகமே தலை கீழாகச் சுற்றுவது போல், அவள் கண்களுக்குப் புலப்பட்டது. அவள் அவ் விடத்திலேயே மூர்ச்சையாகி விழுந்தாள்.

# ஒன்பதாவது அதிகாரம்

## கற்பிழந்தவளுக்குக் கடவுள் தண்டனை

மாலை ஆறரை மணி. சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் ஏராளமான ஜனக்கூட்டம். பிரயாணிகளில் சிலர் அவசர அவசரமாக வண்டிகளில் ஏறிக் கொண்டிருந்தனர். மற்றும் சில பிரயாணிகள் தங்களை வழியனுப்பவந்த சுற்றத்தார், சிநேகிதர்களோடு பிளாட்பாரத்தில் நின்று கடியாரத்தைப்பார்த்தவண்ணமே பேசிக் கொண்டிருந்தனர். பிரயாணிகள் டிரங்கு பெட்டி முதலிய சாமான்களையும், மூட்டை முடிச்சுகளையும் போர்ட்டர்கள் தலையிலுங் கைகளிலுந் தாங்கி யெடுத்துக்கொண்டு போய் ரயிலில் வைத்துக் கொண்டிருந்தனர். ரயில்வே உத்தியோகஸ்தர்கள் பிளாட்பாரத்தில் இப்படியும் அப்படியுமாக 'டக் டக்' எனக் கால்களில் தரித்திருக்கும் பூட்ஸ் சப்திக்க நடந்து கொண்டிருந்தனர்.

இச்சமயத்தில் ரயிலின் இரண்டாவது வகுப்பு கம்பார்ட்மெண்டுகள் இருக்குமிடத்தை நோக்கி ஒரு சிறு வாலிபர் கோஷ்டி வந்தது. அக்கோஷ்டியார் யாவரெனக் கருதுகிறீர்கள்! அவர்கள்தான் ஐரோப்பா சுற்றுப் பிரயாணம் செய்யப்போகும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியில் கலந்துகொள்ள கல்கத்தா செல்லும் தென்னிந்திய கிரிக்கெட் பந்தாட்ட நிபுணர்களாவர். அவர்களில் நமது சிவசைலமும் இருந்தா னென்பதை நாம் எடுத்துக் கூறாமலே வாசகர்கள் அறிந்து கொள்வார்கள். இக்கோஷ்டியாருக்குச் சென்னைக் கிரிக்கெட் பந்தாட்ட கிளப் மெம்பர்களும், மற்றுந் தோழர்களும் பூமாலைகள் சூட்டிக் கௌர

வித்தனர்; அவர்கள் ஒருவருக் கொருவர் கை குலுக்கி அளவளாவி மகிழ்ந்தனர்.

இச் சமயத்தில் ரயில்வே ஸ்டேஷன் முன் ஒரு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து வயது சென்ற ஒரு விதவை மாதும், 40 வயதுள்ள கனவானும் அவரது மனைவியும், 18 வயதுடைய ஒரு பெண்மணியும், சிறுவர்களிருவரும் இறங்கினர். அவர்கள் ஸ்டேஷனுள் நுழையும் போதே சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே வந்தனர். மாதர்களும் சிறுவர்களும் பின்னே வர, முன்னே கம்பீரமாக நடந்த கனவான் பிளாட்பாரத்தின் நாலா பக்கங்களையும், ரயில் கம்பார்ட்மெண்டு ஒவ்வொன்றையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே சென்றார்.

தோழர்களோடு உற்சாகமாக அளவளாவிப் பேசிக் கொண்டிருந்த சிவசைலம், தற்செயலாக இச் சிறு கூட்டத்தாரைக் கவனித்து விட்டான். அக் கூட்டத்தினிடையே இருந்த கிழ மாதின்மீது அவன் பார்வை பதிந்தது. உடனே அவனது முகம் மாறுதலடைந்தது. நண்பர்களிடமிருந்து மெதுவாக அவன் விடுபட்டு இவர்களை எதிர்கொண்டு வந்தான். இவன் வருகையைத் தூரத்திலேயே கண்டுவிட்ட அக் கிழமாது, "சுப்பு! அதோ பார்! சிவா வருகிறான். நம்மைப் பார்த்து விட்டுத்தான் வருகிறான்போ லிருக்கிறது" என்று அக் கனவானிடம் கூறினார்.

இதற்குள் சிவசைலமும் இவர்களை நெருங்கி விட்டான். "அம்மா! எங்கே இவ்வளவு தூரம்?................" என்று கேட்ட வண்ணம் பெண்களை யெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு, கனவானைச் சந்தேகப் பார்வையாக நோக்கினான்.

"சீமைக்குப் போகப் போவதாக மூன்நாளாள் கடுதாசி போட்டையே! அதைப் பார்த்துட்டுத்தான் ஓடோடியும் வந்தோம்" என்றார் சிவகாமியம்மாள்.

"ஆமாம். நான் இன்றைக்கு இந்த மணிக்கு ரயிலில் புறப்படுகிறேன் என்பது உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று சிவசைலம் ஆச்சரியத்தோடு கேட்டான்.

சிவகாமியம்மாள், "உன் மாமாதான் சொன்னான்.—இதோ இருக்கிறானே இவன் தான் உன் மாமா? இதுவரை நீ அவனைப் பார்த்ததில்லை யல்லவா?—சுப்பு உன் மருமானைப் பார்த்தாடா?—உனக்கு இவனை அடையாளந் தெரியவில்லையா?" என்று ஒருவரை யொருவர் அறிமுகப் படுத்தி வைக்கும் முறையில் கேட்டார்.

"நமஸ்காரம், மாமா!" என்றான் சிவசைலம்.

அதே சமயத்தில் சிவசுப்பிரமணியம் பிள்ளையும், "இவனைச் சிறுபோதில் பார்த்தது. இருந்தாலும் முன்னை விட இவ் வாலிப வயதில் கம்பீரமாகவும் அழகாகவுங் காணப் படுகிறான்.—இப்படி வா! சிவசைலம்! (என்று கூறிய வண்ணம் அவன் கைகளைப்பற்றி அருகழைத்து) நீ கடிதம் எழுதியபொழுது அக்காள் என் வீட்டில்தான் இருந்தார்கள். ஆகவே அக் கடிதம் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தது. அதை அக்காள் வாசித்துப் பார்த்துவிட்டு, "என்னடா! சுப்பு! சிவா சீமைக்குப் போறானுமே!" எனப் பதை பதைப்போடு கூறிக்கொண்டே கடிதத்தை என்னிடங் காட்டினார்கள். நான்—அக் கடிதத்தைப் பார்த்துவிட்டு விஷயத்தையறிந்துகொண்டேன். அதற்கு முன்னமே இந்திய கிரிக்கெட் பந்தாட்ட கோஷ்டியார் ஐரோப்பாவுக்குச் சுற்றுப் பிரயாணஞ் செல்வதும், அதில் கலந்துகொள்ள நேன்

ளிந்தியாவி லிருந்தும் சில பந்தாட்ட நிபுணர்கள் போவ தும் ஆகியவற்றைப் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன்; ஆதலால் நீ சீமைக்குப் போவது இதற்காகத்தான் என எளிதில் அறிந்து கொண்டேன். எனவே, சென்னைப் பந் தாட்ட கோஷ்டி புறப்படுந் தேதியை யறிந்து கொண்டு உடனே புறப்பட்டோம். உன் கடிதம் தாமதித்து எங் களுக்குக் கிடைத்தமையாலும், நீ உத்தியோக சம்பந்த மாய் இரு மாதங்களுக்கு முன் 'ஊட்டி'யிலிருந்ததாக அக் காளும், உன் மாமியுந் தெரிவித்ததால், இப்போது நீ எங்கிருப்பாய் எனத் திட்டமாக அறிய அவகாச மில்லா மற் போனமையாலும் சென்டிரல் ஸ்டேஷனில் ரயிலே றும் போது உன்னைப் பிடித்து விடலாம் என்று ஓடோடி யும் வந்தோம்" என்ற நீண்ட பிரசங்கஞ் செய்த வண்ணம் அவனை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார்.

சிவகாமியம்மாள்! "என்னடா சிவா! உனக்குக் கலி யாணத்துக் கெல்லாம் ஏற்பாடாய்க் கொண்டிருக்கிறது. உன் மாமா இம் மாதத்திலேயே கலியாணத்தை முடித்து விட வேண்டுமென்று தவியாய்த் தவிக்கிறான். இச் சம யத்தில் நீ சீமைக்குப் புறப்பட்டு விட்டாயே!" என்று வருத்தந் தோன்றக் கூறினள்,

இதுவரை சிவசைலத்தையே வெறித்துப் பார்த் துக் கொண்டிருந்த திரிபுரசுந்தரி 'கலியாணம்' என்ற பேச்சைக் கேட்டதும், கன்னங்களில் சுழி விழப் புன் னகை செய்து நாணத்தோடு தலை குனிந்து கொண்டாள். இதே சமயத்தில் சிவசைலம் திரிபுரசுந்தரியை மிகக்கூர் மையாகக் கடைக்கணித்தான். சிறுவர்களோ தங்கள் தந்தை பேச ஆரம்பித்ததுமே, சிவசைலத்தின் கை களைப் பிடித்துக் கொண்டு, "மாமா! மாமா! எங்களையுஞ்

சீமைக்கு அழைத்துப் போயேன்?" என உறவு கொண்டாடி விளையாடலாயினர்.

மாமி, சீமைப் பிரயாணத்தை நிறுத்தி விட்டால் போகிறது. மற்றவர்களிடஞ் சொல்லிவிட்டுத் தம்பியை நம்மோடு வந்துவிடச் சொல்லுங்களேன்; சித்தி!" என்று பதட்டமாகக் கூறினன்.

அவளது அறியாமைக்காக சிவசைலமும், சிவசுப்பிரமணியம் பிள்ளையும் புன்னகை கொண்டனர்.

சிவசைலம் சிறிது நேரங் கழித்து, "அம்மா! நான் சீமைக்குப் போய் இரண்டு மாதங்களுக் கெல்லாம் திரும்பி வந்து விடுவேன்................" என்று கூறிக் கொண்டே பிள்ளையவர்களை நோக்கினன்.

சிவகாமியம்மாளும், சிவசுப்பிரமணியம் பிள்ளையும் ஏக காலத்தில் ஏதோ கூற வாய் திறக்கையில், வண்டி புறப்படுகிறது என்பதற் கறிகுறியாக 'கார்ட்' பிகில் ஊதி விட்டான். எனவே, சிவசைலம் அடி அடிப்போடு, "நான் சீமை போனதும் கடிதம் போடுகிறேன்" எனக் கூறிக் கொண்டே, தாய், மாமன், மாமி முதலியவர்களோடு விடை பெற்றுக்கொண்டு, தன் நண்பர்கள் ஏறியிருந்த கம்பார்ட்மெண்டுக்கு ஓடி ஏறிக்கொண்டான். சிவகாமியம்மாளும், மற்றவர்களும் முகத்தில் ஏமாற்றந் தோன்ற நின்றனர். வண்டி பெரிய சப்தம் செய்துகொண்டு புறப்பட்டு விட்டது. சிவசைலம் தன் தாய் முதலியவர்களைப் பார்த்து மகிழ்ச்சியோடு கையாட்டினன். இவர்களும் கையாட்டிப் பிரியாவிடை தந்தனர்.

முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கு மிடத்தில் இருந்து கொண்டு இவைகளை யெல்லாம் ஆதியிலிருந்து

கவனித்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி பெருமூச்சு விட்ட வண்ணம் சுவரின்மீது சாய்ந்தாள். அவள் கார்த்தியாயினி என்பதை வாசகர்கள் அறியாமலிருக்க முடியாது.

தன்னிடங் கோபித்துக்கொண்டு சென்ற சிவசைலத்தை ரயில் ஸ்டேஷனிலாயினுங் கடைசியாகச் சந்தித்து, தான் முட்டாள்தனமாகப் பிடிவாதஞ் செய்ததற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டும் விடைகொடுத்தனுப்பலாம் என அவள் ஆவலோடு வந்தாள். அவள் வருவதற்கு முன்பே, சிவகாமியம்மாள் முதலியவர்கள் வந்து சிவசைலத்தோடு பேசிக் கொண்டிருப்பதை யறிந்ததும், அவள் மனம் சோர்ந்தது. அத்துடன் சிவகாமியம்மாள் பேசிய கலியாணப் பேச்சு இவள் காதில் விழவே, இவளது மனம் மேலும் வேதனை யடைந்தது. இத்துடனின்றி, சிவசைலம் திரிபுரசுந்தரியை அடிக்கடி ஒருவிதமாக நோக்குவதும், அப்பெண்ணும் அவனை ஆர்வத்தோடு நோக்குவதும் ஆகிய காட்சிகள் அவளைச் சித்திரவதை செய்தன. கடைசியாக, தான் சிவசைலத்தோடு இரண்டு வார்த்தைகூடப் பேச முடியாமலே போய் விட்டதே என்றெண்ணி அவள் நெஞ்சம் கரைந்தாள். அவள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கினாள். அவள் மனக்கண் முன், தான் சிவசைலத்தைத் திருவனந்தபுரம் ரயில் ஸ்டேஷனில் முதன் முதலாகச் சந்தித்ததி லிருந்து, நேற்றுவரை ஒன்றன் பின்னொன்றாக நடந்த நிகழ்ச்சிகள் அனைத்துங் காட்சி யளித்தன. அவள் தன் தகுதி பெருமை யனைத்தையும் எண்ணினாள். கணவனின் பெருந்தன்மையையும் வாஞ்சையையும் உன்னினாள். தன் உயிரினுஞ் சிறந்த மகனை நினைந்து மனமாழ்கினாள். கடைசியாக, இவ்வளவுந் துறந்து கைகொண்ட காதலன்



பால் ஏற்பட்ட ஏமாற்றத்தை யெண்ணி யேங்கினுள். மன தில் நடக்கும் பெரிய போராட்டத்தைத் தாங்கமாட்டாது தள்ளாடினுள். அவளுக்கு உலகமே தலைகீழாகச் சுற்று வதுபோல் காணப்பட்டது. எங்கு நோக்கினும் ஒரே இருள்மயமாக அவள் கண்களுக்குப் புலப்பட்டது. அப் படியே அயர்ந்து விழுந்து விட்டாள்.

* * *

அதேதினம் இரவு 8-55 மணியிருக்கும். பம்பாய் மெயில் ஸ்டேஷனை விட்டு மெள்ள நகர ஆரம்பித்தது. ரயில்வே உத்தியோகஸ்தர்கள் ஒருவ ரிருவரைத் தவிர வேறு யாரும் பிளாட்பாரத்தி லில்லை. இதுவரை பிளாட் பாரத்தில் இப்படியும் அப்படியுமாக உலவிக் கொண் டிருந்த ஒரு மங்கை, வண்டி யசைந்ததுமே, திடீரெனச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, தான் இருந்த இடத்தி னின்றும் ஓடோடியும் சென்று ரயிலினிடையே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள்.

---

## பத்தாவது அதிகாரம்

---

### கழி விரக்கமும் கழுவாயும்

கல்கத்தா கிரிக்கெட் கிளப்பில் ஆரவாரமும், சந்தடி யும், கெக்கலிப்பும் மிகுந்திருந்தது. அக் கிளப் பின் தலைவரான சந்தோஷ் குமார வசுவின் அழைப்பிற் கிணங்கி, இந்தியாவின் பல பாகங்களிலு மிருந்து கிரிக் கெட் பந்தாட்ட நிபுணர்கள் ஒவ்வொருவராகவும், கோஷ்டி கோஷ்டியாகவும் அன்றுதான் வந்து சேர்ந்தார் கள். அன்று மறுநாள்தான் அவர்க ளெல்லோரும்

ஐரோப்பாவுக்குச் செல்ல பம்பாய்க்குப் போய் கப்பலேற வேண்டும். ஆகவே கல்கத்தா கிரிக்கெட் கிளப் தலை வரும், இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியின் காப்டனுமான சந்தோஷ குமார வசு கிரிக்கெட் பந்தாட்டக் கோஷ்டியாருக்கு விருந்தொன்று நடத்தினர்.

வெளியூர்களி லிருந்து வந்த கிரிக்கெட் பந்தாட்டக் காரர்களுக்குக் கிளப் மானேஜர் தக்க வசதி செய்து கொடுத்திருந்தார். கிளப் வேலைக்காரர்கள் வெளியூர் பந்தாட்ட நிபுணர்களின் தேவைகளை யறிந்து குற்றேவல் செய்யக் காத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, வெளியூர் பந்தாட்டக்காரர்கள், உள்ளூர்ப் பந்தாட்டக் காரர்களின் உபசரிப்பிலும், மகிழ்ச்சி யுரையிலும் மயங்கி அளவளாவிக் கொண்டிருந்தனர்.

வெளியூர்ப் பந்தாட்டக்காரர்க ளெல்லாம் இருவ ரிருவராகவும், மூவர் நால்வராகவும் சேர்ந்து தனித்தனியாக அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். ஓரிடத்தில் சிவசைலம் மட்டும் யாருடனும் கலக்காமல் தனியாக அமர்ந்து சிந்தனையி லாழ்ந்திருந்தான்.

"என்ன சிவசைலம்! இவ்வளவு குதூகலமான சமயத்தில் கூட ஏதோ ஒருவிதமாக இருக்கிறாயே! விசாரம் என்ன? நமது ஆருயிர்க் காதலியை தனியே விட்டு விட்டுப் பிரிந்து வந்து விட்டோமே என்ற கவலையா........."
என்று அவனது நண்பன் கருணாகரன் சிவசைலத்தின் முதுகில் வாஞ்சையாகத் தட்டித் தோளைப் பற்றிய வண்ணங் கேட்டான்.

சிவசைலம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான், தனது ஆருயிர் நண்பன் கருணாகரன் என்று அறிந்ததும். மனக் குழப்பத்தை வெளிக்குக் காட்டாது மறைத்த

வண்ணர், முதலில் புன்சிரிப்பை வருவித்துக் கொண்டு, "கருணுகரா! அயலூரில் கூடவா என்னைப் பரிகாசஞ் செய்ய வேண்டும்? உன்னுடைய குறும்புத்தனம் எங்கே வந்தாலும் போகாதுபோ லிருக்கிறது!—சரி, உட்கார்! இந்நேரம் நீ எங்கே போயிருந்தாய்?" என்று வினவிய வாறே அவனது கையைப் பிடித்திழுத்துத் தன்னருகே உட்கார வைத்தான்.

கருணுகரன் நாற்காலியில் அமர்ந்த வண்ணம், "நான் பேசுவதெல்லாம் எப்போதும் உனக்குக் குறும்புப் பேச்சாகத்தான் இருக்கும்—சிவா! நீ இப்போது உண்மையாகச் சொல். உன் அருமைக் காதலியை நினைத்து வருந்திக் கொண்டிருக்கவில்லையா!—நீ என்னதான் சாமர்த்தியமாய் உன் மனவேதனையை மறைக்க முயன்றாலும்; முகம் கள்ளத்தை வெளிப்படுத்தி விடுகிறதே?" என்று கூறி நகைத்தான்.

சிவசைலமும் புன்முறுவல் பூத்தவண்ணம், "நீதான் கட்டைப் பிரம்மசாரியாயிற்றே! உனக்கு ஏனடா இந்தக் கவலையெல்லாம். யாராகிலும் யாரையாகிலும் நினைந்து சங்கடப்பட்டுக்கொண்டு கிடக்கிறார்கள். அதையெல்லாம் நீ ஏன் கிளறிக் கொண்டிருக்கிறாய்?" எனக் கூறினான்.

"தன் நண்பன் வருத்தமா யிருப்பதை ஆருயிர்த் தோழன் என்று கூறிக்கொள்ளும் என் போன்ற ஒருவன் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அவனது துயரத்தைப் போக்க முயலுவதன்றோ உண்மைச் சினேகிதனுடைய கடமை!"

"அப்படியானல், நீ என்னுடைய மனத்துயரை எவ் விதம் போக்கப் போகிறாய்?"

"உன் துயரத்துக்குரிய காரணத்தைச் சொன்னால், அதற்குத் தகுந்த பரிகாரத்தை நான் இப்பொழுதே தேடுகிறேன்!"

"நீதான் சிறிது நேரத்துக்கு முன் என் வருத்தத்துக் குரிய காரணத்தை யறிந்தவன்போல் அபிநயம் செய் தாயே! இப்போது வந்து, 'உன் துயரத்துக்கு மூல கார ணத்தைக் கூறு; நான் பரிகாரந் தேடுகிறேன்' எனக் கேட்கிறாய். பேஷ்! நீ மகா புரட்டனா யிருக்கிறாயே! இப்படித்தான் இருக்கும் நீ எனக்கு உபசாரஞ் செய்வ தும்" என்று கூறி கருணாகரனைப்பிடித்தாட்டிய வண்ணம் சிரித்தான் சிவசைலம்.

கருணாகரன் சிவசைலத்தைத் தன் பேச்சுச் சாதுரியத் தால் மடக்க எண்ணி, "அகப்பட்டுக்கொண்டாயா; சிவா! நான் வெறும் ஊகத்தின்மீது, நீ உன் காதலியை நினைத்து வருந்துகிறாய் என முதலில் கூறினேன். நான் குறும்புத் தனஞ் செய்கிறேன் என்று கூறி என்னை ஏமாற்றப் பார்த் தாய் கடைசியில் இப்போது உன் வாயிலிருந்தே உண்மை வெளிவந்து விட்டது.—உனது கம்பீரத் தோற்றத்தையும், அழகையுங் கண்டு எத்தனையோ மகளிர் ஏங்கிக் கொண் டிருக்க, நீ ஒரு பெண்ணை—அதுவும் மங்கைப் பருவத்தை அநேகமாகக் கடக்கக்கூடிய நிலையிலுள்ள ஒரு பெண்ணைப் பிரிந்திருக்க முடியாமல் வாடி வருந்துகிறா யென்றால், அவள் பேரழகியாகவே இருக்க வேண்டும். அதில் சந்தேகமில்லை.—நான் 'ஊட்டி'க்கு வந்தபோது, உன் உள் ளங் கவர்ந்த அப்பெண்மணியைப் பார்க்க வேண்டுமென்ற பேராவலுடனேயே வந்தேன். என் துரதிஷ்டம் அவள் அங்கில்லை.........." என்று நீட்டிப் பேசிக்கொண்டே போனான்.

சிவசைலம் இடைமறித்து, "கருணாகரா! நீ பேச்சில் வல்லவனென்பதை இன்னுமா என்னிடங் காட்டவேண்டும்! நான் உன்னிடம் தோழமை கொண்ட நாள் முதல் தெரியுமே! ஏதோ என் அயாத்துக்குப் பரிகாரந் தேடுவதாக ஆரம்பித்து, என் காதலியைப் பார்க்காமலே வருணிக்கத் தொடங்கி விட்டாயே!— என் நிலையைக் கண்டால் உனக்கு விளையாட்டாக இருக்கிறது. எருதின் நோய் காக்கைக்கு என்ன தெரியும்?" என்று ஆயாசமாகக் கூறிப் பெருமூச் செறிந்தான்.

"சிவா! என் பேச்சு உனக்குத் துன்பத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறதென அறிகிறேன். உன் உணர்ச்சியைப் புண்படுத்த வேண்டுமென்று எனக்கு எண்ணமேயில்லை. உன் வருத்தத்தை மாற்றவே நான் விளையாட்டாக உரையாடினேன்.—மேலும் நண்பர்களிடம். உற்றதைக் கூறியுரையாடினால் மன ஆறுதலடையு மென்பது உனக்குத் தெரியாதா? உன் மனதை வாட்டும் விஷயத்தை என்னிடம் கூறுவதற்கென்ன? உண்மைத் தோழனான என்னிடங் கூடவா ஒளிவு மறைவு?" என்று கருணாகரன் உருக்கமாகக் கேட்டான்.

சிவசைலம் சிறிதுநேரஞ் சிந்தனையி லாழ்ந்தவனாய் இருந்துவிட்டுப் பிறகு தலையை நிமிர்ந்து கருணாகரனை நோக்கி, "கருணாகரா! என் இரகசியங்களை உன்னிடம் கூறாது ஒளிக்க வேண்டுமென்பது எனக்கு எண்ணமல்ல,- நான் கஷ்டப்படுவதல்லாது, என் வருத்த நிலையைக் கூறி உன்னையும் ஏன் சங்கடப்படுத்த வேண்டும் என்று கருதியே ஒன்றுங் கூறாதிருந்து வந்தேனேயொழிய வேறில்லை. மேலும் தற்போது என் அயரத்துக்குக் காரணமாயிருக்கும் காதலி விஷயம் ஒழுங்கான முறையைப் பின்பற்றிய

தல்ல. அவ்வாறிந்தால், நீ கேட்பதற்கு முன் நானே தாராளமாகச் சொல்லியிருப்பேன். ஆனல் என் தலை யெழுத்து என் 'கன்னி வேட்டை' என்னைத் தீயொழுக் கத்தில் கொண்டுபோய் விட்டு விட்டது. அதனல்தான் உன்போன்ற ஆருயிர்த் தோழர்களிடமும் இவ்விஷ யத்தைக் கூற என் மனங் கூசுகின்றது. கூடுமானவரை இவ்விஷயத்தை நீங்கள் எல்லாம் அறியாதவாறு நான் மறைத்து வரவேண்டி யிருக்கிறது...." என்று கூறி மீண் டும் தலை குனிந்தான். கருணகரன் சிவசைலத்தை உற்சாகப்படுத்த வேண்டி, "அதுபற்றி நீ மன அயர்ச்சி கொள்ள வேண்டியதில்லை, சிவா! நீ என்ன? காதல் வயப் பட்டோர் பலர் எத்தனையோ விதமான வழிகளி லெல் லாஞ்சென்று தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண் டிருக்கின்றனர். காதலில் கட்டுண்டவர்கட்கு நல்லொழுக் கம், நீயொக்கம், நியாயம், தருமநெறி இவையெல்லாந் தோன்றுவதேயில்லை. அவர்களுக்கு நல்லது தீயதைப் பகுத்தறிந்து பார்ப்பதற்கு அவகாசமேது? தங்களையே யன்றோ அவர்கள் மறந்து விடுகிருர்கள். இல்லாவிட்டால் மகாகவி கம்பனும்,

"தன்னையே துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே"

என்று பாடிவிட்டுச் செல்வானு? இது கூட ஒருவகை தியாகமென்றே நான் கூறுவேன்......." என்று அளந்து கொண்டே போனன்.

சிவசைலம் குறுக்கிட்டு, 'கருணகரா! என்னைத் திருப்தி படுத்துவதற்காக, தவருன வழியில் சென்று ஆதாரந் தேடி, எனது வரம்பு மீறிய செயலை ஆதரிக்க முற்படாதே! நான் செய்த காரியம் தவறு தவறுதான். அதில் சிறிது கூட ஐயமேயில்லை.—நான் கார்த்தியாயி

னியை விரும்பியதே முறையன்று. அதிலும் அவள் பிற னொருவனுடைய மனைவியென அறிந்த பின்னரும் அவளை யடைய ஆசைப்பட்டது பெரிய தவறல்லவா! அதுவும், என்போன்று படித்த வாலிபன்—தகுதியும் பொறுப் புணர்ச்சியு முடைய வாலிபன்—நம் சமூகத்தில் சன்மார்க் கத்தை நிலவச் செய்யவேண்டிய நிலையிலுள்ள—கடமைப் பட்ட—வாலிபன்—இத்தகைய வரம்பு மீறிய செயலைச் செய்யத் துணிவதென்றால், அது மன்னிக்க முடியாத தொன்றன்றோ! மக்கள் எல்லாம் என் நிலை கருதி, தகுதி கருதி என்னை மன்னித்து சமூகத்தில் இடங்கொடுத்தாலும், எங்கும் நிறைந்து நின்று ஒவ்வொருவர் செய்யுஞ் செயலையும் பார்த்துவரும் ஆண்டவன் என்னை மன்னிக்கவே மாட்டான். இது சத்தியம்.—நான் விரும்பிய பெண்மணி கன்னிப் பெண்ணல்லள்; கணவனுடன் வாழ்பவள்; மைந்தனைப் பெற்றவள்; அத்துடன் உயர் குடும்பத்தில் பிறந்தவள்; உன்னத நிலையிலுள்ள புருஷ னொருவனுக்கு வாழ்க்கைப் பட்டவள்; அத்தகையவளை நான் விரும்பிக் கவர்ந்தது, அவளை மட்டும் பாதிக்கவில்லை; அவளது கணவனை— மகனை மட்டும் பாதிக்கவில்லை. அவள் பிறந்த—புகுந்த குடும்பங்கள், உற்றார் உறவினர் அனைவரையுமே பாதித் திருக்கிறது. கார்த்தியாயினியின் குடும்பங்களுக்கே மாறாக் களங்கத்தை யன்றோ ஏற்படுத்தி விட்டேன். அத்தகைய கொடிய செயலைச் செய்த நான் காதக நெஞ்சமுடைய பாதகனல்லாது, உன் போன்றவர்களால் படித்த நண்பன் எனப் பாராட்டப்படக் கூடியவனன்று. நான் என்னதான் தகுதி வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவனா யிருந்தாலும், உயர்தரப் பட்டம் பெற்ற அறிஞனாயிருந்தாலும், உலகமே புகழும் பெரிய பந்தாட்ட நிபுணனா யிருந்தாலும் என்ன பயன்? என் பேரும் புகழும், சீரும் சிறப்பும் இவ்வொரு

செயலால் கொடியில் அழிந்து விட்டதன்றே! இனி நான் நல்லுணர்ச்சி படைத்த மனித சமூகத்தில் தாராளமாகப் பழகுவதற்கோ, தலை நிமிர்ந்து பெருமித நடையுடன் நடப்பதற்கோ யோக்கியதை யேது!.........."

இச்சமயத்தில் சிவசைலத்தின் உணர்ச்சி உச்ச நிலையைப் பெற்றிருந்தது. அவனது ஒவ்வொரு சொல்லும் இதயத்தினுள் இருந்து வந்ததென்றே கூறவேண்டும். அம்மொழிகள் கருணாகரனின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. அவன் திகைத்துப்போய் உட்கார்ந்து விட்டான்.

சிவசைலம் மீண்டும் பேசத் தொடங்கினான். அவன் கண்களில் நீர் புல்நுனியில் தங்கிய பனிபோலத் துளித்தது. அவனது குரல் கம்மி யிருந்தது. "நண்பா! இவ்வளவு கொடிய பாதகத்தைச் செய்தவனா யிருந்தாலும், ஒரு வகையில் நான் புண்ணியஞ் செய்தவன் என உன்னிடஞ் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காகப் பெருமைப் படவும் எனக்கு இடமுண்டு. நான் காதலித்துப் பெற்றிருக்கும் கார்த்தியாயினி இருக்கிறாளே அவள் நல்ல அழகி என்பது மட்டுமல்ல; வெளித் தோற்றத்தில் அழகா யிருப்பது போலவே, உள்ள (அதாவது குண) அழகு முடையவள். நுண்ணிய அறிவு படைத்தவள். லளிதமாகப் பேசிப் பழகும் தன்மை வாய்ந்தவள். என் விஷயத்தில் மனதைப் பறிகொடுத்து நல்லொழுக்கத்தினின்றும் நீங்கினா ளென்பது தவிர, மற்றப்படி மாசு மறுவற்ற மங்கை. இவ்விதம் அவள் சிற்றின்பத்தில் தாழ்ந்தது கூட முன்னை வினைப்பயன் என்றே கருதுகிறேன். முற் பிறப்பில் எங்களிருவருக்கும் ஏதேனுந் தொடர் பிருந்திருக்க வேண்டும். அத்துடன், எனது சாகஸச்

செயலும், இங்கிதப் பேச்சும் காரணமா யிருக்கலாம். அத்தகையவளைக் காதலியாகப் பெற்ற நானே இவ்வுலகில் அதிர்ஷ்டசாலி எனத் துணிந்து கூறுவேன். அந்நாரீமணியைத் தவறான வழியில் பெற்றதற்காக எனக்கு நரகங் கிடைப்பதாயினுஞ் சரி; அதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை. நான் அதை மகிழ்ச்சியோடேயே ஏற்றுக் கொள்ளத் தயாரா யிருக்கிறேன்.—உம்.—இப்போது நான் இவ்வளவு பேசுகிறேனே. நண்பா! உத்தம பெண்களுக்கு உயரிய இலட்சுமியாக விளங்கும் பெண்மணியாகிய அக்கார்த்தியாயினியிடமும் நான் அறிவீனமாக நடந்து கொண்டேன். அதற்காகத்தான் இப்போது மனவேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறேன். அவளைப் பிரிந்திருப்பதனால் ஏற்பட்ட ஆற்றாமை மட்டும் எனது தற்போதைய துயரத்துக்குக் காரணமல்ல.—நான் இவ் ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்துக்குப் புறப்படுகையில் அவளிடம் நல்ல முறையில் விடை பெற்றுக்கொண்டு வரவில்லை. கார்த்தியாயினி என்னுடன் வந்து ஏறக்குறைய ஒரு வருடமாகப் போகிறது. இதுவரை அவள் ஒரு விநாடி என்னைப் பிரிந்தறியாள்.

"அவள் எனக்காக, குடும்பப் பெருமை, சொத்து சுதந்திரம், பெரிய பதவியிலுள்ள கணவன் முதலிய எல்லாவற்றையும் துறந்து வந்தாலும், தன் அருமந்த மைந்தனை மாத்திரம் அவளால் பிரிந்திருக்க முடியவில்லை; மறக்க முடியவில்லை. அப்பிள்ளைப்பாசம் தாங்க முடியாத நிலைமையை யடைந்ததனால் தான், சமீபத்தில் அச்சிறுவனைக் காணும் நோக்கத்தோடு என்னை விட்டுச் சென்றிருந்தாள். அச்சமயத்திலும் என் பிரிவை எவ்வாறு ஆற்றி யிருந்தாள் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இவ்வளவு

பேரன்பு வைத்திருந்த அவள் எனனை நீண்டகாலம் பிரிந்திருக்க எவ்வாறு சம்மதிப்பாள்? நான் ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்ததுமே அவள் துடிதுடித்துப் போய்விட்டாள். என் கண்மணியான அவள் தன்னை விட்டு நான் பிரியக் கூடாதென எவ்வளவு தூரங் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் தெரியுமா? எத்தனை தடவை மன்றாடினாள் தெரியுமா? அவள் கண்களில் நீரை ஆறாகப் பெருக்கியும், பாவி! நான் சிறிதும் மனமிரங்கவில்லை. இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியோடு போய்த்தான் தீருவேன் எனப் பிடிவாதஞ் செய்தேன்! கடைசியாக, அவளிடம் கோபித்துக்கொண்டு அவளைப் பிரிந்தும் வந்துவிட்டேன்'' என்று கூறியவாறு துக்கந் தாங்கமாட்டாது பொருமினான்.

கருணாகரன், "என்ன! இவ்வளவு தூரம் உன்மீது அன்பு வைத்திருக்கும் பெண்மணியிடமா இவ்விதம் நடந்து கொண்டாய்? நீ யாரிடமும் ஸளிதமாய்ப் பேசி நல்லவிதமாக நடந்து கொள்பவனாயிற்றே! அப்பேர்ப்பட்டவன் ஒரு மங்கையிடம்—அதிலும் உனது உயிரனைய காதலியிடப்—இவ்வளவு கொடிய முறையில் நடந்து கொள்வதற்குக் காரணமென்ன?—உம். காலத்துக்கேற்ப உன் புத்தியும் மாறிவிட்டது போலும்!—என்ன இருந்தாலும் நீ உன் காதலி விஷயத்தில் இத்துணை முரட்டுத்தனமாக நடந்து அவளை உதாசீனப்படுத்தியிருக்கக் கூடாது? நீ அவளிடம் சரியான முறையில் விடைபெற்றுக் கொள்ளாததோடு கோபித்துக் கொண்டும் வந்திருப்பதைக் கண்டு அவள் எவ்விதம் வருந்துகிறாளோ! பாவம்!'' என்று அநுதாபத்தோடு பேசினான்.

சிவசைலம் கண்களில் நீர் துளிர்ப்ப கன்னங்களை இரு கைகளால் தாங்கிய வண்ணம், "அதை நினைத்தால்

தான் என் மனம் சொல்லொணுத் துயரத்தை யடைகின் றது. நான் அவளை விட்டுப் பிரியப்போகிறேன் எனக் குறிப்பால் அறிந்த மாத்திரத்திலேயே நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிதுடித்த என் கண்மணி கார்த்தி யாயினி, நான் அவளது கெஞ்சுதலைப் பொருட்படுத்தாது கோபத்தோடு உதறித் தள்ளிவிட்டு வந்ததைக் கண்டு என்ன நிலையை யடைந்திருப்பாள் என்பதை என் மன தால் சிறிது எண்ணிப் பார்த்தாலே நடுக்க மேற்படு கிறது. நான் இவ்வளவு தூரம் சீறி விழுந்து கடுமையாகப் பேசிவிட்டு வெளியேறிய காலத்திலும், அவள் என்மீது கோபமோ வெறுப்போ கொள்ளாது, என்னைப் பின் தொடர்ந் தோடிவந்து நான் பிடிவாதமாக மோட்டாரி லேறிச் செல்ல முயல்வதை யறிந்தவுடனே மூர்ச்சித்து விழுந்த துயரக் காட்சியை எம்மொழிகளால் எடுத்துரைப் பேன்! அச்சோகக் காட்சி இப்போதும் என் மனக் கண்முன் காட்சி யளித்துக்கொண்டிருக்கிறது. ஆ! நான் கொடியவன்; மகா கொடியவன்; அவள் மூர்ச்சித்து விழுந்ததைக் கண்களால் கண்டும் மனமிளகாது வந்து விட்ட என்னைப் போன்ற கடின சித்தமுடைய பாவியை நீ பார்த்திருக்க முடியாது. நான் ஒரு கொடும் பாவி! பஞ்சமா பாதகஞ் செய்வதற்கும் அஞ்சாத காதகன்; சண்டாளன்; சுபாவ மிருகம்; இரக்க மென்பதே சிறிது மறியாத அரக்கன்; இன்னும் எவ்வளவு கூறினும் எனக் குத் தகும். மெல்லியலாகிய ஒரு நங்கையிடம்—என் னிடம் ஆருக்காதல் கொண்டுள்ள ஓர் ஆரணங்கினிடம்— அதிலும் என்னையே சதமென நம்பித் தனது சகல சுக போகங்களையும் ஒரு கணத்தில் உதறித் தள்ளிவிட்டு என் பின் வந்த ஒரு காரிகையிடம் மிருகத்திலுங் கேவல மாக நடந்து கொண்ட என்னை என்னவென்று அழைத்

தால்தான் என்ன! ஆ! பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் ஒப்பற்ற குலவிளக்காய்த் திகழ்ந்தவள்—அவளது இரு பெருங் குடும்பங்களுக்குச் சக்கிரவர்த்தினி—பேரரசி—போல் இருந்தவள்—நாவசைந்தால் நாடசையும் பெருந் தகுதியில்—உன்னத நிலையி லிருந்தவளாகிய கார்த்தியாயினியை நான் எவ்வளவு அலட்சியமாக நினைத்துக் கேவலமாக நடத்தி விட்டேன். அவ்வலட்சிய மனோபாவம் எங்கிருந்து வந்தது? மிக உன்னத நிலையிலிருந்த அவள் சாதாரண தகுதியுள்ள என்னை நச்சி வந்ததல்லவா அதற்குக் காரணம்! அவரவர் தகுதியிலிருந்தால் தான் அவர்களுக்குப் புகழும் பூசையும் மரியாதையும் எல்லாம் கிடைக்கும். தங்கள் நிலையிலிருந்து கீழிறங்கி விட்டாலே எல்லா கௌரவங்களும் போக வேண்டியது தான்.—என்ன இருந்தாலும் நான் கார்த்தியாயினியிடம் இவ்விதம் மிருகத்தனமாக நடந்திருக்கக் கூடாது. அப்போது யோசியாது அலட்சியமாக நடந்துவிட்டு இச்சமயம் வருந்துவதில் என்ன பிரயோஜனம்! நான் செய்த அபசாரத்திற்கு உரிய தண்டனை எனக்குக் கிடைக்காமல் போகாது. ஆண்டவன் கட்டாயம் எனக்குத் தண்டனை கொடுப்பான். அத்தண்டனையைத் தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிப் பெருமூச்செறிந்தான்.

சிவசைலத்தினுடைய அப்போதைய மன நிலையையும் முக மாறுதலையுங் கண்டு கருணாகரன் உண்மையிலேயே கண்ணீர் வடித்தான். தன்னை யறியாது வழிந்தோடிய கண்ணீரை அவன் துடைத்த வண்ணம், "அதிருக்கட்டும் சிவா; கார்த்தியாயினிக்கு நீ கோப வெறியில் ஏதோ தவருக நடந்து கொள்வதாகவும், அதற்காக

வருந்துவதாகவும், அதை யெல்லாம் பொருட்படுத்தாது மன்னிக்கும்படியும், கூடிய சீக்கிரம் ஊர்வந்து சேர்வ தாகவும் உடனே ஒரு கடிதம் எழுதிவிடு. அதைக் கண்டு அவள் கட்டாயம் மன ஆறுதலடைவாள்.—ஆமாம். இவ்வளவு தூரம் பூவும் மணமும் போல் இணை பிரியாது இருந்து அந்நியோந்நியமாகப் பழகி வந்த உங்களிடையே திடீரென சச்சரவு எப்படி ஏற்பட்டது? நீ அவளிடம் இவ்வளவு கோபங் கொள்வதற்குக் காரணமென்ன! நீ மிகுந்த ஆத்திரங் கொள்ளும்படியாக அவள் என்ன அப் பேர்ப்பட்ட தப்பைச் செய்து விட்டாள்?" என்று விநய மாகக் கேட்டான்.

இக்கேள்வியைச் செவியுற்றதும் சிவசைலத்தின் முகம் முன்னையினும் மாறுதலடைந்து விகாரமாகக் காணப்பட்டது. அவன் தலை குனிந்த வண்ணம், "அதுவா! அதை ஏன் கேட்கிறாய்? மிக வெட்கக் கேடான சமாசாரம். என்னால் காதலிக்கப்பட்ட கார்த்தியாயி னிக்கு ஒரு புத்திர னிருக்கிறா னென்றும், அம்மக னிடத்து அவளுக்கு அளவிலாப் பற்றுண்டென்றும் முன் னமே தெரிவித்திருப்பது உனக்கு ஞாபக மிருக்குமென நினைக்கிறேன். கார்த்தியாயினி என் பொருட்டாக, சொத்து, சுதந்திரம், தகுதி, பெருமை யனைத்தையும் கணவன், சகோதரன், சுற்றத்தார் அனைவரையும் துறந்து விட்டு வந்தாலும், தனது ஒரே புதல்வனான அம்பிகாபதி என்னுஞ் சிறுவனை மட்டும் பிரிந்து வர மனம் வரவில்லை. அச்சமயம் என்மீதுகொண்ட காதல் அப்பிள்ளைப் பாசத் தை விழுங்கி விட்டாலும், என்னோடு வந்த பிறகு பிள்ளை யின் பிரிவை அவளால் சகிக்க முடியவில்லை. காதலில் ஒடுங்கி யிருந்த பிள்ளைப் பாசம் நாளடைவில் மெள்ள மெள்ள தலை காட்டலாயிற்று. அதனால் அவள் உள்ளூர

வருந்தி வரலானாள். ஆனால் அவ்வருத்தத்தை என்னிடம் வெகுநாள் வரை வெளிக் காட்டாமலேயே மறைத்து வந்தாள். ஆயினும் சில சமயங்களில் பிள்ளைப் பாசம் அவளையும் மீறி வந்து மிகவும் சங்கடத்திற்குள்ளாக்கி வந்தது. இந்நிலைமை எனக்கு—வெறும் சுயநலக் காதலுலகில் உலவிக்கொண்டிருந்த எனக்கு மிகுந்த வெறுப்பையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணி விட்டது. நான் மிகவும் உல்லாசத்தோடும் குதூகலத்தோடும் உரையாடி அளவளாவி யளைய விரும்பும் சமயத்தில், அவள் அதற்கேற்ப மகிழ்ச்சியையும் உற்சாகத்தையுங் காட்டாது மனங்குமுறி மௌனஞ் சாதித்து வந்தால் ஆத்திரமும் கோபமும் வராமலிருக்குமா! ஆகவே, ஆரம்பத்தில் என் ஆத்திரத்தையும், வெறுப்பையும் அடக்கிக்கொண்டு அவளை வருத்தத்தினின்றும் மாற்றி உற்சாக மடையச் செய்து வந்தாலும், நாளடைவில் வெறுப்பும் ஆத்திரமும் மிகவே செய்தது. கடைசியாக, சமீபத்தில் ஒருநாள் அவள் பிள்ளைப்பாச மேலீட்டால் என்னிடம் கூடச் சொல்லிக்கொள்ளாமலே பிள்ளையைப் பார்க்கச் சென்னைக்குச் சென்று இரண்டு மூன்று நாள் இருந்துவிட்டு வந்தாள். இது எனக்கு இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தையும் வெறுப்பையும் அதிகமாகத் தூண்டி விட்டது. இத்தருணத்தில் நீ என்னிடம் வந்து ஐரோப்பாவுக்குச் செல்லும் கிரிக்கெட் பந்தாட்டக் கோஷ்டியில் என்னையு மொருவனாகச் சேரும்படி காப்டன் கேட்டதைத் தெரிவித்ததும், கார்த்தியாயினிக்குப் பாடங் கற்பிக்க ஒரு நல்ல சந்தர்ப்ப மேற்பட்டதென்று கருதி உடனே அதற்கு ஒப்புக்கொண்டேன். காதல் மனைவாழ்க்கையின் தத்துவ மின்னதென உணராது, வெறும் மிருக இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கத்

துடனுள்ள என் போன்றவர்களுக்கு இவ்வித மனமாறு தல் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. தன் காம இச்சை யைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இடையூருகத் தன் குழந்தை இருந்து வருவதாக கருதிய காமாதுரன் ஒருவன் அதன் கழுத்தை முறித்துக் கொன்முன் எனுங் கதையை யாரோ ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அத் தூர்த்தனை விட நான் எந்த விதத்தில் மேலானவன்? என்று எனக்குத் தெரியவில்லை—நான் குலதெய்வமெனக் கருதிக் காதலித்துவந்த கார்த்தியாயினியிடம் அலட்சிய மனோபாவம் காட்ட ஆரம்பித்ததற்கு மற்றொரு காரணமு முண்டு. என் தாய் எனக்கு ஒன்றுவிட்ட அம்மான் மகளை விவாகஞ் செய்ய ஏற்பாடு செய்துவந்தார். அது சம்பந்த மாக அவர் என்னிடம் அடிக்கடி பிரஸ்தாபித்து என் அபிப்பிராயத்தைக் கேட்டு வற்புறுத்தி வந்தார். அது வன்றி, இரண்டொருமுறை என் அம்மான் மகளையும் நேரில் பார்க்கும்படி நேர்ந்தது. அப்பெண் கார்த்தியா யினியைப்போல் பேரழகி யல்லாவிடினும், மங்கைப் பருவமுடையவ ளாதலால், அவளிடம் இளமைச் செவ்வி மிகுந்து காணப்பட்டது. அதைக் கண்டு என் அறிவு மயங்கியது. அத்துடன் நான் அப்பெண்ணைக் கலியாணஞ் செய்து கொள்வதனுல், என் அம்மான் எனக்கு ஏராள மாகச் சொத்தை எழுதிவைப்பார் என்றும் ஆசை காட் டப்பட்டது. ஆகவே, அம்மங்கையிடம் நாட்டஞ் செலுத்தியதில் ஆச்சரியமில்லை யல்லவா! ஆயினும், இதி லிருந்து என் சுய நலமும், காதல் வெறியும் உனக்கு நன்கு புலப்படும். கார்த்தியாயினியிடம் நான் கொண்ட வெறுப் புக்கு என் தாயின் முயற்சி தூபம் போட்டது போலா யிற்று. என்னதான் காதல் காதல் எனக் கதறினும், 'மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள்' என்னும்

பழமொழி என் அனுபவத்தில் மெய்யாயிற்று. ஆரம்பத்தில் கார்த்தியாயினியிடம் என் உயிரையே வைத்திருந்த நான்—அவளுக்கு அடிமையாகவாயினும் இருந்து குற்றேவல் செய்யக் காத்திருந்த நான்—இப்போது இவ்வளவு அலட்சிய மனோபாவம் காட்டுவதென்றால் நான் கார்த்தியாயினியிடம் கொண்டிருந்த மோகந் தீர்ந்துவிட்டது என்பது திதர்சனமாகிவிட்டதல்லவா! இதுதான் நவீனக் காதலின் பயன்! கார்த்தியாயினியிடம் இருக்கும்போது எவ்வளவுக் கெவ்வளவு வெறுப்புக் கொண்டிருந்தேனோ, அவ்வளவுக் கவ்வளவு அவளைப் பிரிந்துவிட்டு வந்தபின்னர் அவள் நினைவு என்னை வாட்டுகிறது. அவளது பிரிவை நான் எவ்விதஞ் சகித்திருப்பேன்! ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்துக்கு வராமலே இப்படியே திரும்பிவிடலாமென்றாலோ அது மனிதத் தன்மைக்கு நன்றாயிராது.—ஆ! கார்த்தியாயினியை—கட்டிக்கரும்பை—கண்மணியை—கட்டழகியை எப்போது மீண்டுங் காண்பேன்!" என ஆற்றாமையோடு கூறி முடித்தான்.

கருணாகரன் ஏதோ கிளர்ச்சி மீதூர்ந்தவனாய் "சிவா! உன்னிடம் கார்த்தியாயினியினுடைய உருவப்படமிருக்கிறதா! இருந்தால் எனக்குக் காட்டேன்; பார்க்கலாம்" என்று கேட்டான்.

சிவசைலம், "கார்த்தியாயினியின் அழகிய உருவத்தை நீ பார்க்கவேண்டுமானால், என் இருதயத்தைத் தான் பிளந்து உனக்குக் காட்டவேண்டும். அங்குதான்—என் இருதய கமலத்தில்தான் என் காதலியின் திருவுருவத்தை அழகொழுக எழுதிவைத்துப் பார்த்து வருகிறேன். அவளது போட்டோவும் என்னிடம் இருக்கிறது. ஆயி

னும், அது அவளது உண்மையான பேரழகை அப்படியே எடுத்துக் காட்டாது. இருந்தாலும் உன் விருப்பப்படி அதைப் பார். இதோ'' என்று கூறிக்கொண்டே தன் உள் சட்டைப் பையில் பத்திரமாக வைத்திருந்த கார்த்தியாயினியின் போட்டோவை எடுத்துக் கருணாகரனிடங் கொடுத்தான். அவனும் அதை ஆர்வத்தோடு வாங்கிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இச்சமயத்தில், "என்ன ஸார் இது! உங்கள் ஊரில் ஒரு கோர சம்பவம் நடந்திருக்கிறதே! அதுவும் நீங்கள் வந்த தினத்தன்றுதான் சம்பவித்ததுபோ லிருக்கிறது!'' என்று கூறியவண்ணம் வங்காளிப் பந்தாட்ட நிபுணர் ஒருவர் கையில் ஒரு தினசரிப் பத்திரிகையோடு இவர்களை நோக்கி வந்தார். எனவே, கருணாகரன் கார்த்தியாயினியின் போட்டோவை அவசர அவசரமாக எடுத்து மறைக்க முயன்றான். சிவசைலமும் தனது தற்போதைய நிலைமையைச் சமாளிக்க முயன்று முகத்தில் புன்சிரிப்பை வருவித்த வண்ணம் எழுந்து வங்காளி வாலிபரைப் பார்த்து, "என்ன சமாசாரம் சார்; அது! ஏதோ காண்பியுங்கள்; பார்க்கலாம்'' என்று கேட்டவாறே அவர் கையில் வைத்திருந்த பத்திரிகையை வாங்கினான்.

சிவசைலம் அப்பத்திரிகையை வாங்கிப் பார்த்தான். அதன் முதல் பக்கத்தில் கொட்டை கொட்டையான எழுத்தில் போடப்பட்டிருந்த ஒரு செய்தி அவனுடைய கண்களைக் கவர்ந்தது. பரபரப்போடு அதைப் படிக்கலானான். படிக்கப் படிக்க அவன் முகம் சவம்போல் வெளுத்து விகார மடையலாயிற்று. அச்செய்தியை முற்றும் படித்து முடிக்கு முன்னமே, "ஆ! கார்த்திகா!

கடைசியாக இவ்வித முடிவுக்கா வந்தாய்? உனது பரிதாப மரணத்துக்கு — தற்கொலைக்கு—நானன்றோ காரணம்?" என்று அவன் கதறிக்கொண்டே கீழே விழுந்தான்.

இவ்வெதிர் பாராத நிகழ்ச்சியைக் கண்ட வங்காளி வாலிபரும், கருணாகரனும் அப்படியே திகைத்து நின்று விட்டனர். சந்தடி கேட்டு அம்மண்டபத்திலிருந்த பந்தாட்ட நிபுணர்களும் மற்றவர்களும் அவ்விடத்துக்கு ஓடோடியும் வந்தனர். கருணாகரன் குனிந்து சிவசைலத்தைப் புரட்டி, "சிவா! சிவா! உனக்கு என்ன உடம்பு? என்ன நேர்ந்தது!" எனத் தழுதழுத்த குரலோடு கூறினான். மற்றவர்களும், "மிஸ்டர் சிவம்! எழுந்திரு" என்று கூப்பிட்டனர். பேச்சு மூச்சில்லை உடனே ஒருவர் ஓடிப்போய் தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளித்து விசிறியால் விசிறினர். அப்போதும் சிவசைலம் மூர்ச்சை தெளியவில்லை. வேறொருவர் உடனே டாக்டரைக் கூப்பிடும்படி யோசனை கூறினர். அவ்விதமே டெலிபோன் வாயிலாக டாக்டர் அழைக்கப்பட்டார்.

சிறிது நேரத்துக்கு முன்வரை நல்ல நிலையிலிருந்த சிவசைலம் திடீரென இவ்விதம் உணர்விழந்ததற்குக் காரணமென்ன? எனத் தெரியாது அங்குள்ளோர் திகைத்தனர். பத்திரிகை கொண்டுவந்து கொடுத்த வங்காளி வாலிபர் அதிலுள்ள செய்திக்கும் சிவசைலத்துக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது; அதனால்தான் அவன் அச்செய்தியைப் படித்ததும் அதிர்ச்சியடைந்து ஏதோ கூறியவாறு மூர்ச்சித்தான் என ஊகித்தார்.

கருணாகரனுக்கும் இச்சந்தேகம் ஏற்படவே, அவன் பத்திரிகையை எடுத்து அச்செய்தியைப் படிக்கலானான். அதில் பின்வருமாறு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

# சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் கோர சம்பவம்

## பிரபல சீமாட்டி மரணம்

### தற்கொலையா? விபத்தா?

(நமது நிருபர்)

சென்னை டிச, 14.

நேற்றிரவு பத்து மணிக்குச் சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் ஒரு கோரமான சம்பவம் நடைபெற்றது. பம்பாய் மெயில் ஸ்டேஷனை விட்டுப் புறப்படுகையில் ஒரு பெண்மணி ரயில் சக்கரத்தில் அறைபட்டிறந்தாள். இவ் விபத்தைப் பற்றி விசாரிக்கையில் இது தற்செயலாக நேர்ந்த விபத்தல்ல வென்றும், அப்பெண்ணே ரயில் புறப் படுஞ் சமயம் பார்த்து ஓட ஆரம்பித்ததும் குறுக்கே விழுந்து தற்கொலை செய்துகொண் டிருக்கிறளென்றுந் தெரிகிறது. ஏனென்றுல், இப்பெண் இன்று காலையி லிருந்தே அந்த ஸ்டேஷனில் பைத்தியக்காரிபோல் அங்கு மிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்தாள் என்றும், அதை ஸ்டேஷனிலுள்ள ரயில்வே சிப்பந்திகள் சிலரும், போர்டர்களும் பார்த்ததாகவும் கூறப்படுகிறது. ஆனல், அவள் எதற்காகத் தற்கொலை செய்துகொண் டிருக்க வேண்டுமென்றும், அவள் யாரென்றுந் தெரியவில்லை. அதற்குரிய புலனெதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

பின்னர் வந்த செய்தி:—

சென்னை டிச, 14.

இன்று காலை ரயில்வே உத்தியோகஸ்தர்களும் ஸிடி போலீஸாரும் தீவிரமாக விசாரித்ததில் இவ்விபத்து சம் பந்தமான உண்மையான செய்திகள் பல நமக்குக் கிடைத் திருக்கின்றன.

விபத்துக் குள்ளான பெண்மணி பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், சென்னை கல்வி மந்திரி திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையின் மனைவியான சீமாட்டி கார்த்தியாயினி என்றும் தெரிகிறது. அன்று அவர் பெங்களூர் செல்வதற்காகச் சென்டிரல் ஷ்டேஷனுக்கு வந்தாராம். தவிர்க்க முடியாத அவசர காரியத்தால் திடீரெனப் பிரயாணம் செய்யவேண்டி யிருந்ததால், சிப்பந்திகள் முதலிய யாருடைய உதவியுமின்றியே தனியாக வந்தாராம். டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே வருவதற்குள் ரயில் புறப்பட்டு விட்டதால் ஓடிச் சென்று ஏற முயன்றாராம். அவ்வாறு செய்ததனுலேயே காலிடறி இக்கோர விபத்துக் காளானாராம். அரசாங்க காரியமாய் அன்றிரவு முழுவதும் கவர்ன்மெண்டு ஹவுஸில் இருந்ததால், காலையில் தான் கனம் மந்திரிக்கு இத் தகவல் தெரியுமாம். அதுவும் பிரேத விசாரணையின்போது தான் பெரியமெட்டு போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் இறந்தவர் இன்னாரென அடையாளங் கண்டுபிடித்து உடனே கனம் மந்திரிக்குத் தகவல் அனுப்பினாராம். இச்செய்தியைக் கேட்டு மந்திரி மனமிடிந்து உட்கார்ந்து விட்டார். பிறகு திருவாங்கூரி லிருக்கும் திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளைக்கும் தந்திமூலம் செய்தி யறிவிக்கப்பட்டது. மந்திரியாரின் மனைவி யெனவே, அதற்கு மேல் விசாரணையின்றிப் பிரேதத்தை மந்திரியின் மாளிகைக்கு அனுப்பப்பட்டது. இன்று மாலை பிரேத அடக்கம் நடைபெறும். இறந்த அம்மையாருக்கு ஒரு மகனிருக்கிறான். அச்சிறுவன் தாயின் பிரிவைச் சகியாது அழும் பரிதாபக் காட்சி பார்ப்பவர் மனதை உருக்குவதா யிருக்கிறது. இவ்வம்மையாரின் பிரிவால் வாடும் கனம் மந்திரிக்கும், ஸர். பரமேஸ்வரன் பிள்ளைக்கும் மற்றும் உறவினர்களுக்கும் நமது அநுதாபம் உரியதாகுக.

இச்செய்தியைக் கருணாகரன் படித்து முடிப்பதற்குள் டாக்டர் வந்து விட்டார். அவர் சிவசைலத்தைப் பரி சோதனைசெய்தார். கையைப் பிடித்து நாடி பார்த்தார். மார்பைத் தொட்டு இருதயத் துடிப்பைக் கவனித்தார். பிறகு அவர் தலை நிமிர்ந்து மற்றவர்களை நோக்கினர். கருணா கரனும் மற்றவர்களும் டாக்டர் என்ன சொல்வாரோ என ஆவலோடு நோக்கினர்கள்.

பிறகு டாக்டர் மெதுவாக, "பயனில்லை; போய் விட்டது. ஏதோ எதிர்பாராத மன அதிர்ச்சி ஏற்பட்ட தால், இருதயத் துடிப்புத் திடீரென நின்றுவிட் டிருக்க வேண்டும். அவ்வளவு தான்" என்று கூறிவிட்டு அகன் ருர். இதைக் கேட்டு கருணாகரன் "கோ" வெனக் கதறி னன். மற்றவர்கள் முகம் வாடி நின்றனர். பிறகு கிளப் காப்டன் சிவசைலத்தின் தாயாருக்குத் தந்தி கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு, பிரேத அடக்கஞ் செயவதற்குரிய ஏற்பாடுகளைக் கவனிக்கலானர்.

கதாநாயகி கார்த்தியாயினி—கதாநாயகன் சிவசைலம் ஆகியவர்களுடைய நெறி கெட்ட காதல் வாழ்க்கை அன் ருேடு முடிந்தது. சமூகக் கட்டுப்பாடு கடந்தவர்களுக்கு —உலக ஒழுக்க நெறி மீறியவர்களுக்குக் கடவுள் தகுந்த தண்டனை விதித்து விட்டார். இவர்களது கூடா ஒழுக் கத்தால் கார்த்தியாயினியின் இரு பெருங் குடும்பங் களுக்கு நேரவிருந்த அவமானம்—களங்கம்—ஒருவாறு ஒழிந்தது.

தந்தியின் மூலமாகச் செய்தியறிந்த சிவசைலத்தின் தாயும், சிவசுப்பிரமணியம் பிள்ளை முதலியவர்களும் தாங் கள் கட்டிய மனக்கோட்டையை ஒரு நிமிஷத்தில் தகர்த்

தெறிந்துவிட்டுக் காலஞ்சென்ற சிவசைலத்தின் பிரிவுக்காக வெகுவாகத் துக்கங் கொண்டனர்.

கார்த்தியாயினியின் பரிதாப முடிவுக்காக கனங் காத்திமதிநாதம் பிள்ளை மிகவும் வருந்தினர். ஆயினும் தம் மனைவியினது நெறி கெட்ட வாழ்க்கை பலருக்குத் தெரிந்து அவமான மேற்படுவதற்கு முன் இவ்விதம் நேர்ந்து விட்டதைப்பற்றி மன ஆறுதலடைந்தார். ஸர். பரமேஸ்வரன் பிள்ளைக்குத் தன் தங்கையின் நடத்தையைப் பற்றியோ பரிதாப முடிவுக்குரிய காரணமோ ஒன்றும் தெரியாது. அவள் தற்செயலாகவே விபத்துக் காளாகி இறந்தாள் என்றே இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறார். தேவகி மட்டும் தன் தமக்கையின் முடிவுக்குக் காரணம் என்னவாயிருக்குமேன்று ஒருவாறு ஊகித்தாள். ஏனென்றால், கார்த்தியாயினி ஒரு வாரத்துக்குமுன் இங்கு வந்தபோது இருந்த மாதிரியும், இப்போது திடீரென ஏற்பட்ட கோரமரணமும் அவளை இம் முடிவுக்கு வரச் செய்தது. அத்துடன் சிவசைலம் இவ்வூரில் திடீரென உத்தியோகத்தை விட்டு விட்டு எங்கேயோ போயிருக்கிறான் என்ற செய்தி அவளைப் பலவாறு நினைக்கச் செய்தது. இருந்தாலும், அவள் யாரிடமும் எதையும் பிரஸ்தாபிக்கவேயில்லை. அவள் தன் தமக்கையின் பரிதாப முடிவை நினைந்து நினைந்து மனங் குமுறினள். தாயன்பன்றி வேறொன்றறியா பாலகனான அம்பிகாபதி அன்னை போய் விட்டாள் என்று கேட்டு அலறும் பரிதாபத்தை விவரிக்க முடியாது. அச் சிறுவனுக்கு ஆண்டவன் தான் ஆறுதல் அளிக்க வேண்டும்.

முற்றிற்று.

ஆனந்தபோதினி பிரஸ், சென்னை. P.I.C.M.S. 165. 20-2-47-2000